
மணிவாசகர் பதிப்பகம் 1985 வெள்ளி விழா



காசி

அ. அறிவொளி. எம்.ஏ.

காசி

மணிவாசகர் பதிப்பகத்தின்
வெள்ளிவிழா வெளியீடு

பேராசிரியர் :
அ. அறிவொளி எம். ஏ.

மணிவாசகர் பதிப்பகம்
சிதம்பரம்

முதற் பதிப்பு : பிப்ரவரி, 1985.

பதிப்பாசிரியர் : ச. மெய்யப்பன், எம். ஏ.

விலை ரூ. 14-50

மணிவாசகர் பதிப்பகம் 1985 வெள்ளி விழா

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி சிதம்பரம்-608 001
14, சுங்குராம் தெரு, பாரிமுனை, சென்னை-600 001
55, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600 001
28-A, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை-625 001
அசோகா பிளாசா, நஞ்சப்பா சாலை, கோவை-641 012

சென்னை போன் : 512996 சிதம்பரம் போன் : 799

அச்சிட்டோர் : கற்பகம் அச்சகம், சென்னை-600 002.
போன் : 847174

33/2

வழிபாட்டில் வடக்கும் தெற்கும்

பேராசிரியர் ச. மெய்யப்பன், எம். ஏ.
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மணிவாசகர் பதிப்பகம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருக்கோயில் வரிசை என்னும் புதிய நூல் வரிசையை வெளியிடத் தொடங்கியது. தில்லைத் திருக்கோயில் என்னும் நூல் இவ்வரிசையில் முதல் நூலாக நல்ல நாளில் மலர்ந்தது. அதனைத் தொடர்ந்து பதினைந்து திருக்கோயில் பூக்கள் மலர்ந்தன. பதினாறாவது நூலாகப் பேராசிரியர் அறிவொளி அவர்களின் காசி என்னும் இத் திருநூல் மலர்மணம் பரப்பி ஒளி வீசுகிறது. இராமேஸ்வரம், காஞ்சி காமாட்சி, குடந்தைக் கோயில்கள் முதலிய நூல்கள் மிக விரைவில் மறுபதிப்புப் பெற்றுள்ளன. இந்நூல் வரிசை தமிழகத் திருக்கோயில்கள் பற்றிய கலைக் களஞ்சியமாக விளங்குகிறது. அறிஞர்களின் பாராட்டும், பொதுமக்களின் வரவேற்பும் இவ்வகை நூல்கள் தொடர்ந்து அணி அணியாக மிக விரைவில் வெளிவரத் துணை செய்தன. இவ்வரிசை நூல்கள் பதிப்பகத்தை பாரறியச் செய்தது. பல்லாயிரம் வாசகர்களைப் பதிப்பகத்தோடு தொடர்புகொள்ளச் செய்தது.

தமிழகத் திருக்கோயில்களின் கோபுரங்கள்போல ஒவ்வொரு நூலும் அமைப்பு வகையில் தனிச்சிறப்புப் பெற்றுள்ளது. மணிவாசகர் பதிப்பகத்தின் இலச்சினையே தமிழகக் கோபுரம்தான். கோபுரக் கலசங்கள்போல பட்டொளி வீசிப் பதிப்பகத்தின் புகழைப் பரவச் செய்கின்றன. வெள்ளிவிழா ஆண்டில் திருக்கோயில் வரிசையில் பதினாறு நூல்களை ஒரு சேர வெளியிட்டதை எண்ணிப் பதிப்பகம் பெருமையும் பெருமிதமும் கொள்கிறது.

இந்தியத் திருத்தலங்களில் காசி தலைமை மிக்கது. தலயாத்திரை செய்வோர்க்குப் புண்ணிய இலக்காக இலங்குகின்றது. ஆற்றங்கரைக் கோயில்கள் சிறப்புப் பெறுவது இயல்பு. கங்கைக் கரையின் காசியோ கணக்கிலடங்காச் சிறப்புடையது. மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றாலும் பெருமை மிக்கது. தீர்த்தத்தால் அது பெறும் சிறப்பு அளவிடற்கரியது.

"யாறும் குளமும் ஆடும்'' மரபினைத் தொல்காப்பியர் சுட்டுவர். குமரி ஆடுதலை இளங்கோ சிறப்பிப்பர். காசிக்குச் சென்று புண்ணிய நீராடி, சாபவிமோசனமும், பாவநீக்கமும் பெறுதலை இளங்கோ அடிகள் காலத்து வழக்காக இளங்கோ அடிகள் கூறுகிறார்.

கண்ணகிக்குச் சிலையெடுத்து, அதனைக் காவிரியில் நீராட்டுவதிலும் கங்கையில் நீராட்டுவதே சாலச் சிறந்த தென இளங்கோ, பாத்திரம் வாயிலாகக் கூறுகிறார்.

தொல்காப்பியர் நடுகல் நெறியும், கண்ணகிக்குப் புனித நீராட்டும் செயலும் தமிழ் நாட்டில் மரபாகச் செழித் தோங்கிய பண்பாட்டின் அடையாளமாகச் சிலம்பு சிறப்பித்துக் கூறுகிறது. கங்கை ஆடுதல், காவிரி ஆடுதலைப் பற்றித் திருமுறைகள் பரக்கப் பேசும். கங்கைப் பேறுயாறு எனச் சங்க இலக்கியங்கள் சிறப்பிக்கும். கங்கை வெறும் நீரோட்டம் மட்டுமன்று. இந்தியாவின் வாழ்வோட்டம். நதிகளில் கங்கை தாய்மை யும் தலைமையும் மிக்கது. ஜீவ நதியாய் இந்தியர்க்கு ஜீவன் அளிப்பது. பலகோடி சீவராசிகளுக்கு வாழ்வு நலமும் வளமும் அளிப்பது. வால்காவிலிருந்து கங்கை வரையில் என எல்லையாய் அமைவது. நூறு கிளை நதி களைத் தோற்றுவிப்பதோடு நூற்றுக்கணக்கான நகரங் களையும் பல்வேறு நாகரிகங்களையும் படைக்கும் வற்றாத வளநதி கங்கை. கங்கையே ஒரு கவிதை. கங்கையின் கதையே ஒரு காப்பியம். கங்கைக் கரையின் புகழ் கரை கடந்தது.

கங்கைக் கரையில் அமைந்த காசி பெயருக்கேற்ப ஒளி நகரம். உயர் நகரம். இந்திய நாகரிகத்தின் தலைநகரம். தெய்வ வழிபாட்டில் திருநகரம். காசி இறைவர்க்கு உறைவிடம் புலவர்க்கு வாழ்விடம். கலைகளின் பிறப்பிடம். புகழின் இருப்பிடம். புண்ணியத்தின் தலை ஊற்று. இந்தியர் நினைந்து நினைந்து காசியை வழிபடுவர். உலகப் பயணிகள் காசியை உவந்து உவந்து போற்றுவர். ஒவ்வொரு மாநிலத்திலும் காசி என்னும் பெயருடனும் காசியோடு இணைத்தும் காசியினும் மிகுத்தும் ஒப்பிட்டு மகிழும்படியான உத்தமப் பொது அளவு பெற்றது காசிநகர்.

வடமொழி இலக்கியங்கள், தென்மொழி இலக்கியங்கள், மொத்தத்தில் இந்திய இலக்கியங்கள் காசிபற்றி பல்லாயிரம் கவிதைகளையும் பலநூறு நூல்களையும் பெற்றுள்ளது ஒன்றே காசியின் சிறப்பினை விளக்கும். இந்தியாவின் எந்தக் கோடியில் வாழ்ந்தாலும் காசியைப் பற்றிய நினைவு இந்தியாவின் இரத்தத்தில் இதய நாதத்தில் என்றும் ஒலிக்கும் திருப்பெயராகும். காளத்தியைக் காசியில் வீசம் அதிகம் என்பர். விருத்தாசலத்தைக் காசியினும் வீசம் அதிகம் என்பர். தமிழ்நாட்டில் 5 திருத்தலங்களைக் காசி என்று சிறப்பிப்பர். தென்காசிக் கல்வெட்டு, திருப்பணி செய்வாரின் பெருமை கூறுவதில் தன்னிகரற்றது. தனித் தன்மை வாய்ந்தது. தமிழகம் முழுவதும் விசுவநாதர்கள், விசாலாட்சிகள், காசிவாசிகள் வாழ்வதும் தமிழகத்தில்தான்.

காசி நகர்ப் புலவரைக் காஞ்சியோடு இணைப்பார் பாரதிப் புலவர். புண்ணிய பூமியாம் காசியில் வடமொழி அறிஞர்கள் வல்லுநர்கள் வேத வித்துக்கள் வீறு கொண்டு வாழ்வர்—காஞ்சியைப் போல. அறிவு பரிவர்த்தனையில் காசியும், காஞ்சியும் வையத்திற்கு வற்றாத கொடை நல்குவன. காஞ்சிப் பட்டுடுத்துவதும் காசிப்பட்டுடுத்துவதும் காசினியோர் மகிழ்ந்து போற்றும் செயலாகும்.

காசி இராமேஸ்வரம் நெடுஞ்சாலை பெருவழித் தடம் இந்திய ஒருமைப்பாட்டின் அழிக்க முடியாத தடமாகும். காசி சென்றவர் இராமேஸ்வரம் வந்து திருத்தலப் பயணத்தைப் பூர்த்தி செய்வர். வடஇந்தியர் இராமேஸ் வரம் வருவதை வாழ்க்கை இலட்சியமாகக் கொண் டுள்ளனர். மொழிகளாலும், இனங்களாலும், அரசு களாலும், பிரிக்கப்பெற்ற இந்தியத் திருநாடு தெய்வ வழிபாட்டாலேயே இணைக்கப் பெறுகிறது.

திருக்கோயில்களின் நல்வாழ்வுக்கு வித்தாயும், வேராயும் விளங்குகிற இனம் நாட்டுக்கோட்டை நகரத்தார் இனம். தொன்று தொட்டு ஆலயங்களை நிர்மாணிப்பதிலும் திருப்பணி செய்வதிலும் திருக்குளம் அமைப்பதிலும் நந்தவனம், பூங்கா, பசுமடம், கோயில் வாகனங்கள் அமைப்பதிலும் சிறந்து விளங்கும் பண்பில் திரியாப் பழங்குடி நகரத்தார் குடி. சிவாலயங்கள் அனைத் திலும் அம்மன் சன்னதிகள் அமைப்பதிலும் திருப்பணி செய்வதிலும் தனிக் கவனம் செலுத்துவார்கள். காசி யிலும், விசாலாட்சிக்கு ஆலயம் அமைத்து விழா எடுத்துக் குடமுழுக்குச் செய்து, வாகனங்கள், அணிகலன்கள் அமைத்துக் காசியைத் தமிழ் நாட்டுக் கோயில் போல ஆக்கிவிட்ட சிறப்பு நகரத்தார் சிறப்பு. அதுவே நாடறிந்த சிறப்பாகும்.

தமிழகத் திருக்கோயில்கள் பெரியவை; கோபுரங்கள் உயர்ந்தவை; தேரோடும் தெருக்கள் அகன்றவை. திருஉருவச் சிலைகள் நுண்ணிய வேலைப்பாடு கொண்டு அருள் கொழிப்பன. கோயில்களால் புனிதம் காக்கப்படும். தூய்மைக்கு முதன்மை இடம் உண்டு. வழிபாட்டு முறையே தனி. கங்கைக்கரை முறை வேறு. அதன் விரிவை இந்நூல் விரித்துப் பேசுகிறது.

இந்நூலாசிரியர் பேராசிரியர் அ. அறிவொளி அவர்கள் இந்நூல் வரிசையில் முத்தான பத்து நூல்களைப் படைத்துள்ளார்கள். இந்நூல் வரிசையை 'அறிவொளி

வரிசை' என அறிஞர் போற்றுவர். அறிவொளிதானே காசியின் ஒளியை நமக்குக் காட்ட முடியும்! அறிவொளி அவர்கள் கண்டவாறு காட்ட வல்லவர். உணர்ந்தவாறு உணர்த்தவல்லவர். அவர்தம் அறிவாற்றல் எழுத்தாற்றல் புலமைநலம் இந்நூலில் பக்கம் தோறும் ஒளி வீசுகிறது. மகோன்னதமான இப்பெரும் பணியினை வேள்வியாகச் செய்த அறிவொளி என்றும் நம் பாராட்டுக்குரியவர். கூர்த்த மதியும் சொல்லாற்றலும் செயல் திறனும் மிக்க அறிவொளி அவர்கள் திருக்கோயில் அனைத்திற்கும் சென்று திருக்கோயில் வரிசையினை நமக்கு அளித் துள்ளார்கள். இவ்வகை நூல்களுக்கே புத்துருவமும் புத்தாக்கமும் அளித்த பெருமை அறிவொளி அவர் களையே சாரும்.

வடநாட்டு யாத்திரை சென்ற அறிவொளி அவர் களுக்குச் சிதம்பரம் எஸ். ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள் உறுதுணையாக அமைந்தார்கள். பல நல்ல திருப்பணி களைச் செய்தவர்கள் S. R. இரத்தினசாமி செட்டியார் அவர்கள். நடராசர் பொன் வணிக நிறுவனத்தைத் தோற்றுவித்துப் பொன்னான பணிகள் பல செய்தவர்கள். அவர்கள் திருமகனார் பாலசுப்ரமணியம் அவர்கள் அறிவொளிக்கு உற்ற நண்பர். உற்று உதவுபவர்கள். காசி யாத்திரைக்கும் அறிவொளி அவர்களை அழைத்துச் சென்று பல்லாற்றானும் உதவிய செம்மல், திரு. பாலசுப்ர மணியம் அவர்களுக்கும் நூலாசிரியர் பேராசிரியர் அ. அறிவொளி அவர்களுக்கும், தொடர்ந்து நல்லாதரவு அளிக்கும் வாசகர்களுக்கும் அன்புநெறி தழைக்கச் செய் யும் பக்த கோடிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

முன்னுரை

பேராசிரியர் ச. மெய்யப்பனார் அவர்களுக்குச் சிறு வயது முதல் காசியின்மீது ஈடு இணையற்ற ஆர்வமுண்டு. இதற்கு அவர்களுடைய தந்தையார் தவச்சீலமிக்க சண்முகனார் அவர்கள் பலகாலம் காசியில் அறத்தொண்டுகளுக்கான நிர்வாகப் பணிகளில் இருந்ததும் ஒரு காரணம்.

இந்தியாவின் ஆன்மிகத் தலைநகராகக் காசி இருக்கும் காரணத்தையும் அது இராமேச்வரத்துடன் கொண்ட தொடர்புகளை நூலாக்கிவிட வேண்டும்; நம் சந்ததியினர் முறைகள் மாறாதபடி பெருமைகளை இனம் கண்டுகொள்ள வேண்டும்; என்ற முயற்சி பேராசிரியர் ச. மெய்யப்பனார் அவர்கட்கு அழுத்தமாக ஊன்றியிருந்ததன் விளைவு திருக்கோயில் வரிசையே உருவானது என்று கூறலாம்.

காசிக்கு நேரில் போகவும் பல ஆதி நூல்களைக் கற்கவும் காலம் தேவைப்பட்டதால் இந்நூல் முதல் முயற்சிகளில் வரமுடியாமல் போய் விட்டது. ஆனாலும் இதனை எழுதுவதற்கு முன்பே திருக்கோயில் வரிசையில் இது சேர்க்கவும் பெற்றது.

எனவே கடுமையான முயற்சியால் உண்மையான தெளிவான செய்திகளால் இந்த நூல் மரபுகளை மனங்கொண்டு செய்யப்பட்டுள்ளது. பேராசிரியர் அவர்களைக் காணும்தோறும் காசி நூல் எப்படி வரவேண்டுமென்ற

கருத்துரைக் கலந்துரையாடல் இடம் பெறத் தவறுவதே இல்லை.

இந்த நூல் தொலைவான ஒரு தலைமைத் தலத்தை உங்கள் நெஞ்சருகே நின்று விளக்க வருகிறது. மிகப் பழைய கால நிகழ்வுகளைப் பசுமையாக உங்கள் பார்வையில் படர வைக்க வருகிறது.

சிதம்பரம் நடராஜா ஹால் திரு. S. R. பாலசுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் என்னைக் காசிக்கு (1984) அழைத்துப் போய் அமைதியாகப் பலவற்றைக் காண உதவினார்கள். குமாரசுவாமி மடத்து அன்பர்கள் துணை நின்றார்கள். நான் (1972) முதல் முறைபோன போது நகரத்தார் சத்திரத்தின் சார்பில் தேவகோட்டை அள. அரு. சோமநாதன் செட்டியார் அவர்கள் சத்திரத்தில் தங்கச்செய்து காசியின் யாத்திரைப் பயன் சிறப்புறும் வண்ணம் பலவாறு விளக்கினார்கள். இவர்கட்கு நன்றி கூறியே இதை எழுதத் தொடங்கினேன்.

நான் காசி சென்று வந்தபோது என் தந்தையார் நெகிழ்ந்து அழுது விட்டார். என்னைவிடச் செல்வம் மிக்க வாழ்வு வாழ்ந்தும் கூடக் காசிக்குப் போக முடியவில்லையே என்ற ஏக்கமே அதன் காரணமாகும். அப்போதுதான் காசிக்குப் போகும் வாய்ப்பு ஒரு பாக்கியம் என்ற இந்துக்களின் நம்பிக்கைக்கு என்னால் ஓர் அளவீடு செய்துகொள்ள முடிந்தது.

பக்திகொண்ட இந்துவின் உள்மனத்தில் காசி என்றால் பூவுலகில் காட்சிதரும் மோட்சமாகவே ஓர் உணர்விருப்பது இயற்கையாக இருக்கிறது. காசிக்குப் போவது இந்தப் பிறவிக் கடன் என்ற உந்துதல் இருக்கிறது.

காசியிலிருப்பவர்கள் மட்டும் காசிக்குப் போய் விடுகிறார்களா? காசியில்தான் இறப்பேன் என்று புறப்பட்டவர்கள் காசி எல்லைக்கு வெளியிலேயே இறந்து

விட்டார்கள். சாதாரணமாகக் காசிக்குப் போனதிலேயே இறந்துமோட்சம் பெற வாய்ப்புக் கிட்டியவர்களும் இருக்கிறார்கள்,

இதைக் கருதும் போது இதுகூட இக்காலத்திலும் ஒரு பாக்கியமாகவே இருக்கிறது என்பதில் ஐயமில்லை. அது காசியை நினைக்க, எழுத, படிக்க என்று இப்படிப்பட்ட நிலைகளிலும் பாக்கியமாகவே இருப்பது மறுக்க முடியாதது.

ஒரு நூலைப் படிப்பது என்ற வெறும் செய்கையே கூடப் பிரபஞ்சத்தில் ஒரு பெரிய தாக்கத்தை உருவாக்கி விடுகிறது என்று விஞ்ஞானப் பார்வையில் சுஜாதா எழுதியிருக்கிறார். (அந்தத் தகுதிமிக்கவரும் அவர்.)

வெறும் நூல் படிக்கும் ஒரு வெறும் செயலே பிரபஞ்ச தாக்கம் பெறுமானால் காசி பற்றிய நூலைப் படிக்கும் பாக்கியம் ஒரு வெறும் செயல் இல்லை என்று ஆகி விடுகிறது. அது பிரபஞ்சத்தில் உள்ளபடியே இறைவன் திருவுள்ளத்தை நெருங்கும் ஒரு தாக்கமாகவே ஆகும் என்பதை என்னால் நம்ப முடிகிறது. இதைப் படிக்கும் வரையில் காசியை நினைத்தே ஆக வேண்டும். அதுவே முக்தி என்று நம் நூல்கள் கருதுகின்றன. பார்க்கப் போனால் அவை கூறியனவும் ஒரு விஞ்ஞானப் பார்வை தானே! ஆகவே இதனால் பலர் திருவருள் தொடர்புடையராவது உறுதி.

அன்பன்,

அறிவொளி

பொருளடக்கம்

1. வரலாற்றில் காசி

புரான காலக் குறிப்புகளில் புகழப்படும் காசியும் புத்தர் காலம் முதலாக உள்ள வரலாற்றிலுள்ள காசியும் சுமார் கி. பி. 12ஆம் நூற்றாண்டு வரையில்தான் மாறு தலடையாமல் இருந்தன. அதன் பிறகு 19 ஆம் நூற்றாண்டு வரையிலும் காசியின் வடிவத்தில் பல்வேறு அழிபாடுகளும் இயற்கை மாற்றங்களும், வெள்ளச் சீர்கேடுகளும், புதையுண்ட நிகழ்ச்சிகளும் பெருகின. வடிவமைப்பு மாறியது.

இந்தியக் கலாச்சார வாழ்விலும் ஆன்மிக வாழ்விலும் மையமான இடத்தைக் கொண்டு எல்லாச் சமய மக்களும் ஒருசேர விரும்பிய தன்மை, காசியைப்போல வேறு எந்த நகரத்துக்கும் அல்லது தலத்திற்கும் அமையவில்லை. இதற்கிருந்த பெருமையே இதன் அழிவிற்கும் காரணமாயிருந்தது. இந்த நகரின் வடிவம் முழுதும் சமஸ்கிருத நூல்களில் ஒன்றுவிடாமல் கூறப்பட்டுள்ளது. அதனால் அழிவுக்குப் பிறகும் ஓரளவு அடையாளம் செய்து சிலவற்றையேனும் புதிய வடிவில் ஆக்க முடிந்தது.

இனிமேல் பெரிதாகக் காட்டிக்கொள்ளக்கூடாது என்ற அடக்க உணர்ச்சி எழுந்தவர்கள் குனிந்து செல்வது போல இந்த நகரம் சில பகை உணர்ச்சிகளைக் கண்டு தன் பெருமையையும் அடக்கிக் கொண்டது. அதன் காரணமாகவே எல்லாம் பெரிதான இந்நகரில் வீதிகளைக் காண முடியாமல் சந்துகளே நீண்ட தெருக்களாக அமைந்தன.

ஆங்கிலேயர் காலத்தில் போக்குவரவுக்குப் பயன்படுத்தும் திட்டத்தை ஏற்று ஓரளவு அகன்ற சாலைகள் மையப்பகுதி களில் இருக்கத் தொடங்கின.

புத்தர் காலத்தையடுத்துத் தெளிவான வரலாற்றுக் குறிப்பில் கி.மு. நான்காவது நூற்றாண்டில் மௌரியப் பேரரசும், அதைத் தொடர்ந்து கி.மு. இரண்டும் ஒன்றும் என்று கணக்கிடப்படும் காலத்தில் சுங்கப் பேரரசும், அவர் களையடுத்துக் கி.பி. முதல் நூற்றாண்டில் குஷாணர்களின் பேரரசும் காசியின் சிறப்பு வெளிப்பட இருந்தன என்பதை வரலாற்றுச் சான்றுகள் பலவும் உறுதி செய்கின்றன.

குஷாணர்களையடுத்துப் பாரசைவர்கள் எனும் உள் நாட்டுப் பகுதியினர் அரசோச்சினர். இவர்களுக்குப்பின் குப்தப்பேரரசு கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை காசியை மேன்மைப் படுத்தியது. புத்தர் தோன்றிய பிறகு ஆயிரம் ஆண்டுகளில் காசியின் மதிப்பு இந்தியாவின் அறிவு, கலை, சமயம், நாகரிகம் முதலிய எல்லாவற்றிலும் குறிப்பிட்ட வளர்ச்சியாக வளர்ந்தது. கொள்கை மாறினாலும் காசியின் பெருமை குறையவில்லை.

இன்று வரையில் இந்தியா முழுதும் உள்ள பொது வான 'இந்து'க் கலாச்சாரத்திற்கு விதையூன்றிய பெரிய பொறுப்பு காசியையே சாரும். இக்கால கட்டத்தில் பெரும் தலைநகராயிருந்த பாடலிபுத்திரத்தைச் சங்க காலக் குறுந்தொகை, 'பாடலி பெறீயரோ' என்று குறிக் கிறது. பாடலி என்று செல்லமாகச் சுருக்கி அழைப்பதன் மூலமாக அக்காலத்தில் இந்தியாவின் தென்கோடிக்கும் இந்த வடபுலத்துக்கும் இருந்த தொடர்பை அறியமுடி கிறது. ஆகவே காசியம்பதியின் சிறப்பே இந்துசமயத்தின் ஆற்றலை உறுதியடையச் செய்தது என அறிகிறோம். புத்தம், சமணம், சௌரம் முதலிய வழிபாட்டுச் சமயங் களின் சாரத்தையெல்லாம் காசியின் இந்த ஆயிரமாண்டு வரலாறு ஒரு புதிய 'இந்து'க்கலாச்சாரமாக இணைந்து

மலர வைத்தது. இதன் காரணமாகவே காசியை இந்தியாவின் எல்லைப்பகுதிகள் கூட நன்கு தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இப்படி வளர்ந்ததற்கான ஆதாரம் வடமொழியாகிய சமஸ்கிருதத்தின் பழைய நூல்களிலும் புத்த ஜாதகக் கதைகளிலும் நிறைய காணலாம். புத்த சமயத்தையே திருமால் பரப்பினார் என்று வரும் ஒரு புராணக் கதையால் இந்து சமயம் பிற இந்திய சமயங்களின் சாரத்தைக் கைக்கொண்டதை யறியலாம்.

பௌத்த தர்சனம், வைதிக தர்சனம், ஸௌர தர்சனம், வைஷ்ணவ தர்சனம், சைவ தர்சனம் சாக்த தர்சனம் என்று எல்லா சமய ஞானிகளுக்கும் மகாதிரிபுர சுந்தரி காட்சி தருகிறாள் என்றும் அது ஷட்தர்சனவித்யா என்றும் ஸ்ரீ வித்யா மந்திரம் கூறுகிறது. ஸ்ரீ சக்கர நவாவரண பூசையில் இப்பகுதி 29 ஆவது மந்திரமாகும். பிற சமயங்களைத் தர்சனம் என்று குறிப்பிடுவதை இதில் நோக்க வேண்டும். இறைவனாகிய பொதுப்பொருளை எல்லாரும் ஒவ்வொரு வகையாகத் தரிசித்தமையால் சமயங்கள் தர்சனம் எனப்பட்டன. இதிலிருந்து இந்தக் கலாச்சார சமயம் ஒன்றுகலந்த கலவையாக உருப்பெற்றதை அறியலாம். அதற்குத் தலைமை தாங்கிய சிறப்பு காசிக்கே உண்டு.

அறிஞர்கள் நடுவே வளர்ந்த இந்த மறுமலர்ச்சி மக்களை அடையவில்லை. அரசுகளைச் சமணமும் புத்தமும் கையகப்படுத்திக் கொண்டமையால் இந்து சமயம் மக்களின் பெரும்பான்மை சமயமாக இல்லை. இதனால் தான் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அப்பரும் ஞானசம்பந்தரும் நம் தமிழ் மண்ணில் பக்திப்பாடல்கள்மூலம் புதுமையை விளைத்தார்கள். சைவம் தழைத்தது. அவ்வாறே ஆழ்வார்களும் பெருந் தொண்டாற்றினர்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஆதிசங்கரர் வடநாடு முழுதுமாகச் சுற்றி இந்து சமய ஒற்றுமையை வளர்த்தார்.

அதன் பிறகே மீண்டும் மக்கள் சமயமாக இந்துசமயம் விளங்கியது.

ஆனாலும் அரசர்களின் போட்டி பொறாமை வளர்ந்தமையால் அந்நியர்கள் வட இந்தியாவில் புக நேர்ந்தது. பிருதிவிராஜனுக்கும் செயச்சந்திரனுக்கும் நடந்த போட்டியின் விளைவே கி. பி. 1192-ல் முகம்மது கோரி படையெடுப்பாக வந்தது. முகம்மதியர்களின் குறிப்புகளின்படி கோரி முகம்மதுவின் தளபதியான குத்புதீன் காசியில் ஆயிரம் கோயில்களை இடித்து மசூதி கட்டியதாகவும், 1400 ஒட்டகங்களில் கொள்ளைப் பொருள்களைக் கொண்டு சென்றதாகவும் காகதவாலப் பேரரசு இங்கே வீழ்த்தப்பட்டதாகவும் அறியமுடிகிறது.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் முதல் 17 ஆவது நூற்றாண்டின் பிற்பகுதி வரை முஸ்லிம்கள்தாம் காசியை ஆண்டார்கள். இந்த 500 ஆண்டுக் காலத்தில் இந்த நகரம் அடைந்த துயர வரலாறு வேறு நகரத்திற்கு உலக வரலாற்றிலேயே இருந்திருக்காது என்றே கூறலாம்.

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் பெரூர்ஷா துக்ளக் தலைமையிலும் காசியில் கோயில்கள் இடிக்கப்பட்டன; 15ஆம் நூற்றாண்டில் ஜான்பூரையாண்ட முஸ்லிம் மன்னர்களும் காசியில் கோயில்களை மேலும் இடித்தார்கள்; பெரிய கட்டுமானப் பொருள்களை எடுத்துப் போய் ஜான்பூரில் மசூதி கட்டினர். இதே நூற்றாண்டில் லோடி வம்சத்து வந்த, சிக்கந்தர் லோடி, காசிப் பகுதியைப் பெரிதும் அழித்தான்.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் சமயப் பொறுமை மிக்க அக்பர் ஆட்சியில் இந்துக் கோயில்களை முன்புபோல் உருவாக்கிக்கொள்ள அனுமதி கிடைத்தது. அவரே உதவிகளும் செய்தார். அக்பர் ஆட்சியிலிருந்த ராஜபுத்திர அரசமரபினர் கங்கையில் படித்துறையமைத்தல், கோயில் கட்டுதல் முதலிய நற்பணிகளை மேற்கொண்டனர்.

ஜகாங்கீர், நூர்ஜஹான் முதலியோரும் இந்தப் பணிகளுக்குத் தடையாக இல்லை. ஆனால் ஷாஜஹான் காலத்தில் காசியில் எழுபத்தாறு கோயில்களை, இடிக்குமளவு பழைய பழியுணர்வு மேலோங்கியது. தாஜ்மகால் கட்டிய இம்மன்னன் கலையுணர்வுடன் இருந்தவனாயிருந்தும், இவனின் மகன் தாராஷிகோ உப்நிஷத்துக்களைப் பாரசீக மொழியில் மொழிபெயர்க்குமளவு அறிவுடையவனாயிருந்தும் சமயப் பொறுமையுடையவனாயிருந்தும்கூடக் கோயில்களை இடிப்பது நிற்கவில்லை.

இவர்களுக்குப் பின்வந்த அவுரங்கசீப் கீர்த்தி வாசர் கோயில், பிந்துமாதவர் கோயில், விசுவநாதர் கோயில் முதலிய பெரிய கோயில்களையுமே இடித்துத் தகர்த்தான். காசி என்ற பெயரையே மாற்றி முகம்மதாபாத் என்று வைத்தான்.

சிவாஜியின் வளர்ச்சியால் இந்துக்கள் உரிமை வாழ்வு இந்தியா முழுதும் புத்துயிர் பெற்றது. அக்காலத்தில் மகாராஷ்டிரத்திலிருந்து அந்தணர்கள் காசியில் குடியேறினர். அவர்களும் மகாராட்டிர மன்னர்களும், பிற இந்து மரபு மன்னர்களும் இன்றைய காசியை உருவாக்கினார்கள்.

கி.பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் இன்றைய காசி யரச மரபினர் கையில் காசியின் ஆளுகை வந்தது. 1794-ல் ஆங்கிலேயர் காசியைத் தம் முழுஉரிமை நகராக்கினர். மராத்தியர் உருவாக்கிய புதிய காசியை ஆங்கிலேயர் உரிய செப்பம் செய்து வந்தனர். இக்காலத்திலும் விடுதலைக்குப் பிறகும்கூட வகுப்புக் கலவரங்களிலும் காசி சிறிய அழிவுகளுக்குட்பட்டிருந்தது. சோகமான வரலாறே காசிக்குரியதுதான்.

2. அகழ்வாராய்ச்சியில் காசி

1940ஆம் ஆண்டிலும் 1960ஆம் ஆண்டிலும் இரண்டு முறை அகழ்வாராய்ச்சிகள் தொடங்கின. ஒரு சில பணிகளுக்குமேல் அவை தொடராமல் நின்றுபோய்விட்டன. ஆனால் அவை மிகுந்த பயனுள்ள முடிவுகளை நமக்குத் தந்துள்ளன. வருணா நதியும் கங்கையும் கலக்குமிடத்திற்கும், கங்கையில் புகைவண்டிப் பாலம் உள்ள இடத்திற்கும் நடுவில் இராஜ்காட் என்னும் மேட்டுப்பகுதி உள்ளது. காசி நகரத்தின் புகைவண்டி நிலையத்துக்கு வடக்கேதான் இம்மேட்டுப் பகுதியான இராஜ்காட்டில் அகழ்வாராய்ச்சிகள் நடந்தன. இப்பகுதியில் ஆதிகேசவர் ஆலயம் இன்றும் உள்ளது. இதுதான் ஆதிகாசியாகும் என்று இந்த ஆய்வுகள் முடிவு செய்ய வைக்கின்றன.

தென்கிழக்கே கங்கை, வடக்கிலும் மேற்கிலும் வருணா நதியின் அரைவட்ட வடிவம். தெற்கே மட்டும் தரைப் பகுதி. அது அகழியாகவும் இருந்திருக்க முடியும். ஆக, நாற்புறத்திலும் நீர் எல்லை சூழவே ஆதிகாசி அமைந்தது எனலாம். வருணையாற்றுக்கு இருபக்கமும் பழைய காசி அமைந்திருந்ததாகக் கருதவும் இடமுள்ளது. மிகப் பழைய புராணங்களிலும், மகாபாரதம் முதலான நூல்களிலும் கூறப்படும் கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்கு முந்திய காசியின் அமைப்பையே இந்தப் பகுதியில் நாம் கற்பனை செய்து பார்க்க ஏற்றதாக உள்ளது.

இந்த ஆய்வில் 2900 ஆண்டுகட்கு முற்பட்ட மதில் சுவரும், பானைகளும் கிடைத்துள்ளன. அருகிலுள்ள சாரநாத்தில் அசோகர் காலத்துக் கலைப் பொருள்கள் இன்னும் உயிருடன் இருப்பதால் இந்த ஆய்வுகள் நம்பக மானவை என்று யாரும் கருதமுடியும். காகதவால் அரசர்கள் வருணா சங்கமத்தில் நீராடி ஆதிகேசவரை வணங்கித் தானங்கள் கொடுத்ததாகப் பன்னிரண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது. எனவே அந்நியர் அழித்த காலத்தில் அதாவது கி பி. 12ஆம் நூற்றாண்டிறு தியில் பழைய காசி மேடாகவே போயிருக்க வேண்டு மென்று தெரிகிறது.

பாரத் கலாபவன் என்னும் காசி இந்து பல்கலைக் கழகத்துள் உள்ள பொருட்காட்சிச் சாலையில் அகழ்ந்த பொருட்களைக் காணலாம். வடக்குக் காசியில் உள்ள முகம்மதியர் இடுகாட்டிலகப்பட்ட கோவர்த்தனகிரி உயர்த்திய கண்ணன் சிலையுள்ளது. ஆளுயரத்துக்கும் மேல் பெரிய இச்சிலையில் சூரிய சக்கரம் பதக்கமாகச் செய்யப்பட்டுள்ளது. இருபுறமும் புலிப்பல் கோத்த அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

சங்க காலத்தில்—"புலிப்பல் கோத்த புலம்பு மணித் தாலி"—என்று இலக்கியங்களில் சிறுவர் அணியும் அணி குறிக்கப்படுகிறது. எனவே பழைய இந்தியாவில் அரச எல்லைகள் பேதமாகிப் பிரிந்து கிடந்தாலும் கலாச்சாரம் ஒன்றாயிருந்ததையே இது உணர்த்துவதை அறியலாம். இதுபோலவே, குப்தர் காலத்தைச் சார்ந்த முருகன் சிலை யொன்றிலும் புலிப்பல் கோத்திருப்பதை இப்பொருட் காட்சியில் காணமுடிகிறது. ஆகவே அகழ்வாராய்ச்சியின் முடிவும் புராண காசியும் இந்திய கலாச்சார மையம் எனக் காசி விளங்குவதை அறிவிக்கின்றன.

இன்றைய மன்னர் இருப்பிடம் காசிக்கு எதிர்க்கரை யிலிருக்கிறது. பழைய காசியும் புதிய காசியும் உள்ள

இடத்திலிருந்து பெயர்ந்து ஓர் ஆளுகை நிலையம் இடம் மாறியதே இந்நகரின் இடமாற்ற வரலாற்றை அழுத்த மாகப் பதிக்கிறது.

அகழ்வாராய்ச்சிகளின் முடிவால் இன்றைய காசி கி.பி. 13ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு உருவாக்கப்பட்ட தென்றும்; அவற்றிலும் பல அழிவுகள் நடந்து இடம் மாறின என்றும்; கி. பி. 12 ஆம் நூற்றாண்டுக்கு முந்திய காசி முழுதும் அழிந்தது என்றும், அதற்குப் பிந்திய காசி யில் வழிபடும் இடங்களே முழுதும் இடிபட்டனவாகவும் நகரின் வீடு வீதி முதலியன பெரிதும் அழியவில்லை என்று அறிகிறோம்.

பழைய காசி அழிக்கப்பட்ட பிறகு வெள்ளத்தினால் மண்மேடிட்டுப் போயிருக்கவேண்டும் என்று நாம் ஊகம் செய்ய முடிகிறது. அப்பகுதி இன்று அடர்ந்த பசுமைப் பகுதியாயிருக்கிறது.

3. காசி என்னும் பெயர்க் காரணம்

மச்ச புராணத்தின்படியும் காசிக்கு, "அவிமுக்தா சேத்திரம்" என்றே ஒரு பெயருண்டு. சிவபெருமான் இந்தப்பதியை மறந்து செல்வதில்லை என்று அவரே திருவாய் மலர்ந்தருளியதாய் அப்புராணமும் கூறுகிறது. அவர் தம்முடைய இந்தத் திருவருளை அடையாளமாக்கித் தாமே தமக்காக ஒரு இலிங்கத்தைப் பிரதிட்டை செய்தாராம். அதுதான் பூவுலகில் முதலில் வந்த இலிங்கமும் ஆகுமாம். இந்த நம்பிக்கையே எல்லாத் தலத்திற்கும் மேலான தலைமையைக் காசிக்குத் தந்திருக்க வேண்டும்.

'அவிமுக்தா' என்பது பாவத்திலிருந்து விடுபடுதல் என்னும் பொருளையும் தரும். சிவபெருமானுக்கும் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததைப் புராணத்தில் காசி எனும் பகுதியால் அறியவும். சிவபெருமானுக்கே ஏற்றிக் கூறப்பட்ட இச்சிறப்பு வேறு எந்தத் தலத்திற்கும் இல்லாமையால் காசியின் பெருமை மிகுதியாயிற்று. கூர்மபுராணமும் காசி ரகசியமும் இதனை வலியுறுத்து கின்றன.

காசி ரகசியத்தில் 'ஆனந்த வனம்'—என்று இத்தலம் அழைக்கப்பட்ட காரணமும் விளக்கப்படுகிறது. சிவ பெருமானே அதையும் கூறியுள்ளார். 'தமக்கு அடையாள மாக இலிங்கங்கள் காசியில் எங்கும் பரவியுள்ளன, அது காரணமாக இதற்கு ஆனந்தவனம் எனும் சிறப்பு

வருகிறது' என்கிறார். சிவம் பாணத்தையும் உமாதேவியார் ஆவுடையாரையும் குறித்து இலிங்கமே ஆனந்தமயவடிவாய் இருக்கிறது. யோக சாத்திரத்தின்படி குண்டலினி சக்தி தலையில் ஏறும்போது அமுதம் சுரக்குமென்றும், தேவியே குண்டலினி என்றும், தலையில் உள்ளது சிவலிங்க பாணமென்றும், இருவரும் இணைவதே யோகமென்றும்; இதுவே ஆனந்த மயமென்றும் கூறக் காண்பதைக் கொண்டு ஆனந்த வனம் என்ற பெயரை நாம் புரிந்து கொள்ள இயலும்.

காசியின் கல்லெல்லாம் லிங்கம் என்றும் காசி மாநகரின் ஆண்கள் சிவாம்சமாகவும் பெண்கள் உமாதேவியம்சமாகவும் கருதப் பெறுவது புராணங்களில் அழுத்தமாகக் கூறப்படும் கருத்தாகும்.

வாரணாசி என்னும் பெயர் பாலிமொழியால் வந்த பெயராகும். புத்தர் பேசிய தாய்மொழியும் பாலிமொழி தான். இன்றும் இந்திய மொழிகளில் இதன் பெயர் வாரணாசி என்றே வழங்கப்படுகிறது. வெள்ளைக்காரர்களால் இது 'பனாரஸ்' என்று திரிந்து வழங்குகிறது. வங்காளிகள் 'வ' என்பதைப் 'ப' என்று வழங்கும் பழக்கம் உள்ளவர்களாகையால் அவர்கள் வாரணாசியைப் பாரணாசி என்று வழங்கியதும் வெள்ளைக்காரர்களும் திரித்து வழங்க முற்பட்டனர்.

வருணா என்ற வடக்கு எல்லை ஆறும் அசி என்ற தெற்கெல்லையாறும் காசிக்கு இருபக்கமும் இருப்பதால் இவ்விரண்டு ஆறுகளுக்குட்பட்டது என்ற பொருளில் வாரணாசி என்று பெயர் உண்டானதாகத் தெரிகிறது.

பழைய அகழ்வாராய்ச்சியின்மூலம் வருணா ஆற்றின் இரு கரைகளில் மட்டுமே பழைய காசி இருந்ததாகக் கருதப்படுவதால், இப்போதைய நகர எல்லையில் உள்ள அசியையும் எப்படி இணைப்பது என்ற வினா எழுகிறது.

அரச நகரமும் கோயில் நகரமும் வருணையாற்றுக் கரையிலிருந்ததாகவும் ஆனால் இப்போதுள்ள 'அசி' ஆறு வரையில் பழைய நகரின் எல்லை பரவியதாகவும் கொள் வதில் தவறில்லை.

மேலும் வடக்கு நோக்கிப் பாயும் கங்கையின் புனிதமே காசிக்கு மிகுந்த சிறப்பின் அடிப்படை என்று கொண்டால் அது 'அசி' ஆற்றிலிருந்து நேர் வடக்கே போவதையே கொண்டிருக்கலாம் என்றும் கருதலாம். அசியாற்றின் சங்கமத்தில் இந்துக்களும் சூரிய சமயத்தாரும் பிறரும் மிகுந்த ஈடுபாடு பன்னெடுங்காலமாகக் கொண்டு வருவதால் அந்நியர் ஆட்சிக்கு முன்பேயே இந்தக் காரணங்கள் குறிப்புகளில் இருப்பதால் இந்த அசியாறு வரையில் பழைய காசிக்கும் எல்லையிருந்ததாக நினைப்பது தவறில்லை.

வேறு சிலர் புராணக் குறிப்பில் வாரணாசி என்பது ஒரே ஆற்றைக் குறிப்பதுதான் என்று விளக்கம் சொல் கிறார்கள். இரண்டு ஆறுகளும் தெய்வங்களால் உருவாக்கப்பட்டமையால் இப்படிச் சொல்லியிருக் கலாமோ என்றும் தோன்றுகிறது. இன்றையப் பார்வையில் அசியாறு சிறிய வாய்க்காலாகத்தானிருக்கிறது. வருணா வும் பெரிய ஆறு என்று குறிப்பதற்குரியதில்லை. எனவே இப்படி நினைப்பதற்கும் மனம் எளிமையாவது இயல்பே.

அசி என்பது வாளையும் வருணா என்பது கேடயத்தை யும் உவமையாகக் குறித்து இந்நகருக்குக் காவல் அமைவதாகக் கூறுவதுண்டு. வாரயதி நாசயதி எனும் இருபெயர்கள் இணைந்து பாவம் நீக்குவது என்ற பொருள் தருவதால் வாரணாசி என்பதே ஒருசொல் என்றும் ஆகவே ஒரே ஆறுதான் என்றும் கூறுகிறவர்களும் உள்ளனர். ஆனாலும் யாத்திரிகர்கள் இவைகளில் ஆய்வு செய்து குழம்பிவிடாமல் அசிமுதல் வருணையாறு வரை

யிலும் முழுகுவதையே புனிதமென்றும் அதற்காக ஐந்து துறைகளைத் தேர்ந்ததே போதுமென்றும் கருதுகின்றனர்.

'ருத்ரவாசம்' என்றும் ஒரு பெயருண்டு, அகலாமல் சிவபெருமான் இங்குத் தங்கியருளுவதால் இப்பெயர் குறிக்கப் பெறுகிறது. கைலை மலையைவிடக் காசியையே அவர் மிகுதியாக விரும்பினார் என்றும் புராணம் கூறுகிறது. இதுவும் காசியின் தலைமையை உறுதி செய்த காரணங்களில் ஒன்றாகிறது.

ஆனந்தவனம் என்பதும் அவிமுக்த நகரம் என்பதும் ருத்ரவாசம் என்பதும் சிவபெருமான் இருக்கும் இந்நகர்ச் சிறப்பால் வந்த பெயர்களாகும். இது சைவர்களுக்கே உரிய சமய வழிப்பட்ட பெயர். ஆனால் இந்நகரில் எல்லாச் சமயமும் சிறப்படையவே நினைக்கும் தன்மையிருப்பதால் மற்ற பெயர்களே பொதுமை உடையனவாகக் கருதத் தகும். மேலும் வாரணாசி என்பது நில அமைப்பின் எல்லை குறித்து வந்தது. இது பாவிமொழியானதால் இயல்பானது. எந்தச் சமயத்தையும் குறிக்காததாயுள்ளது.

விராட் புருஷனுடைய வலதுகால் வருணையாறு என்றும் இடதுகால் அசி என்றும் இரண்டின் நடுவேதான் காசியாகிய புண்ணியநகரம் அமைந்தது என்றும் கூறுவதால் பொதுமையான பெயரையும் சமய நம்பிக்கைகளுக்கு உட்படுத்திய தன்மையை இதிலும் அறிய முடிகிறது. விராட்புருஷ நம்பிக்கையும் பொதுச் சமயமே!

இந்த நகருக்குப் பல பெயர்களிருப்பினும் காசி என்பதே பலருக்கும் தெரிந்ததும் விருப்பமானதும் ஆகும். காசி என்றால் ஒளிர்வது என்று பொருள்தரும். பிரகாசம் என்பது போலக் 'காசி'யை உணரவேண்டும். இதுவும் பொதுமையான பெயரேயாகும்.

கங்கை வடக்கு நோக்கி ஓடுகிறது. மேற்குக் கரையில் தான் காசி இருக்கிறது. எனவே காலைக் கதிரவனின் ஒளி கங்கையுடன் இணைந்த காசியைத் தொடுவதால் பிரகாசிப்பதையே இந்தப் பெயர் கூறுவதாகக் கொள்ள லாம். அறிவுக்கு வளநகராக விளங்குவதும் காசியே— முக்தியே ஒளியாகிய ஞான சாதனத்தால் எய்தப்படுவ தால் முக்தி நகராகிய இதுவும் காசியே—யாவரும் சிவமாக இருப்பதும், சிவனே காசியை விட்டு நீங்காததா யிருப்பதும், சிவம் ஒளிப் பொருளாயிருப்பதும் இந் நகருக்குக் காசி என்று பெயர் தந்தது எனலாம்.

காசியை ஒரு பெண்தெய்வமாகக் கொண்டால் அவளுடைய வலது கை தெற்காகவும் இடது கை வடக் காகவும் வரும். தேவியைப் பூசை செய்பவர்கள் பூசையை முடிக்கும்போது "இதி தேவ்யா வாம ஹஸ்தே பூஜாம் ஸமர்ப்பய" என்று கூறி இடது கையில் சேர்ப்பார்கள். வலது கை இறைவனைச் சார்ந்திருக்குமாதலாலும் இடது கையே வரம்தரும் கையாகையாலும் இப்படிச் சொல் வதாக மரபு இருக்கிறது. வடக்கு நோக்கி ஓடும் கங்கையால் காசியின் வடக்குப் பக்கமே புனிதமாவதால் இந்த நகர் மேற்குக் கரையில் அமர்ந்தது.

மேலும் ஒரு கோயிலின் கிழக்குவாயில் இவ்வுலக வாழ்வுக்கு அருளுவதென்றும், மேற்கு வாயில் மேல் உலக வாழ்வுக்கு அருளுவதென்றும் குறிப்பது மரபு. முக்திதரும் சித்தியுடைய இந்த நகரமும் இம் மரபுக்கு ஏற்ப மேற்குக் கரையில் அமைந்ததோ என்னும்படி உணரலாகும்.

இம்மாட்சி நகரின் வலது கையே தென்பகுதி என்பது அசி யாற்றை வாளாகவும் வருணையாற்றைக் கேடக மாகவும் உருவகம் செய்ததாலும் அறியலாம். வலது கையில்தான் வாள் பழகுவது இயற்கையாகும். ஆகையால் இதனையறிய முடிகிறது.

அசி யாற்றுச் சங்கமத்தில் நீராடுவது அபயம் பெறுவதையும் வருணையாற்றுச் சங்கமத்தில் ஆடுவது வரம் பெறுவதையும் குறிப்பதாகவும் நினைக்கவேண்டும்.

கங்கையாற்றின் மேற்குக்கரை வளைவாக இருந்து காட்சிதருகிறது. இதுவே இதயத்தானம் என்றும் புகழப் படுகிறது. இதயம் உடம்பின் மையமாகும் பொருளுடைய ஒரு சொல். இவ்வுலகிற்கும் மேல் உலகிற்கும் நடுவாகக் காசி யிருப்பதால் காசி இதயமாயிற்று. கைலைமலை யிலிருந்து நேர் தெற்காகப் பிரயாகையும் பிரயாகைக்குக் கிழக்கே தள்ளி காசியும் உள்ளது. எனவே கைலாயத் துக்கும் கீழே இடது பக்கமாகத் தள்ளியுள்ளது. கைலாயத் தைத் தலையாக வைத்தால் தலைக்கும் கீழே இதய மிருக்கு மிடத்தில் காசி பொருத்தமாக அமைந்திருப்பதை யறியலாம்.

இதயத்திலும் ஒளியே நிலைபெற்றிருப்பதாக உபநிஷத்துக்கள் கூறும்; எனவே இதயமான காசியும் 'ஒளிர்வது' என்ற பொருளமைந்த பெயரை மேற்கொண் டிருப்பது போற்றத்தக்க தாகும்.

4. வாழ்வியலில் காசி

மனித வாழ்வில் அடிக்கடி நெருங்கிய தொடர்புடையவைமட்டும் தான் மதிக்கப்படுவன, நினைக்கப் படுவனவாகும். காசி இந்தியா முழுதும் பரவலாகப் பெருகிய சிறப்புக்குரியதாயிருக்கும் காரணம் வாழ்வியலுடன் அதற்கிருக்கும் நெருங்கிய தொடர்பேயாகும். இந்துக்களல்லாத பிற இந்தியர்களும் காசியை அறிந்து வைத்திருந்தனர்.

வாழ்வியலின் கூறுகள் பலவாயினும், அவற்றில் இல்லறம், துறவறம், மரணம் என்ற மூன்று மட்டுமே தலைமை தாங்கும் சிறப்புடையனவாகும். துறவைப் பொறுத்த வரை காசிக்கு மிகுந்த பங்கில்லை. துறவிகள் பலருக்கும் காசி விருப்பமானதாயிருந்தும் அவர்களுக்குக் காசியை விட்டால் வேறு ஒன்றிமில்லையே என்று நினைப்ப தற்கு ஏற்ப இந்நகரில் ஒன்றுமில்லை. துறவியாகாமல் ஞானம் எய்தாமல் இருப்போர்க்கும் காசி பயன் தருவதால் துறவின் மதிப்பு காசிக்கு உரிமையாகவில்லை.

இல்லறம் என்பதும் — அதில் நீண்ட பயணம் என்பதுமே — வாழ்வியலில் சிறப்பான பகுதிகளிலும் மிகச் சிறந்த பகுதியாகும். திருமணச்சடங்குகள் சிலவற்றில் மாப்பிள்ளை காசிக்குப் போவதாகப் பாவனை செய்யும் சடங்குண்டு. இதனை நடத்திப் பழகாத பிற சமூகத்தினரும்கூட இது பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே இல்லறத் தொடக்கத்திலேயே காசியின் பிணைப்பு பலருக்கு நினைவூட்டப் பெறுவதை அறிகிறோம்.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பதை உணரத்துடிக்கும் இயல்பு பிறப்பினோடு பசையாக ஒட்டிவருகிறது. ஆனால் உலக வாழ்வில் எதிர்ப்படும் சிக்கல்கள் பலவற்றைத் தீர்க்க முயலும்போது தவிர்க்க இயலாதபடியோ, தன்னை மறந்தோ, எதிர் பாராமலோ தவறுகள் செய்ய நேர்கிறது. இந்தத் தவறுகளுக்குக் கழுவாய் ஒன்று இருப்பதாகப் பலரும் நம்பிக்கை கொள்ளும்போது மனித மனம் அமைதியடைகிறது. தன்னுடைய தவறு மன்னிக்கப் படும் அல்லது தண்டனை குறைக்கப்படும் என்ற நினைவால் மனிதன் வாழ்க்கையில் மீண்டும் அமைதியாக ஈடுபட முடிகிறது. அந்தத் தவறுகளுக்குத் தண்டனை எதுவுமே இல்லாமல்போகும் என்று இருந்தால் மனித மனம் மிகவும் மகிழுமல்லவா? அந்தச் செயலைக் காசி தான் தருகிறது. இம்மண்ணை மிதித்தால் பாவம் கழியும் என்ற நம்பிக்கையைக் காசி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வற்புறுத்தி வந்திருக்கிறது.

மனிதனின் இந்த மனவியலை உணர்ந்த பெரியோர் காசியைப்பற்றி இப்படி வற்புறுத்துவதில் நிறைய கவனம் மேற்கொண்டிருக்கிறார்கள். காசியையே அடைய முடியாத வாய்ப்புடையவர்கள், தளரக் கூடாது என்பதற் காக அங்கங்கேயும் சில தலங்களைக் காசிக்கு நிகர் என்றோ அல்லது காசியினும் உயர்ந்தது என்றோ சொல் வதை ஒரு கடமை உணர்ச்சியோடு சொல்லியிருக் கிறார்கள். ஆனால் காரண காரியங்களை ஆராயும் மனம் மட்டுமே உடையவர்களுக்கு இத்திட்டத்தில் அவநம்பிக் கையும், குழப்பமும் வருவது இயற்கை.

பெரும்பாலோரின் ஒரு நம்பிக்கையை அதனால் அவர்கள் பெறும் பயன்கருதி ஆதரிப்பதுதான் பெருந் தகைமையாகும். அது அறிவுக்குப் பொருந்தி வருகிறதா என்று ஆராய்வது தேவையற்றது; பயனற்றது. எதை யாவது ஒன்றை நம்பிக் கொள்கிற மனம் உடலியலில் தீங்குவாராமல் பாதுகாப்பதை இன்றைய மனோவியலார்

கூறுகிறார்கள். சாக்கடை முதலிய கழிநீரின் தூய்மை யின்மையை மட்டுமே கருதி, படித்து, விலகுகின்றவன் என்றாவது சாக்கடை நீரில் தெரியாமல் குளித்து விட்டால் 'குளித்தோமே?' என்ற அச்சமே குளிர்க் காய்ச்சலை உண்டாக்கி விடும். ஆனால் நாள்தோறும் சாக்கடை ஓரத்தில் படுப்போர், பணி செய்வோர் அஞ்சாமலும் ஆராயாமலும்தான் இருக்கிறார்கள்; அவர் களைச் சாக்கடை அவ்வளவாகப் பாதிக்கவில்லை! கழிநீர் கெடுதி இல்லையா? கெடுதிதான்! ஆனால் அதையே நினைத்து அஞ்சும் மனத்தைவிடக் கெடுதியானது வேறெதுவும் இல்லை.

எனவே நம்பிக்கையைப் பழிப்பதைவிட அதில் வரும் பயனை எண்ணிப் பாராட்டுவதே மேல். மனோவியல்படி அதுவே பகுத்தறிவும் ஆகிவிடுகிறது.

தவறுகளுக்குத் தண்டனை குறையும் ஓர் இடம் அல்லது தண்டனையே இல்லாது செய்யும் ஓர் இடம் ஊர் நடுவே இருந்தால் பயனில்லை. தொலைவில் இருக்க வேண்டும். தவறுக்கு வருந்தும் மனித மனத்தை மூட்டை யாகக் கட்டிக் கொண்டு போய் ஓரிடத்தில் போட்டு விட்டு அவன் மனம் ஓய வேண்டும். இது கருதித்தான் யாத்திரை என்பதை நூல்கள் பாராட்டின. இந்த மனவியல் உண்மையை இன்று நேற்றன்று; வேதங்களில் தலையாய 'ரிக்' வேதமே கூறக் காணுகிறோம். நாம் காணும் இதே நோக்கத்திலேயே அது கூறுகிறது.

"யாத்திரை செய்யாதவனுக்கு இன்பம் என்பது இல்லை; மனித சமூகத்தில் வாழப்புகுந்த மிக நல்ல மனிதன்கூடப் பாவியாகிவிடுகிறான்; ஆனால் யாத்திரை மேற்கொள்ளும்போது அவன் மனம் ஆத்மா எல்லாம் மலர்கின்றன; வளர்கின்றன; கனிகின்றன... அவன் பாவங் கள் யாத்திரைக் களைப்பினாலேயே நீங்குகின்றன... எவன் யாத்திரை போகவில்லையோ அவனுடைய நற்

கா. — 2

காலமும் அல்லது அதிர்ஷ்டமும் அவனைப் போலவே முடங்கி அமர்கிறதே தவிர அவனை நோக்கிவரவில்லை. அவன் எழுந்தால் அதுவும் எழும், அவன் நடந்தால் அதுவும் நடக்கும்; அவன் உறங்கினால் அதுவும் கூட உறங்கிப் போய் விடும்.'' [ரிக். ஆத். ப்ர. 7. 5]

அப்படியானால் யாத்திரையே ஒரு போலி உணர்ச்சியா? அதுபோலத்தான் ஆராய்ச்சி மனத்தில் படும்— இப்படிப் பட்டுவிடுமே என்பதையறிந்த நம் பெரியோர் பல்வேறு அறிவியல் காரணங்களாலும் சோதித்து உணரத் தகுந்த ஓர் இடத்தை அல்லது இடங்களைத் தமது ஞானத்தால் தேர்வு செய்து தெரிவித்துள்ளார்கள். அதிலே காசியும் இராமேஸ்வரமும் கைலையும் இப்படிச் சில பகுதிகள் அடங்கும்.

காசிக்காரனும் இராமேச்சுரத்திலுள்ளவனும் யாத்திரை போகத் தேவையில்லையே? ஏன் என்றால் அவ்வூர்களே மிகவும் புனிதமாயுள்ளனவே?—என்றால், அதைத்தான் இராமேச்சுரம், திரிவேணி, காசி, கயா, மீண்டும் திரிவேணி, மீண்டும் இராமேச்சுரம் என்று ஒரு சுற்றாகச் சுற்றி மரபு வைத்தமை காட்டுகிறது. காசியானும் இராமேச்சுரத்தானும் அவ்வூர்களிலேயே தங்கி விடுவதால் முழுப்பயனும் கிடைப்பது அரிது என்று இம் மரபில் விளக்கப்படுவதையறியலாம். கிறித்தவரும், முகம்மதியரும், சமண பௌத்தரும் தம் சமயத் தலைமைப்பதிகளுக்கு யாத்திரை செல்வதை நோக்கும் போது இந்தப் பேருண்மை உலகப்பொதுவாயிருப்பதை உணர்கிறோம். மனவியல் மனிதர் யாருக்கும் பொதுமைதானே?

பழநியான் ஐயப்ப விரதம் இருத்தலும் திருவரங்கத்தான் திருப்பதி போதலும், தில்லையான் மதுரை குமரி எனப் போதலும் மனித மனத்துக்கு அயலான ஒன்றிலே ஆர்வமிருப்பதை உணர்த்தக் காணலாம். எனவே யாத்திரையின் தலைமை வரிசையில் காசி நின்று வாழ்

வியலின் மையத்தை யடைகிறது. காசிக்குள்ளதே இராமேச்சுரத்துக்குமாயின் ஏன் காசியளவு புகழ்பெற வில்லை என்றால்—காசிக்கு இருந்த இலக்கிய, சடங்கு சம்பிரதாய, முயற்சிகள் எண்ணிக்கையில் மிகுந்ததே யாகும். இன்னும்கூட இராமேச்சுரம் ஒரு தீவுதான். ஆனால் காசி நடுநகரமல்லவா? இதுவே காசிக்கு மிகவும் வாய்ப்பாதலையறிவிக்குமே!

காசிக்குப் போனால் எதையாவது விட்டுவிட வேண்டுமே என்ற பழக்கம் இன்றும் உள்ளது. ஒரு துண்டுத் துணியையாவது பழையதாகப் பார்த்துக் கங்கையில் விட்டு விடுவார்கள். அதாவது பாவம் போனதற்கு அடையாளம், மோட்சத்துக்கு உடனே போய்விடக் கூடாதே என்றும் வேட்டியை மோட்சத் துக்கு அனுப்பி விடுவதாக இது ஆகிவிடலாம். நாம் இதைக் கேலி செய்ய வரவில்லை. மக்கள் மனத்தில் காசியின் அழுத்தத்தை உணரவே இதை நோக்குகிறோம். உறுதியாகக் காசி உன்னை ஏற்றுக் கொள்ளும் என்பதையே இந்தச் சடங்கு மக்கள் மனத்தில் ஆழப் பதித்து விடுகிறது.

"காசிக்குப் போனாலும் கருமந் தொலையாது" என்ற பழமொழி வாழ்வியலில் காசியை இணைத்த தாகிறது. கருமம் தீர்ப்பதில் காசி வலிமையானது என்பதைத்தான் எதிர்மறையாக இப்பழமொழி உணர்த்து கிறது.

பழைய காலக் கல்வெட்டுக்களில் ஓர் அறச் செயலைக் காக்க வேண்டுமென்பவர் எழுதும் வழக்கம் காசியை நமக்கு உணர்த்தும். 'இந்த அறச் செயலுக்கு 'இதம்' செய் பவர்கள் சூரிய சந்திரர் உள்ள மட்டும் வாழ்வர் முத்தியடைவர்; இச்செயலுக்கு 'ஹிதம்' செய்பவர்கள் கங்கைக் கரையில் அல்லது காசியில் காராம் பசுவைக் கொன்ற பாவத்துக்கு ஆளாவார்கள்'—என்ற பொருள்பட எழுதியிருக்கும் அக்கல்வெட்டுகளில்!

மக்களுக்குக் கங்கையையும் காசியையும் நன்கு தெரிந்திருந்தமையால் இப்படி எழுதினார்கள். இதுவே மேலும் மேலும் காசியைப் பரப்பவும் காரணமுமாயிற்று. காசி, பாவம் போக்கும் என்பதோடு அங்கேயே பாவம் செய்பவர்க்குப் பாவம் போவதை இம்மொழிகள் ஆதரிக்கவில்லை; எனவே அங்கேயே பாவம் செய்தோர் யாத்திரை செய்து சாந்தியடைவதே வழி என்பதையும் அறியலாம்.

முதுமையை அடைந்த மனிதன் இறப்புக்கு அஞ்சும் அதே நேரத்தில் இறப்பிற்குப் பிறகும் எதுவாயினும் ஓர் உலகம் இருக்கும் என்று நம்புவதில் பற்றுக் கொள்கிறான். இவ்வுலகில் வாழும் ஆசையும் அது இனி இயலாது என்ற தெளிவும் வேறு உலகை இது வரையிலும் நம்பாதவனுக்கும் கூட ஒரு நம்பிக்கையோ அல்லது விருப்பமோ வருமாறு செய்துவிடுவதை யறியலாம். ஆகவே வாழும் போது பாவம் போக்கும் தலங்களில் பற்றுக் கொண்டவன் சாகும்போது மறுபிறப்பா? மறு உலகமா? முக்தியா? இப்படி ஏதாவது ஒன்றிலே ஈடுபட்டவனாகிறான். 'போகிறகதிக்கு நல்லகதி தேடியாக வேண்டும்'—என்ற புலம்பல் மனம் அவனுடைய இந்த நிலையை நமக்குக் காட்டுகிறது. இதை நினைக்காத சராசரி மனிதனால் மேற்கொண்டும் சில நாள் அமைதியாக வாழ முடியாது; எனவே முக்தி தரும் தலங்கள் முதுமையாளரைப் பெரிதும் ஈர்க்கும். ஏழு முக்தித் தலங்களுள் காசியும் ஒன்றாகும்.

தன் பக்கம் அன்புடையாரைக் காக்கச் சிவ பெருமான் வெளிப்பட்ட அட்ட வீரட்ட தலங்களும், மயானம் என்று பெயருடைய கச்சியேகம்பம், கடவூர் மயானம் முதலியனவும், வைணவத்தில் கருட சேவைச் சிறப்புடைய தலங்களும் முதுமைக்குப் பிறகு மறுமையில் பயன் தரும் தலங்களாகையால் அவை மிகுதியும் கொண்டாடப் பெறுவது இயற்கை.

இந்த வரிசையில் காசி 'மகா மசானம்' எனப்படும். இறக்க முக்தி தரும் நகர் என்றே காசி வழங்கப்படுகிறது.

காசியில் இறவாதவர்களின் எலும்பையோ அல்லது அவர் நினைவான பிண்டங்களையோ காசியில் விளங்கும் கங்கையிலிட அவர்களுக்கும் முக்தி கிடைக்குமென்பதால் காசிக்கு மற்றதலங்களைவிட மிகுந்த சிறப்புக் கிடைக்கிறது.

பிறப்பதால், இருப்பதால், தரிசிப்பதால் முத்தி தரும் பதிகளில் ஒருவன் நேரே சென்றுதான் செய்ய முடியும். ஆனால் இறக்க முத்தி தரும் இப்பதியில் நம் சந்ததியினர் பிண்டம் போடுவதாலேயே அது கிடைக்குமென்றால் அதைவிட எளிதான ஒரு பயன் வேறு எவ்வூராலும் கிடைக்காதன்றோ?

தமிழர்களின் பழைய பழக்கம் நிலத்தில் அடக்கம் செய்வதுதான். ஆனால் சங்க காலத்திலேயே எரிப்பதும் பழக்கத்துக்கு வந்து விட்டது. 'மிக நல்ல முறையில் ஒரு மன்னவன் வாழ்ந்து விட்டபின் அவன் இறந்த பின் இடுவதா சுடுவதா என்று ஏன் ஆய வேண்டும்? அவன் வாழ்வின் முற்காலத்தில் கிடைக்காத ஒன்றா இறந்தவனை அடக்கம் செய்வதால், கிடைக்கப் போகிறது?'— என்று புறநானூற்றுப் புலவன் புலம்பி அழுவதிலிருந்து சுடுவதாகிய பழக்கமும் இருந்ததை அறிகிறோம். சுடும் வழக்கத்தில் மறுமுறை போய் எலும்புகளை எடுத்து நீரில் விடுவது ஒரு வழக்கம். பால் தெளிப்பது அதையே தெய்விகமாக நினைப்பதும் உண்டு. இப்படிச் செய்யும் சடங்குகளில் ஒரு சிறு குளத்தில் எலும்பை விட்டவனும் காசியில் கங்கையில் விட்டதற்குச் சமம் என்ற நினைவுடனே செய்கிறான். எனவே இறப்புச் சடங்கிலும் காசிதான் நினைவுக்கு வந்து நிற்கிறது. இதிலிருந்து எரிக்கும் வழக்கம் தோன்றிய காலம் முதலாகவே காசியின் பெருமை பரவத் தொடங்கியது எனலாம். தீக்கடவுள் சாட்சியாக அவர்மூலம் யாகத்தைக் கடவுளர்க்கு உரிமையாக்குவது போலவே உடலை எரிப்பதும் கடவுள் தந்த உடலைப் பஞ்ச பூதங்களில் மீண்டும் அணுத்துகள்களாக ஒன்றச் செய்வதற்குத்

தீக்கடவுளையே நாடுவதாகும். எனவே வேதாந்த வைதிகச் சடங்குகள் வந்து அவை பரவிய காலம் முதலாகவே காசியும் மயானப் புகழால் பரவி விட்டது.

காசிநகரில் எங்கு எரித்தாலும் அது முக்திக்குரிய தாம். மேலும் ராஜ ராஜ சோழன் கல்வெட்டுக்களில் நில அளவு செய்யப்பட்டது வரும்; அவற்றைக் கவனித்தால் சுடுகாடு ஊருக்கு வெளியில் மட்டுமே அமைந்திருப்பதை யறியலாம். கோயில்களில் மயானமே கோயிலாகக் கொண்டாடப்படுவதுண்டு; ஆனால் ஊரில் அப்படி யில்லை. காசி இதற்கு முற்றிலும் மாறானதாகும். அங்கே ஊர் நடுவில்தான் சுடுகாடு, குளிக்கும் துறையில்தான் சுடுகாடு, ஊர் முழுதுமே சுடுகாடு. நம் பகுதியிலும் இந்தியாவின் பிற பகுதியிலும் புது நகர்கள் தவிர மற்ற இடங்களில் சாதிக்கொரு சுடுகாடு இருப்பதுண்டு. காசியில் அந்த வேறுபாடே இல்லை.

சகுன சாத்திரங்களில் பிணம் வருவதைத் தவறாக அல்லது கெடுதியாகக் கூறாததுமன்றி நல்ல சகுனம் என்றே கூறியிருப்பது நம் கலாச்சாரத்தின் இன்றியமை யாத பகுதியாகும். இது காசியில்தான் பழக்கத்திலிருக் கிறது. நம் சாவுகளில் சென்று வந்தோர் குளிப்பதுண்டு. இது தீண்டாமை என்றும் பலர் கருதுவதுண்டு. மேலும் நோய் முதலிய விலகவே இது என்று ஆராய்வோர் கூட உண்டு. ஆனால் நோக்கம் அதுவன்று.

பூசையில் நைவேத்தியம் முடிந்த பிறகு விக்ன பூதங் களுக்குப் பலிபோடுவதுண்டு. அப்படிச் செய்த பின் "ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம் ஹ்ரீம் ஸர்வ விக்ன க்ருதப்ய: ஸர்வ பூதேப்யோ ஹூம் பட் ஸ்வாஹா" — என்ற மந்திரம் ஓதித் தத்துவ முத்திரைகாட்டி, தான் படைக்கப்பட்ட நிலையிலேயே மீண்டும் இருப்பதாகப் பாவித்தலும், பாண முத்திரைகாட்டிப் பூதங்களை எய்து வேறுபடுத்தி விட்டதாகப் பாவித்தலும் செய்வர். இப்படிச் செய்தபின் கால் கழுவிய பிறகே மீண்டும் பூசையிடத்துக்கு வருவர்.

இதே பழக்கம்தான் சாவுக்குப் போய் மீண்டதும் குளிப்பதுமாகுமே தவிர்த் தீண்டாமை இல்லை. இதனாலேயே குளித்தவர்கள் வீட்டில் கொல்லைப்புறம் நுழையாது தெருவாயிலில் நுழைவதும், கால்கழுவிய பிறகே உள் செல்ல வேண்டுமென்பதும் வலியுறுத்தப் படுகின்றன. அதாவது எரியூட்டியவர்கள் பஞ்சபூதத்தில் சேர்க்கப்படுவதால் பூத சம்பந்தம் எரித்தவர்களுக்கும் வரலாம். அப்போது நன்மையான பஞ்சபூதமேயன்றி விக்ன பூதங்களும் பற்றுதல் கூடாது என்பது இதன் விளக்கமாகும்.

இவற்றை உணராவிட்டாலும் கடனாகச் செய்வதுண்டு. இப்பழக்கத்தால் சாவு புனிதமாதலை மனிதன் உணர வேண்டும் என்றாகிவிடுகிறது. எனவே இறப்பு முத்திக்குரிய காசியின் புனிதம் இந்துக்களால் விளக்காமலே விளங்கிக் கொள்ளப்பட்டதாகி விடுகிறது? உண்மையான இந்து மரணத்துக்கு அஞ்ச வேண்டாம்.

காசியின் ஐம்பது கல் தொலைவிலுள்ள சவங்களைக் கூட இங்கே கொணர்வதற்குத்தான் அம்மக்கள் விரும்புகிறார்கள். அதனால் பிணம் ஏற்று 'ரிக்ஷா'க்களைக் கூட நாம் எளிதில் இங்கே காண முடியும். அப்படி வரும் ஊர்திகளைப் பிறர் அசுத்தமாகக் கருதுவதில்லை. தெருவில் சவம் செல்லக் கண்டால் கும்பிடும் எளிய பழக்கத்தை இவ்வூரில் எங்கும் காணலாம். "ராம் நாத் சத்ஹை," "சம்போ மஹா தேவா," "போலோ ஹரி" முதலிய முக்தியடைந்ததை அறிந்து கொண்ட அடையாள மந்திரங்களை முழக்குவார்கள். அழுதல், ஒப்பாரி, தாரை தம்பட்டம் முழக்குதல் முதலிய எவையும் இல்லை.

காசியில் தீயன உரைக்கக் கூடாது என்று கருதியவை போலப் பல்லிகள் ஒலிப்பதில்லை என்கிறார்கள். பசுவும் கூட அம்மா என்று அலறுவதில்லையாம். பசுவே காசியில் தெய்வமாகையால் அதற்கு மிகுந்த பாதுகாப்பு உண்டு

பரிகாரிப்பும் உண்டு; பிறகு ஏன் அது கத்த வேண்டும்? கதற வேண்டும்?

இறக்கும் நிலையில் உள்ளவர்களுக்குப் பெரும்பாலும் காது கேட்காது. ஆயினும், திருவாசகம் தேவாரம் முதலிய துதிகளையோ மோட்ச மந்திரங்களையோ, கடவுள் திருநாமங்களையோ காதில் ஓதும் வழக்கம் இன்றும் உண்டு. சமண சமய நூலாகிய சீவகசிந்தாமணியில், அடிபட்டு இறக்கக் கிடந்த ஒரு நாயின் காதில் சீவகன் மோட்சமந்திரம் ஒலிக்கிறான். அந்நாயின் ஆன்மா சுதீக்கணன் என்ற தேவகுமாரனாகி விடுகிறது. பிறகு சீவகன் சிறைப்பட்ட போது அத் தேவகுமாரன் சீவகனைச் சிறையில் இருந்து வெளிக் கொண்டுவருகிறான். இப்படி இக்கதைமூலமாகச் சமணர்களுக்கும் இந்தச் சடங்கு நம்பிக்கை இருந்ததை அறிய முடிகிறது.

காசியில் இறந்தவர்கள் காதில் மோட்சகதிக்கான மந்திரத்தைச் சிவபெருமானே ஓதுவதாகக் கூறப்படுகிறது. இப்படி ஒருநாள் இராமகிருஷ்ண பரமஹம்சர் காசியில் சிவனே மந்திரம் காதில் ஓதிடுவது போலும் ஓர் உருவெளிக்காட்சியைத் தமது சமாதி நிலையில் கண்டதாகக் கூறுகிறார்கள். ஆகவே மயானப் பெருமையின் எல்லாச் சடங்கும் காசியின் நினைவை மக்களுக்கு உண்டு பண்ணிய வண்ணமே உள்ளதை யறிகிறோம்.

உடலே அழிகிறது, அது ஒரு சட்டையைப் போன்று கழலுகிறது, ஆன்மா அழிவதில்லை என்ற உயிர்ப்பான தத்துவமே இந்தியாவின் அறிவார்ந்த கொள்கை. அதற்குத் துணை செய்யும் புகழ்ச் செயல்களே காசியில் நிறைந்துள்ளன.

முகம்மதியராய்ப் பிறந்தும் இராமபக்தராக விளங்கிய கபீர்தாஸ் 'காசியில் இறந்தால்தான் முக்தியா? பக்தனுக்கு எங்குமே அது கிடைக்கும்' என்று காசிக்கு வெளியிலேயே இறந்தார். பல்கலைக்கழகம் நிறுவிய

மாளவியா காசிக்கு ஒருகிலோ மீட்டர் தூரத்தில் பல்கலைக் கழக வளாகத்திலேயே இறப்பேன், அஸி ஆறு கூடத் தாண்டமாட்டேன் என்றார். மீண்டும் பிறப்பதையே விரும்பிய மாளவியாவின் பிடிவாதம், அதனால் பல்கலைக் கழகத்திலேயேதான் உயிர் நீத்தார். அவருக்கு முக்தி கிடைத்திருக்கும். ஆனாலும் இவற்றை ஏன் நினைக் கிறோமென்றால் இறக்க முக்திதரும் காசியின் பெருமை எத்துணை ஆழமான ஆணிவேர் கொண்டுள்ளது என்பதை யறியவே ஆகும். ஆகவே மயானச்சிறப்பும் பிற வாழ்வியல் சிறப்பும் காசியை இந்தியப் பொதுத்தலமாக்கிவிட்டது.

இறந்தவர் காதில் சிவபெருமான் மந்திரம் ஓதும் காட்சியை விரிப்பது இங்கே தகும். இறப்போர் உடலை உமாதேவியாகிய விசாலாட்சி அல்லது அன்னபூரணி தன் மடிமீது எடுத்து வைத்துக் கொள்கிறாளாம். ''ராமநாம'' மந்திரத்தைச் சிவபெருமான் ஓதுகிறானாம். சைவ வைணவ ஒருமைப்பாடு மட்டுமல்லாது வேறு சிறப்பும் இதிலுண்டு.

அனுமான் காட்டில் உள்ள காஞ்சிப் பெரியவர்கள் அருளாசியால் கட்டப்பெற்ற காமகோடீச்சரம் கோயிலில் தென்மேற்குப் பகுதியில் தேவியின் மடியில் சிவபெருமான் படுத்திருக்கும் காட்சியைக் கொண்ட சிவசயன அமைப் பைக் கண்டு வணங்கினால் இதன் உண்மை புரியும்.

ஆலகால நஞ்சை உண்ட பெருமான் அதன் கடுமை யால் அவசமுற்றுச் சிறிது அயர்ந்தபோது அம்மையின் மடியிலிருப்பதாக அக்காட்சி உள்ளது. சென்னைக்கு அருகில் ஊத்துக்கோட்டை அருகில் உள்ள சுரட்டப் பள்ளியில் இருக்கும் பள்ளி கொண்டேச்வரர் கோயிலிலும் இப்படி ஒரு காட்சியுண்டு. காசியில் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சியாக இருப்பதற்கு விளக்கம் தரவே பெரியவர்கள் இப்படி ஓர் அமைப்பை ஏற்படுத்தினார்கள் போலும்.

அநாதியாகிய பரமனுக்கு இறப்பும் மூப்பும் இல்லை. ஆனாலும் நஞ்சோ கொடிதினும் கொடிது. அதையுண்டதால் அவசமுற்றார். அதை நீக்குவதே அம்மையின் பணியாகும். அம்மைக்கு 'ஓம்' பீஜ மந்திரமாகிய தாரா என்ற ஓர் தசவித்யா அம்சம் உண்டு. அதை அமிர்தேச்வரி என்பார்கள். "கிரந்தீம் அங்கேப்ய": என்று தொடங்கும் சௌந்தர்யலஹரி சுலோகம் அமிர்தேச்வரியாகிய சந்திரகாந்த சிலா மூர்த்தத்தைத் தியானிப்பதேயாகும் இச்சுலோகத்தால் நஞ்சு நீங்கும் என்பது பலரின் அனுபவம்.

இப்படி அமிர்தேச்வரியாகிய அன்னை மடியில் ஆண்டவன் சயனித்ததால் ஆலஹால நஞ்சின் கடுமை உடனே நீங்கியது. இப்படித்தான் இறப்போர்க்குச் சாவு என்னும் யமவாதனை நஞ்சு ஊட்டப்பட்டபோது காசி நகரின் அமிர்தேச்வரியான அன்னை மோட்சத்துக்குக் காரணமான அமிர்தத் தொடர்புதரத் தன் மடியில் கிடத்திக் கொள்கிறாள் என்ற உண்மையை அறிகிறோம்.

சிவபெருமான் 'ராமநாம'த்தை ஏன் ஓதவேண்டும்? இராமனுக்குரிய பெயர் அவன் அவதாரம் செய்வதற்கு முன்பே இருந்த ஒரு பெயர்தான். வால்மீகிக்கு ஏழு முனிவர்கள் இராமன் பிறப்பதற்கு முன்பே இந்த மந்திரத்தைச் சொன்னார்கள். அவர் வேடராகையால் சொல்ல வரவில்லை. "மரா மரா" என்று தலைகீழாக உச்சரிக்கச் சொன்னார்கள். இரண்டு முறை இப்படி உச்சரித்தால் ஒரு முழு இராம நாமம் இடையில் கிடைத்து விடும். இதனாலேயே புற்று வளர்வதும் தெரியாமல் வால்மீகி யோகியாகித் தவம் செய்யப் போய்விட்டார். வேடர் தவறாக உச்சரித்ததற்கே இவ்வளவு பெரிய பலனா? என்று வியக்க வைக்கும் மந்திரம் அது.

"ரமா" என்பது மகாலட்சுமியின் நாமங்களிலும், திரிபுரசுந்தரி நாமங்களிலும் வரும்

(ஓம்) ரம்யாயை (நம:) = மகிழ்ச்சியளிப்பவள்
(ஓம்) ரமண்யை (நம:) = ஆத்ம ஆனந்தத்தைத் தருபவள்
(ஓம்) ரமாயை (நம:) = திருமகள் வடிவானவள்
(ஓம்) ராமாயை (நம:) = பெண்களின் வடிவானவள்

இவை நான்கும் லலிதா சகஸ்ரநாமமும் பாஸ்கரராயர் உரைக் குறிப்புமாகும் (307, 310, 313, 319 நாம எண்கள்). ஆத்மாவிற்கு ஆனந்தமான மோட்சத்தை யளிப்பதும் ஆத்மாவே பெண் தன்மை உடையது என்பதும் பரமாகிய சிவமே ஆண் தன்மையது என்பதும்; எனவே பரமனை எய்தி ஆத்மா இன்புறுதல் "ராம" என்ற நாமத்தின் பொருள் என்பதும் அறியவேண்டும். இதனால்தான் "இராம" என்ற மந்திரம் வெளிப்படத் தவம் செய்து இராமனையே முனிவர்கள் அவதாரமாகப் பெற்றனர். எனவே அமிர்தேச்வரி மடியிற் கிடப்பதும் அமிர்தமந்திரம் மொழிவதுமே இராமநாமத்தைச் சிவன் ஓதுகிறார் என்ற உண்மையை உணர வேண்டியவர்களாகிறோம். இதில் சைவ வைணவமும் இணைவது நம் காலத்துக்குப் பயனு மாகும். இப்படிக் காசியின் பெருமை ஆராய ஆராய முதன்மை பெறும் வலிவை நமக்குத் தந்த வண்ணமா யுள்ளது.

5. புராணத்தில் காசி

இன்றைய காசியைப் 'புராணக் காசி' மூலமாகப் பார்த்தால்தான் மதிப்பு விளங்கும்; இல்லாவிடில் ஒரு சாதாரண ஆற்று நகரத்தின் மதிப்பு மட்டுமே அதற்கு வரமுடியும். வடமொழியிலும் அதன் ஆதார அடிப் படையில் பிற இந்திய மொழியிலும் பழைய நூல்களில் காசியின் பெருமை நிறையவே சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவும் தனியே ஒரு பெரிய நூல் அளவில் எழுதத் தகுந்தது. இச் சிறுபகுதியில் ஓரளவு அப் புராணங்களைப் படித்த உணர்வை ஏற்படுத்த ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டும் இங்கே குறிக்கலாம். வேறு சிலவற்றைச் சமயப் பகுதி கோயில் பகுதிகளைக் கூற நேரும்போது குறிக்க லாம்.

காசியின் பெருமைக்குத் தலையாயச் சிறப்புத் தருவது ஜோதிலிங்க வரலாறே ஆகும். இது இலிங்க புராணம், சிவபுராணம் முதலாகப் பிற புராணங்களிலும் தோத்திர நூல்கள் பலவற்றுள்ளும் கூறப்பட்டதாகும். பிரம்மாவும் திருமாலும் சிவபெருமானின் அடிமுடி தேடியதே அவ்வரலாறு ஆகும். ஜோதிலிங்கமாய், ஒளிப் பிழம்பாய், பேரொளித் தம்பமாய்ச் சிவபெருமான் நின்றதே இந்நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியை இந்துக்கள் பலரும் அறிவர் ஆயினும் அது காசியில்தான் நிகழ்ந்தது என்பதுதான் பலரறியாது இருக்கக் கூடியதாகும். முதல் இலிங்கத்தைச் சிவபெருமானே தாபிதம் செய்ததும்; ஒளி இலிங்கமாய் ஓங்கி நின்றதும் காசியில்தான். இதன்

வெளிப்பாடாகவே ஜோதிர்லிங்கம் உள்ள பன்னிரண்டு தலங்கள் இந்தியாவில் தோன்றின.

இராமேச்சுரத்தில் காஞ்சிப் பெரியவர்கள் அருளாணையால் எழும்பிய சங்கரமடத்தில் 12 ஜோதிர் லிங்கங்களை ஒரேஇடத்தில் அமைத்து அவைகள் உள்ள கோயிலின் விமானம் அல்லது கோபுரம் ஆகியவற்றையும் அடையாளம் காட்டியுள்ளார்கள். இந்தியாவின் எல்லாத் திசைகளிலும் பல மொழி மக்கள் வாழிடங்களிலும் இந்த ஜோதிர் லிங்கங்கள் இந்து சமய ஒருமையை உணர்த்தும் இணைப்பாகப் பரவியுள்ளன. இதனை எமது இராமேஸ்வரம் என்னும் திருக்கோயில் வரிசை நூலில் காணவேண்டுகிறோம்.

அடிமுடி தேடிய வரலாறு என்பது ஒரு யோக முயற்சியை விளக்கும் கதையுமாகும். ஸ்ரீவித்யாவில் ஸ்ரீ சக்கர நவாவரண பூசையில் 12ஆவது தியானப் பகுதியாக வருவதையே இது விளக்குகிறது எனலாம்.

" ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் அம் ஆம் ஸௌ:
ப்ரகடயோகினீரூபாயைத்ரிபுர தேவ்யை நம:"

என்று மந்திரம் கூறி முதுகுத் தண்டினுள் இடா, பிங்களா, சுழிமுனை ஆகிய சூரிய சந்திர அக்னி நாடிகள் மூன்றினையும் நினைத்துக் கோடி சூரியப்பிரகாசம் உள்ள தம்பமாக முதுகுத்தண்டு முழுதும் எழுந்த ஒளிப்பிழம்பைத் தியானிப்பதே அப்பூசை முறையாகும்.

முதுகுத் தண்டின்கீழ் மூலாதாரத்தில் கணபதியும் பிரம்மா அதற்குமேல் இரண்டு விரல் அளவில் சுவாதிட்டானத்திலும் அதற்குமேல் மணிபூரகத்தில் ஒருசாண் அளவில் உந்திச் (நாபி) சுழியில் திருமாலும் அதற்கு மேல் ஒரு சாண் அளவில் அநாகதத்தில் சதாசிவன் அல்லது ருத்ரரும் அதற்குமேல் தொண்டைக்கும் கீழான குழியுள்ள விசுத்தியில் ஜீவேச்வரர் அல்லது ஸதாசிவனும் அதற்கு மேல் புருவமத்தில் பரமாத்மாவும் என்று ஆறு ஆதாரங்

-கள் கூறப்படும். இவற்றில் 2, 3 ஆகிய இடைப் பகுதியில் பிரம்மாவும் திருமாலும் இருக்கிறார்கள். அடிப்பகுதி ஒன்றாவதாகிய கணபதியும் 4, 5, 6 வேறு கடவுளரும் முடிவரை இருப்பதால் இடைப்பட்ட பகுதிகள் அடி முடியைக் காணுவதில்லை எனும் வழக்கத்தின் விளக்கமே ஒளி இலிங்கமான சிவபெருமானை அடிமுடி யறியாது போனதாகச் சொல்வதாகும். ஆகவே யோக சாதனக் குறிப்பும் காசியின் புராண நிகழ்ச்சியால் விளக்கப் பட்டதாக முடிகிறது.

ஹரப்பா மொஹஞ்சதாரோவில் அகழ்ந்தபோது 10 ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்ட சிவலிங்கங்கள் கிடைத் துள்ளன. உலகத்தின் முதல் வழிபாடாக இலிங்கவழிபாடு கருதப்படுகிறது. இத்தாலி, கிரீஸ், துருக்கி, பாரசீகம், எகிப்து, சிரியா, ஆப்பிரிக்கா, திபேத், சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் சிவலிங்க வழிபாடே ஒருகாலத்தில் இருந்திருக்க வேண்டும் என்று சர். ஜான் மார்ஷல் போன்ற அறிஞர்கள் ஆய்ந்து கூறியுள்ளனர்.

12 ஜோதிர்லிங்கம் என்ற தலங்களுடன் 68 சுயம்பு லிங்கத் தலங்களும் புராணங்களில் எண்ணப்பட்டுள்ளன. இன்று சுயம்பு என்று சொல்லப்படும் தலங்கள் பெருகி யுள்ளன. இவை யாவற்றுக்கும் முதன்மையும் தலைமையும் காசியே ஆகும். சுயம்புவாகவும் ஜோதியாகவும் இலிங்கம் தோன்றியது அங்குத்தான். மேலும் ஆய்வாளர்கள் இலிங்க வழிபாட்டின் தொன்மையையும் உலகு முழுதும் பரவிய தன்மையையும் வகுத்துக் காட்டும் போது இலிங்க முதன்மை பற்றிய காசியின் புராணச் செய்திகளின் பெருமை நமக்கு விளக்கமாகிறது.

சிவபெருமானைப் போலவே ஐந்து தலையுள்ள பிரம்மாவுக்கு ஒரு தலையைச் சிவபெருமானே கிள்ளி விட்ட வரலாறு பலருக்கும் தெரியும். முடிகண்டதாகப் பொய் கூறியதற்கா? ஆணவமாகப் பேசியதற்கா?

இப்படிப் பல காரணங்களைப் பல நூல்கள் கூறினாலும் இந்த வரலாறு தெரியும். அதன் பிறகுள்ளதே இங்கு நமக்குப் போதும். வேதமோதும் அந்தணனாகிய பிரம்மா விற்குத் தலைகொய்த பாவம் சிவபெருமானையே பின் தொடர்ந்ததாம். பிரம்மாவின் தலையை (கபாலத்தை)க் கையில் வைத்துக் கொண்டு அது பாவத்தால் கையை விட்டும் வீழாது போகவே பைரவக் கோலத்துடன் நாடு முழுதும் சுற்றினார். காசி மண்ணை மிதித்தபோது கபாலம் கீழே விழுந்தது; தொடர்ந்த பாவமும் விடு பட்டது. அக்கபாலம் விழுந்த பாவ விமோசன இடமே கபால மோட்சம் என்பதாகும்.

இக்கதை காசியின் பாவம் நீக்கும் உயர்வைக் குறிப்ப தோடு இந்தியத் தலங்கள் யாவற்றினும் காசியே உயர்ந்த தலைமைக்குரியது என்று நிலைநாட்டுவதற்கும் உரியதா கிறது. இறைவனாயினும் உலகியல் சட்டத்துக்கு உட் படவே நேரும் என்னும் நியதியை இது காட்டுகிறது. உயர்வு தாழ்வு சாதிபேதம் ஆகியன குறித்ததாக இக் கதையை நோக்கக் கூடாது. உலகில் அறிவு வர்க்கத்துக் குரிய மதிப்பாகவே கருதவேண்டும். அதற்காக அறிவு வர்க்கத்தில் பிறந்து அதற்குரிய முறைகளைக் கையாளா மல் இருப்போர்க்கு இது பொருந்தியும் வராது. எனவே காசியின் இந்தப் புராணம் கங்கையால் மட்டும்தான் பாவம் நீக்குவதாக இல்லை. அது காசியாகிய மண்ணின் காரணமே என்பதை வலியுறுத்துகிறது.

கங்கை வடக்கு நோக்கி ஓடுவது ஒரு சிறப்பு ஆயினும் அது வடக்கே நோக்கி ஓடுவது காசியாகிய பாவம் நீக்கும் நகரைத் தொடும் ஆசையால்தான் என்று கூறும் ஒரு புராணம் கங்கைக்கு முன்பே காசியின் பெருமையைக் காட்டியதாகிறது.

சிவபெருமான் பார்வதியிடம் கங்கையில் 6 கோடி லிங்கங்கள் தன் கண்ணுக்குத் தெரிந்ததாகக் காசிக் காண்டத்தில் வருகிறது. எனவே இலிங்கத்திற்கு என்ற

தனி நகராகவே காசி விளங்குகிறது. காசியின் கல்லும் மண்ணும் கங்கையின் நீர்த்துளியும் ஆகிய எல்லாமே இலிங்கங்களே என்றாகின்றன. ஒரு லட்சத்துக்கு மேற் பட்ட இலிங்கங்கள் காசி நகரில் ஒரு காலத்தில் இருந்தன வாம். இதனால் காசி மாதாவை 'சர்வலிங்கமயி' என்றும் 'சிவசக்தி ஸ்வரூபிணி' என்றும் பாராட்டுகின்றன நூல்கள்!

கேதாரம் காசியிலும் உண்டு; இமயமலையின் மேலும் உண்டு. இதுபற்றிச் சைவ காசியில் காணலாம். கேதாரம் காசிக்கு வந்தது காசியின் சிறப்பை மேலும் ஒரு படி உயர்த்தி விடக் காரணமாயிற்று. மணிகர்ணிகையில் உயிர் துறப்பாரை இந்திரன் வழிபடுவான்! வைகுந்தமோ கைலாசமோ அவர்கள் உறுதியாக அடைவர் என்று ஆதிசங்கரர் கூறுகிறார்.

ஒருமுறை காசியில் கடும் பஞ்சம் வந்து ஆறு ஆண்டுகள் துன்பம் துயரம் என்பவைகளே கங்கை வெள்ளமாக ஓடியதாம். சமூக அமைப்புகள் பாவ புண்ணிய மரபுகள் ஆகியன யாவும் அழிந்தனவாம். இதனால் கவலையுற்ற பிரம்மா, ரிபுஞ்சயன் என்னும் யோகியால்தான் காசியைக் காப்பாற்ற முடியுமென்று மனத்தில் திட்டம் கொண்டார். மன்னனாயிருந்து துறவி யாகி உயர்வடைந்தவன் அவன். அவனிடம் போய்ப் பிரம்மா காசி நகரை அரசாட்சி செய்யக் கேட்டுக் கொண்டார். அதைப் பொதுவாக ஒத்துக் கொண்ட அவன், கடவுளர் அனைவரும் காசியைவிட்டு வெளியே போனால், தான் ஆட்சி செய்வதாக நிபந்தனை கூறி னான். பிரம்மாவுக்கு நிபந்தனையை நிறைவேற்றுவது அப்போது எளிதாகத் தெரிந்தது. காரணம் ரிபுஞ்ஜயன் அரசாள ஒத்துக் கொண்டதே அவருக்குப் பெரிதாகத் தோன்றியது, அவனிடம் ஒப்புக் கொண்டதை யாவ ரிடமும் பிரம்மா கூறினார். சிவபெருமானுட்பட யாவரும் இதனால் வெளியேற நேர்ந்தது.

புனிதமான காசியை, தொட்டதும் பாவம் போக்கும் காசியை, இவ்வளவு தெய்வங்கள் அங்கே வாழ்ந்தும்கூட வறண்டு போகச் செய்துவிட்டனரே என்ற வருத்தமே, ரிபுஞ்ஜயனின் இந்த நிபந்தனைக்குக் காரணமானது. முப்பத்து முக்கோடி தேவர்களும் காசியம்பதி விட்டுப் போயினர்.

மறவேன் என்ற காசியைத் துறக்க வேண்டிய நிலை அவிமுக்தா தலம் என்ற காசியை நீங்க வேண்டிய காலம் வாய்த்தது. பிரளயத்திலும் பிரியாத பதியைப் பிரிய நேர்ந்தது. சிவபெருமானும் இதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. காசியை நீங்கியபின் மந்தார மலையில் தங்கியிருந்தார். பார்வதிதேவி காசிக்கு நிகரானது ஏதுமின்மையால் எப்படியும் காசிக்குப் போகும் வழியை முடிவு செய்யுமாறு வற்புறுத்தினாள்.

திவோதாசன் என்ற பெயரில் ரிபுஞ்ஜய மன்னன் மிகச் சிறப்பாக யாவும் முன்பு போல் மலர ஆட்சி புரிந்தான். ஆனால் கடவுளர் திரும்பி வருவதை மட்டும் அவனாக விரும்பவில்லை. அவனிடம் நேரில் தாழ்ந்து கேட்கவும் கடவுளர்க்குப் பொருந்துவதாயில்லை. மறைமுகமாகக் காசிக்குப் போவதைச் சிவபெருமான் முடிவுசெய்து 64 யோகினிகள் என்னும் தேவியின் படையினரை அனுப்பினான். அவர்கள் திவோதாசனை மயக்கிக் கடவுளர் வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கட்டளையிடப் பட்டார்கள். அவர்கள் எல்லா வகையிலும் முயன்றும் கூட, யோகியாகிய மன்னவனைப் பெண்மை யால் கவர முடியாமல் தோற்றுப் போயினர். தோல்வி யுடன் சென்று சிவபெருமானிடத்திலும் தேவியிடத்திலும் நிற்பதைவிட விருப்பத்திற்கு உகந்த காசியிலேயே தங்குவது என்று தங்கிவிட்டனர். சூரியனை அனுப்பினார் சிவபெருமான். ஏதாவது ஒரு சிறு குற்றமாவது காசி யரசனிடம் கண்டுவா என்று அனுப்பினார். 12 வீடுகளில் ஓராண்டில் வாழும் கதிரவன் அப்படியே இக்காசியிலும்

செல்பவனாய், குறி சொல்பவனாய், இரவலனாய், வணிகனாய், குருவாய், சீடனாய், திகம்பர சந்நியாசியாய் இப்படிப் பல வடிவில் வாழ்ந்தும் கூட எக்குற்றத்தையும் காண முடியாது தோற்றான். பிறகு யோகினிகள் போலவே சிவபெருமானிடம் செல்லாது காசியிலேயே தங்கிவிட்டான்.

பிரம்மா அனுப்பப்பட்டார். வேதியனாய் மன்னனிடம் சென்று பத்து அசுவமேத யாகம் செய்யப் போவதாய்க் கூறினார். மன்னன் எல்லா உதவிகளும் குறைவின்றிச் செய்தான். ஒன்று செய்வதே கடுமை; அதில் பத்து செய்தும் குறையேற்படவில்லை. காசி மன்னனிடம் குறை காண முடியாத பிரம்மா மேலும் செய்வதறியாது திகைத்தார். சிவனிடம் திரும்புவதை விடச் சிவரூபமாக விளங்கிய காசியைத் தொழுவதால் அவருக்குச் சினம் வராது என்று தசாசுவமேத யாகம் செய்த இடத்திலேயே இருந்தார். இப்பெயரில் உள்ள கங்கைத்துறைதான் மிகச் சிறந்ததாகக் கூறுவர். காசியைப் படத்தில் பார்ப்பவர்கள் அநேகமாக இந்தத் துறையின் பகுதியையே பார்த்திருப்பர். வேறு சிலர் இப்படி யாகம் செய்ததாகவும் கூறுவதுண்டு; எனினும் பிரம்மா செய்த யாகத்தால்தான் இப்பெயர் இத்துறைப் பகுதிக்கு வந்தது என அறிய வேண்டும்.

பிரம்மாவும் திரும்பாதது கண்டு கணங்களைச் சிவ பெருமான் அனுப்பினார். கைலையிலிருந்து முதன் முதல் பூமிக்கு வந்து சிவனும் பார்வதியும் நின்ற இடமே காசி தான். அதைச் சிவபெருமானாலும் பார்வதியாலும் பாராது இருக்க முடியவில்லை. அவரால் வந்து இங்கு மன்னனிடம் தோற்றவர்களே திரும்பிப் போகவும் முடிய வில்லை என்பது காசியின் பெருமைகளில் சிறப்பானது. கணங்களை அனுப்ப முற்பட்டதும் அவர்களும் தாமாக முன்வரவில்லை, சங்கு கர்ணன் (சங்குக் காதினன்),

மகாகாலன் (அழிப்பு வல்லவன்) ஆகிய இருவரையும் அவரே தேர்ந்தெடுத்து அனுப்பினார். காசியின் இயல்புப் படி அக்கணங்கள் தம் கடமையையே மறந்து தங்கினர். மகோதரன், கண்டாகர்ணன் என்று வேறு இருவரையும் சிவபெருமான் அனுப்பினார். அடுத்தடுத்து எல்லாச் சிவகணங்களையுமே அனுப்பி விட்டார். யாரும் திரும்ப வில்லை. மன்னனிடம் குறையும் காணவில்லை. எல்லாக் கணங்களும் ஆளுக்கொரு இலிங்கத்தைத் தாபித்து வழி பட்டுத் தங்குவதிலேயே நாட்டமாக இருந்து விட்டனர். இலிங்கம் மிகுந்த காரணமும் இதுவே!

இறுதியாகக் கணபதியைச் சிவபெருமான் அனுப்பினார். சோதிடம் கூறும் அந்தண வடிவத்திலே வந்த கணபதி அரசனின் மனைவியரில் லீலாவதியையும் மக்களில் பெரும் பகுதியினரையும் கவர்ந்து விட்டார். இவரின் புகழ் மன்னன் காதில் விழுந்தது. இவரை அழைத்தான். தான் செய்யும் நற்காரியங்களின் பலன் என்னவாக இருக்கும் என்று சோதிடம் கேட்டான். இன்றிலிருந்து 18 ஆவது நாளில் வரும் ஓர் அந்தணன் அரசனுக்கு விடை கூறுவான் என்று சொல்லிவிட்டு வந்து விட்டார்.

திருமாலால் இக்காரியம் செய்யப் படட்டும் என்று மானஸீகமாகத் தெரிவித்துவிட்டு 56 வடிவம் தன்போல் எடுத்துக் கணேசரும் காசியைப் பிரிய முடியாது இக்காசியில் பகுதிக்கு ஒருவராய் வெளிப்படத் தங்கி விட்டார்.

இறுதியாகத் திருமால் வந்தார். வர்ணா சங்கமத்தில் நீராடினார். இதுவே ஆதிகேசவமாகும். சாரநாத்துக்கு அருகில் தர்மசேத்திரா என்ற இடத்தை நிறுவினார். அவரின் ஆஸ்ரமம் அது; புண்ய கீர்த்தி எனும் புத்தபிட்சுவாக மாறினார். கருடன் மாணவனாகினான். திருமகள் விஞ்ஞா கௌமுதி என்ற பெயரில் புத்தபிட்சுணி யானாள்.

சாதிபேதம் கடிதல், வேதங்களை மறுத்தல், பலியிடு தலை நிறுத்தல், கடவுளால் உலகு படைக்கப்படவில்லை என்றல்; தானே தோன்றித் தானே அழியும் இப் பிரபஞ்சம் என்றல் போன்ற கொள்கைகளைப் பரப் பினர் நாடு முழுதும். எல்லா மரபுகளும் தலை தடுமாறின. 18 வது நாளில் சோதிடன் வடிவில் அரசனிடம் சென்றார். அரசன் தவறுணர்ந்தான். சிவலிங்கம் தாபித்துப் பாவம் தீரச் சொன்னார் திருமால். அதன்படியே திவோதாசேச் வரர் என்ற இலிங்கம் தாபித்து மன்னன் வழிபட்டான். திருமால் 'பஞ்சநதா' (பஞ்சகங்கா) என்ற துறையை உருவாக்கிக் கங்கையில் இனிதின் அமர்ந்தார். சிவனும் காசிக்கு வந்தார்.

இவ்வளவு கடவுளரும் வழிபாடும் வாரணாசியி லிருந்தும் கூடப் புத்தமும் சமணமும் தழைத்தது எப்படி? இந்து சமயம் வீழ்ந்தது எப்படி? பிறகு புத்தமும் சமணமும் தளர்ந்து இந்து சமயம் வந்தது எப்படி? என்ற வினாவை உருவகம் போலச் சொல்லிய புராணக்கதை யாகவே இதுவரை கண்ட வரலாற்றை உணர முடிகிறது.

காசியின் பெருமை, அங்கு ஏற்பட்ட மாற்றங்கள் இவைகளே இப்புராணத்தில் கூறப்பட்டாலும் சாக்தம், காணாபத்தியம், சௌரம், புத்தம், வைணவம், சைவம் முதலியன வந்த வரவுகளையும் இப்புராணம் விளங்க வைத்ததாகிறது.

பொருளாதாரக் காரணங்களே சமயமாற்றங்களின் அடிப்படை என்பதையும், அரசியல் சீர்குலைவுகளே மறுபடியும் மாறுவதற்கு அடிப்படை என்பதையும் இப் புராணம் முதலிலும் கடைசியிலும் ஒரு சிறுகதை அமைப்பில் காட்டக் காணுகிறோம். வாழ்வியலின் கூறு களில் சிறப்பான ஒன்று பாதிக்கப்படுமானால் மதிக்கப்

பட்டவைகளும் மாறத்தான் வேண்டும் என்பதை அறிகிறோம்.

எது மாறினாலும் காசியின் புகழ், புனிதம், பெருமை இவை மட்டும் மாறாமலிருந்ததை இப்புராணக்கதை நமக்கு அறிவுறுத்துகிறது.

வெள்ளச் சீர்கேடு, பஞ்சம், நோய், அரசியல் நிலையின்மை, போர் முதலிய பலவற்றிற்கும் ஈடு கொடுத்துச் சாயாத ஒரு புனிதத் தலமாக இருக்கும் மிகப்பெரும் பழமை இதுதவிர வேறு எந்தப் பகுதிக்கும் இல்லை என்று துணிவாகக் கூறலாம்.

6. தத்துவத்தில் காசி

அரைவட்ட வடிவமான காசியின் கங்கைக் கரையில் நடுவே இருப்பது மணிகர்ணிகா துறையாகும். இவ்வுலக வாழ்வுக்கும் மறு உலக வாழ்வுக்கும் இடையிலிருப்பது காசியாகும்; அப்படி நடுவான காசியின் கரையிலேயே நடு நாயகமாக இருப்பது இத்துறையாகும்.

இம்மைக்கும் மறுமைக்கும் நடுவில் இருப்பது எது என்பதை ஆய்ந்தால் ஒத்துக் கொள்ள இயலும். இந்த இரண்டுக்கும் வழியாக இணைப்பாகப் பாலமாக இருப்பது மரணம்தான். அந்த மரணத்தை முக்தியாக ஆக்கும் சிறப்புக் காசிக்குரியது என்பதால் இரண்டுக்கும் நடுவானது என்பது சரிதான் இல்லையா?

மரணமே முக்தியாகும் என்று காசி முன்னே நிற்பதால் மரண பயம் இந்தத் தலத்தால் குறைக்கப்படுகிறது. மரணமே ஒரு வாழ்வின் இறுதியன்று, புதுவாழ்வின் தொடக்கமும் அதுவே என்ற தெளிவை உண்டாக்குகிறது. வைணவ வியாக்யான நெறியில் இது இன்னும் விளங்கும். அதாவது தாயின் ஒரு மார்பின் பக்கம் பால் குடிக்கும் குழந்தையைத் தடுத்து பால் மிகுந்த மறுபக்கத்திற்குத் தாய் மாற்றுவாள். குழந்தையோ குடிப்பதைத் தடுத்து விட்டதாக அழும்; மேலும் குடிக்க வைப்பதே தாயின் கருத்து; அது குழந்தையின் நிலையில் தெரியவாராது! அதுபோல இறைவன் இவ்வுலக வாழ்வை நீக்கி மறுஉலக வாழ்வு தருவதை மரணம் என்று அச்சிறு குழந்தையைப்

போலவே பெரிய மனிதனும் தவறாகக் கருதுகிறான் என்பது அந்த வியாக்யானமாகும்!

இப்படி ஒரு தாயாக இருந்து மரணத்தை முக்தி வயப் படுத்தும் தத்துவத் தாயாகவே காசிமாதா விளங்கு கிறாள். இதுவே நடுவே இருக்கும் காசி என்று அழைக்கப் பட்டது. எல்லாத் தலங்களுக்கும் நடுவானது காசி என்பதிலேயே அதன் தலைமையும் விளங்கி விடுகிறது. இதனையே இதயம் என்றும் கூறி விளங்க வைத்தார்கள்.

உடம்பில் தலையும் காலும் நீக்கிய இடைப்பகுதிதான் ஆக்கல் அழித்தல் காத்தல் என்ற செயல்களை நேரிடையாகச் செய்கிறது. தலையில் உள்ளவை கட்டளையும் காவலும் செய்கின்றன. மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐந்து அறிவுக் கருவிகளில் நான்கு தலையிலேயே இருந்து மனத்துக்குத் துணையாக உள்ளன எனினும் நேரிடையாக மிகப் பொறுப்பாகச் செயல் நடத்துவது மையமான உடம்பே—கால் பாதாள உலகு, தலை மேல் உலகு; நடுஉடல் இவ்வுலகு என்று பகுத்துக் கொள்ள வேண்டும்! இந்த நடு உடலில் தலையை ஒட்டிக்கொண் டிருக்கும் கீழ்க்கழுத்துப் பகுதிக்கு விசுத்தித்தானம் என்று பெயர். நடு உடலின் கீழ்ப்பகுதியின் எல்லைக்கு மூலாதாரம் என்று பெயர். இந்த இரண்டின் இடைப்பகுதியில் அவரவர்க்கும் கைவிரற்கடையால் 36 விரற்கடை இருக் கும்—இந்த 36 தத்துவங்கள் அடங்கிய நடு உடலில் மைய மாக இருப்பது இதயம் ஆகும். ஆகவே 'ஹ்ருதயம்' என்னும் சமஸ்கிருதச் சொல் மையம் என்ற பொருளைக் கொண்டிருக்கிறது.

நடு உடல் நம் பூமி போல—இவ்வுலகின் சேத்திரம் யாவும் நடு உடல் எனப்படும்—இதயம் அதிலேயே நடுவே இருப்பது போல் காசியும் நடுவாக இருக்கிறது; எனவே அது இதய பாவனையாகக் கொள்ளப்பட்டது.

உலகம் 360 பாகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உருண்டை வடிவான அதை இரு சமமாகப் பிரித்தால் 180 பாகை. இதற்கு மையம் 90 பாகை என்றாகும். சுமார் 83 பாகைக்கு மேல்தான் காசி இருக்கிறது. ஆகவே இதயம் என்று காசியைச் சொல்வதில் ஒரு பொருத்தம் இருப்பதை யறியலாம். உலகை இரண்டாக வெட்டிப் பார்ப்பது முதுகும் மார்பும் போலப் பகுப்பதே ஆகும்.

இப்படி நடுவாக இருப்பது காசி; அதிலேயே நடுவாக இருப்பது மணி கர்ணிகா; அதுவும் நடு என்பதற்கு ஏற்பச் சுடுகாட்டுப் புகழ் உடையதே ஆகும். மரணமே இம்மை மறுமைக்கு நடு என்பதால் சுடுகாடும் நடு ஆகுமல்லவா? இதுபற்றியே யமனை நடுவன் என்று அழைப்பது தமிழில் வழக்கமாகும்.

காசியில் முதலில் குடிபுகுந்த பகுதியாக மணிகர்ணிகாவைக் கொண்டாடுகிறார்கள் — அஃது அழிந்துபட்ட ஆதிகாசிக்கு முன்பு குடியேறியதா பின்பு குடியேறியதா என்று விளங்கவில்லை. வருணை, அசி இரண்டுக்கும் நடுவாகவே மணிகர்ணிகா வருவதால் பழைய நகர் அழிவதற்கு முன்பே குடியேறியதாகக் கொள்வதே சிறப்பாகும். மேலும், மணிகர்ணிகா என இதற்கு ஏன் பெயர் வந்தது? சிவபெருமானின் குண்டமுலம் தலையில் உள்ள மணியும் விழுந்ததால் மணிகர்ணிகா என்று பெயர் வந்ததாக உள்ளூரில் சிலர் கூறுவார்கள். இதனால் எளிய மக்களுக்கு ஆர்வம் வரலாம். ஆனால் இதனினும் பெரிய ஒரு காரணம் இருப்பதாகத் தேடினால்தான் நலமாகும்.

"ஓம் ஐம்ஹ்ரீம்ஸ்ரீம் ஹ்ருத் பத்மகர்ணிகா
மத்யே சிவேன ஸஹசங்கரி!"

என்று நவாவரண பூசை முடிவில் பிரார்த்தனை செய்வது வழக்கம். அதாவது இதயத் தாமரை வட்டத்து நடுவே

தேவியைச் சிவபெருமானுடன் தங்கி இருக்குமாறு வேண்டுவதே இதன் பொருள். இதயத் தாமரை வட்டத் தைக் 'கர்ணிகா' என்ற சொல் பெய்து அழைப்பதை அறியலாம்—மேலும் சாக்த நூலின்படி இவ்வுடம்பே மணித் தீவகமாகத்தான் சொல்லப்பட்டுள்ளது. இதனை ஸ்ரீவித்யா ஸ்ரீநகரப் பூசையில், "ஓம் ரத்னதீபவலாய நம:" என்பதால் அறியலாம். மணித் தீவகத்தில் இருக்கும் இதயமும் மணிகர்ணிகா எனப்படுதல் இயல்பு அல்லவா? அப்படித்தான் இதயத் தலமாகிய காசியின் வட்டப் பகுதியை நில அமைப்புமூலமாகவும் சுடுகாடுமூலம் மறுமைப் பயன் தரும் கொள்கை அமைப்புமூலமாகவும் இந்தத் துறை அப் பெயருக்கு ஏற்ப விளக்கம் தருவதாக உள்ளது.

பூசை செய்வதற்கு முன் ஒருவன் தன் உடலைப் பூத சுத்தி செய்து கொள்ள வேண்டுமென்பது மரபு. அதாவது ஐந்து பூதங்களால் ஆகிய உடல் பலவகையால் கெட்டிருக்குமாதலால் அதனை மாற்றி, சிவ சம்பந்தமான உடலைப் பெற்று அப்புறம் பூசை செய்வதாகும். இதற்காக உடம்பில் இன்றியமையாத 16 உறுப்புகளை நினைத்து அவற்றைப் பூதபீஜ மந்திரங்களால் (16 முறை) ஓதிச் சிவமய உடலைப் பெறவேண்டுவதாகப் பாவனை செய்ய வேண்டும்.

" யம் ஸங்கோச சரீரம் சோஷய சோஷய ஸ்வாஹா."

என்று வாயு பீஜ மந்திரம் 16 முறை கூறி 16 உறுப்புகளையும் உலர்த்துதல் வேண்டும்.

" ரம் ஸங்கோச சரீரம் தஹதஹ பசபச ஸ்வாஹா."

என்று அக்னி பீஜ மந்திரம் 16 முறை கூறி 16 உறுப்புகளையும் எரித்து விட வேண்டும்.

" வம் பரமசிவாம்ருதம் வர்ஷய வர்ஷய ஸ்வாஹா."

என்று அமிர்த பீஜ மந்திரத்தால் 16 முறை கூறி யதும் 16 உறுப்புகளும் அமுதத்தால் நனைக்கப்பட்ட தாகும்.

" லம் சாம்பவ சரீரம் உத்பாதய உத்பாதய ஸ்வாஹா. "

என்று மண் பீஜ மந்திரத்தால் 16 கூறவே 16 உறுப்புக் களும் சிவமயமான உடலுறுப்புக்களாகும்.

இதில் 5 பூதங்களுக்கு ஆகாச பூதம் மட்டும் கூறப்பட வில்லை. அது மனத்தின் பாவனையை உண்மையாக்கு வதற்காகச் சிவத்துடன் இணைந்து பெறும் தொடர்பால் அதுவும் இணைந்து விட்டதாக ஆகிறது. நம் தத்துவத்தில் 5 பூதக் கலப்பே அனைத்துப் பொருள்களும். மனித உடம்பிலும் 5 பூதங்களின் பகுதிகள் தனித்தனியே இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அவை பஞ்ச மகா கோசங்கள் என்று வழங்கப்படும். அன்னமயம், ப்ராண மயம், மனோ மயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயகோசம் என்று 5 கோசங்களாகப் பிரிக்கப்படும். இந்த ஐந்தையும் நினைவூட்டிக் கொண்டு சிவமயமான ஆனந்தமய கோச மாகவே உடம்பு மாறியபின் பூசை செய்தால் தவறாது பலன் கிடைக்கும் என்பர்.

அதற்காகவே பூத சுத்தி மந்திரம் ஏற்படுத்தப் பட்டது. இப்படிப் பழகியறியாதவர்கள் பூத சுத்தி யடைந்து விசுவநாதரைத் தரிசித்தால் முழுப் பயன் அடை வார்களே என்பதற்காகப் பஞ்ச கோச வட்டம் ஒன்றைக் காசியில் உருவாக்கினார்கள். இது பஞ்சகுரோஷித் தலம் என்றும் அதை அணுகும் சாலையைப் பஞ்சகுரோஷிச் சாலை என்றும் இக்காலத்தில் காணலாம். அதை இந்நூலில் தனியே விளக்கியிருப்பதில் படிக்கவும். இப்படித் தத்துவார்த்தமான 5 கோச உடம்பை உணர்த்தும் தலயாத்திரையாக அமைந்தது. இது மோட்ச நகரிலேயே தலைமை வாய்ந்ததற்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது எனலாம்.

இந்து சமயத்தின் பூசை முறைகள் யாவும் தத்துவ அடிப்படையில் வகுக்கப்பட்டதாகும். தத்துவம் என்பது என்றும் நிலையான ஒரே இயல்புடைய ஓர் ஒழுங்கைக் குறிப்பதாகும்; உண்மையைக் குறிப்பதாகும்; மெகானிஸம் என்று கூறப்படும் இயக்க அமைப்பைக் காட்டுவதாகும். இப்பிரபஞ்சம் கடவுள் மனிதன் என்ற மூன்றிலும் உண்மையாக ஊடுருவிய தத்துவத்தை ஒருவன் உண்மையாகவே உணர்ந்து விருப்பத்தோடு இடைவிடாது சிந்தை செய்தால்—பாவனை செய்தால்—முடிவில் அத்தத்துவத்தை நேரில் காண்பவனாகிறான். அதை ஆட்சி செலுத்தும் வல்லமை பெறுகிறான். இதைத்தான் அட்டமாஸித்தி என்று கூறுவார்கள்.

இச்சித்திகளை இப்படிப் பழகித்தான் பெற முடியுமே தவிர ஒருவர் கொள்ள ஒருவர் கொடுக்கிறார் என்பது உணர்வதற்குக் கூறிய உருவகங்களே; உபசார மொழி வழக்குகளே ஆகும். உலகத் தத்துவத்தை நேசிப்பவன் உணர்கிறான்; உணர்கிறவன் அதையே இடைவிடாது நினைக்கிறான்; இப்படி நினைப்பவன் அத் தத்துவமாகவே ஐக்கியப்படுத்தப்படுகிறான். இம் முயற்சியில் அவன் தனக்குத்தானே வெற்றியடைகிறான். இதுவே யோக சாத்திரத்தின் சாராம்சமாகும். இதுவே பூத சுத்தி என்றும் அதைக் காசி விளக்க வழிகாட்டுகிறது என்றும் கண்டோம்.

இதுபோலவே பஞ்சாயதன பூசையுமாகும். தென் மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு, தென்கிழக்கு ஆகிய நான்கு கோணத்திசைகளும் மத்தியப் பகுதியும் என ஐந்து இடங்களிலும் கணபதி, சூரியன், திருமால், சிவபெருமான், தேவி என்ற 5 கடவுளரையும் நிறுத்தி வழிபடுவதாகும். அவரவர்க்கு விருப்பமான முறையில் சிவ பஞ்சாயதன, விஷ்ணு பஞ்சாயதன, சாக்த பஞ்சாயதன என உண்டு. சிவ முறையில் சிவபெருமான் மத்தியிலிருப்பார்; விஷ்ணு முறையில் விஷ்ணு நடுவே இருப்பார்; சாக்த முறையில்

மகா திரிபுரசுந்தரி நடுவே இருப்பாள்; இப்படி வணங்கும் நித்திய வழிபாடு இந்தியா முழுதும் உண்டு. இதை மிகவும் பரப்பியவர் ஆதிசங்கரரே யாவார்.

ஒரு, மைய மூலப் பொருள் 4 மூலைகளிலும் தன் பேரொளியை-ஆற்றலைப்-பரப்பும் அறிகுறியே கடவுளும் படைப்பும் என்ற பேருண்மையையே பஞ்சாயதன வழிபாடு உணர்த்துகிறது. உலகப் படைப்புத் தத்துவமாக உணரும் அரிச்சுவடி பஞ்சாயதன வழிபாடாகும். இதனை உணர்த்துவது காசியின் பொறுப்பாயிருக்கிறது.

ஓம்காரக் கோயில் என்பதே காசி உணர்த்தும் பஞ்சாயதன மாகும். ஓம் என்பது அ + உ + ம் என்ற மூன்று எழுத்துக்களால் உருவானதாகும். ஓங்கார ஜபம் தொடர்ந்து நெடு நேரம் செய்வோர், மனத்தால் ஒளியை உணர்வர்; அது சிவமயமாகும்; அதில் நாதம் தோன்றும்; அது சக்தியாகும்! நாதம் என்பது அசைவு! அதிர்வு அலை (Vibration) ஆகும். ஓம் என்பதில் மகரத்தை மெய் எழுத்தாக உச்சரிக்கும் போது மூக்கு ஒலி வரும்; அதுவே சிவமயமான பிந்து எனப்படும்.

"மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப் பாகா.... "

என்ற மணிவாசகர் திருவாக்கு இதை உணர்த்துவதற்கு வந்ததேயாகும். இப்படி 'ஓம்' என்பதில் 5 நிலைகள் இருப்பதும் சிவபெருமானுக்கு 5 முகம் 5 எழுத்து மந்திரம் இருப்பதும் பஞ்சாயதனப் பூசையின் விரிவுகளாகும். இதனை விளக்க அகரக்கோயில், உகரக்கோயில் மகரக் கோயில், பிந்துக் கோயில், நாதக்கோயில் என ஐந்து தனிக் கோயில்கள் முன்பு காசியிலிருந்தன. அவற்றை அந்நியர் முற்றுமாக அழித்து விட்டனர். முன்னுள்ள மூன்றிற்கு மட்டும் இப்போதும் கோயில்கள் உள்ளன. அவையும்

திருத்தியமைக்கப்பட்டனவே தவிரப் பழையன அல்ல. அவை முகம்மதியர் மிகவும் வாழும் பகுதியில் இருப்பதால் யாரும் சென்று வணங்குவதற்கு மிகுந்த ஆர்வம் காட்டுவதில்லை. தத்துவம் உணர்ந்து வழிபடுவார் குறைந்ததும் இதற்கொரு காரணமாகும்.

அனுமான்காட் பகுதியில் காமகோடீச்சரர் ஆலயத்தில் சிவ பஞ்சாயதன முறையிலேயே அமைத்துப் பிற கடவுளரையும் இருத்தியிருக்கிறார்கள். பஞ்சாயதன முறையின் பெருமை உணர்த்துவதற்காக அதை உணர்த்தி வந்த காசியிலேயே இப்படி ஓர் ஆலய அமைப்பைச் செய்ய காஞ்சிப் பெரியவர்கள் கருதியதே சிறப்புக்கும் வணக்கத்துக்கும் உரியதாகும்.

இவ்வாறு இந்துக்களின் அறிவு செழிக்கும் தத்துவ மையங்களை நடைமுறையாகக் கொண்ட தலத்தில் காசிக்கு நிகரான ஒரு தலம் இல்லை. ஆகவே காசியை இந்துக்கள் இந்தியாவின் எந்தப் பாகத்திலிருந்தும் நினைக்கத்தக்க வழக்கம் காலம் காலமாக உரமேறி வளர்ந்திருக்கிறது.

அறிவுடை மாந்தர்களுக்கே இவை புலப்படுவதல்லது யாவர்க்கும் புலப்படுவது குறைந்த காலமானதால் இதை எழுதுவதில் ஒரு கடமை உணர்வு தூண்டப் படுவதை உணர முடிகிறது. காசியின் பெருமை காசியின் எல்லாப் பகுதிகளிலும் வழக்கங்களிலும் மரபுகளிலும் வெளிப்பட்ட வண்ணமாயுள்ளது. இது கருதியே புத்தர் முதலாகப் பிற கொள்கையுடையாரும் காசியைத் தம் வயப்படுத்தி விட முனைந்தார்கள். ஆனாலும் காசி மயானப் புகழ் படைத்ததற்கு ஏற்ப எல்லாவற்றையும் ஏற்று எல்லாவற்றையும் மாற்றிக் கலந்து புதுமை செய்தே வந்திருக்கிறது.

7. தலங்களின் தலைமையில் காசி

பூவெனில் பொறிவாழ் பூவே, ஊரெனப்படுவது உறையூரே, காவியச் சிறப்பில் கம்பனே—இப்படி ஓர் அளவுகோலாய்ச் சிறந்தவற்றை அளப்பதைப் பல வகையில் கேள்விப்படுகிறோம். அதுபோலவே கைலை யாத்திரை, காசி யாத்திரை என்று சொல்வதுபோல் வேறு ஒன்றைச் சொன்னால் வலிந்து சொல்வது மாதிரியே இருக்கிறது. நம் தமிழகத்திலும் பிறபகுதியிலும் ஒரு தலத்தின் பெருமை கூற வேண்டுமானால் காசியையே அளவாக வைத்துக் குறிக்கப் பெறுவதைக் காணுகிறோம். இது ஏன்? எப்படி வந்தது இப்பெருமை? அது இயல்பா? செயற்கையா? அது பரப்பப்பட்டதா? பான்மையே அப்படித்தானா? — என்ற வினாக்கள் இந்துக்கள் நெஞ்சில் அடிக்கடி அலைமோதுவதுண்டு. அதற்கு விடை தருவதற்கான முயற்சியில் இதற்கு முன் உள்ள தலைப்புக்களில் சில காரணங்களைச் சொல்லியுள்ளோம்.

நேரிடையாகவே மேற்காணும் வினாக்களைச் சந்திப்பது உரியதல்லவா? அதனால் இனி அப்படி முயலுவோம். இப்பகுதி அதற்காகவே அமைக்கப்படுகிறது.

பிற சமயங்களின் தோற்றம் செய்த பெரியோரின் பிறப்பிடம், வாழிடம், சித்தி பெற்ற இடம் ஆகியவைகளைத் தலையான யாத்திரைத் தலமாகக் கொள்ளுவதால் இந்த வினாக்கள் எழத் தேவை இல்லை. இந்து சமயத்தின் நிறுவன முதல்வர், மனிதர்களுள் யாருமாகத்

தெரியவில்லை. பல கடவுளர்கள் என்றும் வேறு தவறாகக் கருதப்படுவதாலும் இவ்வினாக்கள் வலிமை பெறுவதுண்டு.

ஒரு தலத்தை விளம்பரப் படுத்தியதால் அது வாழ முடியாது; காரணம் ஆட்சி மாற்றம், போர்கள், இயற்கை செயற்கை மாற்றம், கொள்கை மாற்றம், நாகரிக வளர்ச்சி இவையெல்லாம் விளம்பரத்தை வீழ்த்திவிடும். காசியோ பலமுறை செத்துப் பிழைத்து முத்தியடைந் திருக்கிறது. மேலும் காசியோ இந்திய சமயங்கள் யாவற்றுக்கும் புனிதப் பொதுவாக உள்ள புண்ணிய முடையதாகவும் உள்ளது. கங்கையால் மட்டும் காசிக்குப் புகழில்லை என்பது ஹரித்வார், ரிஷிகேஷ், பிரயாகை முதலியன இருப்பதாலும் அவை காசியளவு பெருமை பெறாமையாலும் தெரிகிறது.

வேத கால முதலாகக் காசியைப் பெருமைக்குரியதாக ஆக்கும் முயற்சி மேலோங்கியதை மறுக்க இயலாது. ஆனால் அம்முயற்சி காசிக்கு மட்டும் போகக் காரண மென்ன? என்பதே வினாவின் அடுத்த சார்பு ஆகும்.

சிவனும் பார்வதியும் மணமுடித்ததும் பூமியில் வாழ ஓரிடம் தேடிவந்தபோது பிரளயகாலத்திலும் அழியாத காசியையே தேர்ந்து எடுத்தனர் என்றும், அவர்கள் பூமியில் கால் ஊன்றிய இடமே காசிதான் என்றும் காசி காண்டம் கூறுகிறது. இது புராணமாகையாலும் காசியின் பெருமை பரவிய பிறகு எழுதப்பட்டதாகையாலும் இக் காரணத்தால்தான் காசிக்குப் பெருமை என்று கூறிவிட முடியவில்லை. முன்பே வந்த பெருமைக்குக் கூறிய காரணமே தவிர இது அடிப்படையில்லை. காசியில் மட்டும் ஏன் கால் ஊன்றினர்? பைரவர் கையில் பிரம்ம கபாலம் காசியை மிதித்ததும் மட்டுமே கீழே விழுந்த காரணம் என்ன? நடுவென்று கூறியதால் காசியில் பூமியையும் துளைத்து ஜோதி இலிங்கம் மேல்போனது என்றால் அது ஏன் பிற இடத்தில் துளைக்கவில்லை?

—என்று புராணக் கருத்துக் கதைகளை வினாவால் தாக்கினால் விடை கிடைக்க முடியாது.

வேத இதிகாச உபநிஷத் காலங்களில் இருந்த பெரியோர்க்குப் பல உண்மைகள் தியான மார்க்கமாகவே கிட்டியிருக்கின்றன. அவற்றை விளக்காமலே அதை மற்றவர்கள் நடைமுறைப்படுத்த முற்பட்டார்கள். அறிவியலே இன்று வியக்கும் பல உண்மைகளை அந்த ஞானிகள் எப்படியோ சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு தியான வழியில் கிடைத்த தலம்தான் ஏழு முத்தி தரும் தலங்களாகும். அவற்றுள் காசியே தலைமை வகிப்பதாக அவர்கள் கண்டனர்.

பூம்புகாரில் உள்ள மேலப் பெரும்பள்ளம் கோயிலில் பிட்சாடணர் பற்றி அப்பர் பாடுகிறார். வட்டணைகள்பட நடந்து வேறோர் ஊர் புகுவார் போல இவரை இறைவன் அக்கோயிலுக்கு அழைத்துப் போனதாகப் பாடுகிறார். 'என்று வந்தாய்' என்ற திருக் குறிப்புத் தில்லை நடராசர் அபயகரத்தில் அப்பருக்குப் புலப்படுகிறது. அதே கோயிலில் ஐந்து பேரறிவும் கண்களே கொள்ளுமாறு சுந்தரரால் ஈடுபடமுடிகிறது. இவை எப்படி நிகழ்கின்றன?

எங்கேயாவது ஓரிடத்தில் இறையருள் விளக்க மாகிறது. அதே இடத்தில் அடிக்கடி மற்றவர்களுக்கும் ஏற்படுகிறது. சோதித்துப் பார்க்க நினைத்தால் அப் போதும் ஏற்படுகிறது என்று வைத்துக் கொண்டால், அந்த இடம் பலருக்கும் பலவகையில் வேறுபட்டவர் களுக்கும் ஓர் ஈர்ப்பாற்றல் தருவதை உணரலாம் இல்லையா? இப்படித்தான் வேத உபநிடத இதிகாச காலத்தவர்கள் உணர்ந்து, உணர்வு வழியாகக் காசியை முடிவு செய்திருக்கிறார்கள்.

முடிவு செய்த பிறகு இப்படி எளிதில் உணர முடியாத வர்களுக்காகப் பல்வேறு நடைமுறைகளைச் செயற் படுத்தியிருக்கிறார்கள். அவை நூல்களால் அடிக்கடியும்

திருப்பிச் சொல்லப்பட்டன. அறிஞர்கள் மத்தியில் நடைமுறைகள் பரிமாறப்பட்டன. அறிஞர் வழியையே எளியோர் ஐயுறாமல் பின்பற்றினர். இவை மட்டுமே விளம்பரமாகச் சமண புத்தர் காலம் வரையிலும் காசியில் இருந்திருக்கும் என்று யூகம் செய்ய முடிகிறது.

பன்னெடுங்காலமாகப் புகழார்ந்த காசியில் சமண புத்தக் கருத்துக்கள் தழைத்தபிறகு—பழைய பெருமை வாய்ந்த பகுதி வரையிலும் இம்மாற்றம் ஒரு புரட்சியை மௌனமாகவே நடத்தியிருக்கிறது. சமண புத்த சமயங்களும் காசியின் பெருமையை முழுதுமாக அழிக்க முயலாமல் அந்தத் தலத்தையே தமக்கும் தலைமையாக்கிக் கொண்டன. இதைப் புத்தர் பல பிறவிகளில் காசியில் செய்த வரலாற்றைக் கூறும் பாவனையில் அமைந்த புத்த ஜாதகக் கதைகளால் அறியலாம்.

இச்சமயங்களுக்கு வாய்ப்பாகப் பேரரசுகளின் வலிமை துணை நின்றது. இச்சமயங்களை இந்துசமயம் செரிமானம் செய்து விட்டபோது காசியின் புகழ் அழியாமல், காசியின் ஆதரவிலிருந்த சமயங்களே கப்பலேறி அயல் மண்ணுக்குப் போயின. சமண புத்த சமயங்களை விரும்பிய இந்தியர்களும் காசிக்குப் போகும் பழக்கத்தையே வளர்த்தவர்களும் ஆகிவிட்டார்கள். ஆதிசங்கரரின் காலம் தொடங்கிச் சுமார் 450 ஆண்டுக்காலம் வரையிலும் காசி முன்பு போல் இந்துக்களின் கையில் பழைய பெருமையைப் புதிய வேகத்துடன் வளர்த்துக் கொண்டிருந்தது.

முஸ்லிம் மன்னர்கள் வரும் வரையில் ஆதிசங்கரர் உருவாக்கிய இந்து சமய ஒருமை உணர்வு காசியை வாழவைத்துக் கொண்டிருந்தது. புத்தர் காலம் வரையில் இருந்த இந்துக் காசியைவிட இப்போதிருந்த இந்துக் காசி சடங்கு முறையில் காசியைத் தலைமைப் படுத்தியது. அதாவது உள்ளுணர்வால் தேர்ந்து எடுக்கப்பட்ட காசியில் தத்துவ முறையால் புகழ் பரப்பப்பட்ட முதற்

கால கட்டம் முடிந்து சடங்கு நடைமுறைகளால் புகழ் வளர்க்கப்பட்ட காசி வாழ்வியலில் அன்றாடம் நினைவு கொள்ளத் தக்கதாக வலிமையுள்ளதாக மாற்றப்பட்டது.

முஸ்லிம்களுடைய வரவுக்குப் பிறகு அக்பர் காலமும் ஜஹாங்கீர் காலமும் தவிர சுமார் 500 ஆண்டுகள் இந்துக் காசி அழிக்கப்பட்டதாகவே இருந்தது. அக்பர் காலத்துக்கு முந்திய அழிவிலிருந்து மீண்டும் உருவாக்கப்பட்ட புதிய காசியும் ஷாஜஹான் காலம் முதலாக அழிக்கப்பட்டது. பிறகு சிவாஜியினால் இந்து மறுமலர்ச்சி தோன்றிய காலத்தில் மீண்டும் இன்றைய காசியாக உருவாக்கப் பட்டது. விசுவநாதர் கோயில் 5 முறை இடிக்கப்பட்டது என்ற வரலாறே இதற்குப் பூரண சான்றாகும்.

புத்த சமண சமயங்கள் இந்துக் காசியின் கருத்து களுடன் போராடியபோது மீண்டும் இந்துக் காசியாக மாறச் சுமார் ஆயிரம் ஆண்டு தேவைப்பட்டது. கருத்தை வலியத் திணித்துக் கலை மாளிகைகளைக் கடவுள் நிலை யங்களை அழித்த முகம்மதியர் செயலால் வேகமாகவே இந்து மறுமலர்ச்சி தோன்றி 500 ஆண்டுகளில் இருமுறை முயன்று இறுதி முறையில் பூரண வெற்றி காண முடிந்தது. புத்த சமண சமயங்களால் பறிபோன காசியின் புகழ்க்குப் பிறகு அறிஞர்களும் அருளாளர்களுமே இந்து மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டனர்; ஆனால் முகம்மதியர் காலத்தில் பொதுமக்களும் இந்து அரசர்களுமே அந்தப் பணியைக் கையில் எடுத்துக் கொண்டனர்.

அறிஞர்கள் முயற்சிகள் அருள்வழி அறவழியாக இருந்தது. அரசர்கள் பொதுமக்கள் வழி மறவழியாகவே இருக்க நேர்ந்தது. இப்போது இரண்டு பேரழிவுகளிலும் காசி இறந்துவிட்டாலும் மீண்டும் பிழைத்துக் கொண்டது. பிழைத்தபோது முன்னைவிட வலிமையாக உருமாறியது. பிரச்சாரங்களைவிட இந்து மறுமலர்ச்சி, எழுச்சி, புரட்சி

முதலிய முயற்சிகளால் காசியின் பெருமை பல மடங்கு கூடியது.

இம்முயற்சியில் ஒன்று வருமாறு: இந்துக்கள் காசிக்கு யாத்திரை சென்றால் வரி கட்டவேண்டும் என்று முகம்மதியர் காலத்தில் சட்டம் இருந்தது. கர்நாடக வேந்தன் 'இவ்வரியை அரசே யாத்திரிகர்களுக்காகச் செலுத்தும்' என்று ஒரு வைப்புநிதியைப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வைத்திருக்கிறான் என்பதற்கு வரலாற்றுச் சான்றுள்ளது.

இதிலிருந்து போகத் தடையிருந்தபோதும் போவதில் திரும்புவதில் ஒரு வீரக் கிளர்ச்சியிருந்ததால் விளம்பரம் தானாகவே ஆகிவிட்டது. போய் வந்தவரைக் காண்பதே சிறப்பாகி விட்டது. போக முடிந்தவர்களுக்குச் செல்வாக்கு உள்ளூரில் வளர்ந்திருக்கும். இது மேலும் போகும் மனத்தைப் பிறர்க்குத் தந்தது.

இப்படிப் போக முடியாத தூரம், துன்பம், தடைகள் இருந்தபோது ஊக்கமளித்த அரசர்கள் மக்களால் பாராட்டப் பெற்றனர். இது மன்னர்களுக்கு வாய்ப்பானதால் அவர்களும் இயல்பாக உதவ முன்வந்தார்கள். தடைகள் காசியின் பெருமையை முடுக்கிவிட்டதோடு இந்திய ஒருமைப்பாட்டுக் கலாச்சாரத்தையும் உருவாக்குவதைக் காணமுடிகிறது.

போக இயலாத காலத்தில் அந்த ஏக்கம் தீர உள்ளூர்களில் காசி விசுவநாதர் என்று இலிங்கங்கள் நிறுவாக்கப் பட்டன. காசியைவிட இத்தலமே போதும் அல்லது சிறந்தது இதுவே என்று கூறுவதன்மூலம் மக்களின் ஆவலுக்கு வேறு போக்குமடையைத் திறந்து விட்டார்கள். இது காசியை ஓர் அளவுகோலாக்கும் பணியில் ஈடுபட்டு விட்டது.

அக்பர் காலத்தும் சிவாஜி காலத்தும் மீண்டும் இந்துக் காசி விடுதலை பெற்றபோதும், அது பெற வேண்டும்

என்ற போதும் கவிஞர்கள் பஜனைகளால், பக்திக் கவிதை களால் காசியைப் புகழ் பரவ வைத்தனர். உள்ளுணர்வு, தத்துவம், வாழ்வியல், சடங்குமுறை, பஜனை, கவிதை ஆகிய பக்தி இலக்கியமுறை இப்படியாகக் காசி ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு துணையால் அழிவிலிருந்து பெரு வெற்றியும் புகழும் அடைந்தது.

புராண ஆசிரியர்களும், நாராயண பட்டர், இலட்சுமி தரர், இராமானந்தர், துளசிதாஸ் முதலிய பெருமக்களும் காசியை அழியாத இலக்கிய அமுதத்தால் வளர்த்து விட்டனர். காசியை அழிக்கும் முயற்சியில் பட்ட புண் இந்த இலக்கிய மகாத்மிய மருந்துகளால் ஆறியது. இன்று அமைதியாக ஆய்வதுபோல் ஆயாமல் போட்டிக்குப் போட்டி என்ற உந்துதலால் புராணம் பக்தி இலக்கியம் இவற்றில் ஏற்றப்பட்ட காசியின் புகழ் யாவும் ஆயப்படா மலே நம்புவதற்குப் பயன்பட்டன.

உள்ளுணர்வால் பெரியோர் கூறியதை ஆராயாமல் நடைமுறை செய்யும் பழக்கத்தில் பல ஆயிரமாண்டு பழகிய இந்துக்களுக்கு—அழிவு நடைபெறும் காலத்தில் ஆராயாது நம்பும் செயல்— எளிமையாகவே இருந்தது.

இன்றைய அரசியல் கட்சிகளில் கூட உறுப்பினர் சார்பாளர் விருப்பம் உடையோர் அனைவரும் அந்த அந்தக் கட்சிக் கொள்கைகளைத் தீர ஆராய்ந்து நம்புவ தாக இல்லை. சடங்கு முறை, பெரும்பான்மை நடை முறை, விளம்பரம், கூட்டம் இவற்றையே கட்சிக்காரர் களைக் கவர்கின்றனவே தவிர அறிவு முயற்சி என்ப தில்லை. எனவே காசியின் மங்கல் வெளிச்சமான வரலாறு—மாலைக் காலங்களில் இந்துக்களின் இயல்பான நம்பிக்கையும் இலக்கியப்பரவலும் உபதேசங்களும் —

அவர்களுக்குக் காசியை உரிமைப் பொதுவாக ஆக்கி விட்டது.

ஆங்கிலேயர் காலத்தில் காசியின் புகழில் நடை முறையில் அவர்கள் புகுந்து விடாதபடி இந்துக்கள் காசியைக் காக்கும் அளவு வலிமை பெற்று விட்டார்கள். இனக் கலவரங்களிலும் காசி அவ்வப்போது உரமான தலைமையைத் தக்கவைத்துக் கொள்ளவே செய்கிறது.

பல சமயங்களும் காசியில் இன்று இருப்பது அதற்கு மேலும் பெருமையைச் சேர்க்கிறதே தவிர வேறில்லை. இப்படிக் காசியின் தலைமை அதன் அழிவிலே தீர்மானமாகி வலிவு செய்யப்பட்டது. இஃது இயற்கையே தவிரச் செயற்கையன்று.

8. திரிவேணி

ஆற்றங்கரை நாகரிகத்தின் தொடக்க காலத்திலேயே ஆன்மிக வெள்ளத்தில் சங்கமம் ஆகிவிட்டது திரிவேணி! இந்துக்களின் வாழ்வில் பேதமில்லாமல் வழிபாட்டு முறைக்கும் சடங்கு முறைக்கும் திரிவேணி தனக்கென்று தனித்த ஓர் இடத்தையே தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

ஆறும் கடலும், அல்லது ஆறும் ஆறும் என எப்படியோ ஒன்றுக்கு மேலாக நீர் நிலைகள் கலக்குமிடங்கள் இயற்கையாக அமைந்தவை என்ற அளவில் கருதப்படுதில்லை; கலைக் கண்ணுக்கு விருந்து என்ற மட்டில் மகிழ்வதுமில்லை; இந்து சமூக மனத்தில் அக்கலப்பு ஒரு புனிதத்தின் சாட்சி, புண்ணியத்தின் மாட்சி என்றே நம்பிக்கையை உண்டாக்குகின்றது.

பஞ்ச பூதங்களில் ஒன்று நீர், கடவுள் அருளாணையில் வெளிப்பட்டு, வருணன் காவலில் அந்த நீர் உலகமெங்கும் தனிப்பெயரில் வழங்கப்படுகிறது; தனித்தனியே புதுப் பெயர் பூண்டாலும் அவை கலக்கும்போது முன்பு ஒன்றாயிருந்த உறவு நினைக்கப்படுகிறது; இதனால் மதிப்புக்குரியதாகிறது. இதுவே இந்துக்களின் சமூக மனம் சங்கமங்களை வழிபட வந்த காரணமாகும். சிவபெருமான் தலையில், மகாவிஷ்ணுவின் அனந்தசயனத்துக்கு அடியில், கண்ணனின் பல்வேறு களியாட்டங்களில் இப்படி நீர் நிலைகளை இந்துக்களின் புராணமும் வழிபாட்டு மரபு

திருமேனி வடிவும், அடிக்கடி மதிப்புக்குரிய வகையில் நினைவுக்குக் கொண்டுவந்து பதிவு செய்கின்றன.

உடல் அழுக்கை நீக்குவதையும், உள்ளத்தில் குளிர்ச்சி தருவதையும், உடம்பின் சுரப்பிகள் செழிப்பதையும் நாட்டில் பயிர் வளம் தருவதையும், இப்படிப் பழக்கத்தில் பயன்படும் பண்பை மட்டுமே நீருக்குத் தருவர் பிற நாட்டினர். ஆனால் இறைவனின் அருட்பிரசாதமாகவும், பாவம் தீர்க்கும் பக்தி சாதனமாகவும், முக்தி சாதன மாகவும் இந்துக்கள் மட்டுமே கருதுகின்றனர். இஃது இன்று நேற்றல்ல; 'ரிக்' வேதத்திலேயே திரிவேணியில் மூன்று நாள் தங்குவது உத்தமம் என்று கூறியிருப்பதால் மிகப் பழைய காலத்திலேயே தீர்த்தயாத்திரை நம்பிக்கை இந்து சமூகத்தில் வேரூன்றியதை யறியலாம். எனவே திரிவேணி இந்தியாவில் இந்துக்களின் பொதுநம்பிக்கைக் குரியதாகிவிட்டது எனலாம்.

முக்கூடல், மூணாறு முதலிய தென்னகப் பெயர்கள் திரிவேணியின் நினைவால் வந்தவை போலும்; மேலும் சாலைகளையும் கூட முச்சந்தி நாற்சந்தி என்று எண் களால் இணைத்து அழைப்பதுகூட ஆறுகளின் கலப்பில் விளைந்த ஆசையோ என நினைக்கலாம்.

இந்தத் திரிவேணியில் யமுனையாகிய காளிந்தியும் கங்கையாகிய பாகீரதியும் வெளிப்படையாகக் கலக் கின்றன. சரஸ்வதி என்பது மறைமுகமாகக் கலப்பதாகக் கூறுவார்கள். இக்காலத்தில் சில ஆய்வாளர்கள், 'சரஸ்வதி முன்பு வெளிப்படையாகவே கலந்து இருக்க வேண்டும், அது பிறகு போக்குமாறியோ வற்றியழிந்தோ போயிருக்கவேண்டும், வெளிப்படத் தெரியாத காலத்தில் மறைவாகக் கலக்கும் கதை உருவாகியிருக்கவேண்டும்'— என்று கூறுகிறார்கள்.

தானே படைத்த சரஸ்வதியைப் பிரமன் மணக்க விரும்பியதால் அவள் மறைந்து போய்த் திருமாலிடம்

புகலடைந்தது இவ்விடமே எனும் புராணக் கூற்று மூன்றாவது ஆறுபற்றிய மறைவுக் காரணம் கூற வந்த ஒன்றாகவே தெரிகிறது.

"திரிவேணீம் மாதவம் சோமம்
பரத்வாஞ்ச வாசுகீம்
வந்தே அட்சய வடம் சேஷம்
பிரயாகம் தீர்த்த நாயகம்."

என்பது திரிவேணி சங்கமம் பற்றிய பழைய சுலோக மாகும். இதில் கூறப்பட்டவைகள் இன்றும் அடையாள மாகக் கூறப்படுகின்றன.

பிரயாகை என்பது திரிவேணி சங்கமம் அமைந்த இடத்துக்குப் பெயர் என்பதும், அப்பெயர் அக்பர் காலத்தில் இலகாபாத் என மாற்றம் செய்யப் பட்டதும், இன்று அலகாபாத் என்றே அழைக்கப் படுவதும் பலருக்குத் தெரியாதிருக்கலாம்.

மேற்காணும் சுலோகத்திற்கு ஆதாரமாக நைமி சாரண்ய முனிவர்கள் கதை ஒன்றிலும் திரிவேணி பேசப் படுகிறது. தீர்த்தநாயகம் என்று சுலோகம் கூறுகிறது. நைமிசாரண்ய முனிவர்கள் தீர்த்தராஜா என்பார்கள். அரசனாகையால் பல மனைவியர் இருக்கவேண்டுமே? முத்திதரும் நகரங்களில் சிறந்த காஞ்சி, அவந்திகா, அயோத்தி, காசி, மாயா, மதுரா, துவாரகா ஆகிய ஏழும் திரிவேணியாகிய தீர்த்த அரசனுக்கு மனைவியராக்கி விட்டனர்.

திரிவேணியே தீர்த்தங்களின் தாயகம். இங்கிருந்து தான் எல்லாத் தீர்த்தங்களும் உண்டாகின என்றும் கூறி வரலாயினர். மூன்று ஆறுகளின் சங்கமம் என்பதையே திரிவேணி சங்கமம் என்பது குறிக்கிறது

யாகத்துக்குரிய மூன்று வகையான தீயை எழுப்பி இங்குப் பிரம்மா யாகம் செய்தமையால் அப்பெருமையால் பிரயாகை என்று பெயர் வந்ததாகக் கூறுவர்.

ஒருநாள் நீராடுவதும், மறுநாள் முன்னோர்க்குரிய ஈமச் சடங்குகள் (சிரார்த்தம்) செய்வதும், மூன்றாம் நாள் தம்பதி பூசை செய்வதும் இன்றைய மரபுகளில் ஒன்று. எனவே இங்கு மூன்று நாள் தங்குவது உத்தமம் என்று வேதம் கூறுவதாகக் கூறுவர். தம்பதி பூசையின் ஒரு பகுதி சிறப்புக்குரியது. கணவனை மனைவி கடவுளாகக் கருதி வழிபடலும், மனைவியைக் கணவன் தேவியாகக் கருதி வழிபடலும் செய்து கொள்வர். கணவனே மனைவிக்குத் தலைவாரி பூச்சூட்டுவான்; கூந்தலின் நுனியில் ஓரளவு வெட்டுவான்; மங்கலப் பொருள்களுடன் அந்த மயிர்க்கற்றையையும் சங்கமத்தில் புரோகிதர் உதவியுடன் விடுவான்.

கடவுள் ஆன்மாவில் ஒளியாய்ப் பரவியிருப்பதையும், கடவுளே ஆன்மநாயகன் என்பதையும், கடவுள் பிரிந்து பல உடலிலும் நுழைந்து, தாம் அவர்களாக வாழ்கிறார் என்பதையும் பல தத்துவ நூல்கள் கூறுகின்றன. அவற்றை வாழ்ந்து காட்டுவதே தம்பதி பூசையின் பாவனையாகும். மூங்கிலும், ஒரு முறத்தில் சீப்பு, கண்ணாடி, குங்குமச் சிமிழ், மஞ்சள்பொடி, பழம், வெற்றிலைப் பாக்கு, சட்டைத்துணி, அரிசி முதலியனவும் நீரில் இட்டு வருவது தம்பதி பூசையின் ஒரு பகுதியாகும். இன்றும் முதலிரவு நாளில் இப்படிப் பொருள்களைப் பிற மாதர்க்குத் தருவது வழக்கம். இங்கும் தம்பதி பூசை என்பது கடவுளும் தேவியும் ஐக்கியமாவதையே குறிப்பதாகக் காணலாம்.

கும்பகோணத்தில் மகாமகத்துக்குக் கூறப்பெறும் அத்துணைத் தீர்த்தச் சிறப்பும் திரிவேணிக்கும் பொருந்தும். மகாமகம் இங்குக் கும்பமேளா என அழைக்கப் பெறுவதேயாகும். கும்பமேளா இங்கும், நாசிக், உஜ்ஜயினி, ஹரித்துவார் ஆகிய இடங்களிலும் நடக்கிறது. பெருந்திரளாக மக்கள் வரும்; இமயத்தில் தவயோகம் பூண்டவர்களும் திகம்பரர்களாக வருவதுண்டு.

மகாமகத்தின் புராண வரலாறும் காந்தப் புலன்களின் அறிவியல் காரணமும் எம்முடைய குடந்தைக் கோயில்கள் எனும் நூலில் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிரகமும் ஒருவகை நிறத்தையும் அது சார்ந்த காந்தக்கதிர் அலைகளையும் வெளியிடும். அத்தகைய நிலையோடு பிற கிரகம் சேரும்போது மருத்துவகுணம் மிகும். உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் இந்த ஒன்பது வகை நிறம் அல்லது காந்த சக்தியே உண்டு பண்ணியதாக வேதங்கள் கூறுகின்றன. இன்றைய அறிவியல் அவற்றை ஒத்துக் கொள்கின்றது. நீர்வழியாக ஈர்க்கப்படுவதும், சில இடத்து மண் பெருமையால் ஈர்க்கப்படுவதுமாகிய அறிவியல் காரணங்களே தீர்த்தச் சிறப்பை நம் பெரியோர் வலியுறுத்த அடிப்படையாகியுள்ளன. அவற்றை எளியவர் உணர முடியாத போது, புராண வரலாறுகள்மூலமாக அவை சிறப்பிக்கப்படுகின்றன. இதுவே திரிவேணியைத் தலைமைத் தீர்த்தமாக்கியது என்று உணரலாம்.

இராமேச்சுரம் தொடங்கி காசிப் பயணம் செல்வதற்குரிய மரபுபோல் திரிவேணிக்கும் உண்டு. பிரயாகையில் நீராடி காசியில் ஆடி கயாவில் முன்னோர்க்குக் கடன் கழித்து மீண்டும் திரிவேணிக்கு வந்துதான் தீர்த்தம் எடுத்துப் போய் இராமேச்சுரத்தில் பெருமானுக்கு திருமுழுக்கு நடத்த வேண்டுமென்பது அம்மரபின் விரிவாகும்.

தாராகஞ்ச் என்னும் புகைவண்டி நிலையத்தில் இறங்கினால் திரிவேணியை இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அடையலாம். பல இடங்கள் தங்குவதற்கு உண்டாயினும் நகரத்தார்கள் சத்திரம் தான் நமக்கு எளியதும் சிக்கனமானதும் பாதுகாப்பானதுமாகும். அதற்கு நகரத்தார் பெருமக்களிடம் கடிதம் வாங்கிப் போவதும் உண்டு—இல்லாதாரும் போகலாம். கங்கை

யைக் காவிரிக்கரைக்குக் கலசங்களில் அனுப்பும் புனிதப் பணி இந்தச் சத்திரத்தின் பெரிய பணியாகும்.

சங்கமத்துறைக்குப் போக வண்டி ஏற்பாடுகள், படகு ஏற்பாடுகள் இவற்றிற்கெல்லாம் சத்திரத்தார் நமக்கு உதவியாக இருப்பார்கள். புண்ணியதலத்தில் இப்படி நம்பகமாக உதவி செய்வதே அவர்களுக்கு ஒரு புண்ணிய மாகும்.

"கங்கே சயமுநே சைவ கோதாவரி சரஸ்வதி
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸந்நிதிம் குரு ॥"

என்று கலச பூசையின் மந்திரத்தைக் கேட்டிருப்போம்; அது இந்தத் திரிவேணியாகிய தீர்த்த நாயகத்திலிருந்து யாவும் பிரிந்த தீர்த்த வரலாற்றைச் சுருக்கமாகக் கூறும் மந்திரமேயாகும். இந்தியாவில் நில வழியாகக் கங்கை காவேரியை இன்னும் நாம் இணைக்காவிட்டாலும் புரோகிதர்கள் வெகுகாலத்திற்கு முன்பே இணைத்து விட்டார்கள்!

யமுனை மேற்கிலிருந்து கிழக்காகக் காளிந்தி என்ற பெயருக்கு ஏற்பப் பச்சையாக வருவதும், வடக்கிலிருந்து தெற்காக வெள்ளை நிறத்தில் கங்கை வருவதும்—கரை யோரத்து இயற்கை எழில் ஓவியத்தின் மாட்சியும்—சுமார் முக்கால் கி.மீ. தூரம் படகில் பயணமாகும் சிறப்பும்—தீவு போலும் சங்கமத் துறைக்குக் காலால் நடந்தும் காரிலேறியும் வரும் மக்களின் உணர்வும் கண்டு சுவைப் பதற்கன்றி எழுதிவிடக்கூடிய எல்லையுடையதாக இல்லை.

திரிவேணிக்குப் பாலால் அபிஷேகம் செய்வது, கங்கைக்கும் பூசை செய்வது முதலியன அக்கங்கை உண்மையாகவே இறைவியாய்த் தாயாய் மக்கள் நம்பு வதை விளக்கும்.

சங்கமத்துறை மேடுதட்டித் தானிருக்கும். நன்கு இறங்கிக் குளிக்கலாம். இயலாதவர்கள் அதற்காகக் கட்டியுள்ள பரண்களில் அமர்ந்து நீரை முகந்து ஊற்றிக் கொள்ளவும் இயலும். நிறைய பண்டாக்கள் என வழங்கப் படும் புரோகிதர்கள் கிடைப்பார்கள். அவர்களைவிட உரிமையோடு தர்மம் கேட்கும் பிச்சைக்காரர்களும் நிறைய உண்டு.

யமுனைக்கரையில் கி.பி. 1583 ஆம் ஆண்டு அக்பர் கட்டிய கோட்டை இருக்கிறது. அக்பர் பிரயாகை நகரையே புதிதாக உருவமைத்ததால் வேறு பெயரிட்டார். யமுனையோடு மோதி மோதி வெள்ளப் பெருக்கில் விழுப் புண்கள் பல பெற்றபடி கோட்டை மதில் காட்சி தருகிறது.

மந்திரங்களில் அட்சயவடம் என்று சொல்லப்படும் ஆலமரம் கோட்டையில் இருக்கிறது. முகம் பார்ப்பதற் காக யமுனையில் எட்டிப் பார்த்தபடி மதில்சுவரில் தலை தழைய இருக்கும் ஆலமரத்தை படகுப் பயணிகள் நன்கு தரிசனம் செய்யலாம். ஆடவரும் பெண்டிரும் மகிழ்ச்சிக் குரல் எழுப்பிப் படகில் செல்வதும் தூரத்து ஆலமரத் தைத் துதிப்பதும் நமக்கு அதன் பெருமையைச் சொல் லாமல் சொல்லும். கயாவில் இந்த மரத்தைப் பற்றிப் பேசலாம். பிரளயகாலத்தின் வெள்ளத்தில் கண்ணன் ஆல் இலையில் இங்கே மிதப்பானாம் ஒரு குழந்தையாக! அது இந்த மரத்தின் இலைதான். ஆயுதக் கிடங்குக்கு அருகே இந்த மரம் பாதுகாப்பாக இருக்கிறது. திரிவேணியில் குளிக்கும் ஆழமற்ற இடத்திலேயே இழுப்பாற்றல் மிகுந் துள்ளது. பிரளய வெள்ளம் வருவதை அது நினைவுபடுத்து கிறதோ? சரஸ்வதி மறைந்திருந்து கலப்பதை நினைவு செய்கிறதோ? என்று நாம் சிந்திக்கும் இழுப்பாற்றல்.

கங்கையிலே ஒரு குளிரும் யமுனையில் சிறிது வெது வெதுப்பும் உண்டு. இரண்டும் கலந்த போதும் கூடக் கங்கையின் குளிர் குறைய வில்லை. தலை முழுகி எழுந்

ததும் மண்டை வழியே நீர் முதுகுத் தண்டிற்குள்ளேயே புகுந்து விட்டது போல ஒரு 'சிலிர்ப்பு'! இது புனிதத்தை நினைத்த நம் மனத்தின் இதமா? நீரின் இயற்கையா? உள்ளபடியே இறைவன் பிரசாதமா? என்று மகிழாமல் நாம் வர முடியாது.

தேநீர் முதலான அருந்தும் மண் 'தொன்னையாக'ப் 'புருவா' எனும் அகல்கள் விற்கிறார்கள். அட்டையில் செய்தது போன்ற மெல்லிய கலங்கள் அவை. கங்கைப் படுகையில் இமயமலை வண்டலின் வளம் அவற்றில் வெளியாகின்றது.

சுலோகத்திலுள்ள அடுத்த பகுதி 'மாதவம்'. இது தாராகஞ்சில் இருக்கிறது. வேணி மாதவர் ஆலயமே இந்த மாதவமாகும். திரிவேணியும் மாதவரும் அழகிய சேவை சாதிக்க இராதாவும், கண்ணனும், பிள்ளையாரும் அங்குள்ளார்கள். திரிவேணிக்குக் கதை, சக்கரம், தாமரை மலர், அமுத கலசம் என்று தாங்கிய கைகள் நான்கு— இந்த அமுத மாதாவுக்கு அபயகரமும் வரகரமும் தேவை யில்லையல்லவா?

பாற்கடலில் அமுது கடைந்தபோது அமுத கலசத்தை அசுரர் கவர முன்வந்தனர். பிருகஸ்பதி அதைத் தூக்கிக் கொண்டு வானுலகுக்குள் ஓடினார்; அப்போது தளும்பி யது நான்கிடங்களில் சிந்தியது. ஆகவே முன்புகூறிய அந்த நான்கிடங்களிலும் கும்பமேளா நடக்கிறது. நல்ல வேளை வேணிமாதா அதைத் தன் கையில் பாதுகாப்பாக வைத் திருப்பது நலம்தான்; ஆனால் கலசத்து அமுதம் எல்லார்க் குமா கிடைக்கும்?

இந்த அமுதம் புராணப்படி இப்படிக் கூறப்பட்டாலும் சூரிய மண்டலமாகிய வலது கண்ணும் சந்திரமண்டல மாகிய இடது கண்ணும், அக்னி மண்டலமாகிய புருவ மத்தியும் இணைந்தால் அமுதம் தலையில் ஊறும் என்பது யோகநூல் கூறுவதாகும். வலக் கண் யமுனை, இடக் கண்

சரஸ்வதி, புருவ நடுவில் ஒரு கண் தோன்றாமல் மறைந்திருப்பதாகும். இப்படிக் குண்டலினி சக்தி ஆறு ஆதாரங்களைக் கடந்து தலையுச்சியில் ஏறுவதால் அதற்குத் துணை செய்வதே இந்த வேணி மாதாவின் அருளாகையால் அவள் கையில் அமுத கலசம் உள்ளது.

இந்தச் சாதனைகள் அடுத்த பிறவியிலாவது கைகூடட்டும் என்று யமுனை கங்கை தனித்தனி நீராடிப் பிறகு திரிவேணியில் ஆடினால் போதும்.

சுலோகத்திலுள்ள வரிசையில் இரண்டாவது சோமம் எனும் சோமேச்வரர் ஆலயம். யமுனையின் தென் கரையில் 'நைநி' என்னுமிடத்துக்குப் போய் ஒன்றரை கி.மீ. தொலைவில் சோமேச்வரர் கோயிலையடையலாம். சோமனாகிய சந்திரன் தன் தேய்பிறையாகிய சாபக்குறை முழுதும் தன்னை அழித்து விடாதிருப்பதற்காக வணங்கிய இலிங்கம் அவனாலேயே பிரதிட்டை செய்யப்பட்டு நர்மதை பாணமாக இங்குள்ளதால் சோமேசம் எனப் பெயர் வந்தது. நர்மதைப் பாணமேயாகையால் ஆவுடையாரை உலோகத்தில் தனியே செய்து வைத்துள்ளார்கள். திருவானைக்கா போல சிவலிங்க பீடம் சுற்றிலும் நீர் ஊறிக் கொண்டே இருக்கிறது. சோமரசமாகத் தலையில் யோகிகளுக்கு அமுதம் ஊறுவதுண்டு. அது தலையிலுள்ள சந்திரமண்டலப் பகுதியிலுள்ளதாகும். சந்திரன் ஜோதிட நூற்படி கடகத்திற்குரியவன். அது நீர் வீடு; விருஷப இராசியில் உச்சம் பெறுவான். அது நிலவீடு, விருச்சிக இராசியில் நீச்சம் பெறுவான் அதுவும் நீர் வீடே. ஆகவே சந்திரன் நீர்க்கோளாகப் போற்றப்படுகிறான். அதுபற்றியே இங்கு அவன் வணங்கிய இலிங்கத்திலும் நீர் ஊறுவதைக் காணுகிறோம். இது பஞ்சபூதத் தலங்களில் நீர்த் தொடர்புடையது.

இக்கோயில் சிறியது; ஆனால் பழையது. வெளித் திருச் சுற்றுண்டு. அதில் ஆஞ்சநேயரும் இலிங்கத்தில்

தோன்றும் 'பார்வதிமா'— (பார்வதியன்னை)வும், ஒரு முருகன் ஆறுமுகம் கொண்டு தனியே மயிலில் யோகத் திருவடிகளுடன் காட்சி தருகிறான். சோமேசத்திற்கு அருகே சித்தநாத் லிங்கேசர் ஆலயமும் உளது.

பிரயாகைக் கோட்டையுள்ளும் சிற்ப அழகுமிக்க பாதாளக் கோயில் உள்ளது. கோட்டைக்கு வெளியே ஓர் ஆஞ்சநேயர் கோயில் உண்டு. அங்குப் படுத்த நிலையில் பெரிய வடிவில் ஆஞ்சநேயர் இருக்கிறார். வலக்கரத்தில் கதாயுதம் இடக்கரத்தில் அனுமன் விஸ்வரூபத்தால் சிறிதாகி நம்மைக் கவனிக்கும் இராம இலக்குவர்கள் உள்ளனர். வலது காலில் மயில் இராவணன் மிதிபடு கிறான். இடது காலுக்கும் சிறிது கீழாகப் பாதாள தேவி யிருக்கிறாள். பாதாள உலகில் அனுமனின் மானஸீகப் பிரதிநிதியாகக் காவல் புரியும் ஓர் அனுமன் சிலையும் சிறிதாக உள்ளது. மயில் இராவணன் இராம இலக்கு வரைத் திரிவேணிக் கருகில் பாதாளத்தில் மறைத்து வைத்ததாகவும் அனுமன் அவர்களை மீட்டதாகவும் அதன் அடையாளமாகப் பாதாளத்திலிருந்து வெளிவரும் பாவனையும் இந்த வடிவில் விளக்கப் படுகிறது. இது இராமாய்ணத்துக்கு அப்பாற்பட்ட ஒரு கதையாகும்.

சுலோகத்தில் திரிவேணியில் மூன்றாவதாகக் காட்டப் பெறுவது பரத்வாசர் ஆசிரமம். இராமன் இலக்குவன் சீதை மூவரும் குகனை விட்டுப் பிரிந்தபின் இந்த ஆசிர மத்துக்குத்தான் வந்தனர். திரும்பும் போதும் இங்கு வந்தனர். இது இராமாயணத்தில் அடர்ந்த காடாக ஓவியப் படுத்தப் பட்டுள்ளது. அலகாபாத் நகர் தோன்றிய தால் ஆசிரமம் இருந்த காட்டுப் பகுதி அழிபட்டது. இப் போது ஒரு சிறிய கோயில்தான் ஆசிரம நினைவாக இருக்கிறது. அக்கோயிலை எளிதில் அடையாளம் காண நேரு குடும்பம் வாழ்ந்த ஆனந்த பவனத்துக்கு எதிரில் போய்ப் பார்த்தால் தெரியும். இச் சிறுகோயிலில்

பரத்துவாசர் வழிபட்ட சிவலிங்கம் இருக்கிறது. இக் கோயிலில் எதுவும் நம்மைக் கவர முடியாது; ஆனால் இராமாயணம் இருக்கும் வரையில் பரத்துவாசர் ஆசிரமும் இங்கே இருக்கும் பசுமையான நினைவு இராமகாதையைப் பயின்றவர்களுக்கு வரும்.

இக்கோயிலின் நிலைமை மிகவும் எளிமையாய் வருவாயற்றதாயுள்ளது. பரத்துவாசர் ஆசிரமம் இருந்த மையப் பகுதியில்தான் ஆனந்த பவன் மாளிகை கம்பீர மாய்க் காட்சி தருகிறது.

" பிரம்ம மேதுமாம்
மது மேதுமாம்
பிரம்ம மேவ மது மேதுமாம். "

(நாராயண வல்லி : 38.1)

என்னும் திரிஸுபர்ண மந்திரத்தையே முனிவர்கள் எப்போதும் சிந்தித்திருப்பார்கள். பரப் பிரம்ம மயமான ஆனந்தம் என்னை வந்து அடையட்டும் என்பதே இம் மந்திரத்தின் பிரார்த்தனையாகும். இப்படிப் பரத்துவாசர் தியானித்துக் கொண்டே ஆனந்த சொரூபமாயிருந் திருப்பார். அந்த இடத்தில் அமர்ந்த நேரு மாளிகையும் ஆனந்த பவன் என்று இருப்பது நமக்குச் சிலிர்ப்பைத் தருவதாகும்.

உச்சியில் கோபுரம் போல விதானம் அமைந்த விமானப் பகுதியை உடையது ஆனந்த பவனமாகும். விடுதலைப் போரில் ஒரு வெள்ளை மாளிகையாக விளங்கிய மாளிகை இது. இங்கே பிறந்து வளர்ந்த நேருவும் இந்திரா காந்தியும் இந்தியாவைச் சுமார் 33 ஆண்டுகள் ஆட்சி செய்தார்கள் என்றால் அது பரத்துவாசரின் சித்தி யாம்சம் என்றுதான் நினைக்க வேண்டும். தன் மகன் ஜவகர்லால் நேரு சிறையில் இருந்த போது தந்தையான மோதிலால் நேரு கட்டிலில் படுக்காமல் தரையில்தான் படுப்பாராம். மகன் சிறையில் படும் துயரை வீட்டில்

தானும் பெறவேண்டுமென்பது அவரின் எண்ணம். பரத்து வாசர் ஆசிரமத்தில் தங்கி மகிழ்ந்த இராமன் சார்பாய் ஒரு தசரதனையும் மோதிலால் வடிவில் நாம் காண நேர்ந்தது.

இம்மாளிகை இன்று காட்சிக் கூடமாக உள்ளது! பல்வேறு நினைவுகளைப் பசுமையாக நினைவூட்டும் வல்லமை மிக்கது! இம்மாளிகையில் படங்கள் பயன்பட்ட பொருள்கள் நினைவுக் காற்றில் நிசப்தம் சாதிக்கும் அறைகள் யாவும் நேரு குடும்ப வரலாறும் விடுதலை வரலாறும் பரத்துவாசர் ஆசிரம வரலாற்றை நம் நினைவுக்கு வரச்செய்கின்றன.

பரத்துவாசர் ஆசிரமக் கோயிலை அடைவதற்கு முன் ஒரு கோயில் உள்ளது. 'அலோபிமா' கோயிலாகும் அது. இதற்கும் ஆதிசங்கரர்க்கும் ஒரு தொடர்புண்டு.

"நிர்லோபா லோபநாசி நி."

என்று லலிதா சகஸ்ரநாமத் தோத்திரத்தில் (48) ஆதிசங்கரர் பாடியதும் அலோபிமாதா கோயிலில் தொடர்பிருப்பதும் பொருத்தமே. லோபமில்லாத தாயார் என்பதே இம்மாதாவின் திருநாமத்திற்குப் பொருளாகும். ஆதிசங்கரர்க்குள்ள தொடர்பு, திரு வானைக்காவில் அகிலாண்டேஸ்வரி அன்னைக்குத் தாடங்கம் செய்து அணிவித்ததைப் போன்றதாகும். இதை எமது திருச்சி கோயில்கள் எனும் நூலில் காணவும்.

ஒரு காலத்தில் யாரும் நெருங்க இயலாதபடி மிகவும் கொடிய சக்தியாக இத்தாய் விளங்கி வந்தாளாம். ஆதிசங்கரர் ஸ்ரீசக்கரம் செய்து அந்தக் கொடிய சக்தியை மாற்றி விட்டராம். இந்தக் கோயில் பரத்துவாச முனி வரின் தொடர்பாகவும் இருக்கலாம். யோகிகள் உள்ள இடத்தில் அன்னை கோயிலமைவது இயற்கை. தனக்குரிய தன்மை கிடைக்கும் வரையில் கடுமையாக இருப்பதும்

சாந்தி செய்யத் தகுதியுள்ளவரால் அமைதியடைவதும் இயல்பு. அப்படி ஆதிசங்கரர் காலத்தில் சாந்தி செய்யப் பட்டது.

சிறிய கோயிலானாலும் உத்திரப்பிரதேசம் முழுதும் இவ்வம்மைக்குச் செல்வாக்கு உண்டு. திங்கள் வெள்ளி சனி ஆகிய கிழமைகளில் கிராமங்களிலும் நகரங்களிலு மிருந்து மக்கள் பெரிய அளவில் திரளுவார்கள். பெண்கள் கூட்டமே மிகுந்துள்ளது. இக்கோயிலில் திருவுருவம் ஏதுமில்லை.

அழகான மேடை ஒன்றிருக்கிறது. அதன் நடுவே ஒரு முழச் சதுரத்தில் ஒரு குழிவு இருக்கிறது. அதன் அடியில் தான் ஸ்ரீசக்கரம் பதிக்கப் பெற்றுள்ளதாகக் கூறுகிறார்கள். மேடையின் ஒரு மூலையில் மரத் தொட்டில் தொங்கிய படியுள்ளது. இன்னொரு மூலையில் மலர்கள் குவிக்கப் பட்டுள்ளன. இதை நோக்கும்போது பரத்துவாசர் இவ்வுலக வாழ்வைவிட்டு இறை வாழ்வில் இலயமான இடமாக இது இருக்கலாமோ என்று கூட ஐயமாகிறது. ஒரு மேடையில் மட்டும் ஸ்ரீசக்கரம் பதிவு செய்யப்பட்ட தால் இப்படி நினைக்கத் தோன்றுகிறது.

வாரணாசி செல்வோர் அலகாபாத் போய்த்தான் ஆகவேண்டும். நெருக்கடியான ஒரு நகரம், புதிய வளர்ச்சி கள் ஏதும் மிகுந்துள்ளதாக நமக்குத் தெரியாத நகரம். பிரயாகையின் பெருமைக்காகவே புனிதப் பயணிகளுக்கு இது உரியதாகிறது.

சுலோகத்தில் சேசம் என்று குறிக்கப்படுவது ஆதி சேசன் கோயிலாகும். இது கங்கை அக்கரையில் சுமார் 10 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அப்பகுதியைத் துர்வாசர் ஆசிரமம் என்று கூறுவார்கள். மற்றும் அட்சய வடம்பற்றி முன்பு குறித்தோம். இனிமேல் சுலோகத் தின்படிவாகீசமே எஞ்சியுள்ளதாகும்.

இதுவும் கங்கைக் கரையில்தான் உளது. அது நாகபாஸுஎன்று பெயருள்ள பகுதியில் அமைந்திருக்கிறது. தீர்த்த மன்னனாகிய திரிவேணியைக் காக்கும் காவல் தெய்வமாக வாசுகி என்னும் நாக அரசு இங்கு மூலவராக உள்ளது. வட்ட வட்டமான பல பின்னல்களுடன் உடலைச் சுருக்கிப் பலதலைகளையும் விரித்துப் படமெடுத்தபடி வாசுகியை மூலத்தானத்தில் தரிசிக்கலாம். சர்ப்பதோஷம் உள்ளவர்கள், புத்திரஸ்தானத்தில் ராகு கேது அமையப்பெற்ற ஜாதகர்கள், ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் ஆகியோரால் வழிபடச் சிறந்த கோயிலிது. இலக்குவன் ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவனாகையால் இங்கு அவன் வந்திருப்பான் என்றும் நினைக்கலாம்.

இக் கோயிலில் மேற்கூறிய காரணத்துக்குப் போனாலும் போகாவிட்டாலும் இங்குக் கோயில் எதிரிலுள்ள மண்டபத்தில் மகாபாரதக் காட்சிக்காக ஒருமுறை போவதே சிறப்பாகும். போரில் தளர்ந்த பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்து 'உத்தராயண புண்ணிய காலத்தில் தான் என் உயிர் பிரிய வேண்டும்' என்றிருந்தாரே! அது கங்கைக் கரையில்தானே. அதையே இங்கு மண்டபத்தில் காட்சியாக்கியிருக்கிறார்கள்.

இருபத்து ஆறடி நீளமாகப் பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்திருக்கிறார். கற்சிலையான இதுவும் விரிசல் கண்டே இருக்கிறது. இரண்டுபேர் படுத்து உறங்குமளவு இவர் மார்பு விரிந்துள்ளதாயிருக்கிறது. அம்புகள் யாவும் இரும்புக் கம்பிகள். அவை இவரைத் தாங்கியுள்ளன.

தீர்த்தநாயகமாகிய திரிவேணிக்கு ரிஷிகேஷ், அரித்துவாரில் முன்னதாகக் கங்கையாடிவிட்டுத் திரிவேணி வழி

யாக வாரணாசிக்குப் போவோருமுண்டு. ஆனால் திரிவேணிக்குப் போகாமல் காசிக்குப் போவதை மரபு ஒத்துக் கொள்ளவில்லை.

எல்லா இடத்திற்கும் தீர்த்தச் சிறப்பளித்த திரிவேணி சைவ வைணவ பேதமில்லாமலும், சைவ வைணவ புராணக் கருத்துடையதாகவும், வேதகாலப் பழம் பெருமையுடையதாகவும் உள்ளது. கங்கைக் கரையில் புதிதாயுள்ள பெரிய ஆதிசங்கரர் மண்டபமும் பார்ப்பதற் குரியது. தத்துவ உலகில் பெயர்பெற்ற குமாரில பட்டருக்கே ஞானம் தந்த ஆதிசங்கரர்க்கு இது உரிய சிறப்பாகும்.

9. கங்கையில் காசி

(i) கங்கை பாயும் நாட்டிலே

இந்தியாவின் ஆறுகள் பல; ஆயினும் யாவுமே கங்கையால் தோன்றியதாகவே நம்பப்படும் மரபு நெடுங்காலமாக உள்ளது. கங்கை இந்தியாவில் பாய்வதற்கு முன்பே சில ஆறுகள் பாய்ந்திருக்கலாமே என்றால் அவையும் கூட வான கங்கையின் வழித்தோன்றல்களாகவே கருதப் பெறுகின்றன. நீர் என்னும் பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய அடிப்படைத் தன்மைக்குத் தலைமையும் உருவமும் தருவது வான கங்கையாகும். இது பகீரதனால் பூமியில் ஓடுவதாக இந்தியப் புராண இதிகாசங்கள் ஒருகுரலில் கூறுகின்றன.

அறிவியல் காரணம் காட்டி ஆன்மிகச் செயல்களுக்கு அமைதி கூறும் வழக்கத்தினர், ''பால்வழி'' (milky way) எனும் நட்சத்திர மண்டலப் பகுதியையே முன்னோர்கள் ஆகாயகங்கை என்று அழைத்ததாகக் கூறுகின்றனர். அது உண்மைதானா என்பதனைக் காலம்தான் பதில் சொல்லிக் காட்டமுடியும்.

காவிரி, வைகை, தாமிரவருணி முதலிய ஆறுகளைச் சிறப்பாகக் கொண்டாடும் தமிழர்கள் கங்கைக்கும் உரிய இடம்தரத் தவறவில்லை. சமயங்களைக் காணமுடியாமல் தெய்வங்களை மட்டுமே காட்டும் சங்க இலக்கியம் கங்கையை ஒரு வேறுபாடும் கருதாமலே பாராட்டு கின்றது.

" கங்கைப் பேரியாற்றுக் கடல்படர்ந்தாங்கு"
(மதுரைக்காஞ்சி 696)

" பொன்கொழித்து இழிதரும் போக்கருங் கங்கை"
(பெரும்பாணாற்றுப்படை 431)

" கங்கை வாரியும் காவிரிப்பயனும்"
(பட்டினப்பாலை 190)

" கங்கைக் கரைபொரு மலிநீர்" (புறம் 161-6-7)

" கங்கை வங்கம் போகுநர் கொல்லோ"
(நற்றிணை 189:5)

" கங்கைப் பேர்யாற்றுக் கரை இறந்து இழிதரும்
சிறையடு கடும்புனலன்ன" (நற்றிணை 369: 8-9)

இவை சங்க இலக்கியத்தில் சில சாட்சியங்களாகும். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குச் சிலையெடுக்கக் கனக விசயர் தலைமீது இமயக்கல்லை ஏற்றிக் கங்கையாற்றில் (நீர்ப்படைக் காதை) முழுக்காட்டிய சிறப்பே கூறப்படுகிறது.

புராண இலக்கியங்கள் புராண காரணமாகவும் சிவபெருமான் தலையிலிருக்கும் சிறப்புக் காரணமாகவும் பலவிடத்தும் புகழ்கின்றன. இவற்றில் நம்பிக்கையும் விருப்பமும் இல்லாத கவிஞர் பாரதிதாசன் கூட

" கங்கையைப் போல் காவிரிபோல்
கருத்துக்கள் ஊறுமுள்ளம்
எங்கள் உள்ளம்."

என்று புகழ்ந்து கங்கையை மதித்துள்ளார்.

ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டில் எழும்பிய மாமல்லபுரத்தில் கங்கைக் கரைக் காட்சி ஒன்று தொடர்ச் சிற்பமாகப் பெரிய அளவில் செய்யப்பட்டுள்ளது. திருச்சி மலைக் கோட்டையில் ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரப் பல்லவன் எடுத்த குகைக்கோயிலில் பகீரதனுக்குக்

கங்கையை அளித்த சிவபெருமானின் வேறு வகைத் தோற்றம் பெரிதாக உள்ளது. இவற்றை முறையே காஞ்சி காமாட்சி, திருச்சி கோயில்கள் ஆகிய நூல்களில் விவரம் காணவேண்டுகிறோம்.

காசிக்கு யாத்திரை செல்வதும் கங்கையில் முழுகுதல் புனிதம் என்பதும் சிலப்பதிகாரத்திற்கு முன்பே செல்வாக்குப் பெற்றிருந்தன. அடிக்கடி போரும் பகையும் மூண்டு கொண்டிருந்த இந்திய மன்னர்கள் காலத்தின் நெடுவரலாறு முழுதும் கங்கையின் அல்லது காசியின் புனிதத்தைப் போற்றியே வந்திருப்பதை அறிகிறோம்.

ஓர் ஆற்றுக்கு ஆன்மிகச் சிறப்பு வந்த காரணம் என்ன? என்பதே நமக்குள் எழும் வினாவாகும். சமய ஆன்மீகப் பற்றுக்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாத பாரதப் பிரதமர் அமரர் நேரு கங்கையையும் வேளை தோறும் அதன் பிரவாகக் காட்சியையும் வெகுவாகப் பாராட்டி எழுதியிருக்கிறார். அதிலும், அறிவியல் உலக எழுத்தாளராகிய நேருவின் பார்வையுள்ளும் ஓர் ஆன்மிக உணர்வையே கங்கை எழுப்பியிருக்கிறது. கங்கைக் கரை தவசியரின் ஆசிரமப் பெருமை மிகவும் கொண்டதாகும். இராமகிருஷ்ண பரமஹம்சர் நமக்குத் தெரிந்த் தெளிவான வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்தவர். இவர் கங்கைக் கரையோரத்தில் நிகழ்த்திய யோக முயற்சிகளால் தவசியர் பெருமையைச் சாட்சியப் படுத்தியுள்ளார். கங்கை நீரைத் தொடும்போதெல்லாம் 'சமாதி' எனும் யோகத்துயில் நிலைக்குப் போவது அவர் வாழ்வின் பரந்த நிகழ்ச்சிக் குறிப்பாகும்.

பாவம் போக்கும், முக்தி தரும் என்ற நம்பிக்கைச் செய்திகள் அறிவியல் பற்றுடையாருக்கு ஈர்ப்புடையதாக இருக்க முடியாதவைதான்; ஆனால் ஆண்டு பல வாயினும் அடைபட்ட செப்புக் கலசத்தினுள் தூய தாயிருக்கும் ஒரு நீர் கங்கை தவிர வேறில்லை—துருப் பிடித்த தகரப்புட்டியிலும் பத்தாண்டு கெடாதிருந்தது

எப்படி என்று ஆய்வோரும் வியப்பர்; இதுவே ஆன்மிக நம்பிக்கையின் அடிநிலை ஆதாரம் என்பதையும் நாம் நினைத்துப் பார்க்கலாம்.

நீரைத் தெய்வமாகப் பெண்ணாகத் தாயாகச் சொல்வது 'ரிக்' வேத காலம் முதலாக இந்தியாவில் ஒரு சேர நிகழ்ந்து வரும் மரபாகும்.

" பாதயோ பாத்யம் ஸமர்ப்பயாமி
ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
அர்க்கியம் ஸமர்ப்பயாமி. "

என்று நீர் விட்டு வழிபடும் பூசை மந்திரங்களும்,

" கங்கே ச யமுநே சைவ கோதாவரி சரஸ்வதி |
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் சந்நிதிம் குரு || "

என்று கலசத்தாபன மந்திர வழிபாடும், சங்குள்ளே நீர் நிரப்பி வைப்பதும்; நீர், பூசைக்குரிய பொருளாக்கப் படுவதைக் காட்டும்; அதனுள்ளும் கங்கையே பிற நீர் நிலையாகப் பிரிந்ததையும் உணர்த்தும்.

"எல்லாப் பிராணிகளும், பிராணன்களும், ஆத்மாவும், உணவு அமுதம் ஸம்ராட், விராட், சந்த, இசை, ஜோதிர், கணம், யஜுர் மந்திரம், சத்தியம். ஆகியவையும் எல்லாத் தேவதைகளும், பூலோகம் புவர்லோகம் ஆகியவையும், ஓங்கார மாய நாதமும் நீர்தான்"—என்று தைத்ரீய உபநிஷத்திலுள்ள (29 அனுவாகம்) செய்தியால் அறிகிறோம். பஞ்ச பூதங்களுள் அக்னியாகிய தீக்கடவுள் பல தெய்வங்களுக்கும் பொதுவான சாட்சியாகவும் நீர் பல தெய்வங்களாகவுமே மதிக்கப் படுவதை அறிகிறோம்.

சூரியனின் மறையாத நிறக்கதிர்கள் ஏழு, மறைந்தவை இரண்டு; இதனை உணர்ந்த வேதகால முனிவோர்கள் ஏழு நிறம் உடல் மனம் ஆத்மாவுக்குண்டு என்றும், ஏழு தாதுக்களும் ஒன்பது வாயில்களும் உண்டு என்று கூறி

நம் பூத உடலை வகைப்படுத்தினர். இது அறிவியல் ஒப்பு மோர் உண்மையாம். முனிவரின் கமண்டலத்தைக் காகம் கவிழ்த்ததால் காவிரி வந்தது கௌதம முனிவன் தந்தது கோதாவரி என்ற புராணக் கதைகள் ஒன்றான கங்கையை விட்டு ஏனையவையாகப் பிரிந்ததையே சிறப்பிக்கின்றன. 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்ற தமிழ்ப் பழமொழியும் இச்சார்பில் வந்ததேயாகும். கடவுள் வடிவத்தில் கங்கை இருப்பதாகக் காட்டுவதும் இதன் காரணமேயாகும்

படைப்பின் அடிப்படைச் சுருக்கம் ஐந்து தன் மாத்திரை எனும் பூதங்களின் நுண்பொருள் தன்மை யாகும்; அவற்றுள் நீர் மட்டுமே கங்கையால் பெரிதும் புகழப்படுகிறது.

மழையை வள்ளுவர் வானமிழ்தம் என்பார்; வான கங்கையே மழையின் காரணமாகக் கருதப்படுகிறது. நீரில் அர்க்கியம் விடுதல் அஸ்தி கரைத்தல் ஆகியன செய்தால் இறந்தவர் சொர்க்கம் பெறுவர், அவர்கள் நினைவாகச் செய்தன அவர்கட்கே சென்று சேரும் என்பதும் பழைய இந்து மரபாகும். வேள்வித் தீயின்மூலம் கடவுளர்க்கு விருப்பம் செய்தலும், நீரின்மூலம் பாவம் நீக்கலும், முன்னோர்க்கு ஆக்கம் தேடலும், சுவர்க்கம் புகுதலும் ஆகியன உண்டு என மதித்தலும் ஒன்றாக நினைக்கும் போது தீயைவிட நீரே சிறப்பினதாகக் கருதப்படுகிறது.

பிறகடவுளருக்கு உரியதைக் கொண்டு செல்வதே அக்னிவேலையாகும். நீருக்கோ தெய்வத் தன்மையே இருப்பதாகக் கருதப்படுகிறது.

வாஹிகன் என்பான் சூது, பசுக் கொலை, தாயை உதைத்தது முதலிய குற்றங்களுக்காக யமலோகத்தில் நரக தண்டனைக்கு உரியவனாகத் தீர்ப்புக் கூறப்பட்டான்—இது நடக்கும் வேளையில் அவனுடைய உடலைக் கழுகுகள் போட்டியிட்டுத் தின்றபடி பறந்தன. அவனுடைய பாத

எலும்பு பறவைப் போட்டியால் கங்கையில் விழுந்தது. அதே காரணத்தால் அப்போதே அவன் சொர்க்கத்துக்குப் போயினான். பாவம் போக்கும் கங்கையின் பரம்பொருள் தன்மை இக்கதையால் விளக்கமாகிறது. சிவபெருமான் தலையில் உள்ளதாகவும் மனைவியாகவும் கங்கை உணர்த்தப் படுதலால் கங்காதேவி பரம்பொருள் சார்பைப் பெறுவதை அறிகிறோம்.

பன்னிரண்டாயிரத்து எழுநூறு அடி உயரத்தில் பனிக் கட்டிகளின் நடுவே இமய மலையில் கோமுகி என்ற சிகரத்தில் ஒரு குகையில்தான் கங்கை உற்பத்தியாகி றாள்—இல்லை இல்லை பகீரதனின் தவத்திற்கு உகந்து வெளிப்படுகிறாள்! இதற்கும் உள்ளே அவள் எப்படி எம்முறையில் திரண்டு உருப்பெறுகிறாள் என்பதை இதுவரை மனிதர்கள் யாரும் காணவில்லை. 'ரிஷிமூலம் நதி மூலம் பார்க்கக்கூடாது'—என்ற பழ மொழியையும் இதனால் நாம் தெளியலாம்.

கபில முனிவர் சகரச் சக்ரவர்த்தியின் 60 ஆயிரம் பிள்ளைகளையும் முனிந்து சாபத்தால் சாம்பலாக்கி விட்டார். அந்த இடம் வங்காளத்தில் இருக்கிறது. அங்குத் தன் முன்னோர்களை மீண்டும் உயிர்பெற வைத்துச் சொர்க்கம் புகும் வாய்ப்பை அளிப்பது என்று பகீரதன் முயன்றான். அபன் தவ வலிமையால் கோமுகிக் குகையி லிருந்து வெளிவந்த கங்காதேவி அவன் நடந்து செல்லச் செல்ல அவன் பின்னர் தொடர்ந்து வங்காளம் வரையிலும் சென்றாள். கங்கோத்தரி எனும் கங்கை வெளிப்பட்டபின் திரளும் பகுதி பனிப்பாறைகளால் ஆகியது. இதிலிருந்து கடலில் கலக்கும் வரை 1560 மைல் கங்கை நடந்து போகிறாள். அப்போது காசியை நெருங்கியதும், வடக்கி லிருந்து தெற்கே வந்தவள் மீண்டும் வடக்கு நோக்கி ஓடு கிறாள். காசியின் புனிதமும் அங்கே அவளின் காதலன் சிவபெருமான் மகிழ்ந்திருப்பதைக் காணுவதும் அவளை வடக்குக் காந்தமாய் ஈர்த்து விட்டன.

தோன்றிய திசையில் திரும்பி ஓடுவதும் புண்ணிய திசையாகிய வடக்கு நோக்கிப் போதலும் ஆறுகளின் புனிதத்தை யுணர்த்தும். மேற்கே தோன்றிய காவிரி குத்தாலம் ஆடுதுறை இவற்றுக்கு நடுவே ஓரிடத்தில் மேற்கு நோக்கி ஓடுகிறது. அதனையும் புனிதமாகவே கருதுகிறார்கள். திரும்பிய சிறப்பும் காசியின் சிறப்பும் கங்கையும் காசியும் இணைத்துப் பெறுகின்றன.

மலைகளை மேடு பள்ளம் உணராது குதித்து வந்தவள் பகீரதன் காசி நோக்கிப் போன காரணத்தாலும் வடக்கே போயிருக்கலாம். பல பெயர்களை இடம் தோறும் பெற்றாலும் நூறு கிளைகளாகப் பிரிந்து கங்கை கடலில் கலக்கிறாள். எல்லா ஆறும் என் குழந்தைகளே என்று கூறுவது போல் நூறாகப் பிரிந்து காட்டினாள்.

வங்காள விரிகுடாவில் இந்த நூறு கிளைகளில் ஒரு கிளையில் கங்கா சாகர் என்ற இடம் உள்ளது. அது ஒரு தீவாகவே உள்ள இடம். கந்தர்பன்ஸ் என்பது இக்காலத்தில் கங்காசாகர் உள்ள பகுதியைக் குறிக்கிறது. சதுப்பு நிலப்பகுதி சணல் விளையும் வளமார்ந்த காசுப் பகுதியிது.

கங்காசாகரில்தான் கபில முனிவர் ஆசிரமம் இருந்ததாம். அங்கே இப்போது அவர் சிலை யிருக்கிறது. அக் கோயிலில் இடதுபுறம் விசாலாட்சி வலதுபுறம் அனுமான் இவை பிற்கால அமைப்புக்களாகும்.

கல்கத்தாவிலிருந்து 108 கி.மீ. நாம்கானா, இப்படிப் போனால் தொலை மிகுதி. இதைவிட 93 கி. மீ. 'ஹார்வுட் மாண்ட்' அங்கிருந்து 15 கி. மீ. (பஸ்) பேருந்தில் சென்று கங்காசாகரை அடையலாம்.

பொங்கல் பண்டிகையாகிய மகர சங்கராந்தியே சாகரில் கும்பமேளாவாகும். கங்கைக்கரை வாழ் இந்துக்கள் பலரும் கூடும் விழா இது. பல முறை பிற தீர்த்தங் களில் குளிக்கும் பயனை ஒரு முறையிலேயே கங்காசாகர்

தந்துவிடும் என்று பெருமையாகக் கூறப்படும். கங்கையின் தோற்றமும் முடிவும் நடுவும் எல்லாமே புனிதமான சிறப்புக்குரியனவே யாதலை • யறியலாம். பிரம்மத்தில் பட்டது பிரம்மமே ஆவது போலக் கங்கையில் பட்டதும் கங்கையே ஆகுமன்றிச் சிறுமை பெறாது என்றே பலரும் நம்புகின்றனர்.

ஆரூரில் பிறந்தாலும், அண்ணாமலையை நினைத்தாலும், ஆனைக்காவில் வாழ்ந்தாலும், ஐயன் தில்லையைத் தரிசித்தாலும் முக்தியே என்னும் தொடர்ச்சியில் காசியில் இறந்தாலும் முக்தியே ஆகும் என்பது பழைய தொகுதி மரபாகும். அந்தப் பெருமையில் கங்கையும் தலையான சிறப்பை அங்குப் பகிர்ந்து கொண்டு விட்டது.

புயல், எரிமலை, பூகம்பம், இடி முதலிய இயற்கை இன்னல்களை மக்கள் எதிர்ப்படும் போது இது பூமாதேவி, வாயு, ஆகாயம், அக்னி முதலிய தெய்வக் கோளாறு என்று பொதுவாக நினைத்தாலும் பரவலாக அழுத்தமாக நினைப்பதில்லை. ஆனால் வெள்ளப் பெருக்கைப் புனிதமாகக் கருதுவது மட்டும் பரவலாக அழுத்தமாக உள்ளது. 'பதினெட்டாம் பெருக்கு' என்று ஆடிமாதம் பதினெட்டாம் நாளைத் தமிழர்கள் கொண்டாடுவது இதற்குத் தக்க சான்றாகும். இதுபோல் பலமுறை உண்மையாகவே பெருக் கெடுக்கும் கங்கையையும் மக்கள் புண்ணியமாகவே கருதுகின்றனர்.

காசியின் கரை கங்கைக்கு மேல் ஐம்பது முதல் எழுபது அடி உயரம் இயல்பாகவே உயர்ந்துள்ளது. பெரும்பாலும் தென் மேற்குப் பருவக்காற்றுத் தொடங்கியபின் வெள்ளம் வர வாய்ப்புக்கள் கூடும். காசியின் உள் நகரம் கரையை விடப் பள்ளமாகச் சரிந்து செல்கிறது. 1948, 1978 ஆகிய ஆண்டுகளில் பெருவெள்ளம் ஊருக்குள்ளேயே புகுந்து விட்டது. சுவர்களில் அந்த ஆண்டு வெள்ளம் வந்த அளவை எழுதியிருப்பதை இன்றும் பார்க்கலாம். பல

விடங்களில் வெள்ளம் வந்தால் அதன் அளவு தெரியுமாறு இப்படிக் குறிக்கப் பட்டிருப்பதை அறியலாம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில் எழுந்த புராணங்களினால் வெள்ளம் காசியை ஒரு தீவாக்கிவிடும் என்று கூறுவது குறிப்பிடத் தகுந்ததாகும். காசியின் மேற்குப் பகுதியில் பல ஏரிகள் குளங்கள் தெற்கு வடக்கே வரிசையாக அமைத்து வைத்ததுபோல் முன்பு ஒரு காலத்திலிருந்து பின்பு அவை நகர் விரிவு கருதி தூர்க்கப்பட்டன. அதாவது புராணக் குறிப்பில் பல குண்டங்கள் கூறப்பட்டும் ஒரு சிலவே இன்று காணப்பெறுவதாலும் இதையறியலாம். காசியின் தென்பகுதியான அஸி சங்கமம் மண் துறையிலான உயரம் குறைந்த இடமாகும். வருணா சங்கமமோ சிறிது உயர்ந்து சென்று முடிகிறது. எனவே கிழக்கு உயர்ந்து மேற்கில் சரிந்தும் வடக்கு உயர்ந்து தெற்கு சரிந்ததுமாக இப்புனிதத்தலம் உள்ளது. முற்காலத்தில் வெள்ளம் ஏற்பட்டால் வடிகாலாக ஓர் ஏற்பாடு செய்திருப்பார்கள் போலும். அதாவது அஸி சங்கமம் தொடங்கி கங்கைக்கு மேற்கே ஊரின் தாழ்வு மையப் பகுதியில் இருந்த பல குண்டங்களிலும் கங்கை வெள்ளம் புகுந்து மற்றுமொரு கங்கையாகவே மாறி அவ் வெள்ளம் மீண்டும் வருணாவில் வடக்கே வடிந்து கங்கையோடு கலக்கும். பாஹியான் யுவான் சுவாங் முதலியோர் காசியில் பல ஏரி குளமிருப்பதைக் கூறியுள்ளார்கள்.

இப்போதும் கற்பனை செய்தால் காசி ஒரு தீவாகக் காட்சிதரும். இந்த வெள்ளக் காலத்தில் மீனாகவே வடிவம் பெற்றுக் காசி விளங்கும். இதையன்றி ஓங்காரக் கோயிலருகே மச்சயோதரிக் குளம் உள்ளது.வெள்ளத்தில் அது ஆறாகி வருணையுடன் கலக்கும். இதை மச்சயோதரீ யோகம் அல்லது மச்சயோதரி சங்கமம் அல்லது மச்சயோதரி மோட்சம் என்று பலவிதமாக அழைப்பர். புராணகால முதலாக இருந்த காலத்தில் வருணையில் குளிப்பது சிறப்பாகக் கருதப்பட்டது. கங்கை விஸ்வநாதர்

வாழும் காசியை முழுதுமாகத் தழுவி வருணையில் கலப்பது ஒரு திருமணக் காட்சியாகவும் புனிதமாகவும் போற்றப்படும். 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கோவிந்தச் சந்திரன் இப்படி ஒரு மோட்சக் காலத்தில் குளித்ததாகக் கல்வெட்டுகளில் குறித்தலைக் காணு கிறோம். கணவனைக் கூடும் கங்கையாகக் காண்பது தவிர வெள்ளம் வெறியாட்டு நடத்தியதாக இந்துக்கள் இதனைக் கருதுவதில்லை. கங்கையின் பெருமை தெய்விகம் ஆகியன இதனால் நன்கு விளங்கும்.

கங்கையை மாதா என்று அழைப்பதே மரபு—பிறந்த குழந்தையை உடனே கங்கை நீரில் ஆட்டுவது இதனை வலிவு செய்யும். பல நாள் கெடாமலிருக்கும் காந்த சக்தி இத்தண்ணீர்க்கு உண்டென்பதை அனுபவமாகப் பலரும் அறியமுடியும்.

கங்கையின் நுண்ணிய வண்டல் வளத்தின் பெருமைக்கு ஒரு சாட்சியமாகும். கங்கையைப் புனிதமாக நினைப் பாரும் வழிபடுவாரும் சமய நம்பிக்கையில் ஆழ்வதே காரணம்; ஆனால் சிந்து, பிரம்ம புத்திரா, யமுனை முதலிய நதிகளில் மருத்துவ குணம் மகத்தானதாக இல்லாமலிருப்பதே, நம் அறிவியல் மனைத்தைக் கவர்வ தாகும். மேற்கு மலையில் தோன்றும் பல நதிகள் பல வேறுபட்ட தன்மைகளைக் கொண்டிருப்பது போல் இமயத்தின் பல நதிகளும் பல்வேறு தன்மைகளையே கொண்டுள்ளன.

கங்கையின் மருத்துவ, வள, நிற, தன்மைச் சிறப் புக்கள் யாவும் உலகில் வேறு நதிக்கு இல்லாமையைக் காணும்போது, கங்கை இயல்பாகவே புகழ்பெறும் தலைமையை எய்துவது பொருத்தமானதே!

(ii) புண்ணியத் துறைகள்

காசியில் 64 படித்துறைகள் கங்கையில் கணக்குச் சொல்லப்படுகின்றன. தனிப் பெயர்கள் அவற்றிற்கு இருப்பினும் சில துறைகள் மண் துறைகளே, சில துறைகள் அடையாளம் தெரியாதவையாகும், அனைத்திலும் சிறந்தவை ஐந்து துறைகளே! இரண்டு துறைகள் மயானத் துறைகளாகும்.

மிக உயரிய படிக்கட்டிகளும் கோயில்கள், மடங்கள், தளங்கள், மயானங்கள், மடங்கள், மரங்கள், முதலிய பல அமைப்புக்களைக் கொண்டு நீண்டதாய் விளங்கும் படித்துறைகள் வேறு நதிகளில் எங்கும் இருக்க முடியாது. இவற்றிற்கே ஈடு இல்லையென்றால் புனிதத்துக்குப் போட்டியாக வேறு ஒன்றிருக்க முடியுமா?

குளிக்கும் இடத்தில் கூடும் மக்கள் கூட்டம் இந்தியாவில்தான் உண்டு எனினும், நாள்தோறும் கூடும் சிறப்பால் காசியின் படித்துறைகள் தலைமை பெறுகின்றன. மலர் மாலைகள், பிணங்கள் இப்படி எதுவும் பேதமின்றித் தான் கங்கையில் மிதக்கும். அதை மக்கள் வெறுப்பது வழக்கமில்லை. வணங்குவது கடமையாக்கப் பட்டுள்ளது.

அக்பர் காலத்தில் ஓரிரு படித்துறைகள் கட்டப் பட்டன, சிவாஜி காலம் முதலாகவே நிறைய துறைகள் அமைக்கப்பட்டன. எனவே அக்பர் காலத்துக்கு முன்பு மண் துறைகளாகவே இவை இருந்திருக்குமென்பதில் ஐயமில்லை. இன்று அக்காட்சியை விளக்குவ்தற்காக விடப் பட்டது போலவே அஸி சங்கமத்துறை அமைந்துள்ளது. அதுவே தென் கோடித்துறையுமாகும். அதிலும் ஓர் அழகே உள்ளது. இதுமுதல் வருணா சங்கமம் முடிய 10. கி.மீ. தொலைவு இருக்கும். இது வளைவாக அமைந்த கரையாகும். ஆகவே அஸியிலிருந்து பார்த்தால் மணிகர்ணிகா கூடச் சரியாகத் தெரியாது. துறைகளை வளப்படுத்திய

மராத்தியர் முயற்சி காலமெல்லாம் வாழும் வரலாற்றுப் புகழாக விளங்குகின்றது. இம்மராத்தியர் மறுமலர்ச்சி யுகமே இன்றைய காசியைப் புதுப்பித்தது எனலாம்.

அஸி, தசாசுவமேதா, மணிகர்ணிகா, பஞ்ச கங்கா, வருணா சங்கமம் என்னும் ஐந்து துறைகளே சமய நம்பிக்கைச் சடங்கிற்கு உரியனவாகும். இவற்றில் அஸி சங்கமத் துறையில்தான் முதலில் முழுகுவர். இவ்வழக்கம் சுறுசுறுப்பான துறைகளில் உண்டு. சங்கமேச்வரர் கோயில் இத்துறைக்குச் சிறப்புத் தரும் கோயிலாகும். முன்னோர்க் கடனிடுவோர் (சேத்திரப் பிண்டம்) இந்த ஐந்து துறை களுக்கே செல்வது வழக்கம். சிலர் நடந்து போய் முழுகுவர். வசதியுள்ளோர் அஸி முதல் தொடங்கி படகில் புரோகி தரையும் அழைத்தபடி ஐந்தையும் முழுகி மகிழ்வர்.

கட்டம் என்பதே இந்தியில் 'காட்' என்றாகிப் படித்துறைகளைக் குறிக்கிறது. அஸி, துளசி, சேட்சிங், ரிவா, ஆனந்தமயி, அரிச்சந்திரா, விஜய நகரா, அனுமான், ஆதிமணிகர்ணிகா, கேதார், சௌகி, க்ஷேமேச்வர், மான ஸரோவர், நாரதா, பாண்டியா, துர் பங்கா, முன்ஷீ, அகல்யாபாய், சீதளா; தசாசுவமேதா, மீர், மணி கர்ணிகா, பஞ்ச கங்கா, துர்க்கா, பிருட்மா, திரிலோசன், நயா, பிரஹலாதா, ராஜ் காட், வருணா சங்கமம் காட் ஆகியவை 64 கட்டங்களிலும் பார்க்கத் தக்கனவே!

அஸிக்கு அடுத்த புகழ்க்குரியது துளசி காட் ஆகும். இது முன்பு லோலார்க்கா காட் என்று அழைக்கப்பட்டது. இந்தி இராமாயணம் இயற்றிய துளசிதாசர் மாளிகை இத்துறையிலுளது. அவர் வாழ்ந்த மாளிகை இத்துறையின் மேலுள்ளது. கங்கையாடிக் கவிபாடி வாழ்ந்த இவர் காலைக் கடன் கழிக்கக் கங்கையின் எதிர்க் கரைக்குத்தான் படகில் போவது வழக்கமாம். காசியின் புனித நம்பிக்கையே காரணம்.

ஆனந்தமயிமா எனும் பெண் துறவியார் இக்காலத்தில் புகழ் மிகுந்தவராவார். அவர் பெயராலேயே துளசித் துறையும் பிறகு ஆனந்தமயி துறை என்று வழங்கப்படுவதாயிற்று. இங்கு அவரின் ஆஸ்ரமம் உளது. இன்று சிவாலா காட் எனப் பெயர் பெறுவது கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் சேத்சிங் என்பவரின் பெயரால்தான் முன்பு வழங்கப்பட்டது. இத்துறையின் உச்சியில் சேத்சிங் மகாராஜா அரண்மனைக் கூடம் உளது. அரிச்சந்திரன் சுடுகாட்டுப் பணிமேற்கொண்டதைக் காசி வரலாறு கூறும். அதை நினைவு செய்வதே அரிச்சந்திரா காட். இங்குச் சுடுகாடு உண்டு. பிறப்பில் அந்தணராய சிலர் அரிச்சந்திரா காட்டில் எரிப்பதையே தமக்குரியதாகக் கருதுகின்றனர். அதனால் இது ஆதி மணிகர்ணிகா என்றும் அழைக்கப்படுகிறது. இதுவேயன்றி கேதார் காட்டிற்கு முன்பும் ஓர் ஆதிமணிகர்ணிகா என்றே ஒரு துறையிருக்கிறது.

இந்த அரிச்சந்திரா துறைக்கு முன்பு இக்காலத்தில் சுறுசுறுப்பைத் தேடிக் கொண்ட துறை அனுமான் காட் ஆகும். இதுவே தமிழர்கள் மிகுந்த பகுதியாகும். யாவரும் பிறப்பால் அந்தணர் ஆவர். அனுமான் கோயிலை ஒட்டிய துறையாகையால் இப்பெயர் வந்தது. காம கோடீச்சரர் ஆலயம் அனுமான் காட் பகுதியில் கரைக்குச் சிறு தொலைவு உள்ளடங்கியுள்ளது.

அடுத்த புகழுக்கும் சிறப்புக்கும் உரியது கேதார் காட் ஆகும். தமிழரும் வங்காளிகளும் மிகுந்த பகுதி இதுவாகும். இது பாம்புகடித்து இறவாத புகழ்கொண்ட பகுதியாகும். கேதார் நாதர் கோயில் திருப்பனந்தாள் மடத்தினர் கட்டுப்பாட்டில் இருக்கும் அழகிய துறையாகும். பிறகு சௌகிகாட் எனும் நாக வழிபாட்டுக்குரியதுறை. நாக பஞ்சமியில் இங்குச் சிறப்பு மிகுதியாகும். நாக கூபம் எனும் குளமும் உரிய பகுதி.

சலவையாளர் தொழில் மிகுந்த மானஸரோவர் துறை கயிலை மானஸரோவரினால் புகழ் பெற்றது இது. அமரேச்

வரர் கோயில் உள்ளது. நாரதர்காட் என்பதும் நாரதர் பெயரால் வந்ததே. அடுத்தது சௌம்சதிகாட் என்பது; இதில் 64 யோகினியர் கோயில் உளது. இது சாக்த வழி பாட்டில் சிறப்புக் கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது. நீண்ட தளங்களே. அகலம் குறைவு. நேர் உயர்ந்த படிகள் கொண்ட துறையாகும்.

பிறகு பஞ்ச தீர்த்தம் முழுகும் பக்தர்கள் அளியை யடுத்து வரும் கட்டம் தசாசுவமேதாகாட்தான். பத்து அசுவமேத யாகங்களைப் பிரம்மா செய்தார். பிறகு காசி மன்னர்களும் கூடச் செய்துள்ளார்கள். அந்த வரலாறு காட்டும் நினைவினதே இத்துறையாகும். இதுவே காசியைப் பலரும் அறியும் படங்களில் அடிக்கடி காண்ப தாகும். இந்த அடையாளத்துறையே மிகுந்த கூட்டம் உள்ளது. இதில் முழுகி விசுவர் கோயிலை அடைவதற்கு ஏற்பச் சாலை ஒழுங்கும், வழியும், தொலைவின்மையும் அமைந்துள்ளன. இங்கே பண்டாக்கள் எனப்படும் புரோகிதர்கள் தாழங்குடையின்கீழ் அமர்ந்து பலருக்கும் சடங்கு இயற்றும் காட்சி இங்கேயே மிகுதியாகும். பிறவிடங்களிலும் உண்டாயினும் இங்கு மிகவும் நெருங்கிய காட்சியாகக் காணமுடியும். காசியின் தீர்த்தச் சிறப்பை இக்காலத்தில் விளக்கும் துறை இதுவே. மையமான மணிகர்ணிகாவைவிட இதுவே மக்கள் பெருகியதுறை யாகும். இது பாரசிவ, நாகவம்ச மன்னர்கள் இரண்டாம் நூற்றாண்டில் தசாசுவமேதயாகம் செய்ததாகக் கூறப் பெற்றாலும் புஷ்யமித்ரசுங்கன் இருமுறை அசுவமேத யாகம் செய்துளான். இதன் தெற்கே ருத்ரஏரி என்பதே உண்மையான தசாசுவமேதத்துறை என்றும் அங்கே எழுதியும் பேசியும் வருவர். இது புரோகிதப் போட்டியால் முளைத்ததாகவும் கூறலாம். இங்குச் சீதளாதேவி கோயில் உளது. பிரயாகைக்காட்டும் உளது. சூலாந்த கேச்வரா, பிரம்மேச்வரா இவை நீர் மூழ்கிய கோயில்களாம்.

அடுத்து வருவது மான்மந்திர்காட். பழங்கால உயர் மாளிகைகள் உள்ள இத்துறை உச்சியில் கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் வான ஆய்வு நிலையம் உளது. சந்திரனால் தாபிக்கப்பெற்ற சோமேசர் கோயிலுளது. வாராஹி கோயில்பகுதியாயுள்ளது திரிபுரபைரவிகாட் ஆகும். மிர்காட், இதன் அருகில்தான் நகருள்ளேயிருக்கும் விசாலாட்சியன்னை கோயிலுள்ளது. தர்ம கூபம் அருகில் உளது. யமதர்மன் கோயிலும் உளது. காசியிலிறந்தவர்க்கு யம வாதனை இல்லையாகையால் இங்கே வணங்கப் படுகிறான். திவோதாசன் காசியைவிட்டு விலகிக் கடவுளருக்கு இடம் கொடுத்தபோது நிறுவிய இலிங்கக் கோயிலும் இப்பகுதியிலேயே உளது. காந்தியடிகள் இயக்கம் காரணமாகத் தாழ்த்தப்பட்டோர், ஆலயப் பிரவேசம் செய்து விசுவநாதரைத் தீண்டியதால் சாந்நித்யம் குறைந்ததாகக் கருதி காசியின் பிராமணர்கள் உண்டுபண்ணிய புது விசுவர் கோயிலும் இங்குளது, ஒருவரைத் தீண்டத்தகாதார் என்று கூறிப் பொது விடத்தி லிருந்து விலக்கினால் ஏழாண்டுச் சிறையுண்டு. ஆனாலும் இப்படி விலக்கியே ஒரு கோயில் எடுப்பதை அச்சட்டம் தடைசெய்ய வில்லையா? அதை நிறைவேற்றும் மனம் தடையாகிவிட்டதா? என்ன என்று நாமறியோம். மகாத்மாவைவிடச் சிறந்த இந்துவைக் காட்டுவது அரிது; ஆயினும் அவர் கொள்கையையும் ஏற்காது முரண்டு பிடிப்பது நல்ல சமய நம்பிக்கையன்று. காசுபறிக்கும் தொழில்தான் இப் போட்டியின் விளைவு ஆகும். ஆனால் நந்தனாரை ஏற்ற சிவபெருமான் விசுவநாதராக இருக்கும் காசியில் தமது பழைய கோயிலில்தான் மகிழ்வ தாக நமக்குப் படுகிறது. புதிய கோயிலின் புகழின்மையே இதற்குச் சான்றாகும்.

கங்காகேசவர் கோயில் கொண்ட லலிதாகட்டம் அடுத்த சிறப்பிற்குரியதாகும். இங்கே பாகீரதி (கங்கை மாதா) விக்ரஹமும் உளது. ராஜராஜேஸ்வரியாம் லலிதாம்பிகை கோயிலும் உளது. நேபாளிகளின் பாசு

பதேச்வரரும் உள்ளார். ஜலசை காட்டுக்கும் அடுத்து மணிகர்ணிகைக் கட்டம் ஆகும். பஞ்ச தீர்த்தத்தில் நீராட வேண்டி வருவோர் அஸி, தசாசுவமேதா ஆகிய இரண்டில் மூழ்கியபின் இதில் முழுகமாட்டார்கள். இதுவே ஐந்திலும் மையம்; நகருக்கும் மையம். ஆகவே இதற்கும் வடக்கே உள்ள இரண்டையும் முழுகியாடியபின்தான் இதை ஐந்தாவதாக ஆடவருவர்.

ஆண்டுக் குத்தகையாக எரித்துவரும் சுமசெய்கை மக்கள் வழிவழியாக இங்குப் பணிசெய்கின்றனர். சில நேரத்தில் இக்கட்டம் முழுதும் இறந்தார் சவங்களாக இருக்கும். ஆற்றின் மிக அருகிலிருப்பதால் கடன் முடித்துச் (அஸ்தி) சாம்பலைக் கரைப்பதற்கு எளிதாகும்.

ஆத்ம வீரேச்வரர் கோயில் எனும் வீரேச்சுரர் கோயில் உள்ள சிந்தியாகாட். சங்கடதேவி கோயிலமர்ந்த சங்கட காட், இங்கேயே சந்தோஷிமாதாகோயிலும் புதுவதாக உளது. இராமாகாட்டில் அக்னீச்வரர் கோயிலுளது. இதற்கும் அடுத்த கோயில் இலக்குமணபாலா கோயில் உளது. இத்துறையை அடுத்து நகருக்குள் மங்கள கௌரியாலயம் உளது. சாக்த வழிபாட்டின் சிறந்த பகுதிகளில் இதுவும் ஒன்றாகும்.

பஞ்ச தீர்த்தமாடுவோர்க்குரியதான பஞ்ச கங்கா காட். மசூதிகள் இடம்பிடித்துக் கொண்ட காட்சியைக் காணலாம். பிந்து மாதவர் கோயிலுள்ள துறையிதுவாகும். இதனையடுத்துப் பிரம்மா காட், துர்க்கா காட் உள.

பிரயாகையில் கங்கை யமுனை சரஸ்வதியாகிய திரிவேணி சங்கமத்தோடு இங்கே தூதபாபா, கிரணா என்ற இரு நதிகள் மானஸீகமாக இங்கே கலப்பதால் பஞ்ச கங்கா என்று பெயர். தர்மானந்தா என்ற சிறு வாய்க்காலே அந்த இரு நதிகளின் அடையாளம் என்றும் கூறுவதுண்டு. தூதபாபா என்றால் பாபம் போக்கி என்பதாகும். கிரணா என்பது ஆதித்திய கதிர் என்றாகும். இவை சிற்ப வடிவிலும் இங்கே காட்டப்படுகின்றன.

கயா காட் நாகேச்வரி கோயில் உள்ள துறையாகும். இத்தேவியைச் சீதளா என்பார்கள். அடுத்து முக நிர்மாலிகா தேவி கோயிலுளது. அடுத்ததே திரிலோசனா துறையாகும். இங்கே சுயம்பு லிங்கம் உளது. மகா தேவர் எனப்படுபவரிவரே. வாரணாசி தேவியும் இக் கோயிலில் உளாள். முஸ்லிம்கள் மிகுந்த பகுதி இது. அடுத்தது பிரஹலாதா துறை. இதன் பிறகே ராஜ் காட்டும் வருணா சங்கமமும் உள.

வருணா சங்கமத்தில் பஞ்ச தீர்த்தம் ஆடுவோர் மூன்றாவதாக ஆடி, பஞ்ச கங்காவில் நான்கும், மணி கர்ணிகாவில் ஐந்தாவதுமாக ஆடுவர். வருணா துறை யருகே ஆதிகேசவர் கோயிலுளது.

துறைகளின் ஒழுங்கும், கங்கை வேகமும், துறை தோறும் கோயிலும், மாளிகைகளும், சடங்கு செய்வோர், இறுதிச் சடங்கு செய்வோர், இதிகாச புராண உபன் யாசம் கேட்போர், நீராடுவோர், துணி வெளுப்போர், முதலிய கூட்டமும், கங்கைக்கரையின் சர்வ சமய ஒருமைக் காட்சியும், எங்கும் காணக்கிடைக்காத காட்சிகளாகும்.

எவ்வளவு நேரம் கண்டாலும் கண்களின் கவர்ச்சிக்கு விருந்தாய் மனத்தின் அமைதிக்கு மருந்தாய் பாபம் தீர்க்கும் புண்ணியப் பொலிவாய்க் காட்சிதரும். காசியால் கங்கையா, கங்கையால் காசியா என்றுணர முடியாத சங்கமமே இதுவாம்.

(iii) துறைப் பெயர்கள்

எல்லார்க்கும் தெரிந்த பெயர்கள் இக்கால வழக்கப் பெயர்கள், ஒன்றிற்கே பல பெயர்கள் என்று இருப்பதால் காசியின் படித்துறைகளுக்கான பெயர்கள் மாறி மாறி வழங்கப்படுவதுண்டு. அதற்காக இப்போதைய வழக்கில் அகர வரிசையில் அறுபத்து நான்கு பெயர்களும் அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன :

1. அகல்யா பாய் கட்டம் (காட்)
2. அக்னீச்வர கட்டம்
3. அசுவ கட்டம்
4. அரிச்சந்திரா கட்டம்
5. அனுமன் கட்டம்
6. அன்னபூரணா கட்டம்
7. அஸி சங்கம கட்டம்
8. கங்கா கேசவ கட்டம்
9. கங்கா மகால் கட்டம்
10. கட்க விநாயகா கட்டம்
11. கேதார நாதர் கட்டம்
12. கிடிகீ கட்டம்
13. கௌ கட்டம்
14. சங்கடா தேவி கட்டம்
15. சதுர் சஷ்டி கட்டம்
16. சத்திரா கட்டம்
17. சித்தி விநாயகா கட்டம்
18. சிவாலயா கட்டம்
19. சிந்தாமணி கட்டம்
20. சீதளா கட்டம்
21. சேந்திப கட்டம்
22. சௌகி கட்டம்
23. ஜராசந்தேச்வர கட்டம்
24. ஜானகி கட்டம்
25. க்ஷேமேச்வர கட்டம்
26. தசாசுவமேதா கட்டம்
27. தண்டி கட்டம்
28. தத்தாத்ரேய கட்டம்
29. திரிபுர ஸுந்தரி கட்டம்
30. திரிலோசனா கட்டம்
31. துர்க்கா கட்டம்
32. துளசிதாஸ் கட்டம்
33. நாரதா கட்டம்

34. நாராயணா கட்டம்
35. நிரஞ்சனா கட்டம்
36. பஞ்சகங்கா கட்டம்
37. பாண்டேய கட்டம்
38. பார்சுவநாத கட்டம்
39. பிந்துமாதவ கட்டம்
40. பிரகலாத கட்டம்
41. பிரம்மநாளா கட்டம்
42. பிரம்மா கட்டம்
43. பிரம்மேந்திரா கட்டம்
44. பிரயாக கட்டம்
45. மகாமசான கட்டம்
46. மங்களகௌரி கட்டம்
47. மணிகர்ணிகா கட்டம்
48. மானஸரோவர் கட்டம்
49. மான்மந்திர் கட்டம்
50. முன்ஷி கட்டம்
51. யமேச்வரா கட்டம்
52. ராஜ் கட்டம்
53. ராஜ்மந்திர் கட்டம்
54. ராணாமகால் கட்டம்
55. ராணி கட்டம்
56. ராமா கட்டம்
57. ருக்மாங்கதா கட்டம்
58. லட்சுமணபாலா கட்டம்
59. லலிதா கட்டம்
60. லல்லீ கட்டம்
61. லால் கட்டம்
62. லோலார்க் கட்டம்
63. வருணாசங்கமா கட்டம்
64. விசாலாட்சி கட்டம்.

10. சைவக் காசி

(i) விசுவநாதர்

காசியில் சைவம் வருவதற்கு முன்பு காணாபத்தியம், சௌரம், சாக்தம், நாகவழிபாடு, யட்சர்கள் வழிபாடு முதலியன இருந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். புராணத்தில் மன்னன் ஒருவனால் கடவுளர் வெளியேறியதும் ஒவ்வொருவர் மூலமாகச் சிவபெருமான் காசி மன்னனை மாற்ற முயன்றதும் கூறப்பட்டிருப்பதை நோக்கும்போது இக்கருத்து யாதோ ஒரு நிகழ்ச்சியையே மறைவாகப் புலப்படுத்துவதாக அறியலாம்.

சாக்தம், காணாபத்தியம், சௌரம் ஆகிய சமயங்களின் செல்வாக்கு இன்னும் சில காட்சிகளால் காசியில் அடையாளமாக உள்ளன. ஆனால் சிவபெருமானும் பார்வதிதேவியும் திருமணம் முடிந்து பூவுலகில் இன்புற அடிவைத்தது காசிதான் என்றும், ஜோதிர்லிங்கம் அண்ட சராசரங்களிலும் துளையிட்டுப்போனபோது இப்பூமியில் காசியின் வழியேதான் ஊடுருவியது என்றும் புராணம் சைவக்காசியின் சிறப்பை உணர்த்துகின்றது.

வரலாறு தெரிந்த காலம் தொட்டுக் காசியில் சைவம் ஓர் உயரிய இடத்தைத் தனதாகக் கொண்டே விளங்கியதை யறிய முடிகிறது. பாவத்தை அழித்தல் ம்ருத்தியுஞ்ஜயம் ஆகியவற்றில் த்ரையம்பகனாகிய சிவபெருமானே மிகுதியும் ஈடுபடுத்தப்படுகிறார். வைணவ

புராணங்களில் பெரிதாகப் பேசப்படும் நெருங்கிய உறவு மார்க்கண்டேயருக்குண்டு; அவரையே கால சம்ஹாரம் செய்து காத்தவர் சிவபெருமானாகக் கூறப்படுகிறது. ஆகையால் காலனுக்கு வேலையில்லாத ஊராகிய காசியில் சிவபெருமானுக்குப் பெருமை இயல்பு என்றாகிறது. மேலும் இவ்வுலகவாழ்வு நீங்கி மேல்உலகு புகுவது என்பதன் வாயில் அல்லது இடைநிலை காசியாகும். இதுவும் சிவனோடு தொடர்புடையதாகிறது. காரணம் அழித்தற் கடவுளாக அவர் இருப்பதேயாகும்.

''த்ரியம் பகம் யஜமஹே!''

என்று சிவபெருமானை நோக்கியே இறப்பு வாராமல் காக்கும் ம்ருத்தியுஞ்ஜய மந்திரம் ஓதப்படுகிறது. இறப்பு முத்தித்தலமும் சிவத்தோடு தொடர்புடையதாய் இருப்பதிலும் அது முன்நிற்பது இயல்பாகிறது.

விசுவநாதர் இருந்த காரணத்தால் பாரசைவர் என்ற மன்னர் மரபு தோன்றியது. இந்துக்கள் ஒற்றுமை இக்கோயில் இடிபட்டதால் உருவானது. யுவான் சுவாங் நூற்றுக்கு மேற்பட்ட சிவன் கோயிலிருந்தனவாகக் குறிப்பு எழுதியிருப்பதால் சைவம் காசியில் வளமாகவே இருந்ததை அறியலாம். காசியில் கல்லெல்லாம் இலிங்கம் எனப்பட்ட அளவு பரவலாயிருந்திருக்கிறது.

ஐந்துமுறை இவ் விசுவர் கோயில் இடிபாட்டுக்குக் காரணமாயிருந்தது. ஓங்காரக் கோயிலில் தொடங்கி அங்கேயே யாத்திரை முடியும் வழக்கம் ஒரு காலத்திலிருந்ததாகச் சொல்வதிலிருந்து ராஜ்காட் ஆகிய வடபகுதிக் காசியில்தான் ஆதிவிசுவர் கோயிலிருந்திருக்க வேண்டும் என்பர். மேலும் கபாலம் விழுந்து சிவபெருமானுக்கே பிரம்மன் தலை கொய்தபழி நீங்கியதென்னும் குறிப்பாலும் இவர் கோயில் வடகாசியிலேயே இருந்திருக்க வேண்டுவதாகும். ஆனால் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வந்த யுவான் சுவாங் மணிகர்ணிகா காட் அருகில் உள்ள

ஒரு பெரிய கோயிலை மகேச்வர் மஹாதேவர் என்று கூறுகிறார். கி.பி. 1193-ல் ககர்வார் வம்சத்தின் கடைசி அரசனாகிய ஜயச்சந்திரனை வென்ற கோரிமுகம்மதுவின் தளபதி குத்புதீன் யுவான்சுவாங் சொல்லும் கோயிலையே அழித்திருக்கிறான். அப்படியானால் ராஜ்காட் பகுதியில் வெள்ளத்தால் விசுவர் கோயில், நகர் முதலியன புதையுண்டு போயிருக்கவேண்டுமென்று நம்பலாம்.

கி.பி. 12 ஆவது நூற்றாண்டில் பகைவர் அழித்த கோயிலை மக்கள் கட்ட முடியாதிருப்பினும் பண்டாக்களிடம் மறைந்து மறைந்து வாழ்ந்த விசுவரை மகா ராஜாக்களும் பிறரும் வந்து வந்து வணங்கிப் போயிருக்கிறார்கள்.

திரிஸ்தலி சேது எனும் தீர்த்தயாத்திரைத் தொகுப்பு எழுதிய நாராயணபட் எனும் பெரியார் அக்பரின் ஆட்சியில் நல்ல மதிப்பிலிருந்த ராஜா தோடர்மால் உதவியுடன் ஒரு புதிய விசுவர் கோயிலை 1585-ல் கட்டினார். ஆனால் 1669-ல் அக்கோயிலை அவுரங்கசீப் முழுதும் இடித்து மசூதியாக்கி விட்டான். அப்போதும் ஜோதிர்லிங்கமான விசுவர் பகைவர் அறியாமல் காப்பாற்றப்பட்டார். அப்போது ஞானவாபி எனும் கிணற்றில்தான் விசுவர் ஞான மயமாகப் பதுங்கியிருந்தார்.

1777 ஆம் ஆண்டு இராணி அகல்யாபாய் என்பாள் தான் இப்போதைய விசுவர் கோயிலைக் கட்டினாள். இராமன் கால் தூசியை ஓர் அகலிகை நிரூபித்து அவதாரத்தை அடையாளம் காட்டினாள்; இராமநாமம் உகந்த விசுவரை மற்றோர் அகல்யாபாய்தான் கோயிலுக்குள் அமைத்து முடித்தாள். இன்றைய விசுவர் கோயிலுக்குப் பின்புறம் இடிபாடுகளையும் மசூதியையும் காணலாம்.

விசுவருக்கு அவிமுக்தேச்வரர் என்ற பெயர்தான் வழங்கி வந்தது. அது நாராயணபட் காலத்தில் விசுவர்

கோயிலாகி யிருக்கலாம். அதுதான் அவுரங்கசீப் இடித்த கோயில். அதில் கட்டிய மசூதிக்கு ஞானவாபி மசூதி என்றே இன்றும் பெயர் ஆகும். ஒரு பகுதி இந்துக் கோயில் அவர்கள் தூண்கள் இருக்கவே மறு பகுதியை மசூதியாக்கி விட்டனர். இருசமயமும் ஒரு கட்டடத்தில் தெரிகின்ற அதிசயமிது.

இப்போதும் மக்கள் கங்கையாடிட்டு விசுவர் கோயிலின் வலப்புறவழியே சென்று ஞானவாவியைத் தரிசித்த பிறகே விசுவர் கோயிலுக்கு வருவதை வழக்கமாக்கி விட்டனர்.

ஞானவாவி மசூதிக்கும் கிழக்கே ஞானவாவி தீர்த்தம் உள்ளது. பத்தடி விட்ட முள்ள கிணறுதான் ஞானவாவியாகும். இதைச் சுற்றித் தூண்களடர்ந்த மண்டபத்தை 1828-ல் கட்டினார்கள். இந்த வாவியுள்ள மண்டபம் தான் முக்தி மண்டபம் எனப்படுவது. பிரும்ம சூத்திரத்திற்கு விரிவுரையை ஆதிசங்கரர் காசியில்தான் எழுதினார். அதற்கு வியாசர் ஏற்பளித்தார். அந்த நிகழ்ச்சி நடந்த இடம் மணிகர்ணிகா கட்டத்தினருகில் முக்தி மண்டபம் என்றிருந்ததாம்; அதன் நினைவாகவே ஞானவாவியிலும் முக்தி மண்டபம் கட்டினர். இந்த வாவிக்கு இரு பக்கத்திலும் கணநாதராகிய விநாயகரும் வியாசரும் இருக்கிறார்கள். இந்த வாவி நுழைவாயிலில் 50 அடி தொலைவில் நந்தி இருக்கிறது. தாரகேச்வரர் கவுரிசங்கர் ஆலயப் பகுதியும் இதுவாம். ஞானவாவியிலிருந்து திரும்பித் தெற்கே உள்ள சாவித்திரி, மற்றும் இலிங்கங்கள், விசுவநாதர் சபை ஆகியவற்றை வணங்கியபின் விசுவநாதர் கோயில் இடதுபுறமிருக்கும் புழைவழியே காலபைரவர் சந்நிதி வழியே தென்புறமாக விசுவர் கோயிலில் நுழைவது அன்பர்கள் பழக்கம்.

இத்தீர்த்தத்தில் ஆடினால் இதயத்தில் இலிங்க பாவனை வரும் என்றும், ஞானம் வந்து மோட்சத்துக்கு

வழியாகுமென்றும் கூறுவர். தற்கொலையில் இக்கிணற்றில் வீழ்ந்து முக்தியடைவாரைத் தடுக்கச் சுற்றிலும் கம்பி அடைப்புச் செய்துள்ளனர். காசுகளை இதில் மக்கள் இறைப்பர். அதற்காக ஒரு துணியையும் கட்டி உள்ளனர். அன்பளிப்புக் காசுகள் துணியில் தேங்கி விடும். இதனால் தண்ணீரைக் காண முடியாது. ஆழமான இந்த வாவி சிவபெருமானால் தோண்டப் பெற்றது என்பர். காசிக்குக் கங்கை வருமுன்பே இந்த வாவி இருந்ததாகக் கூறப் பெறுகிறது.

சிவபெருமான் வெட்டியதை நாமறியோம். ஆனால் பகைவர் இடிபாட்டின்போது விசுவர் இந்த வாவிக்குள் மறைக்கப்பட்டதைப் பலரும் அறிவர். இந்தூர் இராணி அகல்யாபாய் இன்றைய கோயிலைக் கட்டியபோது புதிதாக இலிங்கத் தாபனம் செய்ததாகக் கூறப்படாமையால் பழைய விசுவரே மீண்டும் பதிவு செய்யப்பட்டார் என அறியலாம். இந்த வாவிக்கும் வடக்கே அபிமுக்தேச்வரர் இருந்ததாகக் கூறும் புராணக் கூற்றையும் இங்கு நினைவு செய்து கொள்வது தேவையானதாகும். ஞான வாவியிடத்தில் இருந்ததும், இப்போது விசுவர் இருப்பதும் மிர்கட்டத்தில் தீண்டாமைக்காகக் கட்டியதும் என மூன்று கோயில்கள் இப்போது அடையாளமாகத் தெரிகின்றன. ஆஞ்சநேயர் சந்நிதிக்குப் பின்புறம் ஓர் ஆலமரம் பழையதாக உள்ளது. அதுவே பிரயாகை, காசி, கயா மூன்றையும் இணைக்கும் ஆலமரத்தின் நடுப்பகுதியாகும். இதையும் வணங்குவர். வலம் வருவர். வலம் வரக் கடின வழியே உள்ளது.

தென்பகுதியான விசுவர் கோயில் வாயில் வெள்ளித் தகட்டிலான கதவுகள் கொண்டது. சதுர அமைப்பில் உள்ள இக்கோயிலின் நடுவே நீள் சதுரமாக விசுவநாதர் கருவறையும் காவல் தெய்வங்களும் உள. விசுவர் கருவறையில் நம் தேர்க் கூரையை 4 பட்டையாகக் கற்பனை செய்ததுபோல் விசுவர் கருவறை விமானம்

உள்ளது. அவர்க்கு எதிரிலான மண்டபத்திலும் ஒரு 'டூம்' போலச் சிகரம் ஒன்றுள்ளது. இவை தங்கத்தகடு வேயப் பட்டவைவாகும். இது சிம்மத் துவாரம் எனப் போற்றப் படுகிறது.

கோயிலில் வழிபட்டுத் திரும்புவோர் கதவின் இரும்புச் சங்கிலியைத் தம் உடம்பில் தேய்த்து விட்டுப் போகின்றனர். யமபயம் நீக்கும் என்பதே இதன் காரண மாகும். வாயில் கதவை ஒட்டிய சிறிய திண்ணைகளில் சிறிது அமர்ந்த பிறகே வீடுதிரும்புகிறார்கள். அவசரமாக வணங்கக் கூடாது, அமைதியாக வழிபட வேண்டும் என்ப தையே இந்தப் பழக்கம் வற்புறுத்துகின்றது.

வாயிலில் நுழைந்ததும் இடதுபுறம் திரும்பினால் சத்திய நாராயணர் சந்நிதி, மகாவிஷ்ணு, மகாலட்சுமி, விருபாட்சி கவுரி, அவிமுக்தா விநாயகர் முதலிய சந்நிதிகள் உண்டு. நிறைய வேண்டுதல் போல லிங்கங் களாக இருக்கும். ஒரு காலத்தில் காசியில் கணக்கற்ற இலிங்கமிருந்ததை இவை நினைவு செய்யும். அங்கேயே நீலகண்டேச்சுரரும் உள்ளார். விருபாட்சா, சனி பகவான் முதலியோரை வலமாக வந்து மேற்கே கால பைரவர் ஆஞ்சநேயரை வணங்கலாம். வடக்குச் சுற்றில் சௌபாக் கிய கவுரி, விக்னேச்வரர், நிகும்பேச்சுரர், கபிலேச்சுரர் வெள்ளிக் கவசத்தில் பஞ்ச முகப் பரமேச்வரர், விஜய லிங்க மகாதேவர், மங்களேச்சுவரர், குபேரேச்வரர், போக அன்னபூரணி, பைரவர், மூடியிட்ட பள்ளத்தில் வியாசேச்வரர், தென்கிழக்கே அவிமுக்தேச்வரர் முதலி யோர் நான்கு திருச்சுற்றுகளிலும் உள்ளனர். போக அன்னபூரணி பாசமும் கரும்பும் கொண்டு ஸ்ரீலலிதா மஹா திரிபுரசுந்தரி, ராஜ ராஜேஸ்வரி, காமாட்சி, முதலிய மூலசக்தி வடிவில் காட்சி தருகிறாள், மீசை யுடன் சிவபெருமானிருப்பது ஓர் மிடுக்குடன் தெரிவதை உணரலாம்.

இனி விசுவர் மைய நீள் சதுர மண்டபத்தில் கிழக்கே இருக்கிறார். மேற்கே தண்டபாணீச்வரரும் நிகும்ப மகாதேவியரும் உள்ளனர். நிகும்பர், தண்டபாணி என்போர் சிவபெருமானுக்குகந்த யட்சர்கள் என்றும் காசியில் அவர்களை நட்புக் கொண்டே விசுவர் இருந்தார் என்றும் கூறப்படுவதாலறியலாம். தண்டு வைத்திருப்பதால் தண்டபாணியாவார். இவர் உத்தரவு இல்லாமல் காசியில் யாரும் நுழைய முடியாது. நம் முருகனாகிய தண்டபாணி இந்தக் காசி தண்டபாணியிடம் உத்தரவு பெறாமையால் காசிக்கு வரமுடியாமல் போனதாகவும் கூறுவதுண்டு. இந்தத் தண்டபாணி இலிங்க வடிவில் பகைவர் வெட்டிய வடு மறையாமலிருக்கிறார்.

இந்த மைய மண்டபத்தில் தண்டபாணி சந்நிதி மேற்கும் விசுவர் சந்நிதி கிழக்கும் அமைய, உதயபூர் மகாராணா ஜவான்சிங் தாபனம் செய்த வைகுந்த மகாதேவர் நடுவே நந்தியுடன் உள்ளார். இங்கேயே மேவார் மஹாராணா கொடுத்ததான பெரியமணியும் இருக்கிறது. இந்த மண்டபத்து மேல்தான் தங்க விமானங்கள் உள. 1839-ல் இரஞ்சித்சிங் எனும் அரசரால் திருப்பணி செய்யப்பெற்றதாகும் இவ்விமானங்கள்!

விசுவநாதர் பத்து அடிக்குப் பத்தடியாக ஒரு சிறிய சலவைக் கல் கருவறையில்தான் இருக்கிறார். திருமால், திருமகள், இராமர், இலக்குவன், சீதை, பத்துக்கை விநாயகர், சக்தி, காலபைரவர், நடராஜர், உமா மகேச்வரர், ஹர கௌரி, காளை வாகனர், குகன் முதலான சிற்பக் காட்சிச் சலவைக்கல் சுவர் முழுதும் உளது. ஆதிசங்கரரும் சீடர்களுடன் இருக்கிறார்.

இச்சிறிய கருவறையிலும் விசுவர் நடுவில் இல்லை. வடகிழக்கின் ஓரமாகத் தள்ளி இருக்கிறார். ஒரு நீள் சதுரத்தில் ஆன வெள்ளித் தொட்டியில் கீழே இருக்கிறார். இவரும் வெள்ளிப் பந்தனமானவரே. இவர்

தலைக்குமேல் எப்போதும் கங்கைநீர் வார்ந்து கொண்டிருக்குமாறு கலம் ஒன்றைத் தொங்க விட்டுள்ளனர்.

பளபளப்பான கரிய நிறமுள்ள சிறிய பாணமே விசுவராவார். இதன் மேல்பாகம் சிமிழ் வடிவம். இதுவே சிவபெருமான் பகுதி என்றும் கீழ்ப் பரப்பே சக்திவடிவம் என்றும் கூறுகின்றனர். சிவ சக்தி ஐக்கியமான பாணத்தில் விசுவநாதரும் விசாலாட்சியும் இணைந்தே இருக்கிறார்களாம்.

யாரும் தொடலாம், நீராட்டலாம், பூச்சாத்தலாம், ஆடை அணிகள் செய்யலாம், பூவும் நீருமாகச் சொரிந்து தொட்டு வணங்கும் காட்சி அரிய காட்சியே. கடவுளைத் தூய்மை கருதி கருவறைக்கு வெளியிலிருந்தே வணங்கும் பழக்கமுள்ளமைக்கு இப்படிப்பட்ட காட்சியில் உருக்கமும், உறவும், உரிமையும் மிகுவதையே உணர்கிறோம்.

நிறைந்த கூட்டம் இருந்தபடியே உளது. திருப்பள்ளி எழுச்சிக்குப் பின் காலை 4 மணி முதல் இரவு 10 மணிவரை தொடர்ந்த வழிபாடு முடிவதாயிராது. அர்த்தசாமம் நகரத்தார் நடத்தும் சிருங்கார பூசையாகும். அதற்கு முன் ஏழு பண்டாக்கள் சுற்றிலும் அமர்ந்து விசுவர்க்கு விசிறி விட்டு, வேதம் ஓதி, சந்தத்தை மணி ஒலிக்கு நிகராக்கி மரபு தவறாமல் செய்யும் சப்தரிஷி பூஜையாகும். இந்த இரண்டும், திருப்பள்ளி எழுச்சி ஆகிய மூன்றும் தவறாமல் காண வேண்டிய தரிசனங்களாகும்.

கோயிலில் பேதங்களோ, வணிகமுறைக் கட்டுப்பாடுகளோ, பசு வந்து நிற்க, சாணமிட, உறங்க ஒரு தடையோ, பெரியவர் சிறியவர் 'சிபாரிசு'களோ, எதுவுமில்லை! படைத்தானும் படைக்கப்பட்டனவும் கூடும் ஐக்கியக் காட்சியே ஆகும். சில பெரிய தலங்களின் கட்டணம், வரிசைகள், தருமதரிசனம் முதலியன உள்ள இடங்களைவிட இங்குப் பண்டாக்கள் எவ்வளவோ தாராளமாகவே இருப்பதாய் நினைக்கலாம்.

விசுவநாதர் இராமநாமத்தையே நற்கதி மந்திரமாக ஓதுவதாய்க் கூறும் மரபுண்டு. வில்வத்தில் அம்மந்திரம் எழுதி அர்ச்சனை செய்வதுமுண்டு. யாவும் இங்குப் பேதமில்லாத பெருங்கருணைத் தடங்கடல் தன்மையாய் இருப்பது எங்கும் காணவியலாத சிறப்பாகும்.

தசாசுவமேதத்துறைக்கும் தெற்கில் உள்ள பெரிய துறையின் உச்சி விளக்கமாய் உள்ளதே கேதார்நாத் கோயிலாகும். அழகிய படிக்கட்டுகளுடன் தூயதாயும் சுமாரான மக்கள் திரளுடையதாயும் உள்ள கோயில். கிழக்குப் பார்த்த கோயில். குளித்த உடையோடு ஈரம் புலராது உள் நுழையலாம்.

பன்னிரண்டு ஜோதிர்லிங்கத் தலங்களில் ஒன்றான கேதாரத்தின் இணைப்புக் கோயிலிது. மந்தாகினியாகிய கங்கைக் கரையில்தான் இமய கேதாரம் 12 ஆயிரம் அடி உயரத்தில் உளது. அதுவே இங்கும் கங்கைக் கரையில் சிறப்புறுகின்றது. தென்னகக்கோயில் முறையின் அமைப் பெல்லாம் இக் கேதாரத்தும் உளது.

உற்றார் உறவினர் அனைவரையும் போரில் கொன்ற பாவம் தீரவே பாண்டவர்கள் இமயத்தின் கேதாருக்குப் போனார்கள். இவர்கட்கு அகப்படாமல் 5 பகுதியில் கேதாரநாதர் பரவினாராம். இமயம் தவிர உஜ்ஜயினி அபுமலை, சோமநாதம், காசி ஆகிய இடங்களே அவை யாம்.

பிரம்மதேவன் காணச் சென்றபோது காளை உருவில் மறைந்தார் சிவபெருமான். வாலைப் பிடித்தான் பிரம்மன். பிறகு அவர் பூமியில் வந்து மறைந்தார். பத்து அசுவமேதா யாகம் செய்து சிவனை வழிபட்டான். இதுவே இத்தலத்தில் துறைப்பெயர் தசாசுவமேதா எனவும், கோயில் கேதாரம் எனவும் வழங்கலாயிற்று.

(மாந்தாதா) மாந்தாத்ரி எனும் மன்னன் இமயக் கேதாரம் போய் வரும் பழக்கம் உடையவன். அவன் ஒரு

முறை முதுமையால் துன்புற்றான். இனிமேல் தினமும் உணவு முடித்து வருமாறு அசரீரி கேட்கவே அதிலும் இணங்காது, கிச்சரியை எடுத்துக்கொண்டே தினமும் யோகமார்க்கத்தில் போகும் முறையாகச் சென்று விடுவது என்று நினைத்தான். அவ்வாறு இவ்விடத்தில் கிச்சரியை அவிழ்த்து உண்ண நினைத்தபோது விருந்தினர் எவரு மில்லை. உணவும் உண்ண வழியில்லை. பயணமும் தொடர முடியவில்லை. கவலையாக இருந்தபோது சிவபெருமானே ஓர் அடியாராக வந்து சேர்ந்தார். மன்னன் மகிழ்ந்து கிச்சரியை இருபிளவு செய்ய முயன் றான். ஆனால் அவ்வுணவே கல்லாய் லிங்கபாணமாய் இறுகிச் சுயம்புவானது. சிவபெருமான் காட்சியும் தந்தார். சிவப்பு உருக்குப் பாய்ந்ததாயும் இருபிளவுக்குரியது போலும் பாணலிங்கத் திருமுடி யிருப்பதை நாம் இன்று கிச்சரி போல் உருவகித்துக் காணமுடியும்.

வசிட்டர் குருவுடன் இமயக் கேதாரம் சென்றார்; வழியிலேயே முக்தி பெற்றார். இதனால் 61 ஆண்டுகள் வசிட்டர் கேதார யாத்திரையைத் தொடர்ந்தார். முதுமையால் முடியாதபோது காசியில் உள்ள கேதாரம் இமயத்தினும் ஏழுமடங்கு உயரியது என்று அசரீரி கேட்டுத் தங்கினார். கவுரி குண்டம், ரெதோதக குண்டம், மானஸரோவர், ஹம்ஸ குண்டம் ஆகியன இப்பகுதியில் சிறப்புக்குரியனவாகும்.

அவுரங்கசீப் தளபதி இக்கோயிலில் நுழைந்தபோது ஒரு முஸ்லிம் பெரியவர் இக்கோயிலில் எதையும் இடிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். தளபதி கேளாமலே உள்நுழைந்து நந்தியை வெட்டினான். இரத்தமே அச்சிலையிலிருந்து வெளிவரக் கண்டு அஞ்சி அகன்றானாம். இத்தகு பெருமை மிகுந்தது கேதார்நாத் கோயில்.

இக்கோயில் திருப்பணந்தான் மடத்துப் பார்வையி லிருப்பதால் தென்னகமுறை வழிபாடு உண்டு. அர்ச்சகர் பூசை வேளையில் மட்டுமே வருவார். பிற நேரங் களில் காசிநகர் பண்டாவே முழு உரிமை கொள்கிறார். பண்டா இருக்கும்போது வடநாட்டு முறையில் இறை வனைத் தொட்டு வணங்கலாம். அபிஷேகம் முதலிய சடங்கு செய்யலாம். கேதார்நாத் பெருமான் இரட்டை யாகச் சிறிது விண்டதுபோல் காட்சி தருவதை சிவசக்தி ஐக்கியமாகக் கொண்டு 'சிவாயநம' என்று வணங்க ஏற் புடையராய் உள்ளார். சுயம்புவான பாணலிங்கத்தைச் சுற்றிலும் அட்டபந்தனமாக்கிய பித்தளைக் கவசமே ஆவுடையாராகவும் அபிஷேக ஓடையாகவும் இருக்கிறது. சலவைக்கல் கருவறையில் சுற்றி நாம் அமர்ந்திருக்கச் சிறிது இடைவெளிதவிர முழுதும் இலிங்கமே பரந்துள்ளது. பாணத்தின்மேல் கங்கை நீர்த் தொட்டியிலிருந்து எப் போதும் நீர் வார்ந்தபடியே உளது. விசுவரைவிட எளிதில் சென்று நாம் விரும்பியவாறு வழிபட ஏற்ற சந்நிதி இது. அமைதிமிக்கதுமாகும்.

கௌரி தேவிக்குத் தனியே சந்நிதியுண்டு. அங்கே பண்டா வரமாட்டார். யோகத்தால் தன்னையடைய லாம் என்பதற்கு ஒரு கையில் அட்சமாலையும், பூசையால் அடையலாம் என்பதற்குப் பூவும், நினைத்த பக்தியின் நேயத்தால் அடைவதற்கு இத்திருவடி உணர்த்தும் வரகரமும், ஒருபோது துன்பத்து உருகியார்க்கும் உணர்த்த அபயகரமும் கொண்டு கௌரியன்னை காட்சி தருகிறாள். அவளருகே ஸ்ரீ சக்கரமேருவும் உளது; பெரும்பாலும் பண்டாவுக்கு இச்சந்நிதி உரிமை குறை வாகையால் அர்ச்சகர் நமக்கு நம்முறைப்படி வழிபாடு ணர்த்துகிறார். கணபதி, முருகன், தண்டபாணி (காசிக் காவலர்) செந்நிறக்கணபதி, மீனாட்சி சுந்தரேசர் தனிச் சந்நிதி, இலக்குமி நாராயணர், சண்டிகேசர், சனிபக வான், சலவைக்கல் தட்சிணாமூர்த்தி முதலியவர்களும்

பிற உற்சவ மூர்த்தங்களும் உள்ளன. சிவராத்திரியே மிகச்சிறந்த திருநாளாகும். ஆவணிச் சோமவாரங்களில் இங்கு மிகுந்த விரதக்காட்சியுடன் பக்தர்கள் குழுமுவார்கள். இது வங்காளிகளுக்கு மிகவும் உகந்த கோயில். யமவாதனையற்ற காசியிலும் பைரவர் தண்டனை உண்டு. ஆனால் கேதாரப்பகுதியில் அதுவும்கூட இல்லையாம். ஓங்காரம், விசுவேசம் என்ற பிற இரு காசிப்பகுதியிலே மட்டுமே அத்தண்டனை உண்டாம். சிவ அபராதத்தையும் இப்பகுதியின் கௌரிகுண்ட தீர்த்தம் போக்கும்.

கேதார்காட்டிற்கு இக்கோயிலிலிருந்து இறங்கிப் போகும்போது வடபுறம் ஒரு மண்டபம். அதில் நம் தஞ்சைப் பெருவுடையார் லிங்கத்தில் முக்கால் பகுதியான லிங்கம் இருக்கிறது. கேதார் கோயில் முழுதும் சலவைக் கல் பணி. இங்கமர்ந்து கங்கையைப் பார்ப்பது மிக இனிய காட்சியாகும்.

குமர குருபரர் சைவ சித்தாந்தத்தையும் தமிழையும் பரப்புவதற்காக வடக்கே வந்தார். காசியில் பல ஆண்டுக் காலம் வாழ்ந்தார். அப்போது பாடியதே காசிக் கலம்பகமாகும். விசுவர் கனவில் தோன்றி புதர்களில், மறைந்த கேதார்நாதர் கோயிலை மீட்கும்படியும் திருப்பணி செய்யுமாறும் குமரகுருபரரிடம் கூறினார். இறைவன் கட்டளையேற்று இஸ்லாத்தைத் தழுவிய மன்னரிடமே காசியில் கோயில் கட்டவும் படித்துறை அமைக்கவும் உதவி கேட்கப் போனார்.

'சகலகலாவல்லிமாலை'—எனும் நூல் பாடி நாமகள் அருள்பெற்று இந்துத்தானி மொழியைக் கைக்கொண்டு அரசரை நோக்கிப் போனார். இவர் ஒரு சாமியார் என்று ஏளனமாகக் கருதி உரிய மரியாதை இவருக்குக் கிடைக்கவில்லை. மறுநாள் யோக வல்லபத்தால் ஒரு சிங்கத்தின்மேல் ஏறி அரண்மனைக்குப் போனார். அனைவருமே அஞ்சினர்; சரியாசனம் இட்டு மதிப்

புணர்த்தி விருப்பம் அறியாமலே பொருள் கொடுத்து உதவினான். இப்படிப் பாடிய நூலை மனனம் செய்ய கல்வி, முதலியன சித்தியடையும். சகலகலாவல்லிமாலை அற்புதமான பயனைத் தருகிறது. சிங்கத்தில் ஏறிய குமர குருபரர் படத்தை நம மடாலயங்களில் காணலாம். காசியில் இப்படி ஒரு விக்ரஹமே திருப்பனந்தாள் மடத்தில் இருக்கிறது. இம்மடாலயத்தைக் காசியில் உருவாக்கிய சிறப்பும் குமரகுருபரரைச் சாரும். காசியில் மடம் தாபித்த மரபையொட்டித் திருப்பனந்தாள் மடாதிபதிகளைக் காசிவாசி என்றும், காசிமடத்தினர் என்றும் கூறுதல் பரவி வழங்குவதாயிற்று.

குமரகுருபரர் பக்திச் சொற்பொழிவுகளை நாள் தோறும் நிகழ்த்திவந்தார். அவற்றை விடாது கேட்பது துளசிதாசர் கடமையாயிருந்தது. கம்பராமாயணத்தின் அரிய சிறப்புக்கள் சிலவற்றைத் துளசி இராமாயணத்திலும் பார்க்க முடிந்த காரணம் குமரகுருபரர் சொற்பொழிவு கேட்டதே யாகும். மேலும் இக்கேதாரக் கோயில் படித்துறை, திருமடம் முதலியன ஒழுங்குற இயற்றியதால் இன்றும் புகழ்மை வளர்ந்து வருகிறது.

தமிழர்கள் தங்கியிருக்கத் தகுந்த இடங்களில் சிறப்பினதாக இம்மடத்தைக் கூறலாம்; நல்ல அறைகள் புதுமையாகக் கட்டி வாடகைக்கு விடுகிறார்கள். பலவித வகையில் தமிழ் நாட்டிலிருந்து செல்வோர்க்குத் துணை நிற்கிறார்கள். தமிழறிந்த தரமான பண்டாவை அமைப்பதற்கும் இவர்கள் உதவி செய்வார்கள்.

இந்த மடாலயத்தில் குமரகுருபரர் வாழ்வு ஓவியமாக ஒரு கூடம் முழுதும் தீட்டப் பட்டுள்ளது. சகலகலாவல்லி மாலை சலவைக் கல்லில் பதிக்கப் பெற்றுள்ளது. இலக்கியச் சொற்பொழிவாற்றிக் குமரகுருபரர் இருந்த இடம் இன்னும் அடையாளமாகக் காட்டப்படுகிறது. கங்கை வனப்பும், படித்துறைகள் வரிசையும், நகரின்

பழைமை புதுமைக் காட்சிகளும் இந்த மடாலயத்தின் மேல் மாடியிலிருந்து பார்க்க மிக நேர்த்தியாக இருக்கும். குமரகுருபரர் வழிபட்ட இலிங்கத்திற்கு இம்மடத்தில் பூசைகள் நிகழ்ந்து வருகின்றன.

காசியில் தமது இறுதியான பூவுலக வாழ்வு நிகழ வேண்டுமென்று இருபதாவது மகாசந்நிதானமாகிய திருப் பனந்தாள் அதிபர் திருப்பெருந்திரு அருள் நந்தியடிகளார் இம்மடத்தின் மாடியில்தான் தங்கியிருந்தார்களாம். அவர் களுடைய கைத்தடி திருப்பாதுகை முதலியன நினைவுப் பொருட்களாக வைக்கப் பெற்றுள்ளன.

கேதார்காட்டில் சிருங்கேரிமடத்தின் கிளைப்பகுதி இருக்கிறது. ஆதிசங்கரர், சாரதா தேவி, விநாயகர், சலவைக்கல் சிவபார்வதி, பழைய அனுமான், சாளக் கிராமங்கள் முதலிய திவ்விய சந்நிதிகள் இங்குண்டு. சிருங்கேரி மடத்து வழி அன்பர்கள் தெற்கிலிருந்து இங்கு வந்தால் தங்குவதற்கேற்ற மாடியறைகள் சில இங்கும் உள்ளன.

சேதுபதி அரசரால் நிறுவிய சேதுமடம் கேதார் காட்டில் திருப்பனந்தாள் மடத்திற்கு மிக அருகில் உள்ளது. ஒரு சிறிய சிவன் கோயில், இலிங்கம், அம்பாள், பைரவர், சனிபகவான், நால்வர்கள், அனுமான் முதலியோர் உள்ளனர். இங்குள்ள விநாயகர், ஆறுமுகன் ஆகியோர் வணங்கத் தக்கவர்கள். விநாயகர் ஞானயோக வடிவில் அக்கமாலையும் புத்தகச் சுவடியும் ஏந்தி யுள்ளார்.

இங்கிருந்து தெற்கே சென்றால் அனுமான்காட் வரும். இங்குத் தமிழ்ப் பிராமணர்கள் மிகுதி. இங்கே காம கோடீச்சரர் கோயில் என்று புதியதாகக் காஞ்சிமுனிவர் அருளாசியால் பாரத் மோட்டார்ஸ் இராமச்சந்திர ஐயர் திருப்பணியால் சிறப்பாக விளங்குகிறது. திறமைமிக்க கணபதி தபதியே திட்டம் தீட்டித் தந்திருக்கிறார். இது தென்னக முறையில் முழுதும் அமைந்த கோயில்

என்பதோடு பஞ்சாயதன முறையும் பெற்று இங்கே சந்நிதிகள் சிறக்க இருக்கின்றன.

பக்தன் விரும்பும் தெய்வத்தை பீடமத்தியில் வைத்து வடமேற்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு ஆகிய நான்கிலும் பிறதெய்வங்களை வைத்து வணங்குவதே பஞ்சாயதன முறையாகும். கணபதி, சூரியன், மகாவிஷ்ணு, சிவபெருமான், பராசக்தி என்ற ஐவரில் சிவபஞ்சாயதனத்தில் சிவனும், சாக்த முறையில் சக்தியும், வைணவ முறையில் திருமாலும் மத்தியிலிருக்க வைப்பது மரபு. இந்த முறையை இந்தியாவின் எல்லாப் பகுதியிலும் மிகவும் அழுத்தமாகப் பரப்பியவர் ஆதிசங்கரர் ஆவார். காசியின் மரபிற்கு ஏற்ப கோபூசை சிறப்பாக நடைபெறுகிறது.

ஆதிசங்கரர் தம்மாணவர்களுடன் உபதேச பாவனையில் இருக்கிறார். காஞ்சி காமாட்சி. ஸ்ரீராம பட்டாபிஷேகம், கஜலட்சுமி, தர்ம சாஸ்தா, காசிக்காண்டத்தில் கூறிய சதுஷ்குக்குடம் என்பதை விளக்கும் நான்குகோழி மண்டபம், காஞ்சி முனிவர் ஓவியம், நடராஜர் சிவகாமி, கல்யாண சுந்தரர், விநாயகர், முருகன், நர்மதை லிங்கமாகக் கருவறையில் காமகோடீச்சரர், கருவறைச் சுற்றில் 25 சிவகாட்சிகள். வடகிழக்கே வரதராசர், தென்கிழக்கில் சூரியன், தென் மேற்கில் விநாயகர், வடமேற்கில் அம்பிகையும் உள்ள பஞ்சாயதன முறை முதலிய அமைப்புக்கள் சிறப்புக்குரியன.

தென் மேற்கில் சிவசயனக் காட்சி. அம்பிகை மடியில் சிவபெருமான் சயனித்திருக்கிறார். அதாவது, ஆலகால நஞ்சுண்டு சிறிது அயர்ந்தாராம். அப்போது அம்பிகை மடியில் இருத்திக் கொண்டாளாம். தாரா என்னும் தசவித்யாக்களில் ஓர் அம்பிகை அமிர்தேச்வரியாவாள். சந்திரகாந்த சிலாமூர்த்தி என்றும் "இமகர சிலாமூர்த்தீம்" என்றும் ஆதிசங்கரர் அமிர்தேச்

வரியை அழைக்கிறார். இவள் எந்தவித நஞ்சையும் மாற்றும் நலம் கொண்டவள். இவளை மடியிட்டபடி சிவபெருமான் சயனம் கொண்டமையால் கொடிய நஞ்சு விரைவில் வெளியேறியது. காசியில் இறந்தாரையெல் லாம் மடியிட்டு உயிர் தந்து சிவபெருமான் மந்திர மோது மாறு செய்வது அமிர்தேசுவரியின் இயல்பு. அந்தக் காசியில் இப்படியோர் காட்சியை அமைத்த பெருமை காஞ்சி முனிவர்களின் திருவுள்ளக் குறிப்புக்குரியதாகும்.

பேராசை மிகுந்த புரோகிதன் ஒருவன் காசிப் பயணிகளிடம் மிகுந்த கொள்ளையடித்து வந்தான்; ஒரு முறை மிகப்பெரிய கொள்ளையடித்துக் கொண்டு கயாவை நோக்கித் தன் குடும்பத்தோடு ஓடினான்; வழியில் அவனிடமிருந்ததை ஒரு கள்வன் திருடிப் போனான். புரோகிதனின் குடும்பத்தார் 4 பேரும் மறுபிறவியில் கோழிகளாகப் பிறந்தனர். வழிப்போக் கர்கள் காசி பற்றிப் பேசுவதையறிந்து முற்பிறவி எண்ணம் அந்தக் கோழிகளுக்கும் வந்தது. அவை விசுவர் கோயிலில் தீனிகளைப் பொறுக்கியுண்டு வலமாக வந்து வந்து தம் பாவம் போக்கின. இது காசிக் காண்டத்தில் உள்ளது. இதையே இக்கோயிலில் உள்ள குக்குட மண்டபம் உணர்த்துகிறது.

(iii) கரலபைரவர்

காசிக்குச் சென்று வந்தோர் கறுப்புக் கயிறு கட்டி யிருப்பார்கள்; பிறர்க்கும் தருவார்கள். இதற்குரிய கோயில் காளபைரவர் கோயிலன்றிக் காசியில் வேறு எதுவுமில்லை. தென்னகத்தார் கயிறு கட்டும் மரபு போல் பிறர் கட்டுவது அநேகமாக இல்லை. ஹோலி பண்டிகையின் போது இரட்சைக் கயிறு கட்டும் வழக்கம் சிறப்பான வட இந்தியாவில் பைரவர் கயிறு கட்டும் வழக்கம் வேறு ஒன்றாகத் தோன்றி வளர முடியாது

போயிருக்கலாம். இரட்சைக் கயிறு கட்டுவது வழக்கில் இல்லாத தமிழருக்கு இது மிகவும் பிடித்த ஒன்றாகி விட்டது.

காசியும் கங்கையும் பாவம் போக்குவது உண்மை தான் என்றாலும், இங்கே பைரவரை வணங்காவிடில் பாவம் தலைகீழ் விகிதத்தில் குவியுமே தவிரக் குறையாது. பிரம்மன் தலை விழுந்த இடம் இதுவென்றும், கபால மோட்ச தீர்த்தத்தில் தாம் முழுகியதாயும், அப்போது மச்சோதரி சங்கமம் நிகழ்ந்ததால் அங்கும் நீராடிய தாகவும், சக்தியிடம் சிவபெருமானே கூறியதாய்ப் புராணம் கூறும்.

மிருத்தியுஞ்ஜயர் கோயில் எனவும் திரையம்பகர் கோயில் எனவும் காசிக் காண்டத்தில் கூறிய கோயிலே காள பைரவர் கோயில் என்பவருண்டு. கடுமையான தோற்றமுடைய இவரின் சிறு கோயிலும் அதன் சுற்றும் இக்கோயில் பழைய தில்லை என்று நமக்குக் கூறு கின்றன. காசியில் இது பெரிய கோயில்தான்.

காசியின் காவல் தெய்வம் இவராகையால் எட்டுத் திசையிலும் இவருக்குக் கோயில் உண்டு. காசி வாழ் வோர் கணக்கைச் சித்ராபுத்திரர் எழுதாமல் இவரே எழுதுகிறார். யமவாதனை காசியில் இல்லாவிடினும் யமனின் கடமையைச் செய்பவரும் இவரே;பாவம் போக்கு பவரும் இவரே. மிருத்தியுஞ்ஜய மந்திரப் பலன் இவரை வழிபட்டவர் பெறுகின்றனர். இவருடைய கோயில் இசுலாமியர் மிகுந்த பகுதியில் இப்போதிருந்தாலும் காசிக் காண்டப்படி அது கபால மோட்சனாவின் கரையிலி ருந்தது. இது கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக் கோயிலே.

அட்டமி திதி இவர்க்குரிய சிறப்பு நாளாகும். இவரும் தண்டபாணி எனும் கதாயுதம்போல் தடி கொண்ட காசிக் காவலரும் ஒருவரல்லர். இவரைப் போலவே அவரும் காபாலி பைரவா என்று கூறப்பட்டார்.

இப்போது அவரை லத் பைரவா என்கின்றனர். லத்தி என்பதே 'லத்' ஆகும். அடிக்கும் தடியைக் கையில் கொண்டிருப்பதால் இப்பெயர் வந்தது. அவருக்கும் தனியே கோயிலுண்டு.

இக்கோயிலில் மயில் தோகை, கறுப்புப் பட்டுக்கயிறு விற்போர் குழுமியிருப்பர். இக்கோயிலில் கூட்டம் குறைவு. நன்றாக வழிபட இயலும். பண்டா பைரவரைத் தெளிவாகக் காட்டுவார். கயிறு வாங்கிக் கொடுத்தால் ம்ருத்தியுஞ்ஜய மந்திரமோதி பைரவர் திருவடியில் வைத்து நமக்கு எடுத்துத் தருவார்.

இவர் கோயில் திருச்சுற்றில் காளிதேவி, அனுமன், கிருஷ்ணன், இராதா, பார்வதி, கணேசன், நவகிரகம் முதலிய யாவும் வரிசையாக உள்ளன. மார்கழி மாதத்து அட்டமி மிகவும் சிறப்பாகும். இனக் கலவரம் தந்த கடுமையான விளைவுகள் இப்பகுதி மக்களை இக்கோயில் பெரிதும் இழந்து விட்டது. இப்போதும் அந்த அச்சம் ஒழிந்தபாடில்லை.

பைரவர் தம் நாயுடன் இருப்பதும் கடுமையான தோற்றமுடையராதலும் இங்கு இவர் கருவறையில் நிற்கும்போது கண்டுகொள்ள முடிகிறது. இவர் கருணையும் கடுமையுமுள்ள காவலராவார்.

(iv) ஓம்காரக் கோயில்

காசி கேதார மகாத்மியத்தில்தான் ஓம்காரக் கண்டம், விசுவநாத கண்டம், கேதார கண்டம் என மூன்றாகப் பிரிக்கப்படுவதை அறிகிறோம். முன்பு ஓம்காரக் கோயிலில் தொடங்கியே அக்கோயிலில் முடிவதாகவே பஞ்சகுரோச யாத்திரை முதலியன வழக்கில் இருந்தன. இப்போது மணிகர்ணிகைக்கு அது மாற்றப் பெற்று விட்டது.

முகம்மதியர் அடர்ந்து வாழும் வடபகுதியில் திரிலோசனா கட்டத்துக்கு வடக்கே சுமார் ஒன்றரைக் கிலோ மீட்டரில், ராஜ்காட் என்னும் மேட்டுப் பகுதியில் ஓங்காரக் கோயில் இருக்கிறது. அ. உ. ம. என்ற மூன்று எழுத்துக்களே 'ஓம்' என வருமாதலால் அவற்றைக் குறிக்க அகரக்கோயில் உகரக்கோயில் மகரக்கோயில் என்று மூன்று சிவன் கோயில்கள் உள்ளன. இவற்றில் அகரக் கோயிலில் இலிங்கம் சிறிது பிளவுடனிருக்கிறது. மகரக்கோயிலில் பெரிய லிங்கமாக உளது. உகரக் கோயிலுக்கு விமான அழகுண்டு; ஏனைய இரண்டும் தளக் கூரைகளே.

உகரக்கோயில் ஒரு முகம்மதியரின் இடுகாட்டில் இருக்கிறது. இம்மூன்றும் முன்பு செழிப்பாய் இருந்து இடிக்கப்பட்டன. பவானி எனும் மராத்திய அரசியால் இம்மூன்றும் புதிதாகக் கட்டப்பெற்றன. இனக் கலவரங்கள் பெருகியதால் வந்த அச்சத்தால் இக்கோயில் களை மக்கள் வழிபடுவது குறைந்து விட்டது. சிவராத்திரி நேரத்தில் மட்டும் வந்து போவது ஒரு சிலர் கடைப் பிடிப்பதாகும்.

ஓம் எனும் பிரணவம் ஐந்து பகுதியாகப் பேசப்படுவ தால் ஐந்து கோயில்கள் இருந்திருக்கலாம் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். பூசை செய்வாரும் போதிய வருவாய் இல்லாமையால் மகிழ்ச்சியோ கவனமோ பிடிப்போ இல்லாதிருக்கின்றனர். இதைத் தீர்ப்பது என்பது இயற்கையால் முடியுமன்றி நம் முயற்சியால் இல்லை.

(v) திரிலோசனர்

திரிலோசனா கட்டத்தின் அருகே திரிலோசனர் ஆலயம் உள்ளது. முக்கண்ணராகிய இவரைக் காசிக் காண்டம் குறித்திருக்கிறது. சலவைக்கல் திருப்பணியாகக் குவாலியர் அரசர் கட்டியிருக்கிறார்.

பார்வதி தேவிக்கு எதிரில் சுயம்புவாகவே திரி லோசனர் இலிங்கமாக உள்ளார். பெரிய லிங்கமாயுள்ள பகுதியே வான்மீகி முனிவர் தவம் செய்த இடம் என் கின்றனர். இங்கே சிறிய சிற்பக் காட்சிகளாகப் பல தெய்வ வடிவங்களுண்டு. விந்தியாவாசினி கோயிலும் இதிலே அடக்கம்.

பைரவரையே திரையம்பகராகவும் மிருத்யுஞ்ஜயேச் வரராகவும் இக்காலத்தில் கருதுகிறார்கள். ஆனால் காசிக் கண்டத்தில் கூறிய திரயம்பகம் என்னும் மிருத்யுஞ்ஜயர் வேறு. அக்கோயில் இரவீந்தன் பிரசாத் சாலையில் உள்ளது. காசிக் காண்டத்தில் கூறிய கோயில் இடிக்கப்பட்ட பிறகு எழும்பியதே இக்கோயிலாகும். பெரிய தொட்டியில் ஆவுடையார் நன்கு வெளிப்பட மூலவர் இருக்கிறார். இங்கு சௌர வைணவ சாக்த காணாபத்திய கடவுளர்கள் இருப்பதோடு கார்த்திகேய ராகிய ஆறுமுகனும் இருக்கிறார்.

பெங்காலி டோலா பகுதியில் உள்ள "திலபாண்டேச் வரர்" ஆலயத்தில் பெரிய ஆளுயரமான பெரிய லிங்கம் இருக்கிறது. திலம் என்றால் 'எள்' என்று பொருள். நாள்தோறும் எள்ளளவு இவர் வளர்ந்து வருவதாகவும் ஐயாயிரம் ஆண்டுகளாக இருப்பதாகவும் கூறுகிறார்கள். இங்கே சுமார் இருபது அடி பள்ளத்தில் பாதாளேச்வரர் இலிங்கம் உள்ளது. திலபாண்டேச்வரர் மகுடத்தில் பாண உச்சியில் கவசம் போட்டிருக்கிறார்கள். சுற்றிலும் தொட்டி அடைப்புளது. சுவர் யாவும் சலவைக்கல் திருப்பணி. அழகான இடம். இவ்வளவு பெரிய இக் கோயிலின் வாயில் ஒரு மாளிகை வாசல் போலத்தான் இருக்கும்.

காசியில் சைவத்திற்குப் பிடிப்பான இடம் இருந் தாலும் காலச் சீரழிவினால் பெருமைக்கு ஏற்ற அளவு பெரிய கோயில்களைத் தென்னகம்போலப் பார்ப்பது அரிதாகும்.

"விச்வேசம் மாதவம் டுண்டிம்
தண்டபாணிம்ச பைரவம்
வந்தேகாசீம் குஹாம் கங்காம்
பவானீம் மணிகர்ணிகாம்."

என்னும் சுலோகம் காசியில் தரிசிக்க வேண்டியவற்றைச் சுருங்கச் சொல்லியதாகும்.

விசுவேசர் கோயிலை முதன்மையாக்கியுளது. மாதவம் என்பது பிந்துமாதவர்தான். ஆகவே ஆதி கேசவத்தின் பெருமை இடிபாடுகளால் குறைந்த காலத்து எழுந்த சுலோகம் என்று தெரிகிறது. தண்டபாணிம் என்பது காவல் கணத்தவர்; நம் சண்டேச்வரர் போலக் கருதலாம். இவரின் உருவம் கேதார்நாத் கோயிலில் தெளிவாக உள்ளது. பைரவம் என்பதே காளபைரவர் கோயிலாகும். வந்தே காசீம் என்பது காசி மாதா கோயிலாகும். இது காளபைரவர் கோயில் சந்நிதிக்கு மேற்கே ஆலமரத்தில் உள்ள தேவி என்கிறார்கள். குஹாம் என்பது பாதாள வாராஹி என்றும், பாதாளேச்சுரர் என்றும், ஈச்வர் கங்கியில் உள்ள ஆதிகங்கை எனும் குளத்துக்கு எதிரில் உள்ள பாதாளபுரிமடத்து குகை என்றும், காசி மாதாவுக்கும் மேற்கே உள்ள குகைதான் என்றும் பலவிதமாகக் கூறுவர். கங்காம் என்பது புனித கங்கைநதி தீர்த்தமேயாகும். அன்னபூரணியையே "பவானீம்" என்று சுலோகம் குறிக்கிறது. மணிகர்ணிகாம் என்பது மஹாமசானம் மணிகர்ணிகா கட்டம் மணிகர்ணிகாகுண்டம் முதலியனவும் ஆகும். டுண்டிம் என்பதே துண்டிகணபதி யாவார்.

குகை, கங்கை, மணிகர்ணிகா ஆகிய மூன்று தவிர இச்சுலோகம் கூறியன யாவும் இடிபட்டோ இடம் மாறியோ இருக்கின்றன. அவற்றின் பிற்கால வளர்ச்சியே இன்றைய காசியில் உள்ளனவாம்.

(vi) காசியின் இலிங்கங்கள்

எண்ணிலடங்கா இலிங்கங்கள் காசியில் உளதாயினும் காசிக் காண்டத்தில் குறிக்கப்படும் சிறப்பு லிங்கங்கள் மட்டும் நாம் ஒருவாறு நோக்கினால் காசியின் சைவச் செழுமை புலனாகும்.

1. அவிமுக்தேச்வரர்
2. அமிர் தேச்வரர்
3. சந்திரேச்வரர்
4. சண்டீச்வரர்
5. தர்மேச்வரர்
6. பிரம்மேச்வரர்
7. ஈசானேச்வரர்
8. கிருத்வாசேச்வரர்
9. கேதாரேச்வரர்
10. காமேச்வரர்
11. கருணேச்வரர்
12. திரிலோசனேச்வரர்
13. தாரகேச்வரர்
14. மகாதேவர்
15. மணிகர்ணீச்வரர்
16. மோட்சேச்வரர்
17. மகேச்வரர்
18. மத்தியமேச்வரர்
19. ஞானேச்வரர்
20. லாங்களீஷ்வரர்
21. ஹிரண்யகர்ப்பேச்வரர்
22. கோபரேட்சா
23. ஜேஷ்டேச்வரர்
24. ஜம்புகேச்வரர்

25. நிவாசேச்வரர்
26. நந்திசேச்வரர்
27. ஜோதிருபேச்வரர்
28. ஓம்காரேச்வரர்
29. இரத்னேச்வரர்
30. வீரேச்வரர்
31. விஸ்வகர்மேச்வரர்
32. விச்வேச்வரர்
33. விருத்தகாலேச்வரர்
34. விரிஷேச்வரர்
35. ரிஷபதுவஜேச்வரர்
36. உபசந்தேச்வரர்
37. வியாக்ரேச்வரர்
38. சொர்க்கதுவாரேச்வரர்
39. சைலேச்வரர்
40. சங்கமேச்வரர்
41. ஸ்வர்லீநேச்வரர்
42. சுக்ரேச்வரர்

11. வைணவக் காசி

(i) ஆதிகேசவர்

காசியம்பதி சிவனுக்குரியதாகப் பேசப்படும் அளவில் பெருமாளுக்குப் பேசப்படவில்லையென்றாலும், பெருமாளுக்கும் சிறப்புக்குரிய நகரமாகவே இத்தலம் புராணங்கள் சிலவற்றிலாயினும் கூறப்படுகிறது. "ஹரிக்ஷேத்திரம்" "நாராயண வாசா" என்ற பெயர்களும் காசிக்குரியதாகக் கூறப்பட்டிருந்தமை இதற்குச் சான்றாகும்.

கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியராகப் பிறந்து இராமபக்தியில் ஈடுபட்டவர் கபீர்தாஸ். நம் ராமானுஜரின் கொள்கை வழிவந்த தென்னகத்தைச் சார்ந்த இராமானந்தர் என்பவர், பலகாலும் காசியில் குடியேறிய மரபினராயிருந்தவர். இவருடைய சீடரே கபீர்தாஸ். ஸ்ரீவைஷ்ணவர்களைப் போன்ற அதீத பக்தியுடன் இஸ்லாமிய கபீர் உருவான காரணமே ராமானுஜர் பேதமில்லாமல் புகட்டிய பக்தி மார்க்கத்தால்தான்! இவரின் மறைவுக்குப் பின்னும் கபீர்தாஸ் பாடலில் உள்ளம் பறிகொடுத்த வடநாட்டினர் பலர் இன்றுவரை உள்ளனர். கபீர்தாஸ் வாழ்ந்தபோது வைணவர்கள் முழுதும் ஆதரவு காட்டவில்லை; முகமதியரோ தம்மை விட்டுப் பிரிந்தவராகவே கவலை கொண்டிருந்தனர்.

கபீர்தாஸ் பாடல்கள் பாமரர்களின் பக்தி நெஞ்சில் நிழலாடியது கண்டு இரு இனத்தவர்களும் கபீர்தாஸின்

பூத உடலைத் தங்கள் தங்கள் சமயப்படியே இறுதிச் சடங்கு செய்யப் போரிட்டனர். ஓர் உடன்பாட்டின்படி ஒரே நேரத்தில் இரு பிரிவுமக்களும் கபீர் உடலை மூடிய துணியை நீக்கியபோது அங்கே அவர் உடலிருந்த இடத்தில் மலர்கள் இருக்கவே கண்டனர். மக்களின் பேதம் மகேசனின் பக்தனுக்குப் புகழ்க்காயம் எதையும் உருவாக்கவில்லை.

கபீர்தாஸ் காசியில் சாகமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்து அருகிலுள்ள மகாகர் எனுமிடத்தில்தான் பூரணத்துடன் பூரணமானார். ஆயினும் அவர் பூத உடல் பூவுடம்பானது. காசியில் இறுதியிலிருக்க மறுத்த காரணமென்ன?

பாவனை வழிபாட்டில் பக்திரஸம் சொட்டச் சொட்ட நனைந்த கபீர்தாஸ் சைவக் காசியில் இருந்தும் சைவ முக்தியடையவில்லை என்று நாம் கூறினால் கடவுளைப் புரிந்து கொள்ளாததோடு கபீர்தாசையும் புரிந்து கொள்ளாதவர்களாகவே ஆகிவிடுவோம். பிறகு ஏன் தான் காசியை விரும்பவில்லை அவர்?

வாழ்த்தி வணங்கி வாழவேண்டிய ஒரு தலத்தைப் பாவிகள் பாவம் தீருமென ஓடிவரவும், இறப்பதற்குரியது எனவும் அதிக அளவில் நினைந்ததை அவர் விரும்பவில்லை. காசி பாவம் போக்கும் என்பது உண்மை! அதற்காக அது இறக்கவைத்திடும் சுடுகாட்டுத்தலமன்று!

முக்தியை ஒருவன் பக்தியின்மூலம் எந்த இடத்திலிருந்தும் பெறலாம்—பக்தி செய்யத் தெரியாதவர்களுக்கே காசியை மட்டும் நம்பிக் கிடக்கவேண்டும். பக்தனைப் பரம தயாளனாகிய பரம்பொருள் எப்போதும் தன் பாதாரவிந்தங்களில் புனிதம் பெறச்செய்வது உறுதி. இதை வாழ்ந்து காட்டவே காசிக்கு வெளியில் இறந்தார்—சவம் இல்லாமல் மலராகிய உடலின்மூலம் முக்தி கிடைத்ததையும் மெய்ப்பித்தார்.

கபீர்தாசரின் வரலாறு இந்து முஸ்லிம் போட்டி மிகுந்த காலமாயிருந்தும் பேதமற்ற ஞானிகள் தோன்ற அக்காலமும் உதவியதைக் காண வைத்தது. வைணவக் காசியின் பெருமை இவர் வரலாற்றால் வெளிப்பட்டது.

வருணா சங்கமத்திற்காக வளைந்து வரும் பகுதியே ராஜ்காட் எனும் பழைய காசியாகும். காசி புகை வண்டி நிலையத்துக்கு நேர் வடக்கே ஆதிகேசவர் கோயில் உளது. நீரால் உருக்குலைந்த நிலையுடைய தாகும்.

விசுவநாதர் காசியைவிட்டு வெளியேறிய பின் ஒவ்வொரு கடவுளராக வந்து காசி மன்னனிடம் குற்றம் காண இருந்தபோது திருமால் முதலில் வந்த இடம் தான் காசியாகும். அவர் பாதம்பட்ட இடத்தில் பாததீர்த்தம் உளது. அவரும் வருணா சங்கமத்தில் ஆடியிருக்கிறார்

அஸி சங்கமம் தலை, தசாசுவமேதா துறை மார்பு, மணிகர்ணிகா துறை உந்தி, பஞ்சகங்கா துறை தொடை, ஆதி கேசவம் பாதம் என்று காசித்தலம் ஐந்து தீர்த்தச் சிறப்புக் கட்டங்களையுடையது. இங்கு வருவோர் பஞ்ச தீர்த்த மாடுவோரே. அவ்வாறு ஆடாதவர் யாரும் இக் காலத்தில் இல்லை என்றாகி விட்டது.

ஆதிகேசவம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கியதாகும். காகத வாலா வம்ச மன்னன் வருணா சங்கமம் ஆடி ஆதிகேசவம் தொழுததை யறிய முடிகிறது. இந்தப் பழங்கோயிலையும் பகைப் போட்டியில் விட்டு வைக்காமல் இடித்ததுண்டு. இதனால் வைணவம் அப்போது சிறந்து நின்றதை அறிய முடிகிறது.

சங்கமேச்வரர் கோயில் இந்த ஆதிகேசவர் கோயி லுக்கு அருகில்தான் உளது. அங்கே சங்கமேச்வர லிங்கம் உளது. நதிகளின் சங்கமத்துறையில் இப்பெயரில் சிவலிங்கம் இருப்பதை யறியலாம்.

எடுத்துக்காட்டாகப் பவானியும் காவிரியும் கூடும் இடத்தில் பவானியில் சங்கமேச்வரர் ஆலயம் சிறப்புற இருப்பதை சங்கமப் பாலத்தில் பயணம் செய்யும் போதே அறியலாம். திருவானைக்கா நீர்ச்சிறப்புடைய தல மாகை யால் அங்கே கிழக்கு வாயிலருகே சங்கமேச்வரர் ஆலயம் உள்ளதை யறியலாம்.

வருணையும் கங்கையும் சங்கமம் ஆகுமிடம் மிகுந்த சிறப்புடையதாகையால் இங்கும் சங்கமேச்வரர் கோயில் உளது.

இங்குக் கார்வா விநாயகர் எனும் குள்ள விநாயகரும் உள்ளார். இன்னொருவர் ராஜபுத்திர விநாயகர். இவர்கள் இருவரும் காசியில் உள்ள 56 விநாயகர்களுள் சேர்ந்தவ ராவர். பஞ்ச தீர்த்தமாடுவோர் இந்த விநாயகர்களை வணங்குவது வழக்கமாக உள்ளது.

ஆதிகேசவமே காசியின் முதன்மையான வைணவக் கோயில் என்று கூறுவர். இது பலரும் வழிபட முடியாமல் ஒதுங்கி விட்டது.

(ii) பிந்துமாதவர்

வைணவ காசியில் மிகச் சிறந்ததாய் இன்று விளங்கும் கோயில் இதுவே ஆகும். இது பஞ்சகங்கா எனும் படித் துறையின் மேல் உளது.

நம் திருவையாற்றில் காவிரிமட்டும்தான் ஓடுகிறது. ஆனால் ஐயாறு என்று பெயர் இருக்கிறது. அதுபோல் இப் படித்துறைப் பகுதியில் கங்கைக்குள் அமைந்த தீர்த்தம் பஞ்ச கங்கையாகும். முன்பே இதை விளக்கினோம்.

அழகான படித்துறையமைப்புடைய துறை. 50 படி களுக்குமேல் இப்பிந்துமாதவர் கோயில் உள்ளது. பிரெஞ்சு நாட்டுக் குறிப்புக்கள்மூலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை இக் கோயிலை முழுதுமாகப் பார்த்திருக்

கிறார்கள். ராஜாமான்சிங் கட்டிய படித்துறையும் கோயில் அமைப்பும் உடையதாக இருந்தது. அக்பர் காலத்துக்கு முன்பே முகம்மதியர் படையெடுப்பில் இடிபட்ட பிறகு கட்டப்பட்டது அக்கோயில். அதுவும் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் அவுரங்கசீப்பினால் இடிபட்டது. மசூதிகள் கட்டப்பட்டு இம்மாதவர் கோயில் அழிக்கப்பட்ட பிறகு பெரிய கோயிலை அடக்கமாகக் கட்டியிருக்கிறார்கள்.

இன்று சைவ வைணவப் போட்டி இல்லை. ஆனால் துளசிதாஸ் காலத்தில் ஓரளவு இருந்தது. இவர் காலத்தில் தான் இடிபட்ட விசுவர் கோயில் கட்டப்பட்டது. இவர் காசியில் ஆடவர் சிவாம்சம் என்றும் பெண்டிர் பார்வதியம்சம் என்றும் துளசி கூறியிருக்கிறார்.

துளசிதாஸ் விசுவரையும் புகழ்ந்து பாடினார். பிந்து மாதவரையும் புகழ்ந்து பாடினார். இவர் பாடிய இராமாயணத்தை விசுவர் கோயில் அர்ச்சகர்கள் ஏற்கவில்லை. வால்மீகி பாடிய பிறகு ஓர் இராமாயணம் தேவை இல்லை என்பது அவர்கள் கூற்று அல்லது அதுபோல் இது சிறப்புப் பெறுமா என்பது; மேலும் பாமரர் புரியும் வகையில் பஜனைக்கு ஏற்றது துளஸிதாஸ் காப்பியம். இதிலே பண்டிதர்கள் மனம் ஈடுபடவும் இல்லை. இதிகாச புராண சாத்திரச் சுவடிகளின் அடியில் துளஸிதாஸ் இராமாயணத்தை வைத்து விசுவர் கோயிலில் பூட்டிவிட்டார்களாம். விடிந்து பார்த்தால் யாவற்றுக்கும் மேலாக இராமாயணம் ஏறியிருந்தது கண்டு துளஸியையும் ஏற்றார்களாம்.

கம்பனைக்கூடத் திருவரங்கத்தின் பட்டாசாரியர்கள் ஏற்கவில்லை யென்பதும் அரங்கேற்றத்தில் பல தடைவிடை எழுந்ததும் நரசிம்மம் அவர்கள் போக்கை மாற்றியதும் எமது திருச்சி கோயில்கள் நூலில் காணலாம்.

சம காலத்தின் பெருங்கவிஞர்களை மதிக்கும் தாராள மனம் வாராத காரணமே கம்பனுக்கும் துளசிக்கும் இப்படித் தடைகள் நிகழ்ந்தன. கம்பனுக்குக்கூட வைண வர்களே தடை; துளசிக்குச் சைவர்களே தடை. சைவ வைணவ ஒருமையும் காசியில் அன்று இருந்ததையும் இது காட்டுகிறது.

துளசிக்கு 400 ஆவது ஆண்டுவிழாவை 108 அந்தணர் அமர்ந்து காப்பியம் முழுதும் படித்து இரவும் பகலும் பூசையாக நிகழ்த்தினர். நாலாயிரத் திவ்வியப் பிரபந் தத்தை இராப் பத்து, பகல் பத்து என்று ஆண்டுதோறும் படிக்கும் மரபுடைய நம் வைணவர்கள் கம்பனுக்கும் இப்படியொரு சிறப்பளிப்பது கடமை என்று உணர்வார் களா? ஒரு சமயம் பெரிய அளவில் கம்பன் பாடியதே இயலாமையாகப் போனதோ? அப்படியானால் சில பகுதி யையேனும் படலம் தோறும் எடுத்துப் படிக்கலாமே? இறையருளால் நடைபெறட்டும். கபீர்தாசைக் கொள்ளை கொண்ட இடம் இந்தப் பிந்துமாதவர் பீடம்தான்.

சலவைக்கல் கட்டுமானமும் தொங்கும் கண்ணாடி விளக்குகளின் கோலமும் கொண்ட பெருமை இக்கோயி லுக்குண்டு. இராமேசத்தில் சேதுமாதவர் என்றும், திரிவேணியுள்ள பிரயாகையில் வேணி மாதவர் என்றும், காசியில் பிந்து மாதவர் என்றும் ஓர் இணைப்பு இருப் பதை மறவாமல் நாம் நினைக்க வேண்டும். வைணவம் ஊன்றிய சைவத்தலங்களின் தீர்த்த மகிமையும் இதில் விளங்கும்.'

கபீர்தாஸ் பிந்துமாதவரிடம் ஈடுபாடு கொண்டு விட்டார். ஒரு முகம்மதியராகப் பிறந்த தன்னை ஒரு குரு ஏற்றுக்கொண்டால்தானே முறைப்படி சேவைக்குரிய வனாக முடியும்? இதனை எண்ணி ஏங்கியபடி கபீர் ஒரு விடிகாலைப் பொழுதில் இந்தப் பஞ்ச கங்கா கட்டத்தில் அமர்ந்திருந்தார்.

ஒரு நெசவாளன் மகனாகப் பிறந்து கவியுள்ளம் கண்ட கபீர் மனம் எதை எதையோ கற்பனை நெசவுகளில் நெய்து கொண்டிருந்தது. அந்தப் பக்தி நெசவு பலிக்குமாறு பிந்துமாதவர் அருளிவிட்டார். அத்துறையில் அப்போது நீராட வந்த இராமானந்தர் என்னும் குரு தடுக்கி விழுந்தார். படிகளில் விழாமல் கபீர்தாஸ் மேலேயே விழுந்தார்.

விழுந்த குருவும் "இராமா இராமா" என்று கூக்குரலிட்டார். கபீர்தாஸும் அப்படியே கூக்குரலிட்டார். ஒரு சரியான தீட்சை கபீருக்குக் கிடைத்து விட்டது. சாத்திரங்களில் பேசப்படாத தீட்சை! சமயச்சாரியர்கள் உடனே ஏற்காத தீட்சை! ஆனாலும் பிந்து மாதவர் திருவருளாலேயே இது குருவுக்கும் சீடனுக்கும் புரிந்தது. புரிந்ததே போதுமானதாக இருந்தது! கபீர்தாஸின் சவம் பூவாக மாறும் வரை மற்ற யாருக்கும் இது புரியாமலே இருந்தது என்பதுதான் விநோதமானதாகும்.

பிந்து என்றால் துளி; அத்துளியும் ஓர் ஒளி என்று பொருள்படும். உள்ஒளியை உருவாக்கிக் கபீர்தாஸ் வரலாற்றில் இப்பெருமாள் தம் பெயரின் கருணையைச் சாதித்து விட்டார். கங்கையின் பிரவாஹத்தை வியந்து பாடிய பக்தர் ஜகந்நாதர்.

ஜகந்நாதர் ஒரு முகம்மதிய காதலியைப் பெற நேர்ந்தது. கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் இந்த அந்தணர் சாதி நீக்கம் செய்யப்பட்டார். சாதிக்காகக் காதலை அவர் பலியிடவில்லை. கங்கையைப் பிரியவும் இல்லை. 52 படிகளில் படிக்கு ஒரு பாட்டாகப் பாடி கங்கையைப் புகழ்ந்தார். கடைசியில் கங்கை அக்காதலர்களை மண்ணுலகு விட்டுப் பொன்னுலகுக்கு அழைத்துப் போனது. புனிதமானவர்களுக்குப் பூவுலகில் புறக்கணிப்புகளே பரிசாகையால் பொன்னுலகைப் பரிசாக்கியது கங்கை. ஆனாலும் வாழும் போது மதியாத ஜகந்நாதரை அவர் பாடிய 52 பாடல்

கொண்ட பாடலை கங்காலஹரி என்று அவருக்குப்பின் அவர் கவிதையை மதிப்பதில் இந்த உலகு மகிழ்கிறது.

தன் பாட்டிற்குத் தானே முக்திப்பயன் பெற்ற பெருமை நிகழ்ந்ததும் இந்தப் படித்துறையில்தான். பிந்துமாதவர் பல திருவிளையாடல்கள் நிகழ்த்தி இக் காசியில் புகழ் நிறைந்தவராய் விளங்குகிறார்.

கார்த்திகை மாதத்தில் இப்படிக்கட்டுகள் தோறும் பெண்கள் அமர்ந்து கங்கா பூசையும் பார்வதி பூசையும் செய்வது மரபு.

கிழக்கு நோக்கிக் கங்கையையும் கதிரவனையும் சாளக்கிராமச் சிலா மூர்த்தியாக மூலவர் உள்ளார். கதை, சங்கு, சக்கரம், பதுமம் ஏந்திய கையினராயுள்ள அவர் பாதத்திலும் சாளக்கிராமம் உருண்டையாக உள்ளது.

ஜீவனேச்வரர் எனும் சிவலிங்கமும் இங்குள்ளது. பஞ்சகங்கேச்வரரும் பின்புறமாக உள்ளார்.

தூதபாபா கிரணா என்னும் தர்மநதா கலப்பதற்கான காட்சி, கங்காதேவி முதலை மேலும், யமுனை ஆமை மேலும், சரஸ்வதி மயில் மேலும் உள்ள காட்சியும் இப் பஞ்ச கங்கா படித்துறை விளக்கச் சிற்பங்களாய் இருப் பதை அறியலாம்.

கார்த்திகையில் விளக்கு ஏற்றி மூங்கிலில் பிணைத்துக் கங்கையில் விடும் காட்சி அழகானது. எல்லாத் துறை களிலும் இம் மரபுண்டென்றாலும் இந்தத்துறையில் கார்த்திகை மாதத்தில் மிகுதியாகும்.

மாதவரே அகழ்ந்த சக்கர தீர்த்தம் பற்றி இங்கேயே சொல்லி விடலாம். அது மணிகர்ணிகைக்குச் சிறிது தொலைவில் இருந்தாலும் பிந்துமாதவர் இணைப்பில் பேசுவதே சிறப்பாகும்.

இது படித்துறையமைந்து கம்பி அடைப்பட்டு ஒரு குளமாகக் காட்சி தருவது சக்ர தீர்த்தம். மணி கர்ணிகையில் முதலில் குளித்துப் பிறகு இதிலும் ஆடி, மீண்டும் மணிகர்ணிகையில் ஆடுவது வழக்கம். அதற்கு ஏற்ற அருகில்தானிருக்கிறது. நீரை முகந்து தலையி லூற்றியே குளிப்பதுதான் நீரின் ஆழமும் மரபுமாகும்.

திருமாலின் சுதர்சன சக்கரத்தால் அகழ்ந்த இத் தீர்த்தம், அவர் வியர்வைபோல் வந்த நீரே முதலில் நின்ற புனிதமுடையது. விசுவநாதர் விசாலாட்சியுடன் இங்கு ஆடி மகிழ்ந்தாராம். திருமணமாகி மாமன் வீட்டில் மைத்துனன் தந்த பரிசாக நீராடுவதுபோன்ற மகிழ்ச்சி அவருக்கும் இருந்திருக்கிறது.

இதில் குளித்துத்தான் இன்றும் அர்ச்சகர்கள் விசுவரை வழிபாடு இயற்றுகிறார்கள். பெருமான் உகந்த இடத்தில் ஆடிப் போவது அவருக்கு மேலும் உவப்புத்தானே!

இதில் குளிக்கக் கட்டணம் வசூலிக்கிறார்கள். இது கோயில் வருமானம். இச்சக்கர தீர்த்தம் மண் மூடியபோது தூரெடுக்கும் நிதி ஆகிய காரணமே கட்டண வசூலாகும். இதன் வடபக்கச் சுவர் விஷ்ணுதிருமேனி ஒன்றுடன் உள்ளது. மணிகர்ணிகா கட்டத்திலும் சலவைக் கல்லால் திருமால் சிலாமூர்த்தம் உள்ளது. அவர் இந்தக் கட்டத்தில் ஏழாயிரமாண்டுத் தவம் செய்திருக்கிறார். நம் கணக்கில் ஏழாயிரம். பிதுர் லோகம், தேவ லோகம், பிரம்ம லோகம், வைகுந்தம் என்று கணக்கிட்டால் மிகச் சில நாள்களே வரும்.

மணிகர்ணிகைகாட்டில் தாரகேச்வரர் எனும் இலிங்கம் உள்ளது. அதைப்பற்றியும் இங்கேயே பேசி விடலாமே. அமிர்தேச்வரியான அன்னை மடியமர்ந்த விசுவர் இராமநாமத்தையே தாரகமந்திரமாக ஓதுபவர் ஆகையால் தாரகேச்வரர் எனப்படுகிறார்.

மணிகர்ணிகா குண்டத்தின் தென்பக்கமாகப்போனால் மணிகர்ணிகா தேவி கோயில் அருகில் அவள் குண்டத்தருகில் உளது மணிகர்ணீகேச்வரர் ஆலயம். சராசரி பத்துப் பேராவது எரியூட்டப்பெறும் மணிகர்ணிகா காட்டின் புகை மண்டலம் இப்பகுதி முழுதும் வரும். ஆனால் யாரும் மூக்கைப்பிடிக்கத் தேவையில்லாமலே புகையுமிருக்கிறது; அது புனிதத்தின் சாட்சியம் போலும்.

மணிகர்ணிகை சிவச் சார்புடன் வைணவச் சார்புடையதுமாகும். ஜலசயன கட்டம் என்றும் இதற்குப் பெயருண்டு. திருமால் நம் மஹாபலிபுரத்தில் ஜல சயனம் செய்வதுபோல் நீரில் நீராகச் சயனம் செய்வதாய் ஐதீகம்.

மணிகர்ணிகாவே இதயம் என்றும் மையம் என்றும் முன்பு பேசினோம். இம்மைக்கும் மறுமைக்குமான மையத் தொடர்புடையதை வற்புறுத்துவது போலவே மணிகர்ணிகா குண்டத்தை ஒட்டி ஒரு சந்துக்குள்ள பெயர் அமைந்துள்ளது. பிரம்ம நாளம் என்று அதற்குப் பெயர். நாளம் என்றால் ஒன்றினோடு ஒன்றை இணைக்கும் தண்டு என்பது நமது வழக்கிலேயே தெரியுமல்லவா? ஆத்மாவைப் பிரம்மத்தோடு இணைக்கும் காசியில் இணைப்புக்குரிய மையமான மணிகர்ணிகையில் இணைப்புத்தண்டு என்ற பொருளிலேயே பிரம்ம நாளம் என்ற சந்தும் இருக்கிறது. திருமால் உந்தித்தாமரையிலிருக்கும் பிரம்மாவுக்குத் துறையான நாளம் என்பதுமாகும்.

பஞ்ச தீர்த்தமாடுவோர் சைவ வைணவர் என்ற இரு பாலாருமாக இருப்பதால் மையமான மணிகர்ணிகையும் பஞ்ச கங்காவும் சைவ வைணவ பேதமற்ற களங்களாக உள்ளன.

தாரகேச்வரர் கோயில் மணிகர்ணிகையில் கீழே உள்ளது. துர்க்கை கோயில் மேலே உள்ளது. மேலும் ஒரு கோயில் நீரில் முழுதுமாக முழுகியுள்ளது.

(iii) ஜகந்நாதர் கோயில்

அஸி நதிக்கரையில் ஜகந்நாதர் கோயில் இருக்கிறது. பழைமையான பெரிய கோயில். ஜகந்நாதர் என்ற பெயரே பூரிஜகந்நாதரை நமக்கு நினைவு செய்வது இயல்பு. அதற்கேற்ப இப்பகுதியும் சூரிய வழிபாட்டுக் குரியதே ஆகும். மேலும் ஜகந்நாதர், சுபத்ரா, பலராமர் ஆகிய கருவறை அமைப்பும் பூரியை நினைவுறுத்தும். இங்கே உள்ள குளம் தானே இயற்கையாகத் தோன்றிய தாகக் கூறுவர். அதுவே சந்தனக் குளம் என்பதாகும். உயரிய வடநாட்டுக் கோபுரங்களைக் கொண்ட கோயிலிது. மூலவர் மூவரும் வரிசையாகவே இருக் கிறார்கள். அப்பீடத்தின்கீழே மகாபாரதக் காட்சி அமைக்கப் பட்டிருப்பதும் சுபத்திரை நடுவேயும் பலராமர் ஒரு பக்கமும் ஜகந்நாதர் ஒரு பக்கமுமாக இருப்பதும் இந்த ஜகந்நாதரைக் கண்ணபெருமான் என்று எளிதில் அறிவிக்கும். பத்ரி நாராயணர் நரசிம்மர் கருடாழ்வார் ஆகியோர் கவர்ச்சியாக உள்ளனர்.

இக்கோயிலில் கார்த்திகை மாதத்தில் வட இந்திய மாநிலங்களைச் சார்ந்தவர் வந்து கூட்டமாகக் கூடிக் கோயில் மரங்களடர்ந்த பகுதியில் சமைத்துச் சாப்பிடு கிறார்கள். இது வனபோஜனம் எனப்படுகிறது. திருவரங் கத்தில் இப்படிச் சாப்பிட்டதைச் சங்க காலத்திலேயே தமிழர்கள் கைக்கொண்டிருந்தார்கள் என்பதைக் காட்டி யிருக்கிறோம். அதை எமது 'திருச்சி கோயில்கள்' எனும் நூலில் காணவும்.

துருவாசரை அவருடைய பத்தாயிரம் சீடருடன் சென்று வனவாசம் செய்யும் பாண்டவர்களிடம் விருந்து கொள்ளுமாறு துரியோதனன் தூண்டுகிறான். தருமர் ஏற்கிறார். திரௌபதியோ அமிர்த சுரபியைக் கழுவிக் கவிழ்த்து விடுகிறாள். கண்ணனை நினைக்கிறாள். அவன்

வந்து கழுவப் படாதிருந்த பருக்கையைத் தின்று துருவாசர்க்கும் சீடர்க்கும் பசியை மாற்றுகிறான். இது போல் வனத்தில் சமைத்துச் சாப்பிடும்போது கண்ணன் வந்து உடன் உண்பான் என்னும் பழக்கமே வன போஜனம் என்ற மரபை உண்டாக்கியிருக்குமோ என்று நாம் நினைக்க வேண்டியதாகிறது.

(iv) அனுமான் கோயில்

அஸிக்கு அருகே ஜகந்நாதர் ஆலயமும் உள்ளது. ஆயினும் தெற்குக் காசியில் அனுமன் கோயிலுக்குத்தான் மிகுந்த சிறப்பும் கூட்டமும் உள்ளது. வரப்பிரஸாதி யானவர் இவர். சஞ்சீவிமலை கொணர்ந்து சிரஞ்சீவி யானவர், வரப்பிரசாதம் தருவதில் வியப்பில்லை. மேலும் வட நாட்டில் அனுமனுக்குத்தான் இராமனைவிடப் பெருமை மிகுதி. இராமர் உருவமே இல்லாத கோயி லுண்டு. அனுமன் வடிவம் இல்லாமல் ஓர் ஆலயமுமில்லை அங்கே. ஆகையாலும் இந்த அனுமனுக்குக் கூட்டமோ என்றால் அதற்கும் மேலாக இவரை ஒட்டிய வரலாறுகள் வியப்பானவை என முன்னால் வருகின்றன. இவரால் தான் இத்துறைக்கே பெயர் வந்தது.

ஞானம் காரணமான அரச மரமே இவர் கோயிலின் சிறப்பினை காட்டித் தருகிறது. அதற்கும் எதிரில் சிவலிங்கச் சந்நிதி இருப்பது இங்குச் சைவ வைணவத்தை இணைக்கிறது. சமர்த்த இராமதாசர் என்பவர் இவரைக் கங்கையில் கண்டெடுத்துப் பிரதிட்டை செய்ததாகக் கூறுகிறார்கள். ஓர் ஆள் உயரத்தில் செந்தூரம் பூசி வலக்கையை உயர்த்தி இடது கை தொங்கி நிற்கக் காட்சி தருகிறார். தென் திருச்சுற்றில் இராமர் சந்நிதியும் உள்ளது.

இப்போது துளசிதாசரை நினைத்தே ஆகவேண்டும். ராஜாதோடர்மால் கட்டியதுளசிகாட்டின் மேல்தான் துளசி மாளிகை உள்ளது. துளசி மந்திர் என்பார்கள் அதை. இராமாயணத்தின் முதல் மூன்று பகுதிகளை அயோத்தியில் எழுதிய துளசிதாசர் பின் நான்கு பகுதிகளை காசியில் இந்த மாளிகையிலிருந்தே எழுதியிருக்கிறார். குமரகுருபரர் தாமிரபரணி வடகரையிலான ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தார். காவிரிக்கரையில் பிறந்த கம்பன் காப்பியத்தைக் காவிரிக்கரையிலேயே இருந்து பயின்றார் கங்கைக்கரையில் கம்பனை துளசிக்கும் தெரியுமாறு பேசினார். துளசி அவற்றில் சிலவற்றைக் கரையிலேயே கேட்டுக் கங்கைக் கரையமர்ந்தே காப்பியமாக்கினார். இப்படி ஓர் இதிகாசம் அவதரித்த வடதிசையிலிருந்து இராமனைப்போல் தென் திசை வந்து மீண்டும் வடதிசைக்கே அவனைப்போல் திரும்பவும் போனதை நினைத்தால் இது தற்செயலாக நடந்தது என்று எப்படிக் கூறமுடியும்? இதிகாசப் பெருமையின் சிறப்பை இந்தப் போக்குவரவு புனித முத்திரையிட்டுக் காட்டுவதாகவே படுகிறது.

துளசி வாழ்ந்த மாளிகையில் ஒரு குகையில் ஆஞ்சநேயர் உள்ளார். இது துளசியின் பெருமை. காசியில் இந்தக் குகையாஞ்சநேயரை உள்ளிட்டு 12 ஆஞ்சநேயரைத் துளசியே நிறுவினார். வடநாட்டில் அனுமன் பக்தி தழைக்கத் துளசியும் அடிப்படையான காரணமாவார். இதனாலேயே இந்த மாளிகையாஞ்சநேயர் அருகே துளசியின் படம், அவர் பாதுகை, படகின் ஒரு பகுதி, முதலியவற்றை நினைவாக வைத்துள்ளனர். 'துளசி' இராமாயணக் கையெழுத்துச் சுவடிகளும் உள.

ஆஞ்சநேயர் கரையோரத்தில் உள்ளதுபோல் சாலையிலும் ஒருவர் உள்ளார். அவரே மிகுந்த பெருமைக்குரியவர். அவரைச் சங்கட விமோசன ஆஞ்சநேயர்

என்று அழைப்பதிலேயே பெருமை உணரலாம். பெரிய திருமேனி வேங்கடாசலபதிபோல அலங்காரத்தில் வடிவம் முழுதும் மறைத்துக் கொண்டவர் இவர். சலவைக்கல் திருப்பணி விசாலமானது. எதிரே ஓர் இராமர் சந்நிதியுண்டு. மூலத்தானத்தைச் சுற்றி வருவோர் கண்கவர் ஓவியங்களில் ஆழ்ந்து போவர்.

இவரை வேண்டித் தொழுநோய் தீரப்பெற்றதால் ஜகந்நாத்தாஸ் ரத்னாகர் இதைக் கட்டினார். ஆகவே சங்கட விமோசனர்தானே. இந்த இராமர் கோயிலுக்கும் பின்னால் சங்கடஹரண ஆஞ்சநேயர் கோயில் என்பதும் ஒன்றுள்ளது. வலக்கையில் கதையை உயர்த்தி, இடக்கையில் சஞ்சீவிமலையையும் தூக்கியிருக்கிறார். நோய்க்கு மருந்துமாய்ப் பகைக்குத் தணிப்புமாயிருப்பதன் அடையாளமிது.

கார்த்திகை மாதம் தேய்பிறைச் சதுர்த்தியில் உதய காலத்திலும் சித்திரை பௌர்ணமியான அனுமத் ஜயந்தியிலும் இக்கோயில் சிறப்புக்குரியதாகும். கூட்டம் மிகும். உள்ளூர்க்காரர்களுக்கு மட்டுமே இக்கோயில் பெருமை புரிந்ததாயிருக்கிறது. சலவைக்கல்லில் பதித்த அனுமன் தோத்திரத்தைப் (சாலீஸ்) படித்துவிட்டு மணியை அடித்துவிட்டுப் பயபக்தியுடன் பலர் வழிபடுவதை இங்குக் காணுவது சிறப்புக்குரியது.

இங்குள்ள சங்கட விமோசன ஆஞ்சநேயர் சுயம்பு என்று கூறுகிறார்கள். துளசிதாசரே இதற்குக் காரணமாவார். இராமாயணச் சொற்பொழிவைத் தினமும் கேட்டு உருகிய துளசிதாசர் ஒரு நாள் திரும்பி நோக்கிய போது, கூட்டத்தில் ஒரு முதியவரும் அமர்ந்து கண்ணீர் வாரக் கண்கள் மூடிய நிலையில் பக்திவசப்பட்டு விட்டதைக் கண்டார். நாள்தோறும் அவர் அங்கு வருவதும் அதுபோலவே இருப்பதும் காணக் காணத் துளசிதாசருக்கு இராமாயணத்தைக் காதால் கேட்பதை

விட அதற்கு உருகும் அடியாரைக் கண்ணால் காண்பதே சிறப்பாக இருந்தது ஒருநாள் துளசிதாசர் அவரைச் சொற்பொழிவுக்குப் பின்னர் தொடர்ந்தார்.

சிரஞ்சீவியான அனுமான் இராமகாதை கூறுமிடத்தி லெல்லாம் வருவது இயல்பு என்பதைப்பற்றி இவர் அவரே எனத் தெளிந்த துளசிதாசர் அவ்வரை விடாமல் தொடரத் தொடர அவர் போனபடியே இருந்தார். சிக்கெனப் பிடித்துக்கொண்டு துளசிதாசர் "பெருமானே உங்கள் சுயரூபத்தைக் காட்டியருள வேண்டும். ஸ்ரீராமனின் தரிசனமும் எனக்குக் கிடைக்க அருள வேண்டும்'' என்றார். அந்த முதியவரோ பித்தர்போலப் பேசாது போனார். நடுக்காட்டில் நடுநிசியிலும் விடாது பற்றித் தொடர்ந்த துளசிதாசரை உவந்து முதியவர் அனுமானாகக் காட்சி தந்தார். இராம தரிசனமும் கிடைக்குமென்றார், அந்த இடம்தான் இன்றைய சங்கட விமோசன ஆஞ்சநேயர் கோயிலிருப்பதாகக் கூறுவர். இதன் பின்புறச்சூழல் இன்றும் புதரும் காடுமாகவே உள்ளது,

பல்கலைக்கழகத்திற்குப் போகும் சாலையின் காசி எல்லையருகேதான் இக்கோயில் இன்றும் உள்ளது. இக் கோயில் இளைஞர்களையும் ஈர்த்து வருகிறது. பரீட்சைக் காலத்துப் பிள்ளையார் கோயில் போலவே இதுவுமாகி விட்டது.

இப்பகுதியருகே துர்க்கையாலயத்துக்கு அருகில் 'ஸ்ரீ சத்யநாராயண துளஸி மானஸ மந்திர்' என்ற பெயரில் பழமையைப் புதுமையால் பூக்க வைத்த கலைமாளிகை ஒன்றுள்ளது.

சலவைக் கல்லால் முழுதும் கட்டிய பெருமாளிகை. எல்லாம் துளசிதாஸ் இராமாயணக் காட்சிகளில் உயிரோ வியங்கள் செய்யப்பெற்ற கூடம். பதுமைகள் மின்சாதனத் தால் இயக்கப்பட்டு உயிர்தந்துள்ள ஒப்பற்ற காட்சி இது. பல்வேறு இராமாயண உயிரோவியங்கள். துளசி தாசர்

இராமயாணம் எழுதுவது போலவே மின்சாதன உயிர்ப் புதுமைக் காட்சி. கண்ணனைத் தேடிக் கையில் தம்புரா வுடன் ஓடி ஆடித்திரியும் மீரா பஜன் கூடம்.

மாடியிலும் கீழுமாக அழகைச் சிறைப்படுத்திய மாளிகை இது. அன்னபூரணி இலக்குமிநாராயணர், இராமர், இலக்குவர், அனுமான், சீதை முதலியோர் சலவைக்கல் சிலைகளாகக் கீழே உள்ள மாளிகையிலிருக் கின்றனர். இது இரத்தன்லால் சுரேகா எனும் செல்வர் தம் பெற்றோர் நினைவில் எடுத்த மாளிகையாகும். இராமச்சந்திரன் என்ற பெயரில் உள்ள முதல்வர் காலத்தில் கம்பன் மேட்டில் கம்பர் கோட்டம் கட்ட இருக்கிறார்கள். அதற்குத் துளசிதாஸ் கூடம் ஒரு முன் மாதிரியானால் நலமாகும்.

12. சாக்த காசி

(i) அன்னபூரணி

அன்னபூரணி பவானி என்று சேர்த்து அழைக்கப்படும் இப்பெருமாட்டியே காசிநகர் அரசியாவாள். "காசி புராதீச்வரீ" என்றே ஆதிசங்கரர் அழைக்கிறார் இவ்வம்மையை! விசுவநாதர் கோயிலிருக்கும் சந்தில் தென் புறமாக அவர் கோயிலுக்கு முன்னதாகச் சில கட்டிடங்கள் தள்ளிய அளவில் உள்ளது இவள் கோயில்.

மராத்தியர் காலத்தில் சர்தார் சந்திரசூடன் குடும்பத்தாரால் இக்கோயில் கட்டப்பட்டதாகக் கூறு கின்றனர். உண்மையில் பலகோயில்களின் இடிபாடு அன்னபூர்ணாவிற்கும் வந்ததென்றும்; இப்போதைய இக் கோயில் புவனேச்வரி கோயில்தான் என்றும், பழைய அன்னபூரணி இப்போது இராமர் கோயில் என இதனருகில் உள்ளதில் இருப்பதாகவும், இப்புவனேச்வரியையே அன்னபூர்ணாவாக மாற்றி விட்டதாகவும் ஆய்வாளர் கூறுவர்.

புவனேச்வரியும் அன்னபூரணியும் பவானியும் இப்படி எப்பெயரில் வந்தாலும் அவர்கள் யாவரும் பராசக்தியே ஆகையால் பெரிய மாற்றமாகக் கூற முடியாது.

எண்கோண வடிவில் நடுமண்டபம், சலவைக்கல் தளம், இதுதான் அன்னபூரணியின் மூலச்சந்நிதியாகும்.

இம்மண்டபத்திற்குச் சுற்றிலும் திருச்சுற்றுண்டு. பெரிதான அதில் திண்ணையும் கூறையுமாகத் தாழ்வாரங்கள் சுற்றியுள்ளன. கணபதி, தசாவதாரம், கோசலை, சூரிய நாராயணர், சத்ய நாராயணர் முதலியோர் சுற்றிலும் உள்ளனர். எப்போதும் அன்னபூர்ணியின் முகம் தவிர பிற திருமேனி மூடிய நிலையில்தான் இருக்கும். முகமும் கவசத்தால் மூடியபடியே உளது.

பொன் வடிவ மாதேவியான இவளை தீபாவளியில் திறந்து பூசை நடத்திவிட்டுப் பிறகு திரைபோட்டுவிடு வார்கள். தீபாவளி என்பது வடபகுதியில் 3 நாள் ஆகும். மூன்று நாளும் இந்த அம்மையைத் திரையின்றி யாரும் வணங்கலாம். பிறநாளில் உரிய சிபாரிசுகளின் வழி இவ்அம்மையைப் பக்கவாட்டில் நின்று சிறிது திரை நீங்கத் தரிசிக்கலாம்.

இக்கருவறைக்கு 3 வாயில்கள் உண்டு. தர்மத் துவாரம் பீட்சத் துவாரம் எனப் பக்கவாட்டிலுள்ள வாயில்களுக்குப் பெயர். இங்கு நின்று அன்னமும் அருளும் தருமாறு அன்னையை வேண்டுவர். காமாட்சி காஞ்சிக்கு வருவதற்கு முன்பு காசியில் அன்ன பூரணியாக விளங்கினாள். இதை எமது 'காஞ்சி காமாட்சி' நூலில் காண வேண்டுகிறோம்.

வணிகம் முதலியவற்றுக்குப் புதுக் கணக்குத் தொடங்கும் நாள் தீபாவளியாக வடநாட்டினர் கருதுவர். அன்று திருமகள் தமது இல்லத்திற்குள் வருவதாகக் கருதுவர். அன்று ஒரு புதுப் பொருளை—அது சிறிதோ பெரிதோ—வாங்குவர். நாம் பொங்கலில் வாங்குவது போன்றது இது. அதனால் இலக்குமி பூசை குபேர பூசை இரண்டும் தீபாவளியில் கொண்டாடுவர். அன்ன பூரணியைக் கொண்டாடுவதும் இந்த முறையில்தான் வளர்ந்தது.

இவ்வம்மையின் எதிரில் ஒரு ஸ்ரீ சக்ரமேரு அலங் காரத்துடன் உளது. இவளும் சர்வ ஆபரணங்களால்

மின்னுகிறாள். நிலமகளும் திருமகளும் இருபுறமிருக்கவே இவளிருக்கிறாள்.

" தாம் சின்மயீம் ஆனந்த லக்ஷணாம்
அம்ருத கலச பிசித ஹஸ்த த்வயாம். "

என்ற வருணனைக்கு ஏற்பக் கலசமும் கரண்டியுமாக விச்வேசரனுக்கே பிட்சையளித்தவளாய் அம்மை இருக்கிறாள்.

பவானி என்று அழைப்பதையும் வடநாட்டினர் இணைத்தது அற்புதமாகும். பவன் என்றால் சிவபெருமான்; அவனுடைய பத்தினி பவானி என்று ஆகும். பவ என்று வினைச் சொல்லாக்கினால் 'நான் ஆவேன்' என்று பொருள்படும். நீயாகவே நானாகிறேன் என்று கூறுவதைப் பவானித்துவம் என்பர். இது "ப்ரஹ்ம்மைவாஹமஸ்மி" என்ற வேதத்தின் மஹா வாக்கியத்தை ஒக்கும். அதாவது நான் பிரம்மமாகவே ஆகிறேன் என்ற உணர்வைக் குறிக்கும். ஆகவே பவானி என்று தாயை அழைத்தால் இந்த மகாவாக்கியத்தைக் கூறியதுமாகி விடுகிறது. இதன் பலனைச் சௌந்தர்ய லஹரியில் 22 ஆவது ஸ்லோகத்தில் ஆதிசங்கரர் கூறுகிறார். 'உபாசகன் பவானி என்று அழைத்தால் நீ மூர்த்திகள் மூவரையும் முடி தீண்டிய திருவடியால் மிக உயர்ந்த சாயுச்ய பதத்தையே அருளி விடுகிறாய்' என்று கூறுகிறார். எனவே அதே நாமாவை அன்னபூர்ணி பவானி என்று அழைப்பதில் வடநாட்டினர் பெருமை கொள்கின்றனர்.

காசி நகரே சிவசக்தி வடிவமாகையால் அன்னபூரணி சிவனுக்கு உகந்தவள். அவளை ஏனையோர் கொண்டாடுவதும் சிவனுக்கு உவப்பாகும்.

வியாசர் ஒருமுறை எங்கும் பிட்சை ஏற்க இயலாத போது மூன்று தலைமுறைக்குப் போகமும் திருவும் அறிவும் இக்காசியில் இல்லாது போகட்டுமெனச் சாபம் தரும்

கோபத்துடன் இருந்தபோது ஒரு வீட்டில் சிவசக்தி தம்பதியினரே இல்லறத்தாராயிருந்து வியாசருக்குப் பிட்சையிட்டனர். இதனால் கோபம் மாறிச் சாபமும் மாறிவிட்டது. போகமும் திருவும் அறிவும் இல்லாதவர் காசியில் மூன்று தலைமுறை வாராது ஒழியட்டும் என்று சாபத்தின் வடிவம் மாறிவிடுமாறு அன்னபூரணியே செய்து விட்டாளாம். இதனால் வியாசர் காசியிலிருந்து நீங்குமாறு விதிக்கப்பட்டார். அதனால்தான் அக்கரையில் வியாசர் ஆசிரமம் இருந்ததாகக் கூறுவர். அட்டமி சதுர்த்தசிகளில் மட்டும் வியாசர் வந்து காசியில் வணங்க உத்தரவும் ஆகியது. இவ்விரு திதிகளும் இக்கோயிலுக்குச் சிறப்பாவதையறியலாம். தீய திதிகளில் வழிபடுதல் சிறப்பு என்பதும் அத்தீமை நீங்குமென்பதும் அறியலாம்.

ஏகாதசியில் யார் கேட்டாலும் இல்லை என்றே கூற மாட்டார்கள். இது காசியின் மரபு. அன்னமிடுவோர் அன்னபூரணியாகவே ஆகின்றனர் என்பதுமாம். "அம்மா" என்று அழைப்பது அவ்வீட்டின் பெண்ணை மட்டுமன்று அங்கு அன்னபூரணியிருப்பதாகவும் அவளை அழைப்ப தாகவும் பொருளாம். அவள் இருக்கப் பிச்சை இல்லை என்றால் அவளே இல்லை என்று வீட்டினர் கூறியதாகி விடுமாம். அதனால் அன்னபூரணி அவ்வீடு விட்டும் அகலு வாளாம். இப்படி அறமரபு கால்கொள்ளுமளவு அன்ன பூரணியின் செல்வாக்குக் காசியில் மிகுந்துள்ளது.

கார்த்திகைத் திங்கள் பூர்வ பட்சத்தில் அன்னக் கூடம் என்ற உணவுப் படையல் இவ்வம்மைக்குச் சிறப்பாக நிகழ்த்தப்பெறுகிறது. பிற மாநிலத்தவர் விசுவரை நோக்கிக் காசிக்கு வரலாம். இங்குள்ளோர் அன்ன பூரணியைத்தான் விசுவரினும் உயர்வாகக் கொண்டாடு கிறார்கள். அன்னபூரணிக்கு உள்ளூர் செல்வாக்கு மிகுதி யாவது இதன் காரணமேயாம்.

(ii) விசாலாட்சி

காஞ்சியிலே காமாட்சி, காசியிலே விசாலாட்சி, மதுரையிலே மீனாட்சி என்ற வழக்கு தமிழர்க்கும் வேறு சிலர்க்குமே இன்றுண்டு. ஆனால் காசியில் விசாலாட்சி கால பைரவரோடு இணைக்கப்படுவதல்லது விசுவநாத ரோடு இணைக்கப்படவில்லை. அங்கே அன்னபூரணியே இணைக்கப்படுகிறாள்.

சக்தி பீடங்களுள் ஒன்றாகக் காசியில் விசாலாட்சியை நம்மவர்கள் நினைத்தார்கள். இங்கே உள்ளவர்கள் அப்படி நினைக்கவில்லை. காமாட்சி என்பது காஞ்சி யிலும், அசாமிலும் உண்டு; மீனாட்சிக்கு மதுரையாகும்; விசாலாட்சிக்கு காசியாகும் என்ற இப்பெயர்கள் கண் களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரையில் புராண இலக்கியத்தில் இப்பெயர் உள்ளது. அன்னபூர்ணா என்பது தேவியின் பல தொழில் வகை நாமங்களில் ஒன்று. புவனேச்வரி, பவானி, விசாலாட்சி முதலியன குறிப்பிட்ட ஒரு தொழில் வகையைக் குறிக்காமல் பொதுவாக உள்ளன. திருமகள் கலைமகள் போல அட்ட இலக்குமி போல அன்னபூரணா என்பதும் ஒரு தனித் தொழில்வளத் தலைமைக்குரியது. ஆகவே சக்திபீடமாகிய காசியில் புவனேச்வரிக்கோ பவானிக்கோ விசாலாட்சிக்கோ இருந்த ஒரு தலைமை தான் அன்னபூரணிக்கு மட்டுமாக மாறியிருக்கிறது. ஆதிசங்கரர் அன்னபூரணாஷ்டகம் பாடியதால் அவர் காலத்தில் விசாலாட்சி இல்லை என்று சொல்லமுடியாது. காஞ்சிக்கு வருவதற்கு முன்னதாகப் பராசக்தியான காமாட்சி அன்னபூரணியாக இருந்து துன்பமும் துயரமும் நீக்கியதால் ஆதிசங்கரர் அந்த ஒரு தனிச்செயல் தலைமையை எண்ணி மகிழ்ந்தாரே தவிர விசாலாட்சியை விட்டு விட்டுப் பாடினார் என்பதோ அவர் காலத்தில் விசாலாட்சி இல்லை என்பதோ ஆகாது.

பல்லாயிரக்கணக்கில் இடிபட்ட கோயில்களுள் விசாலாட்சி கோயிலும் இடிபட்டிருக்க வேண்டும். பின்பு மராத்தியர் காலத்தில் புதிதாகக் கட்டப்பெற்ற இக் கோயில் அவர்களின் மனத்திற்குப் பிடித்தான புவனேச்வரியாக இருந்திருக்கலாம். பிறகு வாழ்வும் பொருளும் அரிதாகிப் பஞ்ச மேற்பட்ட காலங்களில் அன்னபூரணியின் செல்வாக்கு மற்றும் பலவகைகளில் பெரிதாகியிருக்கலாம். இது தவிர வேறு சொல்வதற்கு ஏதுமில்லை.

கங்காசாகரில் கபில முனிவர் சிலைக்கு அருகில் விசாலாட்சியே வைக்கப்பட்டதைக் காணும்போது, காசி விசாலாட்சியின் விசாலப் புகழும் தலைமையும் தெரிகின்றன. நூல் வழியாகவும் மரபு வழியாகவும் காசியை நோக்குகின்றவர்கள் விசாலாட்சியை மறக்க முடியாமல் உள்ளனர். அந்த வகையில் தமிழர்களே இங்கு விசாலாட்சி கோயிலுக்குப் போவதில் தனியார்வம் காட்டுகிறார்களன்றிப் பிறரில்லை. கட்டிக் காப்பவரும் தமிழரே தான்.

இது, விசுவநாதர் கோயிலுக்கும் சிறிது தொலைவில் ஒரு சந்தில் மிர்காட் பகுதியில் உளது; விசுவர் கோயிலுக்கும் தென்பகுதியே இதுவாகும். இது சிறிய கோயிலாகும். இது ஆடம்பரமில்லாத அமைதியான கோயில்; ஆனால் மரபு தவறாமல் ஆகம சாத்திர முறையில் பூசை நடக்கும் கோயிலாகும். கோபுரம் விமானம் எல்லாம் தமிழகப் பாணியேயாகும். மூலமான விசாலாட்சி சிறிய உருவில்தான் இருக்கிறார். கி.பி. 1893 ஆம் ஆண்டில் கட்டப் பெற்று கி.பி. 1908-ல் முதல் குடமுழுக்கும், 1971-ல் இதுவரை இறுதிக்குடமுழுக்கும் நடைபெற்றுள்ளனவாகும். இதைக் கட்டியவர்களும் காத்து வருவோர்களும் நகரத்தார் என்றழைக்கப்பெறும் தமிழகச் செட்டிமார்கள் ஆவர். அம்பாளுக்கு மகாசிவராத்திரியில் நான்கு கால அபிஷேகம் உண்டு. நவராத்திரி விழா, சிறப்புக்குரியது. விழா மூர்த்திக்கு ஒவ்வொரு பௌர்ணமியிலும் அபிஷேகம்

உண்டு. வெள்ளி, தங்கக் கவசங்கள், வாகனம், மேள தாளங்கள் இவையுண்டு. காலை பத்தரை மணிக்கும் மாலை ஆறு மணிக்கும் கால பூசையுண்டு. நிவேதனம் அபிஷேகம் ஆகியவற்றுக்கான பொருள்கள் நகரத்தார் சத்திரத்திலிருந்து போகும்.

தீபாவளியிலும் மகாசிவராத்திரியிலும் இத் தாயார் நகரத்தார் சத்திரத்திலுள்ள நகரேச்வரர் ஆலயத்திற்கு எழுந்தருளும் உலா உண்டு.

முன்பு ஒரு விசாலாட்சி விசுவர் கோயிலில் இருந்ததாகவும் அதை அந்நியர் கிணற்றில் வீழ்த்தி விட்டதாகவும் கூறுவர். தமிழர்கள் அதிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார் இல்லாவிடின் இங்கு விசாலாட்சி என்ற பெயருக்கு ஒரு சிறப்பில்லாமலே போயிருக்கும். அது நம்மவர்கள் செய்து வைத்த புண்ணியம் என்று கருதுவோமாக.

காசி நகரப் புகைவண்டி நிலையத்தில் இறங்கி எந்த மொழி தெரியாதவரும் நகரத்தார் சத்திரம் என்று கூறினால் வாடகை வாகனத்தில் ஏறி பத்திரமாக நகரத்தார்கள் நடாத்தும் சத்திரத்துக்கு வந்து சேரலாம். குமாரசாமி மடத்தையும் பிறவற்றையும் இவ்வளவு பிரபலமாக எல்லா வண்டியினரும் அறிந்திருப்பார்கள் என்பது உறுதியில்லை. இச்சத்திரம் குதோலியா என்னும் ஆறு சாலைச் சந்திப்பதில் மிர்காட்டிற்கு நேர் மேற்கே விசுவர் கோயிலுக்கும் தென்மேற்கில் உளது. குதோலியா என்பதே காசியின் மையப் பகுதியும் பரபரப்பான பகுதியும் வணிகப் பகுதியுமாகும்.

கி.பி. 1800 ஆம் ஆண்டு முதல் கல்கத்தாவில் கப்பல் கம்பெனிகள் பெருத்தமையால் நம் நகரத்தார்களும் வணிகம் கருதி அங்குப் போயினர். கம்பெனிகள் தந்த 'ரிபேட்' தொகையைச் செலவு செய்யாது தருமத்துக்குரிய பொதுநிதியாக்குவது என்று முடிவு செய்தார்கள். அந்தக் காலத்திலேயே இருபத்தையாயிரம் ரூபாய் ஆண்டு

தோறும் 'ரிபேட்' மட்டும் என்றால் வணிகச் செல்வாக்கை நாம் கணக்கிடமுடியும்.

பல இடங்களிலும் தருமம் செய்துவரும் நகரத்தார் கல்கத்தா அளவு போனதும் காசியில் தருமம் செய்வதை மேலானதாகக் கருதியதில் வியப்பில்லை. குமர குருபரர் தொடங்கிய மடாலயத்தில் சிலகாலம் இப்படி இருந்து தருமம் செய்தனர்; பிறகு வேறு ஓரிடத்தில் தங்கியும் தருமம் செய்தனர்; அதாவது சிவராத்திரியில் விசுவருக்கு அபிஷேகம் செய்வது, யாத்திரை வருவோர்க்கு அன்ன தானம் செய்வது முதலியனவே அப்போது நடவடிக்கையாக இருந்திருக்கிறது.

தனியாக இடமின்றி ஐம்பதாண்டுக்காலம் தருமப் பணியாற்றியபின் தங்களுக்கெனத் தனியிடம் இருக்க வேண்டியதை நடைமுறையின் வற்புறுத்தலால் பெற்றனர். இந்துஸ்தானி கோஷாயி சாதுக்கள் மடம் அப்போது விலைக்கு வந்தது. கி.பி. 1863-ல் அதை வாங்கித் திருத்தம் பலவும் செய்தனர். இன்று நூற்றியிருபத்தோராண்டுகளாகி விட்டன.

அறவிதை அதன்பலனைத் தந்த காட்சியாக கி.பி. 1880-ல் கல்கத்தா நகரில் மிகப்பெரிய பொருளை நகரத்தார்கள் ஈட்டினர். அக்காலத்தில் வணிகத்தில் நாணயம் இருந்தது, சட்டங்கள் வணிகத்திற்கு வாய்ப்பாக இருந்தன, முயற்சியில் பலன் கிடைத்தது. தவறாகப் போய்ப்பொருளீட்டத் தேவை யற்றும் இருந்தது. இது காரணமாகவே பொதுப்பணம் திரட்டும் வாய்ப்பும் செழித்தது என்ற உண்மையையும் இவர்கள் வரலாறு நாட்டுக் குணர்த்துகின்றது.

இக்காலத்தில் பக்தியிருந்தும் இப்படிப் பொது அமைப்புகள் வளர முடியாத காரணம் அரசியல், சமூக இயல், பொருளியல் காரணங்களே என்று அறியவேண்டும்.

பொது நிறுவனங்கள் செழித்தபோது பலர் பிழைக்க முடிந்தது. இப்போது அவை தடைப்படுவதால் அரசு செய்ய வேண்டிய கட்டாயத்தைத் தோளில் பாரமாகச் சுமக்கிறது என்றறிகிறோம். செல்வம் செழித்ததும் கல்கத்தா, காளிகாட், பிரயாகை, அயோத்தி, கயா, தாடகேச்வரம், கோதாவரி முதலிய இடங்களில் கட்டிடங்களுடன் கூடிய சத்திரங்களை யமைத்தனர். இவர்களைப் போலவே பம்பாய் நகரத்தார்கள் நாசிக்கில் பஞ்சவடியில் சத்திரமும் தண்டாயுதபாணி திருவுருவும் தாபித்தனர்.

இப்பழக்கமே கோலாலம்பூர், சிங்கப்பூர் முதலிய வெளி மண்ணிலும் விரிவான அறப்பணிகள் தொடரக் காரணமாகியது.

கல்கத்தா சென்ற சமூகத்தினரே இரங்கூன் சென்றனர். பர்மாவில் அவர்கள் செல்வாக்கு மிகச் சிறப்பாய் ஒருகாலத்தில் இருந்தன. இராமநாதபுரச் சீமையில் இன்றும் பல வீடுகள் பர்மாத்தேக்கு மரத்தில் பளபளப்பாக மின்னுவதைக் காணலாம். இவை அக்காலத்தின் பசுமை நினைவுகளே.

1925 ஆம் ஆண்டுக்குப்பின் இரங்கூன் வணிகத்தார் தமது வணிக மரபில் 'மகமை' எழுதிச் சேர்த்து வரலாயினர். "ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொஸைட்டி" என்ற அமைப்பை இரங்கூனில் 1934-ல் பதிவு செய்து அத்தர்ம நிலையங்களை மேற்பார்க்குமாறு விட்டிருந்தார்கள்.

1942-ல் இரண்டாவது உலகப்போர் காரணமாகப் பர்மாவின் பணம் வருவதில் தடை ஏற்பட்டது. அதனால் நாள்தோறும் 300 பேருக்குக் குறையாமல் செய்து வந்த அன்னதானமும் நின்று போனது. பூசையாவது நாள் தோறும் குறைவற நடக்கவேண்டும் என்பதால் நன்கொடை வசூல் குழுவொன்று கி. பி. 1943-ல் நியமிக்கப்

பெற்றது. பிறகு இத்தாபனங்களை ஆட்சி செய்யும் நேரடிக் குழுவும் காரைக்குடி அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் ஏற்படுத்தப்பட்டது.

காசிநகரில் நகரத்தார் தங்காது போயிருந்தால் விசுவர்க்கு உவக்கும் ஆராதனை முறைகள் மரபு மாறி யிருக்கக் கூடும். குடிவழியாக வந்த கோயில் உரிமையால் உரிமை மிகுதியாகப் பேசப்படுமேயன்றி உரியவை பேசப் படுமா என்பது சந்தேகமே! வணிகமுறைப் போட்டியே பண்டாக்களிடம் வளர முடியுமே தவிர வழிபாட்டு நெறி மேன்மை வளர்வது அரிது! ஆகவே நம் நகரத்தார்கள் அங்கிருந்த பண்டாக்களை அணுகுமுறைச் சாதுர்யத் தால் அணுகித் திருவனந்தல், உச்சிக்காலம், அர்த்தசாமம் ஆகிய மூன்றுகாலப் பூசைகளைத் தாம் நடத்தும் உரிமை பெற்றார்கள். இன்றுவரை இப்பூசைகளை நெறிப்படச் செய்து வருகிறார்கள். பண்டாக்களும் இவர்கள் நடத்தும் உரிமையை இதுவரை கசப்பாகக் கருதாமலிருக்கிறார்கள் என்றால் நம்மவர்களின் நயம் விளங்குகிறது.

குளிர்காலக் கம்பளிச் சட்டையாக மக்கல்பட்டு விசுவருக்கு அளித்த கட்டளையும், நாகாபரணம், தங்க மகுடம், மடைப்பள்ளி, மற்றும் பள்ளியறை வெள்ளிக் கட்டில் பிறவெள்ளிச் சாமான்கள் பலவும் நகரத்தார் அளித்துள்ளனர்.

பழங்காலக் கல்வெட்டுக்களில் கோயில் பூசை நிபந்தங்கள் எழுதப்பட்டதுபோல் தனித்தனிப் பொருள் நீராட்டிற்கும் நிவேதனத்துக்கும் பிறவற்றுக்கும் நாள் தோறும் சத்திரத்திலிருந்து போகின்றன. விசுவநாதர் அர்த்தசாமத்தில் நாதசுர ஓசை கேட்பதே நகரத்தார் திருப்பணியால்தான்.

திருப்பள்ளி எழுச்சியான திருவனந்தல் எனும் உஷக் காலப் பூசையைப் பண்டாக்களே நடத்துகின்றனர். எனினும் உரிய பொருள் யாவும் நகரத்தார் தருவனவே.

அர்த்தசாமத்துக்குப் போகும் போதே விடிகாலை மூன்று மணிக்கு நடக்கும் உஷக் காலப் பூசைக்குரிய பொருள் சத்திரத்திலிருந்து கொண்டுபோகப் பெறும். பண்டாக் களிடம் உரிமை பெற்றோரும் சத்திரத்தார் பரிந்துரைத் தாரும் சென்று திருப்பள்ளியெழுச்சியைக் காணலாம். பூசைப் பொருள்கள் காலையும் மாலையும் சத்திரத்தி லிருந்து ஊர்வலமாக எடுத்துப் போவது அரிய காட்சி யாகும்.

இதற்காக வடவிந்தியப் பிராமணரும் தமிழகப் பிராமணரும் உளர். அர்த்தசாமப் பூசை சிருங்காரப் பூசை என்று வட விந்தியரால் கூறப்பெறும் பள்ளியறை யுாதலால் இப் பெயர் வந்தது. ஆனால் 'சம்போ' என்று வழக்கிலுள்ள பெயராகவே உள்ளது. "சம்போ சங்கர மகாதேவா" என்று முழங்குவதே இப்பெயர் காரண மாகும். மாலை 7½ மணிக்குத் தொடங்கும் மன்னர் நிமித்தமான சப்த ரிஷி பூசையை யடுத்து இரவு 9½ மணி யளவில் 'சம்போ' நடக்கும். நாதசுரம் இசையுடன் பிராமணர்கள் அர்ச்சனைப் பொருள் சுமக்கவும் நகரத் தாரும் பிறரும் பின் செல்லவும் இந்த ஊர்வலம் காசி நகரில் மதிப்புக்குரியதாகும்.

வீதியில் நிற்போர் கடைகளில் இருப்போர் இதை மரியாதையாக மதித்தலும் விசுவரை எண்ணித் தொழு தலும் காணுவது சிறப்பாகும். 1942-ல் தடைச்சட்டம் இருந்தது. "வெள்ளையனே வெளியேறு" என்ற விடு தலைக் கிளர்ச்சியின் வெந்தணல் நேரமது. அப்போதும் கூட அரசியலார் இந்தச் சம்போ ஊர்வலம் செல்வதைத் தடை செய்யவில்லை என்பது நகரத்தாரின் பக்தியும் மரபும் பொறுப்பும் தேடிக் கொண்ட நற்சான்றிதழாகும்.

இச் சத்திரநிதி முழுதும் நகரத்தார் கொடையே ஆகும். பிறரிடம் நன்கொடை பெறுவது வழக்கம் இல்லை—இது நடைமுறைச் சிக்கலை உருவாக்கும் என்பதே காரணமாகும்.

மிகக் குறைந்த வாடகைக்கு இச்சத்திரத்தில் தங்கலாம். ஒரு நகரத்தார் பரிந்துரையிருந்தால் நலம். பாதுகாப்பும் அமைதியும் உதவியும் இச்சத்திரம் தருகிறது. பெரிய இடம் தங்கள் நட்சத்திரத்தன்று விசுவருக்கு அபிடேகம் செய்ய வேண்டுவோரும், மோட்ச தீபம் போட வேண்டுவோர், அஸ்தி கரைக்க வேண்டுவோர், குடங்கள் நிறையக் கங்கை நீர் வேண்டுவோர், இச்சத்திர மேலாளருக்குப் பணம் அனுப்பினால் உரிய முறை நம்பிக்கையோடு அவை நிகழ்த்தப் பெறுகின்றன.

இச்சத்திரத்தில் முன்பு ஒரு துறவியின் சமாதியிருந்தது. அதில் சிவலிங்கம் உளது. அதைப் பாதாளீச்வரர் என்று அழைக்கின்றனர். நகரேச்வரர், அன்னபூரணி கோயில்களும் உள்ளன. முருகன், நடராசர், பரமசிவன் பார்வதி படங்கள் இச்சத்திரத்தின் மாடியில் உள்ளன. இங்குப் பஜனை தேவார திருவாசகப் பாராயணம் நான் தோறும் நடக்கும். இக்கோயில்களுக்கு முறையாகப் பூசையும் குடமுழுக்கும் நடந்துள்ளன.

விசுவர் கோயில் சிறப்பான ஒழுங்கு பெறவும், விசாலாட்சி கோயில் பெறவும், தமிழர்கள் தரிசன உதவி பெறவும், நகரத்தார் சத்திரம் பல வகையில் பயன்பட்டு வருகிறது. வாடிக்கையாளர் மனம் கோணாமல் பாதுகாப்பது வணிகத்தின் இலக்கணம். அதில் ஊறிய செழுமையுள்ள நகரத்தார் அறச் செயல்கள் செய்யும் பாங்கிலும் இனிய முறையில் நடந்து இனியவைகளைச் செய்து, மொழி பெயர் பகுதியிலும் உரிய சிறப்பைப் பெரிதும் பெற்று வருகின்றனர். இது தமிழகமே உவக்கத் தக்க சிறப்பாகும்.

(iii) வாராஹி

காசியில் சாக்தத் தொடர்பில் இன்றியமையாத தனிக்கோயில் வாராஹிக்கே ஆகும். மஹாதிரிபுர சுந்தரியின் சேனைத் தலைவியாக இருப்பவள் இவளே.

ஸ்ரீவித்யா பூஜையில் 32ஆவது அங்கமாகத் தண்டநாதா நாமாவளி என்று வாராஹி தனியே வணங்கப்படுகிறாள். இவளுக்கு ஒத்த சிறப்பு சியாமளாவாகிய மந்திரிணி யாகியவளுக்குண்டு. மதுரை மீனாட்சி மந்திரிணி என்று மனம் கொள்ளும்போதுதான் வாராஹியின் பெருமையும் புரியும்.

ஸ்ரீநகரம் எனும் ஸ்ரீசக்கர மாளிகையின் வாயிலகத் தேயே வாராஹிக்கும் மந்திரிணிக்கும் தனிப்பட்ட இருக்கைகள் உண்டு. நம் உடம்பில் புருவ மத்தியாகிய ஆக்ஞாசக்கரத்திற்கே இவ்வன்னை நாயகியாவாள். "ஓம் ஆக்ஞாசக்ரேச்வர்யை நம:" என்று இவள் ஸ்ரீவித்யாவில் வணங்கப் பெறுகிறாள்.

பன்றி முகமும், சங்கு சக்கரம், வாள், கேடகம், தண்டக்கோல், கலப்பை, அபயம், வரம் என்று எட்டுக் கைகளுடனும் இவ்வம்மை காட்சி தருவாள். வராக அவதாரத் திற்கு மூலமான தசவித்யாக்களில் ஒருத்தியென்றுணரப் பெறுவாள். இவள் வெற்றியின் வடிவம். மகிஷாசுர மர்த்தினி, துர்க்கை, காத்தியாயினி முதலிய கொற்றவை வடிவங்களின் ஐக்கியமே வாராஹியாகும். துர்க்கைக்கு வெளிப்பாடாகியது காசித்தலமே ஆகும். ஆகவே காசியில் வாராஹி வழிபாடு சிறப்புக்குரியதாக உள்ளது.

ஆணவம் அடங்கவும் ஆத்மசைதன்யம் வெளிப் படவும், விழிப்பு, உறக்கம், கனவு ஆகிய மூன்று நிலை களுக்கும் இவள் ஒருத்தியாயிருந்தே அருள் பாலிக்கிறாள். பிடாரி என்று கிராம தேவதை ஆக்கப் பெற்றதும் இவள் வழிபாட்டின் விரிவே.

வாராஹி என்ற பொருளில் பூமியும் பிரபஞ்சமும் அல்லது ஆகாயமும் குறிக்கப்படும் காசியும் இவ்வுலகும் தேவ உலகச் சம்பந்தமான காரணத்தால் காசியில் இவளுக்குச் சிறப்புண்டு. மனம் நினைத்ததை உடல்

செயலாக்குவது இவள் பொறுப்பிலிருக்கிறது. வியாசர் நினைத்த சாபம் காசியின்மேல் விழாதபடிச் செயலழிந்து போன காரணம் காசியின் இவள் ஆளுகை இருப்பதால் தான். நவராத்திரியில் இவள் வழிபடப்பெறுவது மூன்று நாள்களாகும்.

வாராஹி வடிவம் அம்சம் எல்லாம் ஐக்கியமாகியே அகிலாண்டேச்வரியாகத் திருவானைக்காவில் அருளாட்சி செய்கிறாள். வாராஹி வழிபாட்டில் வெற்றி பெற்றவனே விஸ்வாத் மக பிரக்ஞை உடையவன் என்றும் அவனே விஸ்வரூப தரிசன யோகம் சித்தியடைந்தவன் என்றும் கூறப் பெறுகிறான்.

மஹா திரிபுரசுந்தரியின் ஆயுதங்கள் ஐந்து, மலர் அம்பு, கரும்பு வில், அங்குசம், பாசம் ஆகிய நான்குமாகும். இவற்றின் செயல்திறம் செய்பவளே வாராஹியாவாள். எல்லாவிதமான அரிஷ்டம் தோஷம் யாவும் போக்குபவள். இவளுக்கு 12 திருநாமங்களுண்டு. அவற்றில் பஞ்சமீ என்பது மிகுந்த சிறப்புக்குரியது. அதாவது இறைவனின் 5 தொழில்களில் ஐந்தாவதாகிய அருளல் தொழிலையும் அதற்குரிய சதாசிவனுக்கு ஆத்ம வித்யாவாகவும் இவளே இருக்கிறாள்.

தாருகன் வதத்தில் காளிக்கும், கம்பாசுரன் வதத்தில் சண்டிகாதேவிக்கும், பண்டாசுரன் வதத்தில் ஸ்ரீலலிதா வுக்கும் இந்த வாராஹியே உதவியதாகப் புராணங்கள் உள.

சியாமளா இச்சாசக்தி என்றும், வாராஹி கிரியா சக்தி என்றும் கூறுவர். காமாட்சியம்மன் (காஞ்சி) ஆலயத்தின் கோஷ்டத்திலும், தஞ்சைப் பெரிய கோயிலில் தனிச் சந்நிதியிலும் வாராஹி வணங்கப்படுவதிலிருந்து பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் இவள் வழிபாடு சிறந்திருந்ததை அறியலாம். கண்ணகியின்

சீற்றம் சியாமளா நிலையாகிய மதுரையில் நிகழக் காரணமே வாராஹியருள் என்றால் மிகையில்லை. இது பற்றித் தாருகன் பேருரம் கிழித்த பெண்ணுமல்லள் என்றும் மேலும் பல அசுரர்களைக் கொன்ற பெண்ணு மல்லள் என்றும் இளங்கோவடிகள் சிலம்பில் வழக்குரை காதையில் நாம் காவலன் வாயிலாகக் கூறக் கேட்கிறோம். அதற்கு என்ன காரணம்?

தெளிவற்றவனாகிய காவலனுக்குக் காளியில்லை என்று மட்டுமே கூறமுடிந்தது. பாண்டியன் அது கேட்டுக் காளிக்கும் ஆற்றல் அருளிய வாராஹி என்றுணர்ந்ததால் அவன் "பெண் அணங்கே" என்று கண்ணகியைத் தெய்வ மாக அழைக்கிறான்.

கண்ணகியைக் காட்டில் சாலினி எனும் வேட்டுவப் பெண் தெய்வம் ஏறப்பெற்ற நிலையில் காணுகிறாள்.

> " ஒருமாமணியாய் உலகுக்கு ஓங்கிய
> திருமாமணி இவள்."

என்று பாராட்டுகிறாள். மணி மணி எனக் கூறப்பட்ட காரணம் ஸ்ரீசக்கரமாகிய ஸ்ரீநகரில் 16 ஆவது திருச்சுற்று வாராஹிக்குரியது. அது மரகத மணிமயமானது. ஆகையால்தான் வாராஹி அம்சம் உடையவளாக உணர்ந் தாள் சாலினி என்று சிலம்பு கூறுமாறுளது. ஆகவே தமிழகத்தில் வாராஹி வழிபாட்டின் சாக்த உணர்வு தலை சிறந்திருந்த பழையகாலம் புலனாகிறது.

இந்த வாராஹியின் பெருமையை விரித்த காரணம் பாதாளத்தில் மறைவுக் கோயிலில் காசியில் அவள் வணங்கப்படும் காரணத்தை அறிவிக்கவே ஆகும். இவ் வாராஹி கோயிலமைந்த படித்துறை திரிபுர பைரவி காட் என்று இவள் காரணமாகவே அழைக்கப்படும் பெருமை யையும் அறியவேண்டியுளது.

காசியில் மிகுந்த ஆசாரங்களுடன் தவறு நிகழாதவாறு இக்கோயில் பூசை நடக்கிறது. தண்டினி என்று (சேனைத் தலைவி) இவளை இங்கே அழைக்கிறார்கள். நரபலி பிறபலியும் ஒருகாலத்தில் நடந்த இடம் இது. இன்று அவற்றைச் சட்டம் தடுத்துவிட்டது. பகல் நேரத்தில் பூசையில்லை. சேனை வீரர்களும் தலைவர்களும் இரவுநேரத்தில் தான் விழிப்பாக இருப்பார்கள். தீயசக்திகளின் செயல் திட்டம் அரங்கேறும் நேரம் அதுதானே. ஆகவே வாராஹி பூசையும் நடுநிசியாகிய 12 மணிக்குத் தொடங்கும். அபிஷேக ஆராதனை நடைபெறும். உதயத்துக்குச் சிறிது முன்னதாகச் சுமார் ஐந்தரை மணியளவில் கோயிலை மூடிவிடுவார்கள்.

காசிக்கு வருவோர் தவறாமல் பார்த்து அன்னை அருள் பெறவேண்டிய கோயிலிது. சித்தர்களும் யோகிகளும் பாலா திரிபுரசுந்தரியாகிய வாலைக்குமரியிடமும் வாராஹியிடமும்தான் எளிதில் அருள்பெறமுடிந்துள்ளது. இந்த அருளே மஹாதிரிபுரஸுந்தரியருளை முழுதும் பெறுவதற்கு வழியாகியும் உள்ளது. அட்டமாசித்தியெல்லாம் செயல் வடிவங்கள்; அவற்றை இந்தத் தாய்தான் தரவேண்டும்.

இரும்புக்கதவு போட்டுப் பாதாளத்தை மூடியிருக்கிறார்கள். கோயில் பண்டா கதவின் அருகில் அமர்ந்திருப்பார். ஓராள் உயரத்துக்கான வடிவம் நமக்கு ஆகாயப் பார்வைக்குத் தெரிவதுபோல் தெரியும். தலைக்கும் கீழான முகத்தைப்பார்க்கவே உக்கிரமாக இருக்கிறது. வீரர்களை நேசித்து அருள்தரும் பிராட்டியாதலால் உக்கிரமாகத்தான் இருப்பாள். 'ஓம் வீராய நம:' என்றே அவள் வழிபடப்படுகிறாள்.

முகத்தின் நேர் தரிசனத்தில் பயம் வரும் என்றாலும் திருவடித் தரிசனத்தில் பாசம் மிகும் தாய்மை வெளிப்படுமாகையால் கீழே உள்ள துவாரத்தின் வழியாக

இவ்வம்மையின் பாததரிசனம் கிடைப்பதை நாம் அனைவரும் பெற்று உய்யலாம்.

இங்கு நடைபெறும்பூசை வேதாந்த முறையைப் பின் பற்றியதன்று; தாந்திரம் எனப்படும் சாக்த முறையைப் பின்பற்றியதாகும்.

மந்திரிணியாக மீனாட்சி, வாராஹியாக ஆனைக்கா அகிலாண்ட நாயகி, ராஜராஜேச்வரியாகவும் லலிதா வாகவும் காஞ்சி மற்றும் மாங்காட்டுக் காமாட்சிகள் தமிழகத்தின் சிறப்புக்களாகும். கன்னிகா பரமேச்வரி யாகக் கன்யாகுமரி, ஸர்வதாண்டவ சாட்சிணியாகத் தில்லையிலே சிவகாமி, மோட்சபுரித் தலைநகராம் காசி யிலே அன்னபூரணி, புவனேச்வரியாக விசாலாட்சி என்று இந்த வரிசையைச் சாக்த முறையில் இன்றும் தமிழர்கள் நினைந்து போற்றுகிறார்கள்.

இதன் வெளிப்பாடுதான் காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி என்று சுருக்கமாக அவர்கள் கூறும் பேச்சு வழக்கு மரபாகும். சாக்தம் நிலைகொண்ட பாரதத்தில் தமிழகம் கேரளம் பெரும் பங்கு கொண்டதை இவற்றால் உணர முடியும்.

(iv) துர்க்கை ஆலயம்

துர்க்கைக்குரிய பூர்வத்தலம் காசியே ஆகும். மரபுச் செய்திகளால் பல இடங்களில் இணைத்துக் கூறினாலும் காசிக்கே உரிமை கொண்டிருப்பதைத் துர்க்கையின் நாமாவளிகளால் உணரலாம். "ஓம் விசாலக்ஷ்யை நம:" என்ற நாமாவளியால் காசிக்கே உரிமையாவது தெளிவு.

'ஓம் வாராஹ்யை நம:" என்பதால் காசியின் வாராஹிகோயில் சிறப்புக்கும் துர்க்கைக்கும் உரிய இணைப்புப் புலப்படும், "ஓம் லலிதாயை நம:", "ஓம்

ஸரஸ்வத்யை நம:", "ஓம் மஹா லக்ஷ்ம்யை நம:" "ஓம் மஹாதிரிபுர சுந்தர்யை நம:" என்ற நாமாவளிகளால் ஸ்ரீவித்யா தொடர்பையும் "ஓம் சிவாயை நம:" "ஓம் பத்மநாப ஸ்ஹோதர்யை நம:" என்பதால் சாக்த தத்துவப்படி மூலமாயிருப்பதையும், "ஓம் குமார்யை நம:" என்பதால் துர்க்கை என்பதையும் "ஓம் விச்வரூபிண்யை நம:" என்பதால் குமாரியாயினும் வடிவத்தால் விசுவ ரூபம் கொண்ட பெரியாள் என்பதையும், "ஓம் தாராயை நம:" என்றதால் காசியின் அமிர்தேச்வரியான அன்ன பூர்ணா என்பதையும் காணலாம்.

வாராஹிக்கே உரிய நாமம் யாவும் துர்க்காவுக்குப் பொருந்தும். "ஓம் ம்ருத்யுஞ்ஜயாயை நம:" "ஓம் ம்ருத்யுரூபாயை நம:" என்ற வாராஹி நாமாவளிகள் யமரூபமாகப் பகைவர்க்கும் யம பயமற்றவளாக அன்பர்க்கும் உரியவள் ஆவதைக் காசிக்குரிய சிறப்பாகக் கொண்டு துர்க்கை வாராஹி ஆகியோர் காசியோடு தொடர்பு கொண்ட வலிமைய உணரலாகும்.

" காத்தியாயன்ய வித்மஹே
கன்யாகுமரி தீமஹி
தன்னோ துர்க்கி: ப்ரசோதயாத்"

என்பது துர்க்கா காயத்ரி மந்திரமாகும். இது தென் கோடியான கன்யாகுமரியில் உள்ள பரமேச்வரியும் துர்க்கை வடிவானவள் என்பதைக் காட்டும். கடல் அழிவால் நிலம் மூழ்காமல் காக்கும் செயல் கருதி துர்க்கையைக் குமரியில் வைத்து வழிபட்ட தன்மையை உணரலாம். குமாரி என்ற பதமே துர்க்கையை மட்டும் தான் குறிக்கும். விச்வரூபியாக இருந்தாலும் ஒன்பது வயதுக்குரியவள் என்றே அவள் கருதப் பெறுகிறாள்.

பழைய காலத்தில் பதினொரு வயதும் பத்து மாதமும் பெண்களுக்குத் திருமண வயது என்று இலக்கிய இலக்கணங்கள் பேசுவதால் ஒன்பது வயது குமரி என்று பேசப்

பட்டு வடிவமும் அப்படி அமைக்கப்பட்டது. ஸ்ரீவித்யாவில் 44 ஆவது பகுதியாகப் பூசிக்கப்படுபவள் துர்க்கை, கல்யாணி, ரோஹிணி, கௌமாரி, குலகுமாரி என்று பலவகையாகப் பூசிக்கப் பெறுவதும் குமாரி பூஜனம் என்று அழைக்கப்பெறுவதும் இதற்கு முன்பு ஸுவாஸிநீ பூஜா என சுமங்கலித்துவம் பூசிக்கப்பெறுவதும் சாக்தத்தில் துர்க்கைக்குரிய சிறப்புக்களை அறிய வாய்ப்பாகும்.

இவ்வளவும் நாம் விசாரித்தது காசி துர்க்கைக்குரிய தலம் என்பதற்கும் அது காரணமாக சாக்தப் பெருமைக்குரிய தலம் என்பதற்கும், வடக்கும், தெற்கும், மேற்கும், கிழக்கும் சாக்தத்தால் இணைக்கப்பட்டுக் காசியுடன் பிணைக்கப்பட்டது என்பதற்கும் ஒரு சிறு வடிவம் உணர்த்தும் நோக்கமே ஆகும். துர்க்கை வழிபாடு பல வகைகளில் காசியிலும் இந்தியச் சிற்றூர்களிலும் மேற்கொள்ளப்படுவதையும் இங்கே நீள நினைக்க வேண்டும்.

கருவறைகளில் மகிஷாசுரமர்த்தினி, துர்க்கை நீர்த் தூம்பிற்குமேல் காவல் தெய்வமாக நிற்பதைத் தமிழகம் முழுதும் உணரலாம். நவராத்திரி விழா நாடு முழுதும் ஏற்று நடத்தப்பெறுவதையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். சிற்றூர்களில், மலைவாழ் பழங்குடி மக்களில் பகை ஒடுக்கும் பெண் தெய்வம் பலவகைகளில் காணப்பெறுகின்றது. எங்கும் குலதெய்வமாகப் பேசப் பெறுவதில் பெரும்பகுதியும் பெண் தெய்வமே இருப்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

ஆறு, குளம் முதலிய நீர்த் தெய்வமும், கல்வி, செல்வம், நாடு, போர், நிலம் முதலியவற்றுக்கான வழிபடு தெய்வமும் பெண் தெய்வமாக இருப்பது சாக்தம் இந்தியாவில் வேரூன்றிய தன் வெளிப்பாடாகும். ஹரப்பா மொஹஞ்சதாரோவில் அகழ்ந்து எடுக்கப் பெற்றவற்றில் பெண் தெய்வம் இருக்கிறது. ஆண் பெண் அடையாளம் உணர்த்தும் இலிங்கம் இருக்கிறது என்ற ஆய்வு நோக்கில்

சாக்தம் பழமை மிக்கது என்று அறியலாம். செவ்வாடை, மஞ்சள் ஆடை, வெள்ளாடை முதலியன பெண் தெய்வங் களின் வழிபாட்டில்தான் சிறப்புத் தகுதியைப் பெறு கின்றன.

இதுகாறும் கண்டவற்றால் இந்தியா சாக்த உணர் வினுள் மூழ்கிய நாடு என்பதும், அச் சாக்தம் சைவ வைணவ பேதமற்ற பழைய சமயம் என்பதும், அது காசிக்குத் தலைமைதந்தது என்பதும் புலனாகும். சாக்தம் காளி வழிபாட்டில் சிறக்கும் வங்காளத்து மக்கள் காசியை மிகுந்துமே பாற்றுகின்றனர். உஜ்ஜயினி மகா காளியை வழிபடும் ராஜபுத்திரர்களே அக்பர் காலத்தில் காசியைப் புத்துயிர்ப்பில் உருவாக்கினார்கள். சாக்தமும் கணேச வழி பாட்டை உள்ளடக்கியதாகும். அதற்குரிய மராத்தியர் களே அவுரங்கசீப் அழித்த காசியை மீள உண்டாக்கினார் கள். தமிழகம் சாக்தத்தில் என்றும் ஈடுபாடு கொண்டது, பகவதி வழிபாட்டுக்குரியது கேரளம் இவ்விரு பகுதியினரும் காசியில் கல்விச் செல்வத்தையும் பூசைச் சடங்குகளையும் காத்து வரத் தொடங்கினர். இன்னும் தாந்திரிக மரபுச் செயல்களும் யோகிகளும் காசியில் மிகுதியாயுள்ளனர். தமிழகம் பேசும் 18 சித்தர்களும் திருமூலரும் அபிராமி பட்டரும் யாரையும் கவர்ந்த தாந்திர வழிபாட்டினராவர். மன்னர்கள் கொற்றவை வழிபாடு இயற்றுவதைத் தமிழிலக்கண இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன. எனவே காசியில் துர்க்கை ஆலயம் சாக்தப் பெருமையின் நிலையமாகும் என்று உணரவேண்டும். அன்னபூர்ணா, புவநேச்வரி, விசாலாட்சி, துர்க்கை முதலிய தெய்வங் களுக்குக் காசியில் ஒரு சிறப்பான இடம் இன்று தரப் படுவது சாக்தச் சிறப்பை நிலைநாட்டும்.

காசி இந்துப் பல்கலைக்கழகத்திற்குப் போகும் தென் புறம் நோக்கிய சாலை வழியே அனுமன் கோயில் துளஸி மானஸ மந்திர் ஆகியவற்றைப் பார்த்ததுபோல,

அந்தத் துளஸிமந்திருக்கு முன்னதாகவே துர்க்கா கோயில் உள்ளது.

இங்குக் குரங்குகள் மிகுதி; போய் வருவோரிடம் குறும்புகள் செய்து உரிமை கொண்டாடும் கோயிலாகை யால் குரங்குக் கோயில் என்றே பலர் கூறுவதுண்டு. தென் பகுதியிலிருந்து காசியைக் காப்பதே இக்கோயில் அமைந்த இடச் சிறப்பாகும். இந்தியாவையும் தென்திசை நின்ற வாறேதான் காக்கின்றாள் துர்க்கை. வடக்கே பார்வதி உமாதேவியாகக் கைலாயத்தில் இருப்பதுபோல் காசியில் விசாலாட்சி வடபகுதியாக இத்துர்க்கை கோயிலுக்கு அமைந்துள்ளாள் எனலாம்.

காசிக்காண்டத்தில் துர்க்கா என்ற அசுரனைக் கொன்று வீழ்த்திய இடம் காசி என்றே கூறப்பட்டிருக்கிறது. அவனை வீழ்த்திய இடமே துர்க்கா குண்டமாகும். அதுவே இக்கோயிலைச் சார்ந்த பெரிய குளமாக இருக்கிறது. அவனை வீழ்த்தி அக்குண்டத்தின் கரையில் குமரியன்னை அமர்ந்ததால் கோயிலும் அங்குள்ளது. இப்போதைய கோயில் புதிது. இதனையடுத்த பழைய கோயிலும் உளது. அவனை வீழ்த்தப் பயன்பட்ட வாள் விழுந்த பள்ளமே அஸி நதியானது என்பர்.

இவனை வீழ்த்தியபின் அன்னை தானே சிலாரூபமாக அமைந்ததாகவும் கூறுவர். செவ்வாய் சனி ஆகிய கிழமை களில் கூட்டம் திரளும். வெண்மையும் சிவப்புமான கஜ்ஜுரோஹோ கல்லில் கட்டிய இக்கோயில் சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுந்ததேயாகும். எட்டுத் திசையும் இவள் விசுவம் விளக்குவதுபோல் எண்கோண மண்டபம் சிற்பத்தூண் காட்சியாகப் பொலிகிறது.

வழக்கம்போல முகம் ம்ட்டுமே கவசம் பூட்டியிருக் கிறார்கள் அன்னையின் திசையுணர்த்தும் பத்துக் கைகளும் திரையிடப்பட்டுள்ளன. மகாகாளி, மகாலக்ஷ்மி, மகா

சரஸ்வதி ஆகியோரை இக்கோயில் திருச்சுற்றில் காணலாம். கணேசரும் உள்ளார். அவர் யோக நிலையில் நிஷ்டை வடிவு தாங்கியுள்ளார்.

நவதுர்க்கைகளில் குஷ்மாண்ட தேவிஎன்று ஒரு திருநாமம் உண்டு. அதுவே இங்கு வழங்கப்படும் நாமமாகும். காசி மகாத்மியத்தில் நவராத்திரி பற்றி 12 ஆவது நூற்றாண்டில் பேசியதை நோக்க வேண்டும். புரட்டாசி ஐப்பசி மட்டுமல்லாது சித்திரையும் சேர்த்து ஆண்டுக்கு இரண்டு நவராத்தியுண்டாம். இதுவே சாக்கத்தப் பெருமையைக் காசி மிகுதியும் போற்றுவதற்கு எடுத்துக் கொள்ளலாம்.

தேவர் உலகிற்கு நண்பகல் நேரம் பங்குனி சித்திரை மாதம், நள்ளிரவு நேரம் புரட்டாசி ஐப்பசி ஆகையால் இரண்டு நவராத்திரிகள் கொண்டாடப் பெறுகின்றன.

இலட்சுமிதரர் எழுதிய புராணக் குறிப்பின்படி விசாலாட்சியை ஊழித் தாண்டவம் செய்த ருத்திரன் தூக்கிச் சுழற்றினானாம். ஆகவே அன்னை பல இடங்களில் தன் உறுப்புகளைச் சிதற விட்டாள். அவையே சக்தி பீடங்களாக உபசரிக்கப்படுகின்றன. இதன் பிறகே பார்வதியாக அவதாரம் செய்கிறாள்.

காசியிலிருந்து சக்தி பீடங்கள் உருவாயின என்ற வரலாறு சக்தி வழிபாட்டிற்குத் தலைவியாகக் காசியை உருவாக்கிவிடுவதை அறியலாம். இந்த வாரணாசி மாதா கோயில் திரிலோசனா காட்டில் உள்ள திரிலோசனர் ஆலயத்தில் உள்ளது. அவள் இருக்கும் இதே கோயில் திருச்சுற்றில்தான் விந்தியாவாசினி சந்நிதியும் உள்ளது. விந்தியாவாசினி என்றால் துர்க்கையின் பூர்வீகமான வாழிடம் விந்தியமலையாகையால் இப்படிப் பெயர் வந்தது. விந்திய மலையில் வாழ்பவள் காசியிலிருந்து உறுப்புக்கள் வீசப்பெற்றபோது விந்தியத்தில் சேர்ந்தாள் என்றும் துர்காசுரனைக் கொல்லக் காசிக்கு மீண்டாள்

என்றும் உணர்த்துவதாகவே திரிலோசனர் ஆலயத்தில் காசி மாதாவும் விந்தியாவாசினியும் இடம் பெற்றிருக்கிறார்கள்.

இத்தேவி போருக்கு வாளுயர்த்தி நிற்கும் நிலையில் கபால மாலையணிந்து ஆறு கைகள் வெளிப்படச் சக்கரம் உட்பட பல ஆயுதங்களுடன் உதிரம் குடித்துச் சிவந்த வாயுடன் உள்ளாள். பல்விதமான வண்ணத்துணிகளை வாங்கி வந்து இவள் பாதத்தில் வைத்துப் பிறகு தங்கள் தலையில் கட்டிக்கொள்வது வட இந்திய மக்கள் வழிபாட்டு முறையாகும். பல நிறத் துணிகளை வைக்கும் காரணம் அவர்களுக்குத் தெரியாது என்றாலும் ஆய்வாளர்கள் அறிவார்கள்.

''ஓம் ஸர்வ வர்ணாயை நம: ''— என்பது துர்க்கைக்குரிய நாமாவளி. சூரியக் கதிர்களில் வானவில்லில் ஏழு நிறம் தெரியும்; மறைந்த வயலட் (Vltra Violet) மறைந்த சிவப்பு (infra red) என்ற இரண்டுமாகச் சேர்ந்து ஒன்பது நிறங்களாகும். இவை, உலகில் அனைத்தையும் ஆக்கி வளர்த்து அழிக்கும் செயலுக்குரியனவாம். இவையே நவ கிரகங்கள், நம் உடம்பின் நவ துவாரங்கள், நவ இரத்தினங்கள், ஒன்பது வகை நிறம் தரும் எழுத்துக்கள் முதலியனவாம். (அதாவது நிறங்கள் தனித்தனியே எழுத்துக்களுக்குண்டு. அதனால் சமஸ்கிருதத்தில் எழுத்துக்கள் வர்ணங்கள் எனப்பெறும்)

இந்த ஒன்பது நிறங்களின் செய்கை முழுதுக்கும் உரியவளாகையால் ஸர்வ வர்ணாயை என்று அழைக்கப் பட்டாள். இதை உணர்த்தவே பலநிறத் துணிகளைப் படைத்து அணிவது வழக்கமானது. ஒன்பது நிறங்களில் குறைந்த ஒரு நிறம் காரணமாக நோய் உண்டாகும். அது தந்து நிரப்பிவிட்டால் நோய் மறையும் என்ற அறிவியல் உண்மையை நினைத்து அன்னை மூலம் நிறக்கதிர்களை வரமாகவே அவர்கள் பெறுவதையறியலாம்.

விந்தியமலை மத்திய இந்தியாவில் இருந்தாலும் அது முடியும் பகுதி அலகாபாத்திற்கும் காசிக்கும் நடுவே கங்கைக் கரையிலேயே ஆகும். அலகாபாத்திலிருந்து விந்தியா சல் என்ற (மிர்சாபூருக்கு முன்பு) இடம் 83 கி.மீ. ஆகும். காசியிலிருந்து இவ்விடம் 85 கி.மீ. ஆகும்.

காளிக்கே சக்தியருளிய துர்க்கையாகையால் கண்ண னுக்குத் தங்கையாக ஏழாவது குழந்தையாக இவள் பிறந்தாள்.

"அறுவர்க் கிளைய நங்கை இறைவனை
ஆடல் கண்ட ருளிய அணங்கு."

என்று இளங்கோவடிகள் கூறுவது கொண்டு கண்ணன் தங்கை காளியாகப் பிறந்தாள் என அறியலாம். இவளையே கம்சன் வெட்டினான். அதன் பிறகு உரிய இட மாகையால் விந்தியமலையில் வந்து அமர்ந்தாள் என்பதையும் புராணம் கூறும். விந்தியா வாஸினி கோயி லுக்குக் காசியிலிருந்து பலர் போவதுண்டு. அவர்கள் இக் கோயிலுடன் விந்தியாசல் பகுதிக்கு மேலும் மூன்று கி.மீ. தொலைவில் அறுபது படிகள் கொண்ட சிறு குன்றின்மேல் அட்டபுஜ தேவியாலயத்துக்கும் போகும் வழக்குடைய வராவர். அது எண்கரம் கொண்ட சிம்ம வாஹனக் காட்சியாகும்.

ஸ்ரீ வித்யாவில் விந்தியா வாஸினிக்குச் சிறந்த மதிப்பு வழங்கப்பட்டுள்ளது. புராணப்படி 64 யோகினிகளைச் சிவபெருமான் அனுப்பினார். அவர்கள் அங்குள்ள மன்னனை மயக்கிச் சிவபெருமான் காசி நகர் வர வழி செய்ய வேண்டும் என்பதே இவர்களுக்கு இடப்பட்ட கட்டளையாகும். அவர்கள் வெற்றி பெறாமல் இங்கேயே தங்கிவிட்டனர். அவர்களின் கோயில் பலவிடங்களில் இருப்பதற்கு அக்கதையே சாட்சியம். அவர்கள் பரா சக்தியின் பணிப்பெண்களாகையில் பல சக்திக் கோயில் களை எழுப்பிய சாக்த வடிவுக்கும் அதுவே சான்று.

(V) சக்தி கோயில்கள்

சௌம்சதி கட்டம் அல்லது `ராணாமகால் கட்டம் எனும் துறைக்குமேல் வங்காளிகள் மிகுந்த பகுதியில் 64 யோகினிகளின் கோயில் உள்ளது. அது சிறிய கோயில் தான் எனினும் சக்திவழிபாட்டுக்குரிய வங்காளிகள் மத்தியில் உள்ளதைக் கருதவேண்டும். இங்குத் தேவியின் பல்வேறு வடிவங்கள் உள்ளன. சௌம்சதிதேவி கோயில் என்று இதற்குப் பெயர். சௌம்சதிமா என்னும் வழக்குப் பெயருடன் தேவி தலைவியாயிருக்க துர்க்கை காளி முதலியோரும் உளர்.

(யட்சர்கள்) யட்சினியர் வேதாளங்கள், மாத்துருகா தேவிகள், கௌரியர் எனப் பலவகையானவர்கள் இவர்கள். யானை, சிங்கம் முதலிய முகமுடையவராயும் கடிய தோற்றமுடையராயும் இவர்கள் உள்ளனர். சாக்தச் சிறப்புக்கு இக்கோயில் உரியதாகும்.

காசியின் தென்மேற்கே அதாவது சங்கட விமோசன அனுமான் கோயிலுக்குப்பின் மேற்குப்புறமாக 2 கி.மீ. தொலைவில் காமாச்சா எனப்படும் காமாட்சி கோயில் இருக்கிறது. காசியிலிருந்து அன்னபூரணியாக 12 ஆண்டு அறம் வளர்த்த பிறகே அன்னை காமாட்சி காஞ்சிபுரம் வந்தாள் என்பது எமது ‘காஞ்சி காமாட்சி’ நூலால் அறியலாம்.

இரும்புப் பட்டைகளால் ஆகிய இழுவைக் கதவுகள் கொண்ட தற்கால அமைப்பிலேயே வாயிலிருக்கும். சிறிது கிராமியச் சூழலும் தென்படும். அர்ச்சகர்கள் அப் பகுதியிலேயே வாழ்கின்றனர். ஆடி மாதத்திலும் நவராத்திரிகளிலும், தீபாவளியிலும்தான் இக்கோயிலுக்கு மக்கள் நிறைய வருவார்கள். மற்ற காலத்தில் மிகவும் குறைந்த கூட்டமே இக்கோயிலருகே இரண்டு பைரவர் கோயில்கள் உள்ளன.

காசி காண்டத்தில் குறிப்புகள் கொண்ட கோயிலில் இதுவும் ஒன்று. பிரம்மபத்பரமேச்வரர் எனும் இலிங்கங்கள் அதற்குச் சான்று. உள்பகுதி பிற்கால முகப்பைப் பெற்றிருந்தாலும் பழைய அமைப்புக்களும் தெரிகின்றன. கணபதியின் நிற்கும் தோற்றம், சிங்கம் ஏறிக் காட்சி தரும் பிந்து வாசினிதேவி, காமகலா பாவனை வெளிப்பட இருக்கும் சிவ பார்வதி, வாராஹீ முதலிய வடிவங்கள் பழைய காலத்தொடர்புடன் உள்ளன. ஏறத்தாழ பஞ்சாயதன முறையும் அங்கே இருக்கிறது.

காமாட்சிக்கு முகக்கவசமிட்டு வேறு தோற்ற மில்லாமல் செய்திருக்கிறார்கள். எதிரில் ஓர் ஸ்ரீசக்கரம் இருக்கிறது. எல்லாவித பூசைகளும் அந்த யந்திர ராஜபீடத்துக்குத்தான் நடக்கிறது. சிம்மவாஹனம் நந்தி போல் சிறப்பாக இருக்கிறது. இராமேச்சுரம் முதலிய இந்தியத் தலங்களை அடக்கியதுபோல் காசிநகரம், காமாட்சியையும் கோயிலுக்குள் கொண்டுள்ளது.

காசியில் சீதளாதேவிக்கு மிகுந்த சிறப்புண்டு. சீதளம் என்றால் குளிர்ச்சி என்று பொருளல்லவா? அம்மை முதலியவற்றுக்கு நாம் மாரியை வணங்குவதுபோல் அவர்கள் சீதளாதேவியை வணங்குகிறார்கள்.

தசாசுவமேதாகாட்டிற்கும் தென்புறமுள்ளது இத் தேவியின் கோயில். கங்கையோரத்துக் கோயிலாகையால் வெள்ளம் மிகுந்தால் படகுகளில் வந்து வணங்கிச் செல்லுமளவு இத்தேவிக்குப் பெருமையுண்டு. இக் கோயிலமைந்த சீதளாகட்டத்தை மாத்ருதீர்த்தம் என்றே புராணங்கள் புகழ்கின்றன. நவகன்னியரில் ஒருத்தியிவள். இக்கோயில் சீதளாவின் தலைமைக் கோயில் ஆகும். ஆனால் நம் நகர்களில் பிள்ளையார் கோயில் போலக் காசியில் சீதளா கோயிலும் பெருகியுள்ளது. இவளுக்கு நோய்நீக்கும் சக்தி மிகுந்தமையால் மக்கள் கூட்டமும் மிகுதியாம்.

சங்கடதேவி: அதாவது சங்கடம் யாவும் அழிப்பவள் என்று பொருள். சீதளா நோய் நீக்குவதுபோல இவள் துயர் துடைப்பவள். பாபம் போகும் என்று மட்டும் காசிக்கு வருவோர் கண்களில் இக்கோயில்கள் சிறப்பாகத் தெரிவதில்லை. காசியிலேயே வாழ்ந்தும் நோயும் துயரும் அனுபவிப்பவர்களுக்கு விரைவில் சென்று வேண்டிக் கொள்ளும் வாய்ப்பாக இத்தேவியர் உள்ளனர்.

புராணத்தில் விகடமாத்ருகாதேவி என்று பேசப் படுபவளே சங்கட தேவியாவள். இவள் பெயரில் ஒரு கட்டமே உள்ளது. இவள் துர்க்கை அம்சமாகையாலும் அவள் குமரி ஆகையாலும் இவளுக்கும் ஆண் தெய்வத் துடன் தொடர்பில்லை. அதாவது சதிபதி வடிவமில்லை. இவளைப் பற்றிய புராண வரலாற்றுச் சிறு நூல்கள் காசியில் மிகுதியாகக் கிடைக்கும். சீதளாதேவி போலவே சங்கடதேவிக்கும் நிறையச் சிறு கோயில்கள் நகரில் பல இடத்திலுண்டு.

இந்த விகடமாதாவே சந்தோஷி மாதா என்றும் தற்போது வணங்கப் பெறுகிறாள். சங்கடத்தைப் போக்குவாள் என்பதைவிட மகிழ்ச்சியைத் தருவாள் என்பதே மக்கள் விருப்பத்துக்குரியதாக இருப்பதால் சந்தோஷிமாதா கோயில் காசியிலும் இந்தியாவின் பிறபகுதியிலும் வளர்ந்து வருகிறது. திருச்சி மலைக் கோட்டை அடிவாரத்தில் சந்தோஷிமாதா காணலாம்.

சங்கடாகாட் மேலே சங்கடதேவி கோயில், அருகிலேயே காத்தியாயினி கோயில், சித்தேச்வரி கோயில் (புத்திதத்துவம்), சந்தோஷி மாதா கோயில் ஆகியன உள்ளன. இலக்குமண பாலா காட்டின்மேல் மங்கள கௌரி கோயிலும், இலக்குமணன் கோவிலாகிய மரத்தூண் வேலைப்பாடு மிக்க பகுதியும் உள்ளன.

துர்க்கா கட்டத்தின்மேல் நாகேச்வரி கோயில் எனும் நாக வழிபாட்டுப் பெருமையும் முகநிர்மாலிகா தேவி

கோயிலும் உள்ளன. இவை சாக்தப் பெருமைக்குரியன வாகும்.

காசிக்கு வந்து செல்லும் வடஇந்திய உத்தரப்பிரதேச, மத்தியப்பிரதேச, பீஹார் மாநில மக்கள் அதிலும் கிராம மக்கள் தவறாமல் போகும் ஓரிடம் உண்டு. அதுவே கௌளி மாதா கோயில் (கௌடி என்றே கூறுவர்). தென் மேற்குக் காசியில் நகர் எல்லைக்கு வெளியே உள்ளது.

கமண்டலம் உருத்திராக்கமாலை கொண்ட தேவி அமர்ந்திருக்கிறாள். முகம் மட்டுமே தெரியும். இவளைச் சுற்றி ஒன்பது தெய்வங்கள் வலமாக இருக்கின்றன. பல்லிகள் காசியில் ஒலிப்பதில்லை என்று கூறுவார்கள். அதற்குத் தொடர்புடையது இக்கோயில் போலும்.

அர்ச்சகர் கூறும் வந்தன மந்திரத்தைத் திரும்பச் சொல்லிவிட்டுச் சோழிகளைக் குலுக்கிப் போட்டுவிட்டுப் போகின்றனர். காசிக்கு வந்து கர்மம் தொலைந்ததா என்ற கேள்விக்கு இத்தெய்வம் பதில் சொல்வதாக நம்பிக்கை. பேசாமலே இருப்பதால் பதில் சொல்லி விட்டது, பாவம் போய் விட்டது என்று நம்பிப் பெயர் வார்கள். இங்குப் போகாவிட்டால் காசிக்குப் போயும் கர்மம் தொலையாது என்ற பழமொழியே நடைமுறை யாகும் என்று நம்புகின்றனர்.

இது ஒரு கிராம தேவதையாம் வசூரி அல்லது கௌளி என்று பெயராம். முன்பு காசிக்கு வந்தோர் புண்ணியத்தை யெல்லாம் இவள் பறித்துக்கொண்டு வாழ்ந்திருக்கிறாள். கூட்டம் குறைந்தது விசுவருக்கும் புரிந்தது. உடனே இவளை ஊருக்கு வெளியே போகச்செய்து விட்டார். வருவோர் இனி இவள் கோயிலுக்குப் போனால்தான் யாத்திரை முழுமை பெறுமென்றும் சோழியும் காசும் இவளுக்குப் போடுவதன்மூலம் ஓரளவு புண்ணியம் அவளுக்குக் கிடைக்கும் என்றும் ஒரு நிபந்தனையை

விசுவர் செய்தாராம். விசுவர்க்கே தங்கை என்றும் ஒரு கதையுண்டு.

இது வழங்கும் ஒரு கதையானாலும் கௌளி என்பது சரஸ்வதிக்குரிய பெயர். இங்குச் சோழியும் பலனும் பார்ப்பது வேறு நடக்கிறது. அட்சமாலையைச் சரஸ்வதியும் வைத்திருப்பாள், தவத்தையும் புண்ணியத்தையும் இந்த அட்ச மாலையுடன் கூடிய கமண்டலமும் இணைந்து குறிப்பிடுகின்றன. எனவே இது ஓர் ஆதிகாலச் சரஸ்வதி பீடமாக இருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. கிராமத்தவர்க்கு விளங்குமாறு கதை இருந்தாலும் உண்மை வேறாகலாம்.

பாவம் யாத்திரையால் கழிந்தது இனியும் பாவம் செய்வது கூடாது என்ற அறிவைப் பெறவே சரஸ்வதியிடம் இவர்கள் வருவதாகவும் அமைத்திருக்கலாம் என்றே நினைக்க வேண்டியுள்ளது.

13. பிற சமயக் காசி

(i) சூரியசமயக் காசி

இந்தியாவின் இயற்கையானதும் பழைமையான வற்றுள் ஒன்றுமான வழிபாடு சூரியவழிபாடாகும். வேதங்கள் உபநிஷத்துக்கள் சூரியனை அறிவியல் உண்மைகள் துலங்கவே பாராட்டியிருக்கின்றன. நாராயணன் சூரியனுடன் ஒருமித்துப் பாவிக்கப் பெறு கிறான். யோக நெறியில் அண்ட ஆதித்தன், பிண்ட ஆதித்தன், மன ஆதித்தன் என்றெல்லாம் பிரித்துணர்த் தப் படுகிறது. ஞானத்திற்கும், உலகவாழ்வு உயிர் பெறுவ தற்கும், தீயன அழிவதற்கும், நோய் நீங்குவதற்கும் சூரியன் உரியவனாகக் கருதப்பெறுகிறான். மேலை நாட்டில் சோதிடமே சூரியனையை வைத்துத்தான், இந்தியாவில் மதி மனத்துக்குரியவனாகையால் சந்திரனும் பெருமை பெறுகிறான். பிற கிரகங்கள் சூரிய ஒளியால் தம் குணத்தை வெளியிடுவதால் சூரியன் தலைமையாக வில்லை.

மந்திரங்களில் எல்லாச் சமயமும் ஏற்கும் மந்திரமும் சிறப்பு மிக்கதுமான மந்திரம் காயத்திரி மந்திரமே. அது சூரிய வழிபாட்டின் முறையை உணர்த்துவதாகும். சூரிய னுடன் கிரகங்கள் அத்தமனம் ஆவதும், சூரியன் உத்தரா யணம் தட்சிணாயனம் அடைவதும், அமாவாசை பௌர் ணமிகளும், விஷுப்புண்ய காலமும், கிரகணமும், உதய

மூர்த்த விசேடமும் சூரியன் நடைமுறை வாழ்வில் எவ்வளவு தூரம் பிணைக்கப்பட்டிருக்கிறான் என்பதை நன்கு உணர்த்தும்.

ஒரு குறிப்பிட்ட நாளில் சூரியக்கதிர், கருவறையில் மூலவர் மேல் பரவுமாறு கோயில் கட்டியிருப்பதும், தேர் விழாவே சூரிய விழாவின் அடிப்படை என்பதும் சூரியனின் பெருமையை நன்கு உணர்த்தும்.

சிருங்கேரி மடத்தில் ஆலயத்தின் கிழக்குப் பகுதியில் 12 கல்தூண்கள் கொண்ட மண்டபம் ஒன்றிருக்கிறது. சூரியன் திங்கள்தோறும் ஓர் இராசியில் வலம்வரும் இயல்புக்கு ஏற்ப இது கட்டப்பட்டது. ஒவ்வொரு தூணிலும் மேஷம் முதல் மீனம் வரையுள்ள இராசிச் சின்னங்கள் செதுக்கப்பெற்றுள்ளன. சித்திரைமாதம் என்றால் அதற்குரிய மேஷத்திலும் பங்குனி மாதம் என்றால் அதற்குரிய மீனத்திலும் உதயகாலத்தில் கதிர்கள் படுமாறு செதுக்கியுள்ளார்கள். தரையில் வட்டமும் அதில் கோடுகளும் உள்ளன. நிழல் அப்போது எந்தத் திசையில் விழுகின்றது என்பதை இக்கோடுகள் காட்டுகின்றன.

சூரியனைத் துல்லியமாக உணர்ந்து கருவியில்லாத காலத்திலேயே கல்லில் ஒரு காட்சியாய்ச் சூரிய உலாவை வடித்துள்ளார்கள். சூரியனை நேசிப்பது இந்தியரின் பிறவி இயல்பு. சூரிய சந்திரர் இல்லாத சிறப்புக் கோயிலை அநேகமாகப் பார்ப்பது அரிது.

ஆகவே சூரிய சமயம் இந்திய சமயங்களில் தன்னைக் கரைத்துக் கொண்டு வாழ்கிறது என்று கூறலாம். அது காசியில் வெளிப்படாமல் இருக்க முடியாதல்லவா? சிவபெருமான் காசியரசனை வீழ்த்தச் சூரியனை அனுப்பினார். அவனால் அது முடியவில்லை. எனவே பன்னிரண்டு வடிவத்துடன் காசியில் வாழத் தொடங்கினான் என்பது சூரியசமயமான சௌரம் காசியில் இருந்து பிற இந்திய சமயத்தோடு ஊடுருவியதையே சான்றாகக்

காட்டுகிறது என்று நாம் நினைக்கலாம். இதுவே இப் புராணத்தின் அடிப்படைக் குறிப்பென்றும் உணரலாம்.

இந்தப் பன்னிரண்டு இராசிகளில் வரும் சூரியர்களே காசியின் காவல் தெய்வம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. திரிலோசனர் கோயிலில் அருணாதித்யா என்று 12 வடிவமாகவும் ஆதிகேசவர் ஆலயத்தில் கேசவாதித்யா எனப் பன்னிரு வடிவமாகவும் வைக்கப்பட்டிருப்பதை யறியலாம். கிரணா என்ற நதியே பஞ்சகங்கா தீர்த்தத்தில் கலப்பதையும் நினைக்கவேண்டும்.

அஸி சங்கமத்தருகே ''லோலார்க்க குண்ட்'' என்ற குளம் சூரிய குண்டமேயாகும். ''சோம குண்டம் சூரிய குண்டம் துறை மூழ்கிக்'' என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து பூம்புகாரிலும் சூரிய குண்டம் இருந்ததை அறிகிறோம். எனவே பழைய காலத்தின் அடையாளம் காசிக்கும் இருப்பதை யறிய முடிகிறது.

அஸி சங்கமம் லோலார்க்க சங்கமம் என்றே கூறப்பட்ட இலக்கியச் சான்றுகள் இருக்கின்றன. சிவபெருமானின் கட்டளைப்படி மன்னனை மாற்ற முடியாமல் வருந்திய அருக்கனை லோலார்க்கன் என்றார்கள். அதைவிட தட்சிணாயனத்தில் சூரியன் சிறப்புக் குன்றுவதுண்டு. நீச்சமே அப்போதுதான். எனவே தட்சிணாயனச் சூரியன் வருந்தும் சூரியனாகிக் காசியின் தென்பகுதியாகையால் அப்படிக் கூறியிருக்கலாம். ஏனெனில் வடபகுதி வருண சங்கமத்தில் ஆதிகேசவத்தில் 12 பகுதியாக அருக்கன் கேசவாதித்தனாயிருப்பதாலும் கூறியிருக்கலாம். அது உத்தராயணம் போலாகும்.

இந்தக் குண்டத்தில் நீர் காண்பது அரிது. மழைக் காலத்திலும் வெள்ளக்காலத்திலுமே இருக்கும். ஆனால் தரைமட்டத்திற்கும் கீழே ஐம்பதடி ஆழத்தில் சுற்றிலும் படிக்கட்டுகளுடன் காணப்பெறுகிறது. குழந்தை யற்றவரும் தம்பதிகள் சுகம்காண எண்ணுவோரும் இதில்

மூழ்குவதுண்டு, சூரியனுக்கு உரிய நாள்களில் இங்கே வருவர் மயிலைக் கபாலிகோயில் குளம் போலுள்ளது இது.

புரட்டாசி மாதச் சஷ்டியில் லோலார்க்க சஷ்டி மேளா நடைபெறும். பெரிய கூட்டம் கூடும். புத்தர்காலம் குப்தர்காலம் ஆகியவற்றில் சூரிய வழிபாட்டுச் சின்னங் களும் லோலார்க்க சிறப்பும் குறிப்புக்களால் அறிகிறோம்.

நமது தேசியச் சின்னத்திலும் அசோகன் தூண் களிலும் உள்ள தர்ம சக்கரமும், ஸ்வஸ்தி எனும் ஜைன தாந்திரக் குறிகளும், வட்டங்களும் தாமரைகளும் சூரிய சமயத்தின் சின்னங்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

(ii) காணாபத்ய காசி

கணபதி வழிபாடு இந்தியாவின் பழைய வழிபாடு தான். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் கணபதி சமயத் திற்கான சான்றுகள் உள்ளன. இடையில் பிற சமய வளர்ச்சியடைந்ததால் கணபதியின் மூலவரலாற்றுச் சாட்சியங்கள் மாறிவிட்டன. இதனால் மூலம் தெரியாது இடையில் வந்த வழிபாடு என்று அறிஞர்கள் சிலர் கருதத் தொடங்கினர்.

எல்லாச் சமயங்களிலும் பாம்பிற்கு ஒரு வடிவம் சிறப்பு வழிபாட்டுச் செயல் ஆகியன கொடுத்திருப்பதால் அது ஆதிச்சமயம் என்று ஒத்துக்கொள்கிறார்கள். அது போல இந்தியச் சமயங்களில் நீக்கமுடியாமல் பலராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட கணபதி வழிபாடும் ஓர் ஆதிச் சமயம் என்றுதான் சொல்ல வேண்டுமே தவிர நாகத்திற்கு ஒரு விவாதம், கணபதிக்கு வேறு விவாதம் என்பது பொருந்தாது.

தலைமை முதன்மை கருதியே கணபதி பேசப்படுவ தாலும் அதற்கு அவர் முகம் அஃறிணை வடிவமாதலும்

இவர்கள் கூச்சப்பட்டு மதிப்பளிக்க மறுக்கிறார்கள். மனிதர்கள் யானைகளை மதித்துப் போற்றிய ஒரு பழைய காலத்தை கருதிப் பார்த்தால் நாகவழிபாடு போலக் கணபதி வழிபாடும் பழைமை உடையதென அறியலாம்.

சிவபெருமான் தன் பணிமேற்கொண்ட நிகும்பனை அனுப்பி திவோதாச மன்னனை அகற்றிக் காசிக்குத் தாம் வர வழிவகுக்குமாறு கூறினார். நிகும்பன் சென்று ஒரு முடியலங்காரத் தொழிலாளரின் அளவில் தோன்றித் தன்னை வழிபட்டால் நலம் விளையும் என்று கூறினான். நகர் வாயிலில் அத்தொழிலாளி நிகும்ப கணேசனாக (கணநாதனாக) ஓர் உருவம் வைத்து வழிபட்டான். அப்படி அங்குவந்து வணங்கியவர்களனைவரும் நல்ல பயன்களை எய்தினர். அரசன் மனைவி சுயாசா என்பவள் குழந்தை வரம் கேட்டுத் தொழுதாள். நிகும்பகணேசன் அதைத் தரவில்லை. இதுகேட்டு வெகுண்ட அரசன் நிகும்ப கணேசன் வழிபாட்டை நீக்கக் கட்டளையிட்டான். அதனால் மக்களே இல்லாமல் இந்தக் காசி வழியாகப் போகட்டும் என்று சாபமிட்டான் நிகும்ப கணேசன். நகர் வறிதானதும் சிவபெருமான் நகரில் வந்தார். கணேசரையே அரசனாக்கவும் செய்தார். இதுவே கணேசர் வழிபாடு இங்கு ஆதியிலிருந்ததற்குச் சான்று என்றும் கூறுவார்கள். இக்கதை வாயு புராணத்தில் இருக்கிறது.

இப்படி முன்பு நகர் வாயிலில் நிகும்ப கணேசன் இருந்தது போல விசுவர் கோயிலுக்குப் போகும் வழியில் துண்டி ராஜகணபதியும் வாயிலில் இருப்பதாகக் கூறுவர். சைவம் காசியில் பரவுவதற்கு முன்பு யட்சர்கள் சமயம் இருந்ததாகவும் அதில் இப்படிப்பட்ட உருவங்கள் வணங்கப் பெற்றதாகவும், கருடன், மயில், சிங்கம், காளை முதலிய வாகனங்களெல்லாம் அந்த யட்ச சமயத்திலிருந்தே இந்துக் கடவுளர் கைக்கொண்டிருக்க வேண்டு

மென்றும், இந்தியாவின் ஆதி சமயம் யட்ச சமயமே என்றும், அதன் கடைசி நிலையே கணபதி வழிபாடு என்றும் நினைப்பவர்களும் இருக்கிறார்கள்.

மக்களின் நம்பிக்கை எதில் இருக்கிறதோ அதற்குத் தான் அறிஞர்கள் தத்துவ வடிவம் கொடுத்துள்ளனர். தத்துவம் பரவி அதில் நம்பிக்கை பரவிவிடுவது என்பது நடைமுறைச் சாத்தியமல்ல. எல்லாரையும் நல்லவராகச் செய்துவிட்டு ஓர் இறுதிச் செயல்திட்டம் செய்யப் போகிறேன் என்று புறப்படும் ஓர் அனுபவமற்றவனின் செயல்போல்தான் தத்துவம் பரவி அதில் பாமரர் நம்பிக்கை வைப்பது என்பதும் ஆகும்.

பைரவர், கணபதி, தண்டபாணி ஆகிய மூவரும் காசியில் காவல் தெய்வங்களாகவே இன்றும் கருதப்படு கிறார்கள். ஹரிகேசன் என்ற யட்சன் எலும்பும் தசையும் தேயத் தவம் செய்து சிவனும், பார்வதியும் காட்சி தரப் பெற்றான். அவனைத் தண்டபாணி என்று பெயர் குறிப்பிட்டு விசுவர் காசியில் காவல் தலைவரில் ஒருவனாக வைத்துக் கொண்டான் என்றும் புராணம் கூறுகிறது. இதுவே தண்டபாணி வரலாறு என்றும் இவர் போலவே துண்டி ராஜகணபதியும் என்றும் கூறுவர். சிவபெருமான் காசிக்கு வர கணநாதர் (நிகும்பர்) உதவியதால் துண்டி ராஜா என்று பெயரிட்டதாகவும் கூறுவர். இவரே காசியின் அரசப் பிரதிநிதியாகவும் அமைக்கப் பெற்றா ராம்.

இந்தத் துண்டி கணபதி செந்தூரம் மெழுகியவராய் விசுவநாத் கல்லியில் கோயிலுக்குப் போகும் மையப் பகுதியில் ஒரு சிறு மாடத்தில் நெருங்கிய கடைத்தெரு மத்தியில் இருக்கிறார். இடது கால் மடித்து வலது கால் குத்திட்டுப் பெரிய தலையும் சிறிய துதிக்கையுமாக உள்ளார். இப்பகுதியை ''மூங்கில் கேட்'' என்று கூறு வார்கள். இதே கல்லியில் இடது பக்கமாகப் பெரிய

சந்நிதியாக ஒன்றுள்ளது. அது சாட்சிக் கணபதி எனப் படும். சாட்சிக் கணபதியை முயற்சி எடுத்துக் கொண்டு போய்ப் பார்த்தால்தான் முடியும். துண்டி கணபதியை யாரும் பாராமல் அன்னபூரணி கோயிலையோ விசுவர் கோயிலையோ அடைய முடியாது.

விசுவரை வழிபடப் போகும் அன்பர்க்கு ஒரு சாட்சி யாக இருப்பதால் சாட்சி கணபதி என்று பெயர் வந்தது. இவருடைய துதிக்கை வலது பக்கம் சுழிந்த வலம்புரியாக உள்ளார். துண்டி கணபதி ஓங்கார விநாயக வடிவத்தின் வெளிப்பாடு. சாட்சிக் கணபதி ஓங்காரத்தின் ஒரு பகுதி வெளிப்பாடு என்று கூறலாம். காசிக் காண்டத்தில் 56 கணபதிகள் காசியில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

பிரம்மநாளா தெருவில் சுவடியும் உருத்திராக்கமும் கீழிருகை கொண்டு இருமலர் மேல் உயர்த்திய யோகக் கணபதி இருக்கிறார். சத்தி கணபதி என்பவர் மராத்தியர் காலத்தில் ஏற்பட்ட புகழுக்கு உரியவர். பஞ்சகுரோசி சாலையில் தேஹாலி விநாயகர், பீமச்சண்டி விநாயகர் எனவும், அஸி சங்கமக் கட்டத்தருகிலான சூரிய குண்டத்தில் அருக்க விநாயகர் என்றும், வடமேற்கே பாசபாணி விநாயகர் உதாண்ட விநாயகர் என்றும், துர்க்கா குண்டத்தில் தவயோக நிலையில் உள்ள துர்க்கா விநாயகர் என்றும், ஆதிகேசவம் உள்ள வடகிழக்குப் பகுதியில் குள்ள விநாயகர் என்றும், மணிகர்ணிகாவில் சித்தி விநாயகர் என்றும், பேர விநாயகர் என்று இன்றும் மகாராஜ விநாயகர் என்றும் புராண காலத்திலும் குறிக்கப்படுபவர் சப்தசாகரப் பகுதியினர் என்றும் கூறப் படுவதை நுணுகி ஆய்வோர், காசியில் கணபதி வழிபாடு மிகுந்த ஒரு பழைய காலத்தைக் கருதிப் பார்க்க முடியும்.

இன்றைய காசியை நிர்மாணம் செய்தவர்கள் மராத் தியர்கள். அவர்கள் கணபதி வணக்கத்தில் ஈடுபாடு மிக்கவர்கள். எனவே விநாயகர்கள் பலரும் இன்றைய

காசியிலும் சிறப்பாக வழிபட வாய்ப்பு வளர்ந்தது என்று அறிகிறோம்.

தென்னாட்டில் சிவன் பார்வதி நடுவே முருகனை வைத்துச் சோமாஸ்கந்தம் என்று வழிபடுவது இயல்பு. வடக்கே தேவியருகே கணபதியை இப்படி வைப்பது மரபு. காமாச்சா கோயிலில் தேவியருகே கணபதி நிற்பதும் அவர் தலை சிதைந்திருப்பதும் கொண்டு—கோயிலழிப்புக்கள் நடந்த காலத்திலிருந்தே கணபதியைத் தேவியருகில் இருக்க வைக்கும் வழக்கம் அறியலாம்.

(iii) சமண புத்த காசி

சமணமதம் ஒருகாலத்தில் காசியில் இருந்தது ஆனால் அங்கு நிலைக்கவில்லை. அதற்கான சாட்சியங்கள் குறைவாகவே இன்று முள்ளன. ஏழாவது சுபர்ச்வா எனும் சமணத்துக்குரிய தலைமையாளர்களில் ஒருவர் காசியில் பிறந்தார் என்றும், 23 ஆவது சமண பார்சுவநாதர் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இங்குப் பிறந்து வளர்ந்து வாழ்ந்தார் என்றும், இருநூறு ஆண்டுகளுக்குப் பின் இவரைப் பின்பற்றியே மகாவீரர் (கி.மு. 6ஆம் நூற்றாண்டு) தோன்றினார் என்றும், மகாவீரர் காசிக்கு வந்து 42 ஆண்டுகள் போதனை செய்தார் என்றும் பார்சுவநாதர்க்கு ஒரு கோயிலும் இங்கு இருந்தது என்றும், ஏறத்தாழ அதுவே பெலுப்புரா பகுதியில் உளது என்றும், பதினோராம் சமண தீர்த்தங்கரர் ஸ்ரேயன்ஸ்நாத் இங்குச் சாரநாத்தில் தோன்றியவர் என்றும் சமணர்களின் குறிப்புக்களால் அறிய முடிகிறது. இவையே சமணப் பெருமையாகும்.

கயாவிலிருந்து ஞானம் பெற்று ஒளி சிந்தும் தோற்றப் பொலிவுடன் புத்தர் வாரணாசிக்கு வந்தார். வருணா நதிக்கும் தெற்கே இருந்த காசிக்குள் அவர் போனதாகக் கூறப்படவில்லை. வருணாவிற்கும் வடக்கே உள்ள சுமார்

10 கி.மீ. தொலைவிலான சாரநாத் என்னுமிடத்திலேயே தங்கினார்.

கல்வியில் சிறந்த காசிமாநகரில் ஞானிகள் வந்து தம் புதிய நெறிகளை உபதேசிப்பார்கள். மக்களுக்கும் அறிஞர் களுக்கும் அவை பிடித்துப்போனால் அவ்வழிகளைத் தாராளமாகப் பின் பற்றுவார்கள். இப்படி தடையற்ற ஞானம் ஓங்கிய நாள் ஒன்று இந்தியாவில் இருந்திருக் கிறது. 2500 ஆண்டுகளுக்கு முன் இருந்த இந்த நிலையை உணர்ந்தே புத்தர் அங்கு வந்தார்.

சாரநாத் முனிவர்களின் குடியிருப்பு என்றே சிறப் பிக்கப்பட்டிருந்தது. அதற்கான இயற்கைச் சூழல் இன்று மங்கே இருக்கிறது. மான்கள் செறிந்த பகுதியாக இருந்த தால் மிக்தயா அல்லது மிக்தவா என்று இதனையழைத் தார்கள். அதாவது மான்காடு அல்லது மான் பூங்கா என்றிதற்குப் பொருள் உண்டாகும். தம் நண்பர் ஐந்து பேருக்கு மட்டுமே புத்தர் உபதேசத்தை முதலில் தொடங்கினார். நந்தி என்ற காசி நகர்ச் செல்வரே புத்தருக்கு ஒருமடம் கட்டிக்கொடுத்தாராம். புத்தர் கூறிய முதல் உபதேசத்தைத் "தர்மசக்கர பிரவர்த்தனம்" என்று கூறுவார்கள்.

அசோகன் கலிங்க வெற்றிக்குப் பிறகு மனம் நொந்து புத்த தர்மத்தைக் கைக்கொண்டான். அதுவரையில் அறிஞர்கள் கையில் வளர்ந்த சமயம் அரகியல் மாளிகை உயர்வைப் பெற்றது. பல தூபிகள் விஹாரங்கள் அசோக னால் சாரநாத்தில் கட்டப்பெற்றன.

முக்கியமாக இரண்டு அசோகத் தூபிகள் நமக்குத் தெரிய வந்தன. அதிலொன்றைக் காசி ஜமீந்தார் பிரித்துத் தனக்கு ஒரு அரணைக் கட்டிக்கொண்டுவிட்டார். தாமெக் எனும் தூபியே, இப்போதும் பெரிதாக உள்ளது. இது முழுதும் செங்கற்களால் கட்டப் பெற்றதாகும்.

இது அடிப்பகுதி முதல் நடுப்பகுதிவரை கனத்தும் பிறகு சிறுத்தும் உள்ளது. பூமி மட்டத்துக்கு 128 அடி உயரம் உடையது. கீழ்ப்பகுதியின் விட்டம் 93 அடியாகும். இருபத்துஎட்டு அடி அடிக்கல் நடப்பட்டதாகும். இதில் சில சிற்பக் காட்சிகள் உள்ளன.

இங்குள்ள அருங்காட்சியகம் காணத்தகுந்த ஒன்று. அங்கு அகழப்பட்ட பல கலைப் பொருள்களும் காக்கப்படு கின்றன. நமக்குத் தேசிய சின்னம் தந்த சிங்கத் தூண் களில் ஒன்றை இங்கும் அசோகன் கட்டியிருந்தான். அது சிதைந்த நிலையில் உள்ளது. இங்கு அகழப்பட்ட பௌத்தப் பள்ளிகள் பல உள்ளன. பிட்சு ஒருவர் அமர்ந்து தியானம் செய்யவும் மாணவர்க்கு உபதேசிக்கவும் வாழவும் போதுமான இடமுடையதாகும் ஒரு பள்ளி. காவிரிப் பூம்பட்டினத்துக் காணப்பெறும் அகல நீளமுள்ள செங்கற்களால் இவை கட்டப் பெற்றன.

ஒரு பழங்கால நகரின் கல்லறையில் இருக்கும் உணர்ச்சியைத்தரும் இப்பகுதி இந்திய நாகரிகத்தின் அரிய சொத்து.

சாரநாத்திற்குள் நுழைந்ததுமே நம் பார்வையை ஏற்றுக் கொள்ளும் தூபிக்குச் சௌகண்டி என்று பெயர். இதனைக் கி.பி. 1588 ஆம் ஆண்டு ஹுமாயூன் மன்னன் நினைவாக இராஜாதோடர்மாலின் மகன் கோவர்த்தன் என்பவர் கட்டியதாகும்.

சாரநாத்தில் மிக அழகான அமைதியான இக்கால விஹாரம் ஒன்றை மகாபோதி சங்கத்தினர் கட்டியிருக் கிறார்கள். இந்திய அரசிடம் கொடையாகப் பெற்ற புத்த சின்னங்கள் அங்கே பாதுகாக்கப்பெறுகின்றன. கோஸெட்ஸ் நோஸ் என்ற ஜப்பானிய ஓவியர் புத்தர் வாழ்க்கையை இங்கே ஓவியமாக அழகுறத் தீட்டி யுள்ளார்.

அசோகர் கட்டிய தாமெக் தூபி புத்தர் ஐந்து பேருக்குச் செய்த மஹா உபதேசத்தை நினைவு செய்ய அதே இடத்தில் கட்டப்பெற்றதாகும். புதிதாக உள்ள விஹாரத்திற்கு மூலகந்தக்குடி என்று பெயர். இதேபெயர்தான் புத்தர் வாழ்ந்த குடிலுக்கும் வைக்கப் பெற்றிருந்ததாம்.

'' கந்த மூலமே புசிக்க நேரினும்''

என்ற பழைய பாடலடி நினைவுக்குவருமே? இப்பெயர் ஒரு தமிழ்ப்பெயர் போலவே தோன்றுமே? ஆம் தமிழோடு தொடர்புடைய பெயரேதான்! புத்தர் பேசிய பாலி மொழி ஒரு திராவிடமொழி என்று மொழியியல் அறிஞர்கள் நிறுவியிருக்கிறார்கள். எனவே மூலகந்தகுடி எனும் பெயர் திராவிடமொழிப் பெயரேயாகும்.

சாரநாத் சமணத்துக்கும் உரிய இடமாகும். ஒரு சமணக் கோயிலும் உள்ளது. திபெத்தியர் கட்டிய புத்தர் கோயிலும் இருக்கிறது. சாரநாத் என்ற பெயர் வரக் காரணம் இங்கே ஒரு குன்றிலிருக்கும் சாரங்கநாதர் எனும் சிவன் கோயிலே ஆகும். கருவறையிலிருப்பவர் சோம நாதர். மண்டபத்தில் ஆஞ்சநேயரும் இருக்கிறார். எதிரில் ஒரு குளமும் குளக் கரையில் ஒரு நந்தியும் உள்ளன. நாகப் பிரதிட்டைகளும் புத்தர் சிலைகளும் கூட இருக்கின்றன.

ஆடி மாதம் திருவிழா உண்டு. ஆடித் திங்கள்தோறும் சோமநாதர்க்குச் சிறப்புண்டு. நிறைய மக்கள் வந்து போகிறார்கள். எப்போதும் இங்கே பலர் வாராவிட்டா லும்புத்த சின்னங்களைக் காண நிறைய பேர் வருவார்கள் என்பதை இங்குள்ள கடைகளின் வாணிகக் காட்சிகளால் அறியலாம்.

யுவான் சுவாங் ஏழாம் நூற்றாண்டில் வந்தார். இவர் காலத்திலேயே புத்த சமயம் ஒடுங்கிப் போய்விட்டதை

அவரே கூறுகிறார். ஐந்தாம் நூற்றாண்டில் வருகை தந்த சீன யாத்திரிகர் பாஹியானும் யுவான் சுவாங் கூறியதையே பெரிதும் ஒத்தது போல் கூறியிருக்கிறார்.

மார்பில் சின்முத்திரையும், 5 சீடர்களைப் பீடத்திலும் கொண்டு காட்சி தரும் புத்தர் சிலைகள் தட்சிணாமூர்த்தியை நமக்கு நினைவூட்டுகின்றன. சங்க கால இலக்கியத்திலேயே ஆலமர் செல்வன் என்று தட்சிணாமூர்த்தி கூறப்பட்டதாலும், அவ்வடிவம் சைவ சமயத்தின் சிறப்பானது மட்டுமின்றிச் சாக்தத்திலும் சிறப்புப் பெறுவதாலும், காணாபத்தியத்தில் ஹேரம்ப விநாயகரும், வைணவத்தில் யோக நரசிம்மர், ஐம்முக ஆஞ்சநேயர் என இருப்பதாலும், மகாவீரர் சமணத்தில் இப்படிக் காட்டப் பெறுவதாலும் யோகபாவனை ஒரு சமயத்துக்குரியதில்லை என்றும், இந்தியாவின் ஆத்மார்த்தமான வடிவம் யோகம் என்றும் கருதலாம். ஹரப்பா மொகஞ்சதரோ அகழ்வுப் பொருள்களிலும் யோகியைக் காணலாம்.

14. யாத்திரைக் காசி

(i) யாத்திரைக் காசி

"காசிக்கு நிகரான பதியுமில்லை
கங்கைக்கு நிகரான நதியுமில்லை."
"காசியில் இறக்க முத்தி."
"காசியை நினைக்க முத்தி."
"காசியை உரைக்க முத்தி."
"காசியைக் காண முத்தி."
"காசியைக் கேட்க முத்தி."
"காசியில் வசிக்க முத்தி."
"காசியாரை வணங்க முத்தி."

என்று பல காலமாகக் கருதி வழங்கிய பழமொழிகள் காசி யாத்திரையின் சிறப்பைப் புலப்படுத்துகின்றன. அதற்கான மரபு வழி யாத்திரைகள் சில பேசப்பட்டுள்ளன. இக் காலத்தில் சென்னை, சென்ட்ரல் புகைவண்டி நிலையத்திலிருந்தே வாராணாசிக்கு வண்டிகள் நேராகப் போகும் வழக்கமிருப்பதால் வழி கூறத் தேவையில்லை. அலகாபாத் வரை சென்று பிறகு கிழக்கே திரும்ப வேண்டுமென்று மட்டும் கூறினாலே போதும்.

யாத்திரைக் குறிப்புக்களில் சில வகுப்புகளை மட்டும் இதில் குறிப்பது முறையாகும். காசி இராமேசம் யாத்திரை என்பது காசிக்குப் போகும் முன்பு இராமேசம்

சென்று கடலில் மண் எடுத்துத் திரிவேணி முழுகி காசி கயா முடித்து மீண்டும் திரிவேணிக்கு வந்து முழுகி மீளவும் இராமேசம் வந்து கங்கை நீரை இராமேசம் கோயிலில் பல சந்நிதிக்கும் முழுக்காட்டுதலாம். இராமேசம் மண்ணைக் கங்கையில் போடுவதை முன்பே விளக்கியுள்ளோம். இது ஒரு யாத்திரை மரபு.

பஞ்சக்குரோசி யாத்திரை மரபு இந்நூலில் தனிப் பகுதியாக உள்ளது. இதையடுத்து நித்திய யாத்திரை என்பது கூறப்படவேண்டும். அதற்கான ஸ்லோகம் முன்பே கூறப்பட்டுளது. இந்த நித்திய யாத்திரைக் கோயில்கள் பத்து உள. அவை யாவும் ஒரு நாளிலேயே பார்க்க வேண்டுவனவாகும்.

மணிகர்ணிகையில் நீராடி வில்வத்தை எடுத்துக் கொண்டு விசுவநாதரை வணங்குவது முதல் கோயிலாகும். அடுத்தது பஞ்சகங்கா கட்டத்தில் உள்ள பிந்துமாத வரையும் அவரே வழிபட்ட சிவலிங்கத்தையும் வழிபடுவ தாகும். மூன்றாவதாக துண்டி ராஜகணபதியே துண்டி கணபதியாவார். இவரை விசுவர் கோயிலுக்குப் போகும் போதே கணபதி வணக்கமாக முதலில் செய்வதோ மூன்றாவதாகச் செய்வதோ தவறில்லை. நான்காவதாகத் தண்டபாணி. இவர் கேதார்நாத் கோயிலிலும் உள்ளார், விசுவநாதர் கோயிலிலும் உள்ளார். இங்கேயே ஐக்கியப் படுத்தி வணங்கலாம். அல்லது விசுவர் கோயிலுக்கு வடகிழக்கே காலபைரவர் கோயிலுக்குப் பின்னால் மூன்றடி உயரமுள்ள தூணில் முகம் மட்டுமே உள்ள சிலாமூர்த்தமே தண்டபாணி தனிக்கோயிலாகும். இங்குச் சிவலிங்கமும் உண்டு. அங்கே போய்த் தண்டபாணியை வணங்குவதால் ஐந்தாவது கோயிலும் அருகேயே இருக் கும். ஐந்தாவது காலபைரவர் கோயிலாகும். இங்குத்தான் காசிக் கயிறு விற்பார்கள். ஆறாவதாக உள்ளது வந்தேகாசீம். இதுபற்றிப் பலவித இட பேதங்கள் சொல்லப்படுவதைக் குறித்துள்ளோம். பெரும்பாலும்

பைரவர் கோயிலுக்கு மேற்கே சிறு தொலைவில் உள்ள ஆலமரத்தடி அம்மன் கோயிலே பலரும் போய் வணங்குவதாம். ஏழாவதாகக் கூறிய குகாம் இதுவும் கருத்து வேற்றுமைக்குரியதே. ஆனால் வந்தே காசிக்கு மேற்கே உள்ள குகையும் சிவலிங்கமும் வணங்குவதே பெருவழக்கமாகும். எட்டாவதாக ஈச்வர் அங்கியில் உள்ள குளமாகிய ஆதிகங்கையே ஆகும். இங்குள்ள ஆஞ்சநேயர் ஆதித்தன் ஆனைமுகன் அன்னை சீதளா ஆகியோரையும் வழிபடுவதாகும். ஒன்பதாவதாகப் பவானி கோயிலாகிய விசுவர் கோயிலுக்கு எதிரில் உள்ள அன்னபூரணி கோயிலாகும். பத்தாவதாக மணிகர்ணிகா கட்டத்தைச் சூழ்ந்த கோயில்களையும் கட்டத்தையும் நீராடி வணங்குவதாம்.

மணிகர்ணிகாவில் தொடங்கி மணிகர்ணிகாவிலேயே இந்த நித்யயாத்திரை முடிவு பெறுவதையறியவும் விசுவர் தொடங்கி பவானியில் நிற்பதையும் காணவும்.

பஞ்சதீர்த்த யாத்திரை பற்றியும் தனியே குறிக்கப் பட்டுள்ளது. இது அறுபத்து நான்கு கட்டமும் பெயரும் இடமும் முறையும் பழையகாலத்தில் அறிதல் கடின மாதலால் இன்றியமையாத 5 துறைகளைத் தேர்ந்து அமைத்தது ஆகும். இதுவும் ஒரு நாளில் முழுக வேண்டு வதாகும். சிலர் இதனை இக்காலத்தில் ஒரு படகு பேசிக் கொண்டு அதிலேயே பயணம் செய்து எளிதிலும் சிறு நேரத்திலும் முடித்து விடுவது என்று நினைக்கிறார்கள். காசிக்கரை முழுதும் செல்லும் வழிக்குச் சம்சாரா என்று பெயர். இப்பிறவியை மாற்றும் தன்மையுடையது என்று பொருள். இதில் நடந்து செல்வோர் கவலை மறந்து கடவுள் சிந்தை கைவரப்பெறுவது எளிது என்பதால் இப்படி நடந்து போவதே நலமாகும்.

முதலில் அஸி சங்கமத்தில் நீராட வேண்டும். அஸி சங்கமேச்வரரை வணங்கியே இந்த யாத்திரை தொடங்கப் பெறுவதாகும்.

இரண்டாவதாக தசாசுவமேதா கட்டத்தில் நீராடி சூலடங்கேச்வரரைக் கரையில் தொழுதல் வேண்டும். இரண்டும் முடிந்ததும் மூன்றாவதாக மணிகர்ணிகா இருப்பினும் அதனைத் தவிர்த்து வடகாசி சென்று இறுதியாக உள்ள வருணாசங்கமத்தில் நீராடி ஆதிகேசவர், வருணேச்வரர், சங்கமேச்வரரை வணங்கி மீண்டும் தெற்கே திரும்பி வரவேண்டும்.

நான்காவதாகப் பஞ்சகங்கா எனும் கட்டத்தில் யமுனை, சரஸ்வதி, கிரணா, துதபாபா ஆகிய நதிகள் கங்கையில் கலப்பதாகக் கருதி நீராட வேண்டும். பிந்து மாதவரையும் பஞ்ச கங்கேச்வரரையும் வணங்க வேண்டும்.

ஐந்தாவதாக காசியின் மையமும் திருமால் சக்கரத்தால் தோண்டிய குளம் கங்கையில் கலப்பதுமான மணிகர்ணிகையில் நீராடி மணிகர்ணிகேச்வரரையும் தேவியையும் வழிபட்டு யாத்திரைப் பயனாக விசுவநாதரையும் அன்னபூரணியையும் வழிபடவேண்டும்.

அடுத்தது உத்திர யாத்திரையாகும். வடகாசியில் உள்ள பகுதியை மற்றும் விசுவர்கோயில் உள்ளிட்டும் வணங்குவதாகும். இதுவும் ஒரு நாளில் முடிக்கும் யாத்திரையேயாகும்.

மணிகர்ணிகையில் நீராடி மணிகர்ணிகேச்வரரையும் பிறகு மணிகர்ணிகை குண்டத்தில் ஆடி அதன் கரையமர்ந்த துர்க்கா தேவியையும் வணங்கித் தொடங்கவேண்டும். அடுத்து மகாமசானத்துக்கு அருகில் உள்ள தாரகேச்வரர் ஆலயத்தை வணங்கவேண்டும். தாரகமந்திரம் ஓதும் பெருமையைப் புகழ்ந்து நினைந்து துதிக்கவேண்டும்.

பசுபதீச்வரர் கோயிலை அடுத்ததாக வணங்க வேண்டும். இது லலிதாகட்டத்தில் உள்ள நேப்பாளர் கோயில் அருகிலுள்ள சாதுமடத்தில் இருக்கும் பஞ்சமுக லிங்கேச்வரரையும் ராஜராஜேச்வரியையும் வணங்க

வேண்டும். இங்கு அருகிலேயே உள்ள சங்கடாதேவி கோயில், நீலகண்ட மகாதேவர் கோயில், தண்டபாணி கோயில், காலபைரவர் கோயில், ஓங்காரக் கோயில் (அகர உகர மகரக் கோயில்) பிந்துமாதவர் கோயில், வந்தே காசீம் ஆகியவற்றை வழிபட்டு யாத்திரையை முடிப்பதாகும்.

முன்பு ஓங்காரக் கோயில் தொடங்கி ஓங்காரக் கோயிலிலேயே முடிந்த யாத்திரைகள் மணிகர்ணிகாவில் தொடங்கி முடிவதாக இக்காலத்தில் மாற்றப் பெற்றுள்ளது.

இதன்பிறகு தட்சிண யாத்திரை கூறப்படும். இது விசுவர் கோயிலுக்குத் தெற்குக் கோயில்களின் யாத்திரையாகும். இதிலும் விசுவர் கோயிலை உள்ளிட்டும் வணங்கலாம்.

பெங்காலி டோலாவில் உள்ள திலபாண்டீச்வரர் கோயிலையும் அங்குள்ள பாதாளேச்வரர் கோயிலையும் முதலில் வணங்க வேண்டுவதாகும்.

சிந்தாமணி விநாயகர் என்றும் வியாசக் காசிக்கு விக்நம் செய்தவரென்றும் கூறும் கோயில் திலபாண்டீச்வரர் கோயிலுக்கு அருகில் உள்ளது. இது இரண்டாவதாக வணங்குவதாகும். மூன்றாவதாகக் கேதார்நாத் கோயில் வணங்குதலாம். நான்காவதாக அனுமான் கட்டத்து அனுமன் கோயிலாகும். ஐந்தாவதாகத் துர்க்கை குண்டத்தில் உள்ள துர்க்கை கோயிலாகும். ஆறாவதாக துர்க்கை கோயிலுக்கும் மேற்கே சேரியில் உள்ள கௌளிமாதா கோயிலில் வணங்குவதாம். ஏழாவதாகத் திரும்பும் வழியில் உள்ள சங்கட விமோசன ஆஞ்சநேயர் கோயிலாகும். எட்டாவதாகத் திரிபுரபைரவி கட்டத்துள்ளபாதாள வாராஹி கோயிலை வழிபட வேண்டும். பிற ஏழு கோயில்களும் வழிபட்டு வரவே நள் ளிரவு ஆகி

விடுமாகையால் வாராஹி கோயில் வழிபாடு தொடங்கச் சரியாக இருக்கும்.

பத்து நாளாவது காசியில் தங்குவோர் தவறாது வழிபடும் முறையை நிரல்படுத்தியிருப்பதே இந்த யாத்திரை மரபாகும். இதனை இக்காலத்தின் நெருக்கடியில் செய்து முடிப்பது என்பது அருமையான ஒரு பணியாகிவிடக் கூடும்.

எல்லாம் ஒருமுறை எப்படியாவது பார்ப்பது என்றும் ஒரு நாளைக்கு மூன்று அல்லது ஐந்து முறை கங்கையில் குளிப்பது என்றும் சிலர் தங்களுக்கு முடிந்த வகையில் யாத்திரைத் திட்டத்தை ஏற்படுத்திக்கொள்கிறார்கள்.

சைவமாக ஒருநாள் வைணவமாக ஒருநாள், காணாபத்தியமாக ஒருநாள், சாக்தமாக ஒருநாள், சௌரமாக ஒருநாள் என்று போகிறவர்களும் இருக்கிறார்கள். மரபைக் கூறிவிட்டால் பிறகு இயலுவதே மரபாக்கிக் கொள்ள வேண்டியதுதான்.

(ii) பஞ்சகுரோச யாத்திரை

காசி மண்டலம் ஸ்ரீசக்கர வடிவில் அமைந்தது என்று கூறப்பெறுகிறது. பொதுவாக ஓங்காரக் கோயில் பகுதி, விசுவநாதர் கோயில் பகுதி, கேதாரக் கோயில் பகுதி என மூன்று தென் வடல் பிரிவு கூறப்படுவதுண்டு.

ஸ்ரீசக்கரத்தின் மத்திய பிந்துவாக விசுவநாதர் கோயிலும், தசாசுவமேத கட்டத்திலிருந்து மணிகர்ணிகா கட்டம் வரை ஒரு முக்கால் வட்டம் வரையும் பகுதி அந்தர்க் கிரகமென்றும், கேதார் கட்டம் தொடங்கி திரிலோசனா கட்டம் முடிய உள்ள முக்கால் வட்டப்பகுதி அவிமுக்தா பகுதியென்றும், அஸி சங்கமம் தொடங்கி வருணா சங்கமம் முடிய உள்ள முக்கால் வட்டப்பகுதி

வாரணாசிப் பகுதி என்றும்; இதுவே காசியின் மேற்கு எல்லை முழுதுமாக வளைத்த பகுதி பஞ்சகுரோச மென்றும் பெயர் பெறும். ஒரு குரோசம் சுமார் இரண்டு மைல் என 5 கோசமும் பத்து மைல் ஆகும். எனவே பஞ்ச குரோசத்தை ஐந்து பகுதியாக எண்ணி ஏனைய தனித் தனியே 4 ஆகிவர எல்லாமாக ஒன்பது பகுதியாகும். ஸ்ரீசக்கரம் ஒன்பது பகுதிகளை உடையது. பூபுரம், 16 தள தாமரை, 8 தள தாமரை, 14 முக்கோணம், 10 வெளி முக்கோணம், 10 உள் முக்கோணம், எட்டு முக்கோணம், தனி ஒற்றை முக்கோணம், பிந்து எனும் மையப்புள்ளி என ஒன்பது பகுதியாகும்.

''ஸமஸ்த பிரகட, குப்த, குப்ததர, சம்பிரதாய, குலோத் தீர்ண, நிகர்ப்ப, ரகஸ்ய, அதிரகஸ்ய, பராபராதி ரகஸ்ய'' என்று ஒன்பது பகுதிகளும் ஸ்ரீவித்யா நவாவரணப் பூசையில் பெயர் குறிக்கப்பெறும். ஆவரணம் என்பது திரை அல்லது பகுதி என்பதாகும். ஒன்பது பகுதிகளையே நவாவரணம் என்று தாந்திர நூல் கூறும். காசியே சக்தியின் வடிவமாகையால் 9 வகையான ஸ்ரீசக்கரப் பிரிவும் இந்த நகரில் அமைத்துக் காட்டப் பெற்றது.

பெரும்பாலும் இப்போது அஸி, வருணா சங்கமங் களில் நீராடுவதோ, அஸி, தசாசுவமேதா, வருணா சங்கமம், பஞ்ச கங்கா, மணிகர்ணிகா ஆகிய ஐந்து கட்டங் களில் நீராடுவதோ, அல்லது ஓங்காரம், கேதாரம் விசுவ நாதம் ஆகிய மூன்று மட்டுமே கண்டு தொழுதலோ ஆகிய முறைகளில் மட்டுமே இப்போது பலர் யாத்திரை செய் கின்றனர்.

ஆனால் ஒன்பது பகுதியாகக் காசியை வணங்குவது பழைய யாத்திரை மரபாகும். இன்றைய மூன்று வகை மரபை நீக்கிப் பஞ்சகுரோச மரபு மட்டுமே இங்கு விளக்கினால் பிற தாமே விளங்கும்.

பஞ்சகுரோச யாத்திரை அஸி சங்கமம் தொடங்கிக் காசியின் தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு வடக்குப் பகுதியை வளைத்துக்கொண்டு வரும் ஒரு மரபாகும். இதற்குரிய சாலை பஞ்சகுரோசச் சாலை என்றே பெயருடையதாகும். சுமார் 10 மைல் (16 கி. மீ.) தொலைவுடையது.

இந்தியாவில் உள்ள தீர்த்தம் தலம் மூர்த்தம் யாவும் காசியில் ஐக்கியமாகையால் இச்சாலையில் குறிப்பிட்ட இடத்தில் ஒவ்வொரு நாள் தங்கி முழுதும் முடிப்பது உலகை வலம் வருவதாகக் கருதப்பட்டது. இதை வலம்வர ஐந்து நாள் கணக்காகும். இதில் 108 தலங்கள் உள்ளன. இந்தச் சாலையில் உத்தர காசி என்றே ஒரு பகுதியுண்டு, மத்தியமேச்வரர் என்றும், இ ரா மே ச ம் என்றும் கோயில்கள் உள. இவை காசி நகர் எல்லை நீக்கி உலகம் முழுதும் வலம் வருவதாகக் கூறுவதால் அங்கே ஒரு காசி இருந்தது. பவானி எனும் மகாராட்டிர அரசி இச் சாலையைப் பழுது பார்த்தாள். இதை வலம் வர இயலாதார் காசிக்குள் உள்ள பஞ்சகுரோசத் தலக் கோயிலையாவது வணங்க வேண்டுமெனப்பட்டது.

இந்தியாவில் 108-க்கு மேலும் தலம் உள. ஆயினும் இங்கு ஏன் 108 மட்டும் குறிக்கப் பெற்றது என்றால், 9 என்பதை 12 முறை கொண்டது 108 ஆகுமன்றோ? அதில் ஒரு குறிப்புளது. சூரியக்கதிர்களில் வானவில்லில் ஏழும் அவற்றின் மேலும் கீழும் இரண்டுமாக ஒன்பது நிறமுண்டு. மறைந்த வயலட், வயலட், கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு, மறைந்த சிவப்பு என ஒன்பது நிறங்களும் ஒன்பது கோள்களுக்கும் உரியனவாக ஒதுக்கப் பட்டுள்ளன. சூரியன் 12 மாதத்திற்கும் பன்னிரண்டு இராசிகளில் காட்சி தருவதாகக் கூறப்படுகிறது. எனவே 108 என்பது (12×9) உலகைச் சூரியன் வலம் வந்ததாக அல்லது சூரியனை உலகு சுற்றியதாகக் கொள்ளப்படும். மேலும் 8 சாண்கள் அவரவர்க்கும் அவரவர் உடல் உயரம்

உள்ளது. அதற்குமேல் ஒரு சாணளவும் உடம்பு மறைமுகமாக உயர்கிறது. இது ஒளிவடிவம். இது ஆகாயத்துடன் தொடர்புறும். ஒருசாண் என்பது 12 விரல். ஆகவே 108 விரல் என்பது சூரியன் வட்டத்து உலகும் உடம்பின் வியாபக உலகும் ஆகும். இதுபற்றியே 108 நாமங்களால் அர்ச்சனை செய்வது வழக்கமாயிற்று. இவ்வாறே உலகு முழுதும் குறிக்க 108 என்ற தலங்களைப் பஞ்சகுரோசச் சாலையில் வைத்தார்கள்.

இச்சாலையில் இத்தலங்கள் வலது கைப் பக்கமாக அமைந்துள்ளன. அதாவது காசி நகரின் எல்லையாக உள்ளன. அவற்றையே நாம் வலம் வரவேண்டும்.

அஸி சங்கமம் தொடங்கி கர்தமேச்வரர் ஆலயம் வரை ஒருநாளும், பிறகு அங்கிருந்து உன்மத்த பைரவர் ஆலயம், கடந்து பீமச்சண்டி வரை இரண்டாம் நாளும், பிறகு அங்கிருந்து தேகாலி விநாயகரைச் சுற்றி இராமேசம் வரை மூன்றாம் நாளும், பிறகு பஞ்சபாண்டவர் கோயில் வணங்கிக் கபிலதாராவரை நான்காவது நாளும் பிறகு வருணாசங்கமம் வழியே மணிகர்ணிகா வருவது ஐந்தாவது நாளாகும். இந்த ஐந்து நாள்களிலும் சிவதலங்களும், சக்தி தலங்களும், விநாயகத்தலங்களும் பிறவும் இந்த யாத்திரையில் ஒன்றாகிவரும்.

வயலும் கிராமங்களும் தீர்த்தங்களும், இந்தப் புனிதப் பயணத்தைச் சிறப்பாக்கும். ஒரே நாளில் வாகனம் அமைத்து இவற்றைச் சுற்றி வருவோரும் இருக்கின்றனர்.

இதில் வரும் இராமேசம் என்பது இராமன் வனத்திற்கு வந்த போது உருவாக்கியதாம்; ஐந்து இலிங்கங்கள் உள்ள பாண்டவர் கோயிலும் வனவாசம் செய்த அவர்களால் உருவாக்கி வழிபடப் பெற்றதாம்.

இப்பயணம் தொடங்குமுன் மணிகர்ணிகையில் ஆடி, ஞானவாவி தரிசித்து, விசுவர், அன்னபூரணி, துண்டி கணபதி ஆகியோரை வழிபட்டபிறகே அஸிசங்கமம் முதலாகத் தொடங்குவது மரபு. தெற்குமுதலாக வலம் வருதலால் காசியை ஒரு (பிரதட்சணம்) முறை வலம் வந்ததாகிறது.

5 கோசங்களையுடைய நம் உடல் பகுதியை ஒப்ப இருப்பதால் இப்பயணம் பஞ்சகுரோசம் எனப்பட்டது. தேஹாலி விநாயகர் கோயில்தான் காசியின் நடுமேற்கு எல்லைக்குரியதான கோயில் ஆகும். உன்மத்த பைரவர் என்பது எட்டு பைரவரில் ஒருவராவார். பீமச்சண்டி என்பது கடுமை மிகுந்த தேவி கோயிலாகும்.

காசி ரகஸ்யத்தில் பஞ்சகுரோசி மகாத்மியம் சொல்லப்பட்டிருக்கிறது. சிறுசிறு வெளியீடுகள்மூலம் இப்பயணக் குறிப்பைக் காசியினருடன் கலந்துதெரிந்து கொள்வதுதான் எளிது. நல்ல துணையுடனும் இப்பயணம் மேற்கொள்வது மொழி, வழி, முதலிய இடர்ப்பாடுகளை நீக்கும்.

15. மதிப்பியலில் காசி

(i) பழைய காசி

யுவான் சுவாங் கூறும் வகையில், சுமார் 3 கி. மீ. அகல மானதும், ஆறரைக் கி.மீ. நீளமுள்ளதும், 1280 கி.மீ. பரப்பளவு உள்ளதும் ஆகிய காசியே ஏழாம் நூற்றாண்டி லிருந்திருக்கிறது. இன்று இதில் முக்கால் பகுதியுள்ளது. வறுமை காண முடியாதபடி வளமையே எங்கும் காணத் தக்கதாக இருந்திருக்கிறது.

மக்களில் மிகச் சிலரே புத்த தர்மத்தைக் கைக்கொண் டிருக்கிறார்கள் பெரும்பாலும் சைவ சமயமே ஆட்சி செய்து கொண்டிருந்ததாகவும் சீனயாத்திரிகன் எழுதி யிருக்கிறான். 100 தேவாலயங்கள் இருந்தன. 100 அடி உயரச் செம்புச் சிலை மகாதேவருக்குக் (சிவபெருமான்) காசிநகரில் இருந்திருக்கிறது என்றான். சாரநாத்தில் 200 அடி உயரமான புத்த விஹாரமிருந்ததாம். ஆளுயர மான புத்தரின் செப்புச் சிலையிருந்ததாம். 30 பௌத்த மடாலயங்கள் இருந்தன. 3000 பிட்சுக்களும் இருந்தார் களாம்.

புராணத்தில் திவோதாசனின் ஆட்சியைத் திருமால் கவிழ்ப்பதற்குப் புத்த வடிவே மேற்கொண்டார். புண்ய கீர்த்தி என்று பெயர் வைத்துக்கொண்டு சாதி சமய பேதமும், வேதாந்த புண்ணிய பாவம் முதலியனவும் பொய் என்றார். மக்கள் அதை நம்பினர். கலவரம்

யிருந்தது. மன்னன் அரசு துறந்தான். இந்தக் கதை புத்த சமயம் பரவிய ஒரு காலத்தின் நினைவு என்பதையும் பிறகு அதுவே அதற்கு அழிவு என்பதையும் காட்டுவதற்கு வந்ததாகத் தெரிகிறது.

அருந்தனா, சுதர்ஸநா, பிரம்மாவதாரா, பூபவதி, இராமநகரா, மாலிநி, காசிபுரா, கேதுமதி என்ற பல பெயருடையதாகக் காசி விளங்கியது. இந்தியாவில் 84000 நகர்கள் இருந்ததாகவும் அவற்றில் காசியே தலைமையானதாகவும் 'திகாநிகாயா' எனும் பௌத்த நூல் கூறுகிறது. எனவே சமயங்களையன்றியும் காசி ஒரு தலைமையைத் தானே பெற்றிருந்தமை புலப்படும்.

அதர்வண வேதத்திலும் உபநிஷத்துகளிலும் காசியில் வாழ்ந்த' ஞானிகளைப் பற்றிப் பேசக் காணுகிறோமே தவிர நகரைப் பற்றிய குறிப்பில்லை.

வைதேகம் கோசலம் குருபாஞ்சாலம் முதலிய ஆதி நாடுகளின் சார்பு காசிக்கு அடிக்கடி இருந்து வந்தது. இராமாயணத்தில் வசிட்டர் அமைச்சனாகிய சுமந்திர னிடம் பேசும்போது புரூரவன் ஆட்சி செய்த காசியின் மன்னர்களை விருந்தாக அழைக்கக் கூறுகிறார். அரிச் சந்திரன் வாழ்ந்த காலம் விசுவாமித்திரர் வசிட்டர் காலமே யாகும். யாயாதி மன்னனின் மகன் புரூ காசியை ஆட்சி செய்திருக்கிறான். திவோதாசனின் பாட்டனா ராகிய ஹரியாசவன் பற்றி மகாபாரதம் காசி மன்னனாகக் கூறுகிறது. பீமசேனன் மகனே திவோதாசன் என்றும், இவனின் மகன் பிரதர்தனன் யாயாதி மகள் மாதவி வயிற்றில் பிறந்ததாகவும் கூறுகிறார்கள். நகுலன் காசி வீரர்களை வென்றதை உத்யோகபர்வத்தில் மகாபாரதம் கூறுகிறது. இவை இதிகாசகாலத்துக் குறிப்புகளாகும்.

புத்த ஜாதகக் கதைகள்மூலம் பழைய காசியின் சமூக வாழ்வைச் சில கோணங்களில் காணமுடிகிறது. இப்போது வரதட்சிணைக் கொடுமையால் பெண் குழந்தை பெறுவதை வெறுக்கிறோம். அப்போது ஆண்குழந்தைப்

பிறப்பைப்போல் பெண் பிறந்ததும் மகிழ்ந்ததாக இல்லை. அப்போதும் இப்போதும் பிள்ளைப் பேற்றுக்குத் தாய் வீட்டையே பெண்கள் நாடியிருக்கிறார்கள். இந்தியாவின் சிறு கிராமச்சூழல் அன்றைய காசியிலும் இருந்ததாகவே தெரிகிறது.

எகிப்தில் சகோதரனையே தமக்கைக்குத் திருமணம் செய்ததைக் கிளியோபாட்ரா வாழ்வில் காணுகிறோம். இந்த வழக்கம் மன்னர்களிடமும் சிலவேளை மக்களிடமும் ஓரளவு காசியில் இருந்ததாகத் தெரிகிறது விருந்து களுக்குப் புதியவர்களை அழைத்துப் போய் உணவு மது முதலியன கொடுப்பது பரவலான காட்சியாகவே இருந் திருக்கிறது.

பெண்கள் 12 வயதிலும் ஆண்கள் பதினாறு வ்யதிலும் திருமணம் செய்து கொண்டனர். தசரத ஜாதகக் கதையில் இராமன் தன் தங்கையான சீதையை மணந்ததாக ஒரு குறிப்பு வருவதை நாம் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

சுயம்வரம், காதல்மணமாகிய காந்தார மணம், பெற்றோர் கண்டு செய்து வைக்கும் மணம், சுய சாதியில் மணம் செய்தல் முதலியன மிகப் பழங்காலத்திலேயே வழக்கிற்கு வந்துவிட்டன. பல மனைவியர் வழக்கம் தாராளமானதாகவே இருந்திருக்கிறது.

விதவைகள் உடன்கட்டை ஏறும் மூட வழக்கம் புத்த ஜாதகக் கதைகளில் வலிமையாக இல்லை. விதவைகள் வேறு மணம் புரிவதைத் தடுத்ததாகவும் இல்லை. கணவனைப் பிரிந்து வேறு ஆணுடன் வாழ்வதை அர சாங்கத்தினளவில்கூடக் காண முடிகிறது. ஒரு நீதிபதி கணவன் விரும்பாதபோது அவனைவிட்டு ஒரு மனைவி விலகி விடலாம் என்று அரசி ஒருத்திக்கே புத்திமதி கூறுகிறார். வேசாந்தரன் தன் மனைவியையே தான் பிரிந்தால் வேறு கணவனைத் தேடுமாறு அறிவுரை கூறுகிறான். பிரபாவதி ஒரு கதையில் இந்த வஞ்சகக்

கணவனைக் கட்டிக் கொண்டு வாழ்கிறேனே இனியேனும் நல்லவனை நான் தேடுவேன் என்கிறாள்.

கடற்கரையைவிட்டு மிகவும் உள்ளே தள்ளியிருந்தாலும் காசி உள்நாட்டு வாணிகத்தைப் போலவே கப்பல் வாணிகத்திலும் சிறந்திருந்ததை ஜாதகக் கதைகள் கூறுகின்றன. கங்கை வழியாகச் சென்று பர்மாவின் தென் பகுதியிலும் வாணிபம் செய்துள்ளனர். 500 வண்டிகளில் சந்தனக்கட்டைகள் ஏற்றியதும், ›00 வண்டிகளில் சிவந்த ஆடைகளை ஏற்றியதும், இரும்பு ஊசிகள், பிற ஆயுதங்கள், நறுமணப் பொருள்கள் விற்றதுமான கதைக் குறிப்புகள் பல உள்ளன. யானைத் தந்த கடை வீதியே இருந்திருக்கிறது.

காசுகள் காசு பணம் எனப்பட்டன. வட்டிகள், கட்டண வகைகள், ஒய்வு ஊதியங்கள், நிலையான கடன்கள், வருமான வகைகள் முதலிய பணப்புழக்கம் நாணயச் செலாவணியை வெளிக் காட்டுகிறது.

மலர் வினைஞர், புல் விற்பனையாளர், குறி சொல்வோர், பறை முழக்குவோர், சங்கு ஊதுவோர், இசைக் கலைஞர்கள், சமையல்காரர், வனக்காவலர், தோட்டக் காவலர், சாகுபடியாளர், வக்கீல்கள், பழ விற்பனையாளர், நவதானிய விற்பனையாளர், பேய் ஓட்டுவோர், முடிதிருத்துவோர், மருத்துவர், பாம்புப் பிடாரர், கழைக் கூத்தாடிகள், நடனமாதர், மீன் வலைஞர், வேடுவர், பறவை பிடிப்போர் முதலிய தொழிலாளர்களும் இன்று போல் அன்றுமிருந்தனராம்.

(ii) ஞானக் காசி

பாவம் போக்கும் என்ற நம்பிக்கை மிக்க பக்தி காசி என்பதைவிட, அது அறிவுடையார் தத்துவ விவாதங்களின் தலையை நாடுவதில் ஞான மயமாய் இக்காசியை ஆக்கியதையே சிறப்பாகக் கருத வேண்டும். காரணம்

சமண, பௌத்த, சமய முதல்வர்களை அக்காசிதான் தன் பக்கமாக அவர்களை இழுத்திருக்கிறது.

வேதங்களைச் சீர் செய்த வியாசரும், இராமாயணம் கொடுத்த வால்மீகியும், புராணங்களில் வரும் முனிவர்கள் பலரும், பாணினீயும், இன்னும் பலரும் இருந்து பெருமை கொண்டது காசி. எட்டாம் நூற்றாண்டில், ஆதிசங்கரர் காசியில் தங்கியே பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கவுரை எழுதிப் புகழ்பெற்றார். பல்வேறு நூல்கள் செய்த அவர் இந்தியா முழுதும் பரவிய புகழ் பெறக் காரணமானது காசியே ஆகும். காசியில் ஞானவாவியைப் போலவே காசி நகரமே இந்தியாவுக்கு ஞானவாவியாக இருந்திருக்கிறது.

திருமணத்தில் காசியாத்திரை செல்வதாக ஒரு சடங்குள்ளதே அது துறவு கருதியோ கல்வி கருதியோ காசிக்குப் போவதாகத்தான் உருவாக்கப் பெற்றுள்ளது. பிரம்மவர்த்தனா (ஞானம் வளர்ப்பது) என்றும் ஞானபுரி என்றும் காசிக்குப் பெயர் இருந்திருக்கிறது. தென்னகத்தில் தோன்றிச் சிதம்பரத்தோடு தன்னை ஒன்ற வைத்த பதஞ்சலி முனிவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இங்கிருந்தார். அவரே யோக சூத்திரம் கொடுத்த பெரியார். யோகம் இன்றளவும் மேலை நாட்டாரைக் கவர்கிறது. அவர்களில் யாரும் பதஞ்சலியை மறக்க முடியாது.

இதற்காகக் காசி நிறுவனங்களை ஏற்படுத்திக் கொள்ளவில்லை, ஆற்றங்கரை, அரச ஆலமரங்களின் நிழல், ஆசிரமக் குடிசை,மடாலயங்களின் தாழ்வாரங்கள், வீட்டுத் திண்ணைகள், விஹாரங்கள், மண்டபங்கள், அவைகள் இப்படி எது வாய்ப்போ அதைக் கைப்பற்றியே ஞான வேள்விகளை நடத்தியிருக்கிறார்கள். வெள்ளைக்காரர்கள் இங்கு வந்தபோது சமஸ்கிருதம் படிக்கும் மாணவர்களிடம் பூமியின் காந்த சுழற்சியும், பிரபஞ்

சத்தின் தூல வடிவமும் இப்படி இப்படி இருக்கும் என்று கூறியதைக் கண்டு வியந்து போயிருக்கிறார்கள்.

தொடக்கத்தில் இதில் அவர்கள் நம்பிக்கை கொள்ளா விட்டாலும்கூட, ஒரு சமயத்தை வளர்க்கும் மொழியில் தத்துவம் தர்க்கவாதம் தவிர வேறு எதையும் எதிர் பார்க்காமையால், அறிவியல் கருத்துக்களை அலச முற்பட்ட உணர்வைக்கண்டு வியந்துபோய் நின்றிருக் கிறார்கள்.

ஆமையின் முதுகிலே உலகம் இருப்பதை அவர்கள் நம்பவில்லை. வடதுருவம் தென்துருவம் என்று பேசுவது எப்படி என்று வியந்திருக்கிறார்கள். எட்டு யானையும் ஆதிசேடனும் தாங்கும் பிரபஞ்சம் என்பதிலே அவர் களுக்கு நம்பிக்கை வரவில்லை! குதிரை சக்திபோல யானைச் சக்தி பாம்புச் சக்தி இவற்றை வாயு சக்தி யாகவும் அதையே காந்த சக்தியாகவும் இவர்கள் கருதி னார்களோ என்ற சந்தேகம் வந்தபோது எங்கேயோ ஒரு துளி நம்பிக்கை இவர்கள்மேல் ஏற்பட்டுப் போயிருக் கிறது. இதன் விளைவாகவே காசியில் அவமானம் எய்திய வாரன்ஹேஸ்டிங்ஸ் கூட கி.பி. 1791-ல் இங்கே ஒரு சமஸ்கிருதக் கல்லூரி வைக்க அனுமதித்திருக்கிறான். கி.பி. 1853-ல் கட்டடம் கட்டப்பெற்று இந்திய முறைக் கல்வி அங்குப் போதிக்கப் பெற்றது. வெள்ளை இராணியை விளம்ப இராணி கல்லூரி என்றே ஆயிற்று. 'வாரணேஸ்ய சமஸ்கிருத வித்யாலயா' என்ற பெயர் இப்போது அதற்கு வழங்கப் பெறுகிறது.

தக்சசிலம் பழைய கல்வி நிறுவனத்தில் சிறந்த தலைமை பெற்றிருந்தது. நாலாந்தாவுக்கு முன்பே இதற்குப் பெருமையுண்டு. காசியின் கல்வி வளம் தட்ச சீலத்தால் உருவானதே. கட்டணம் கட்டிப் படித்தலும், சேவை செய்து படித்தலும், கடியதண்டனைகளைப் பெற்றும் படித்தலும் என்று அக்காலக்கல்வியின் கடுமை யும் அருமையும் புத்த ஜாதகக் கதைகளில் காணமுடியும்

பண்டித மதன் மோகன் மாளவியா என்னும் பெரியார் காசி மண்ணின் மைந்தர். அதன் மாட்சிமையறிந்தும் மறவாத மாவீரர். அவர் பெரிய செல்வரில்லைதான்- காசியை நேசித்த வள்ளல், அறிவின் ஒளிச்சுடராயிருந்த காசியை இருகை கொண்டு இதுவரையிலும் அணையாமல் காத்த அறிஞர்களையெல்லாம் கனவில் கண்டு கண்டு இப்படிப்பட்ட பெரியோர் இனிவரப்போவதில்லையே, இப்போதே அழியாத ஞானக் காசியில் ஓர் அறிவாலயம் அமைத்து அப்பழைய பெருமையை நிலைநாட்டவேண்டு மென்று கருதினார். அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதை விட,ஆலயம் பதினாயிரம் எடுப்பதைவிட ஓர் ஏழைக்குக் கல்விக் கண்ணைத்திறப்பதே பெரிய புண்ணியம் என்ற பாரதியின் கருத்துக்கு ஒரு செயல் வடிவம் கொடுத்தால் அது மாளவியாவாகவே இருக்கும்.

தான் கற்பதற்காகக் கையேந்தினாலும் அது இழிவு இல்லை என்பார்கள். யார் யாரோ கற்கவேண்டுமென்று கையேந்தினார் மாளவியா. அது புண்ணியமல்லவா? நாடும் காடும் மேடும் அவருக்குக் களைக்கவில்லை ஒரு கங்கைப் பயணமாகவே காட்சி தந்தது.

தகுதியானவன் கையேந்தி வந்தால் அவன் கையில் தானமிடுவதே பெரிய புண்ணியம் என்று கருதினவர் களாய் நிதிமிகுந்தவர்கள் பொற்குவை தந்தார்கள். நிதி குறைந்தவர்கள் காசுகள் தந்தனர். அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளினர். மாளவியா ஒரு மாபெரும் வேள்வியைச் சரியாக விளம்பரப்படுத்திவிட்டார்.

அது என்ன காலம்? மகாத்மாவின் கையிலே விடுதலையியக்கம் வந்து சேராதகாலம். அப்போதே— கி.பி.-1916 ல் மாளவியா தன் முயற்சியில் திலகம் பெற்று விட்டார்.

இந்தியராகப் பிறக்காவிட்டாலும் இந்திய அறிவுல கத்தின் தலைவியாகவும் ஆன்மிக நெறி முதல்வியாகவும்

விடுதலை இயக்க வேள்வி யாகியாகவுமிருந்த அன்னி பெஸண்ட் அம்மையார் ஆதரவிருந்தது. சென்ட்ரல் இந்துப்பள்ளி இருக்குமிடத்தில் அன்னிபெஸண்ட் ஆதரவில் சிறிய அளவில் காசி இந்துப் பல்கலைக்கழகம் தொடங்கப் பெற்றது. ஐந்தாண்டுகள் வரை அங்குதான் தளர் நடையிட்டது. காசி அரசர் 1300 ஏக்கர் நன்கொடை யாகத் தந்த இடத்தில் பிறகு பல்கலைக்கழகம் மாறியது.

அஸி ஆற்றிற்கும் தென்மேற்கே கங்கைக்கரையில் உள்ளது இந்துப் பல்கலைக்கழகம். அநேகமாக இன்னும் எந்த ஒரு பல்கலைக்கழகத்திற்கும் அப்படி ஒரு கட்டிட அமைப்பு ஏற்படவில்லை. அரைவட்டவடிவம் பல ஆரங் களாகச் சாலைகள். ஐந்து வளைந்த பெரும் பகுதிகள் இப்படி அமைக்கப்பட்டுள்ளது.

கங்கையில் அரைவட்டம் கரையில் அரைவட்டமாகக் கற்பனை செய்யலாம். பாதி கங்கையிலிருப்பதாக ஒரு பாவனை நமக்கு வரும். இறைவன் ஞானமயமானவன். அவன் தலையிலேயே இடம் பெற்ற கங்கையில் பாதி வட்டம் இருப்பதாகப் பாவிப்பது ஒரு பொருத்தம்தானே! நிலத்துக்குப் பயிர்வளத்தையும் உடலுக்கு நலவளத்தையும் உள்ளத்துக்கு அறிவுவளத்தையும் கங்கை தருவாள் என்பது தவறில்லை.

மையத்தில் ஆட்சி மன்றஇடங்கள் உள்ளன. ஒவ்வொரு கலைப் பிரிவின் நூலகம், வகுப்பகம், விளையாட்டு அரங்கம், ஆசிரியர் குடியிருப்பு, மாணவரில்லம் முதலிய யாவும் ஆரம்போல் அடுத்தடுத்து நிரவி நின்று அமைந் துள்ள காட்சி சிறப்பு. எந்தக் கலைப் பிரிவினரும் தம் தொடர்பான இடம் முழுதும் எதிர் எதிரே பெற்றுக் கொண்டே ஆட்சிமன்றப் பேரிடங்களைச் சமமாக அடையலாம்.

நாற்பதற்கும் மேற்பட்ட கலைப்பிரிவுகள் உள்ளன. பழமை புதுமை பேதம் முதலாக எந்தப் பேதமும்

இல்லை. அவரவர் சமய நெறிகளுக்கும் தடையேது மில்லை. இந்த அறிவாலய அன்றாட நிகழ்வுக்குரிய நீர், ஒளி, தூய்மை, செய்தித்தொடர்பு, மருத்துவம், கடைகள், முதலிய யாவும் திட்டமிட்டுச் செய்யப் பெற்றுள்ளன.

சுமார் 6 இலட்சம் நூல்கள் கொண்ட நூலகம், அச்சகம், கலைக்கூடம் யாவும் உள்ளன. ஓரிலட்சம் பேர் அமரத்தக்க வெளியரங்கம் உள்ளது. மாளவியாவே துணைவேந்தராக இருந்து புகழுடம்பு பெற்றிருக்கிறார். ஒரு பெரிய அறத்தைச் செய்ய செல்வம் வேண்டாம். செய்வேன் என்ற திடமும் முயற்சியும் பொது நலமும் நடு நிலைமையும் இருந்தால் அதுபோதும்.

"பொறி இன்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி"

என்ற திருக்குறளுக்கு மாளவியாவின் முயற்சித் திருவினையே உயிருள்ள விளக்கம் என்பதை வாயில் அவரின் உருவச்சிலை நமக்குச் சொல்லிக்கொண் டிருக்கிறது.

பாரத் கலா பவனம் என்ற அருங்காட்சியகம் உள்ளது. அரிய பொருள்கள் சேர்க்கப்பெற்றுள்ளன. இந்தப் பல் கலைக்கழகத்தில் எல்லாரும் படித்திட முடியாது. போய்ப் பார்த்தாலே போதும். நம் அறிவில் ஒரு சிறு உயர்வு தோன்றும்.

மாளவியாவின் முயற்சியால் பிர்லா ஒரு கோயில் கட்டியிருக்கிறார் இதனுள். காசியில் பெரிய கோயில்கள் இடி பட்டன. அதை மறக்க மன்னிக்க இந்தக் கோயில் ஈடு கொடுத்து நிற்கிறது. மாடியுள்ள ஒரு மாளிகை இது. பிர்லாமந்திர் என்று இதற்குப் பெயருண்டு. சலவைக் கல்லால் இழைத்திருக்கிறார்கள்.

256 அடி உயரமான ஒரு கோபுரம் தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தை விட இது உயரமானதாகும். நருமதை லிங்கம் பளபளக்கிறது. வேதங்கள், விநாயகர்,

அம்மை, பஞ்சமுகமகா தேவர் இப்படி எல்லாம் தனித்தனி அறையிலேயே உள்ளன. நந்தியெம் பெருமான் லிங்கத்தின் எதிரே இல்லை. கோமுகத்தைப் பார்த்தபடி பக்க வாட்டி லிருக்கிறார். வடக்கே பல இடங்களில் இப்படித் தானிருக்கும்.

கடவுள் மேனிகளைக் கறுப்பாகவே பார்த்த கண் களுக்கு வெள்ளைக் கல்லில் பல நிறமுடன் தோன்றும் திருமேனிகள் புதுமையான அனுபவமேயாகும். மாடி யிலும் கோயில்தான். மகா தேவர், இலக்குமி நாராயணர், துர்க்கை எனப் பல சந்நிதிகள் உள்ளன. புனித நூல் கருத்துக்கள் அழகாகச் சுவர் முழுதும் பொறிக்கப் பட்டுள்ளன.

தனித்தனியே அறைகளில் சொந்தக்காரர்களைப் போய்ப் பார்த்து வருவதுபோல இங்குக் கோயில்களில் சந்நிதிகள் இருப்பது ஒருவிதப் புதுமை மாணவர்கள் மன நலம் பெற இது நல்ல வாய்ப்பு.

(iii) அரசக்காசி

அரிச்சந்திரன், அஜாதசத்ரு, யாயாதி, புரூரவா முதலிய அரசர்கள் இதிகாச காலங்களில் காசியை ஆண்ட வர்கள். கி.மு. ஏழாம் நூற்றாண்டில் மீண்டும் காசி புதிய பொலிவுடன் அரசவம்சச் சிறப்பைப் பெற்றது. இந்தி யாவிலேயே தலைமையான நகரமாக அப்போது காசி விளங்கியதாய்க் "குடில்லா ஜாதகக் கதை" கூறுகிறது.

பிராமணர்கள் காசியை அடைவதற்கு முன்னர் திருத ராட்டிரன் என்னும் மன்னன் அசுவமேதயாகம் செய் தானாம். மகாகோசலம் என்ற கி.மு. 6ஆம் நூற்றாண்டில் காசிப்பேரரசு விளங்கியது. அதன்பிறகு பல்வேறு அண்டை மாநில அரசுகளே காசியையும் ஆண்டன.

ஆனால் மிகப் பிற்காலத்தில்தான் இன்றைய அரச வம்சம் தோன்றியது. காசிக்கு அக்கரையில் இராம் நகரில்

அரண்மனை இருக்கிறது. அதில்தான் வியாசர் காசியிலிருந்து நீக்கப்பட்ட பிறகு வாழ்ந்தார். அதை வியாச காசி என்றே கூறுவார்கள். இந்த அரண்மனை கங்கையின் நீரோட்டத்தையும் கரைகளின் கவினையும் காணுமாறு அழகாகக் கட்டப்பட்டுள்ளது. காசியைப் பார்த்து விட்டு அரசரையும் வணங்கிப் போகும் வழக்கம் முன்பு இருந்தது. இப்போது இல்லை. ஆனால் காசியரசரைக் கண்டால் மக்கள் 'மகா தேவா' என்றே கூக்குரலிடுவர். காரணம் வாரன்ஹேஸ்டிங்க்ஸ் அப்போதைய காசியில் வரிபோட வந்து அரசுக்குத் தொல்லைதர இருந்தார். பிறகு அவரே தலை தப்பினால் போதுமென்று காசியை விட்டே ஓடி விட்டார். புதிய காசியையும் விசுவர் கோயிலையும் காக்கும் பொறுப்பை மனமுவந்து ஏற்றுக்கொண்டு தொண்டு புரிந்ததால் இன்றையளவும் மன்னருக்கு இங்கு மதிப்பிருக்கிறது.

பழைமை மாறாத அரண்மனையும் புதுமையை வெறுக்காத அரசரும் இப்போது காணப்படும் கலவைக் காட்சியாகும். காசியின் கலை, கல்வி, பக்தி இவை முன்பு போல் பரவ வேண்டும் என்ற ஆர்வமுள்ள அரசர் இவர்.

ஒருமுறை கங்கையில் குளித்த தமிழகப் பிராமண இளைஞர் உச்சரிப்பில் தவறு இல்லாமல் வேத உபநிஷத் மந்திரங்களை ஓதுவதைக் கேட்ட இந்த அரசர் அவரை விசாரித்தார். அவரோ ஓர் அரசாங்கப் பணிபுரிபவர் என்று அறிந்ததும் இந்தப் பணியில் இருந்தே இந்த இளமைக் காலத்திலும் இப்படி வியக்கத்தக்க ஓதல் பயிற்சியிருக்கிறதே என்று வியந்தாராம். தமிழகத்தின் கல்விச் சிறப்புள்ள ஒருவரையே தம் மகனுக்கும் கற்றுத் தர வேண்டுமென்று கருதினாராம்.

ஓர் அந்தணன் வேதம் ஓதி சேரனிடம் பரிசு பெற்றுத் திரும்பும்போது மதுரையில், கோலிக் குண்டு விளையாடிய ஒரு சிறுவன் மிக உச்சாடணச் சிறப்புடன் ஓதியவாறே விளையாடக் கண்டு, தன் பரிசுகளை அவனுக்கே வழங்கிப்

போய் விட்டானாம். சிலப்பதிகாரத்தில் இப்படியொரு கதை வருகிறது. அன்று தொட்டு இன்றுவரை தமிழகம் வடமொழியிலும் ஏன் ஆங்கிலத்திலும் கூடச் சிறந்த புலமை கொண்டிருந்ததைக் கேட்கும்போது, இனியும் அப்படி இருக்குமோ? என்ற கவலையே தோன்றுகிறது.

வியாச காசி கோயிலில் வியாசர், சுகமுனிவர், விச்சேச்வரர் ஆகிய லிங்கங்கள் உள்ளன அங்கிருந்து சிறிது தொலைவில் இராமேச்வரர் இலிங்கமும் உள்ளது. பெரிய கோயிலும் உயர்ந்த கோபுரமுமாகத் துர்க்கை கோயில் ஒன்றுமிருக்கிறது அழகான கலைப் படைப்புக் கோயிலிது. கல்நார் கல்லிலான கோபுரமிது. சிற்பக் காட்சிகள் கவின் மிக்கனவாகும்.

சக்தி பஞ்சாயதனாவுக்குரிய கடவுளர்கள் இருக்கிறார்கள் ஜகதாத்திரி சிம்மவாஹினி என்ற திருநாமம் துர்க்காம்பிகைக்கு வழங்குகிறது. கவசம் அணிந்த அம்மையாக இருக்கிறாள். ஸ்ரீசக்கரம் பிரதிட்டை செய்துள்ளார்கள். நான்கு பக்கமும் மண்டபங்களாய் அமைந்த குளம் ஒன்றும் இந்தக் கோயிலுக்கு எதிரே உள்ளது.

மூன்று பிறைவாயிலும் கம்பிக் கதவுமிட்டுப் பாழான நிலையில் துர்க்கைக் கோயிலுக்கும் தொலைவில் ஒரு கோயிலுள்ளது. இதுவே தசவித்யாவில் ஆறாவது வித்யா வாகப் போற்றப் பெறும் சின்னமஸ்தா என்ற அன்னையின் கோயிலாகும். இது சாக்த முறையிலான தாந்திரக் கோயில்.

சலவைக்கல்லில் சிலைகள் உள்ளே இருக்கின்றன. ஒரு தேவதை தன் வலக்கை வாளால் தன் தலையையே வெட்டிக்கொள்கிறாள். அந்தத் தலை அவளின் இடது கையில் வந்து குந்தி விடுகிறது. 3 தாரைகளாக உதிரம் வெளிப்படுகிறது. இடதுகையிலுள்ள தலையே ஒரு தாரையைக் குடிக்கும். இவ்வம்மையின் சேடியர் தாகினி, சாகினி இருவரும் மற்ற இரண்டு தாரைகளின் உதிரத்தை

யும் குடிப்பர். கீழே நிர்வாணமாக ஒரு தம்பதியர் கலவி நிலையில் படுத்திருப்பர்.

3 தாரைகள் இடா, பிங்கலா, சுழுமுனை என்ற மூன்று நாடிகள், கலவி செய்யும் தம்பதியர் சகஸ்ராரத்தில் குண்டலினி ஏறிய யோகநிலை. இத்தகைய சின்னமஸ்தா வழிபாடு பீஹார் மாநிலத்தில் மிகுதியாகும்.

பரசுராம அவதாரத்தில் அவர் தன் தாயையே கொலை செய்து பிழைக்க வைப்பது என்பதும், ஓர் தேவருலகத்து வசு பிற தேவமாதருடன் ஜலக்கிரீடை செய்ததைக் கண்டதே தாயைக் கொலை செய்ய காரணம் என்பதும், அத்தாயின் பெயர் ரேணுகாதேவி என்பதும், பரசுராமர் ஒரு ஸ்ரீவித்யா உபாசகர் என்பதும் நினைத்தால் சின்னமஸ்தா கதையே கருத்து விளக்கமாகப் பரசுராமர் கதையாகக் கூறப்பட்டுளது என்று அறியலாம்.

சின்ன என்றால் சின்னப்படுத்திய துண்டிய என்றும், மஸ்தா என்றால் தலை என்றும் பொருள்படும். ஹூம் என்ற பீஜமந்திரம் இந்தச் சின்னமஸ்தாவுக்குரியதாகும்.

கீழ்க்கரையாகிய அரசக் காசிக்குப் பழைய பெயரே வியாசக் காசி என்று பெயர். வியாசர் ஆசிரமம் என்றில்லாமல் காசிக்கு வரக்கூடாதெனப் புறக்கணிக்கப்பட்ட வியாசருடன் காசி எப்படி ஒட்டிக்கொண்டது? இதற்கு வரலாறு இருக்கிறது.

அன்னபூரணி வியாசரை அக்கரைக்கு அப்புறப் படுத்தியபின் வியாசரால் சும்மா இருக்க முடியவில்லை. காசியளவிற்கு அக்கரையை உயர்த்துவது என்ற அக்கறையில் முயன்றார். வெற்றியும் பெற்றுவிட்டார். அங்கேயும் விசுவர் கோயில் இங்கேயும் விசுவர் கோயில். மக்களுக்கு எது உண்மைக் காசி என்றே புரியாத தடுமாற்றமாகிவிட்டது. தேவர்களுக்கே இப்படித் தடுமாற்றம் ஆகிவிட்டதாம். தேவர்கள் விநாயகரிடம் சென்று முறையிட்டார்கள்.

காசியின் காவல் தலைவர்களில் அவரும் இன்றியமை யாதவராயிற்றே! விசுவரே திரும்பக் காசி வருவதற்கு விநாயகர் தானே வழிவகுத்துக் கொடுத்தார்? எனவே ஓர் அந்தணச் சிறுவன் கோலத்தில் வியாசரிடம் போனார். மிகுந்த விருப்பும் பொறுப்பும் காட்டி புதிய காசியில் பழைய காசிபோல் என்ன என்ன பெருமைகள் உள்ளன என்று ஒன்றுவிடாமல் கேட்டுக் கொண்டே வந்தார்.

பழைய காசியின் பெருமையை மனப்பாடம் செய்து வந்து அதற்கு நிகர் இருக்கிறதா இப்புதிய காசியில் என்று வினாவுவது தன்னை ஆழம் பார்க்கும் முயற்சி என்று கண்டுகொண்டார். ஒரு தனிமனிதன் காசியைப் போலவே முழுதும் உருப்பண்ணிய பெருமையைப் பாராட்டுவதற்குப் பதிலாய்க் குறை காண்பதே குறிக்கோளாக ஒரு சிறுவனை யாரோ சொல்லிக் கொடுத்து அனுப்பித்தான் நம்மைக் கேலி செய்வதாக வியாசர் கருதினார். கோபம் வந்து விட்டது.

பொறுமையான தருமபுத்திரனைப் பற்றி எழுதத் தெரிந்தவருக்குப் பொறுமையாக இருப்பது எப்படி என்று புரியவில்லை. சினத்துடன் அவர் முகம் சிவக்கும்வரை (விநாயகர்) சிறுவனும் அவரை விடவில்லை. கடைசியாக ஒரு வினா கேட்டார். "பழைய காசிக்கு வந்து இறந்தால் முக்தி கிடைக்குமே? இந்தக் காசியில் இறந்தால் என்ன கிடைக்கும்?" என்று கேட்டுவைத்தார்.

புதிய காசியைப் பயன் கொள்ள நினைப்பவன் வினா இதுவன்று என்று வெகுண்டிருந்த வியாசர் "இந்தக் காசியில் இறந்தவனுக்குக் கழுதைப் பிறப்புத்தான் கிடைக்கும்" என்று கோபமாகவே பதிலைக் கூறிவிட்டார்.

விநயமாக வந்த விநாயகரோ "அப்படியே ஆகட்டும்" என்று ஆசீர்வதித்துவிட்டுப் போய்விட்டார். வந்தவர் வெறும் சிறுவனில்லை என்று உணர்ந்து கொண்ட முனிவர் தவறுதலாகக் கோபத்தில் குறைப்படுத்திக் கூறியதே தடையாகப் போய் விட்டதே என்று வருந்தினார். தானே

கட்டிய காசியின் பெருமையைத் தானே அழித்துவிட்டதாக வருந்தினார். தன் நிதானமான மனத்தில் தியான பலத்தால் வந்தவர் விநாயகர் என்றுணர்ந்தார்.

வழக்கம்போல் அட்டமி சதுர்த்தசி ஆகியவற்றில் காசிக்குப் போகும் உரிமைபெற்ற வியாசர் விசுவர் சந்நிதியில் இத்தவறு கூறி இரந்தார். 'நானே உருவாக்கிய காசியை நானே சிறுமைப்படுத்தி விட்டேன். எங்கும் வியாபகமாக உள்ள விசுவரே நீர் இருக்கும் இடமெல்லாம் காசியல்லவா? நான் உருவாக்கிய காசிக்கும் நீர் அருள் புரிய வேண்டும்' என்று மன்றாடினார். விசுவரும் வியாசர் நிலையறிந்தார். போட்டிக்காகக் காசியை வேறு ஒன்றாக உருவாக்கவில்லை. பழைய காசியில் முழுதும் வாழ முடியாமை கருதி அப்பிரிவு நீக்கவே புதிதாக ஒரு காசியை வியாசர் உருவாக்கியிருக்கிறார் என்றுணர்ந்தார். அன்பினால் செய்யப்படும் எதையுமே அருள்கொண்டு காணும் பெருமான் ஒருவரம் கொடுத்தார்.

"பழைய காசிக்கு வந்து வியாச காசிக்கும் சென்று வணங்குவோர் முழுப்பயனும் எய்துவர்" என்பதே அந்த வரமாகும்.

அறிவாளன் இருக்குமிடம் குறைவற்ற பெருமைக்குரியது என்பதையே இது காட்டுகிறது. மாபாரதத்தைத் தன் கொம்பினால் எழுதியே வியாசருக்கு உதவிய விநாயகர் வியாசரின் காசியை வியாசர் வாயினாலேயே சபிக்குமாறு செய்துவிட்டார். இதுவும் வியாசகாசிக்கு நல்ல விளைவைத்தான் இறுதியாக உண்டு பண்ணியது.

பல இடங்களில் நாரதர் போலவே விநாயகரும் நடந்து கொள்வார். இதனால்தான் "ஓம் விக்ந கர்த்ரே நம:", "ஓம் விக்ந ஹர்த்ரே நம:" "ஓம் விக்ந ராஜாய நம:" என்று அவர் நாமாவளி உள்ளது. விக்னத்தை உண்டு செய்பவரும் அதை அழிப்பவரும் அதனாலேயே ஆண்டு கொள்பவரும் என்பது அவற்றின் பொருளாகும்.

இந்நாமாவளிகள் இப்படிப் பயனான வரலாறாக இங்குள்ளது.

காசிக்கு விரோதமான எதையும் காசியின் காவலர்கள் அனுமதிப்பதில்லை. இந்தப் பாங்கில்தான் காசியில் பல்லிகள் ஒலிப்பதில்லை, கருடன் பறப்பதில்லை என்ற வழக்கமும் வந்துள்ளது. அது பைரவர் தந்த கட்டளை யாகும். பிணங்கள் குவியும் காசியில் கழுகுகள் உண்டு; கருடன் பறப்பதைக் காண முடியாது. நெருக்கமான வீடுகள் பல பழையனவாயிருந்தும் பல்லிகள் ஒலிசெய்வ தில்லை எனப்படுகிறது. பசுக்கள் கத்தாமல் இருப்பதன் காரணம் இங்கு அவை நன்கு பராமரிக்கப்படுவதும் வணங்கப் பெறுவதுமே யாகும். பாலில் தண்ணீர் ஊற்று வோர் வீட்டில் பெண் எடுப்பதில்லை என்ற மரபு ஒரு காலத்தில் மிகுந்த செல்வாக்கில் இருந்தது. ஒழுங்குகள் குறையத் தலைப்பட்ட இக்காலத்தில் அந்த மரபிற்கு மிகுந்த பிடிப்பு இல்லையென்றாலும் இன்னும் காசியில் கொழுப்பு மினு மினுக்கும் பால் கடைகளில் கிடைப்பதைக் காணலாம்.

பல்லி, கருடன் கதைகள் வருமாறு: அனுமனை அனுப்பிச் சுயம்புலிங்கமாக ஒன்று கொணருமாறு இராமேச்வரத்திலிருந்து இராமர் கட்டளையிட்டார். காசிக்கு வந்த அனுமனுக்கு எது சுயம்பு லிங்கமென்று தெரியாதபடி எங்குமே இலிங்கங்களாகக் காட்சி தந்தன.

முன்பு மருந்து செய்யப் போய் எது மருந்து எனத் தெரியாமல் மருந்து மலையையே கொண்டு போனவ ராயிற்றே இவர். ஆனால் இப்போது காசியையே பெயர்த்துக் கொண்டு போவது சரியல்ல என்று தோன்றியது. அப்போது கருடன் வட்டமிட்டதும், பல்லி ஒலித்ததும் அடையாளமாகக் கொண்டு சுயம்பு லிங்கம் எதுவெனக் கண்டு பெயர்த்தபோது பைரவருக்குக் கோபம் வந்தது. என்னைக் கேளாது கவர்வது தவறு

என எதிர்த்தார். பெரிய சண்டை இருவருக்கும் நடந்தது. தேவர்கள் இராமனின் புனிதமான கட்டளையால் அனுமன் அப்படிச் செய்ததாகவும் யாவர்க்கும் பயன் படவே இராமேச்சுரத்திற்கு இலிங்கம் போவதாகவும் கூறி அனுமனை விடுவித்தனர்.

பைரவர் அந்த நிகழ்ச்சிக்காகவே பல்லி வாழலாம், ஒலிக்கக் கூடாது. கருடன் நகர் எல்லைக்குள் வரலாம், பறக்கக்கூடாது என்று கட்டளையிட்டு விட்டாராம்.

காசியின் பெருமைகளைக் கதைகளாக மாற்றிக் கருத்து விளக்கம் பல செய்துள்ளமை மிகவும் சிறப்பான தாகும்.

(iv) தமிழகக் காசி

தமிழரின் குமரகுருபரர் காசியில் கேதாரநாதர் கோயிலும் துறையும் மடமும் உண்டு செய்தார்—நகரத் தார் சமூகத்தின் விசாலாட்சி கோயிலும் அன்னதானச் சத்திரமும் கண்டனர்—காஞ்சி காமகோடி பீடாதிபதி களால் காமகோடீச்வரம் உருவானது—தமிழகப் பிராமணர் பலர் சடங்குமுறைகளை இயற்றிக் காசியில் வாழ்கின்றனர். இவை யாவும் தமிழர் சிறப்பை இன்றைய காசியிலும் உணர்த்துவனவாயுள்ளன.

காசி ராமேசம் என்றுதான் யாத்திரையைக் கூறுவது வழக்கம். வட நாட்டினர் இன்றும் பெருமளவில் இராமேசம் வருவது இதன் தொடர்பே. இராமேசம் என்ற கோயிலே பஞ்சகுரோசச் சாலையில் உளது. இராமேசம் அரசர் தொடர்புடையது. காசியும் அரசர் தொடர்புடையது. இராமநாதர் இராமேசத்தி லுள்ளார். இராம நாமமே விசுவர் கூறுகிறார். அனுமன் காசியில் இருந்தே இலிங்கம் கொணர்ந்தார் காசி விசுவநாதர் என்ற இலிங்கம் இராமேசத்தில் உளது.

காசியில் பருவதராசன் மகள் பார்வதியை மணந்த பிறகே சிவபெருமான் காசி வந்தார். அதைக் குறிக்கும் வகையில் இராமேச்சுரத்தில் மலைவளர் காதலி என்றே அன்னைக்குப் பெயராகும். காசியைப் போலவே இராமேசமும் தீர்த்தச் சிறப்புக்குரியதாகும். இராமேசத்தில் சேதுமாதவர் கோயில். காசியில் பிந்து மாதவர் கோயில். காசியிலும் பெருமாள் இலிங்கத்தாபனம் செய்தார். இராமேசத்திலும் பெருமாள் அவதாரமான இராமனே இலிங்கத்தாபனம் செய்தான். இராமேசத்துக் கடல் மண் கங்கையில் சேர்த்தலும் காசியில் கங்கை முகந்து இராமேசத்தில் நீராட்டலும் உள்ளன. ஆதிசங்கரர் இங்கும் வந்தார். இவை இரண்டும் ஜோதிர் லிங்கமாகும். அங்கும் அனுமன் கோயில்; இங்கும் அனுமன் கோயில். இப்படிப்பல தொடர்புகள் இராமேசத்துடன் காசிக்குள்ளது.

காஞ்சிக்கு வருமுன் காமாட்சி காசியில் 12 ஆண்டு அன்னபூரணியாக அறம் வளர்த்தாள். காமாட்சி கோயிலில் காஞ்சிபுரத்தில் சந்நிதி எதிரேயே அன்னபூரணி கோயிலும் (சந்நிதி) உள்ளது. காமாச்சர என்ற கோயிலே காசியிலும் காமாட்சி நினைவாக உள்ளது. அங்கும் இங்கும் ஸ்ரீசக்கர மேருவே வழிபாடு செய்யும் பெருமை மிக்கது. காசி விசுவநாதர் ஆலயம் காஞ்சியிலும் உண்டு. விசுவநாதரே காசிபோல் காஞ்சி சிறப்புணர்த்த இங்குச் சிலகாலம் தங்கினாராம். சதுஷ்குக்குட வரலாறு இரண்டிடத்தும் உண்டு. காசி விசுவர்கோயில் காஞ்சிபுரத்தில் இருக்கும் இடமே ஒரு தீர்த்தப் பெருமைக்குரியது. அதன் பெயர் சர்வதீர்த்தமாகும். வானகங்கை காசி வந்ததுபோல் காஞ்சிபுரத்திலும் கம்பையாறுதான் வந்தது என அறியலாம்.

திருவானைக்கா நீர்ச்சிறப்புக்குரிய கோயில். காசி விசுவநாதர் கோயிலும் சங்கமேச்வரர் கோயிலும் இங்கு

உள. இப்படித் தமிழகத்தில் பல கோயில்களில் காசி விசுவநாதர் கோயில்கள் (சந்நிதிகள்) உள்ளன.

திருக்குற்றாலத்து மலை இமயமலையாகவும் அதில் வரும் சித்திராநதியே கங்கையாகவும் அது பாயும் கரையில் இருப்பது தென்காசியாகவும் அங்கே விசுவநாதரே இருப்பதாகவும் கூறப்பட்டுள்ள பெருமை எண்ணத் தகுந்தது.

தமிழ் இலக்கியங்களில் கங்கை மிகுதியும் பாராட்டப் பெற்றுள்ளது. காசியைப் புராணங்கள் யாவும் ஏதாவது ஒரு வகையில் பாராட்டிக் கதை வடிவில் நுழைத்தே இருக்கின்றன. காசிவிசுவநாதன் என்று பெயர் வைப்பதை இங்குப் பலர் மகிழ்ந்து ஏற்றிருப்பதும் தமிழகத்துடன் கொண்ட தொடர்பை நன்கு விளக்குவதாகும்.

பொற்கைப் பாண்டியன் கதையில் ஓர் அந்தணன் காசிக்குப் போனதாகச் சிலப்பதிகாரம் கூறுவதைக் காணலாம். மணிமேகலை சிலப்பதிகாரம் முதலிய பழைய நூல்களிலும் பிற்கால நூல்களிலும் பாபம் தீர்வதற்காகக் காசிக்குப் போகும் பழக்கம் குறிக்கப் பட்டுள்ளது.

எனவே மிகப்பழைய காலம் தொட்டுத் தமிழகமும் காசியும் இணைந்த சிறப்பை நன்கறியலாம்.

16. கயாவில் காசி

கயா என்றால் எல்லாருக்குமே புத்தர் நினைவுதான் வரும். அது இந்துக்களின் புண்ணியத்தலம் என்று பலருக்குத் தெரியாது. ஒரே ஆலமரம் பிரயாகையில் வேரும் காசியில் நடுவும் கயாவில் நுனியுமாக இருப்பதை நாம் அறிந்தவர்கள் மட்டும் இதையும் அறிவார்கள். கயா காசிக்கு ஒத்த சிறப்பும் உடையது. காசிக்குப் போவோர் கயாவுக்கும் போய் வருதல் மரபே.

காசியிருப்பது உத்திரப்பிரதேச மாநிலம். இதற்கும் கிழக்கே பீஹார் மாநிலத்தில் சுமார் 220 கி.மீ. தொலைவில் கயா இருக்கிறது. இங்குப் போவோர் துர்க்காவதி என்று ஒரு நதியைக் கடக்கும்போதே சக்தி வழிபாட்டு மாநிலத்தில் இருப்பததை அறியலாம். 'பாட்னா' என்ற தலைநகர்ப் பகுதியே பழைய பாடலிபுத்திரம் என்றும் அது சங்ககால இலக்கியங்களில் பாராட்டப் பெற்றது என்றும், இப்பெயரில் தமிழகத்திலும் ஊருண்டு என்றும் உணரலாம்.

முகலாயர்களில் பாபருக்குப் பிறகு அவர் மகன் ஹுமாயூன் ஆட்சி செய்தான். அவனை வென்று நாட்டைக்கைப்பற்றி 5 ஆண்டுகள் மட்டுமே அரசாண்டவன் செர்ஷா ஆவான். பல தேர்தலிலும் நிலையானவற்றைச் செய்ய முடியாத அரசுகள் உலகில் பல உண்டு. ஆனால் 5 ஆண்டிலேயே வரலாற்றில் தனக்கென்று இடம் பிடித்து இன்றும் புகழாய் விளங்குபவன் இம்மன்னன்.

நில அளவை, தபால்முறை, இப்படிப் பல புதிய சீர்திருத்தங்களால் ஒரு சிறிய அசோகன் போலிருந்த பெருமை இவனுக்குண்டு. கயா போகும் வழியில் காசிக்குச் சுமார் 123 கி.மீ. தூரத்தில் சராம் எனும் பகுதியுண்டு. அங்கேதான் செர்ஷாவின் பெரிய சமாதி இருக்கிறது. பதினேழு ஏக்கர் பரப்பிலுள்ள ஏரியின் நடுவே இச்சமாதி அழகாக உள்ளது. பார்க்கச்சென்ற வரைப் பறித்துக் கொள்ளும் கவர்ச்சி கொண்ட வரலாற்று நினைவகமே இச்சமாதியாகும்.

'பெருங்களிறு படியும் சோணை' என்று குறுந்தொகை பாராட்டும் நதி மேலும் 22 கி.மீ. தொலைவிலுள்ளது. இதுவும் ஓர் கங்கையோ என்று கருதுமளவு பெரியதாக இருக்கிறது. மேலும் 12 கி.மீ. சென்றால் புனப்புனா நதிவரும். அங்குதான் 'அஷ்டகயா சிரார்த்தம்' செய்வார்கள்.

பல்குனி என்ற நதிவந்ததும் கயாவுக்கு வந்து விட்டோமென்று பெயர். அந்த ஆற்றுக் கரையில் கயா உள்ளது. பெரிதும் புத்தகயா என்றே கூறுவார்கள். புத்தர் ஞானம் பெற்ற கயாவின் ஒரு பகுதியே புத்தகயா என்று பெயர் பெறும்.

ஒருமரம் பிரயாகையிலிருந்து 170 கி.மீ. தொலைவில் காசியிலும், பிரயாகையிலிருந்து 400 கி.மீ. தூரத்தில் கயாவிலும் ஒன்றாக இருக்குமா என்று எல்லாருக்குமே ஒரு சந்தேகம் வந்தால் அது தவறு சொல்லக் கூடியதன்று. சரி! சந்தேகம் எப்படித்தீரும்? புத்தருக்கு ஞானம் கிடைத்ததில் தீரும்.

ஒரு ஞானிக்குப் பேதம் வெளிப்பட ஒரு குரு, ஒரு தேவதை, ஒரு மலை என்றிருந்தால் சரிதான் என்று சொல்லும் நம் மனம் ஒருமரம்தான் என்றதும் அவ்வளவு மகிழ்வதில்லையல்லவா? 400 கி.மீ. ஒருமரம் கிடைக்குமா? என்று கேட்பவர் மனத்தில் ஒருமரமே ஞானம்

கொடுத்தது என்றதும் மரத்துக்கும் கயாவுக்கும் ஏதோ ஓர் இணைப்பு இருக்குமோ என்று தோன்றும். இயற்கை யாக நிகழ்ந்ததாயிருந்தாலும் இப்படி நடந்த ஒற்றுமை சந்தேகத்தைக் கரைப்பதில் மெல்ல மெல்ல ஈடுபடும்.

போதிமரம் என்றுதான் பலருக்குத் தெரியும். போதம் தந்த மரம் போதிமரம் ஆயிற்று. உண்மையில் அது அரசமரமே! புத்தர்க்குப் பிறகுதான் இந்த மரத்துக்கே அரசு என்று பெயர் ஏற்பட்டிருக்குமோ என்னவோ? அரச இலையால் சனிபகவானுக்கு அர்ச்சனை செய்தால் மிகுந்த சாந்திப் பயனுண்டு என்பதால் அதையும் ஆராய்வது நலம். அந்த அரசமரத்தில் வாரிசுமரம் உண்டாகி வளர்கிறதாம். இஃது ஐந்தாவது மரமாம். இதற்கு இப்போது 106 வயதாகிறது. நான்கு மரங்கள் 2400 வருடங்களாக இருந்திருக்கின்றன என்றால் சராசரி யாக 600 ஆண்டில் ஒருமரம் மறைகிறது. இந்த மரத்தைத் தொழுவது இந்துக்களுக்கும் வழக்கம். அங்கேயே பிண்ட தானமும் செய்வார்கள். இங்கு இம்மரத்தடியிலுள்ள மேடைதான் பகவான் புத்தர் ஞானம் பெறத்தியானம் செய்த இடம் என்று வணங்கலாம். மேடைக்குமேல் மாடத்தில் புத்தர் சிலையுமிருக்கிறது.

நம்முடைய இராமனும் பாண்டவரும் வனவாசம் போனதற்குப்பின் அவர்களை நினைத்து அங்கங்கே வழி படப்பெறும் இடங்கள் மிகுதி. இவற்றை மட்டும் சுற்றிவர இப்போது நடந்தால், 28 ஆண்டுகளும் போதாது. அவ்வளவு இடமுண்டு. இங்கே 3 கி.மீ. தொலைவில் தருமன் யாகம் செய்த தர்மாரண்யம் அதுபோல் ஒருநிறை விடமாக உளது.

கயாவில் புத்தருக்கான கோயில் மிகப் பெரியது. இதை அசோகர் கட்டத் தொடங்கினார், ஆனால் குப்தர் காலத்தில்தான் முடிந்தது. அதன் சிகரம் 185 அடி உயர முடையது. புத்தர் வடஇந்தியாவில் சமூகத்தை முழுது

மாக மாற்றிவிடும் ஓர் அறிவுப் புரட்சியைச் செய்தார். அதன் பலன் இந்தியாவையே ஒருமுறை சாக்குப்பையில் பொருள்களைப் போட்டுக் குலுக்குவதுபோல் குலுக்கி விட்டது.

ஏழை எளிய மக்களின் அறியாமையில் காலூன்றிக் கொண்டு ஒரு வளர்ந்த சமூகம் மிதிக்கும்போது கால தேவதை ஒரு புத்தரைப்படைத்துவிடுகிறாள் பொடிப் பொடியாக்கச் செய்கிறாள். ஆம் அந்தப் புரட்சி ஓர் அருளாளனின் தலைமையில் நடந்ததென்றால் நமக்கு வியப்பாக இருக்கிறது. கண்ணுக்கு எட்டிய காலத்தில் மேலை நாடுகளில் புரட்சிவருவதைக் கண்டு சில வரலாற்று ஏடுகளைப்படித்து இந்தப் பழைய இந்தியாவுக்கு இவை ஒன்றுமே வாராதோ? என்று சலிப்படையத் தோன்றும். தயவுசெய்து அவர்கள் இந்தியக் கலாச்சார வரலாறு படிக்கவேண்டும். கருத்துப் புரட்சிசெய்த மகான்கள் பலரை இரண்டு நூற்றாண்டிற்கு ஒருமுறை இந்திய மொழி ஒவ்வொன்றிலும் தோன்றியவாரே இருப்பதை அறியலாம். குண்டுகள், உதிர ஆறுகள், உடல் குவியல்கள் இவற்றின் கணக்குமட்டும்தான் புரட்சியா? அவை கருத்துகளை மதிக்கத்தெரியாத செவிடர்கள் செய்யும் குறும்புகள். ஆனால் மெல்ல மெல்ல பேசிப் பேசி மாற்றி மாற்றி ஆனால் முழுதுமாகவே மாற்றிவிடும் புரட்சிகள் காலத்தாலும் அழிக்க முடியாதவைகளாக மாறி விடுகின்றன.

புத்த கயைக்கும் கயாவுக்கும் 11 கி. மீ. தூரமுண்டு. புத்த கயாவில் அரச மரம் கயாவில் அட்சய வடமாகிய ஆலமரம் (பிரயாகையிலிருந்து தொடர்வது) என்று இரண்டுமே மரம் பற்றிய சிறப்பாக இக் கயை உளது.

தர்மராஜாவின் மகள் தர்ம விரதை என்பவள் தவமிருந்து நல்ல கணவனை வரமாகப் பெற்றாள். அப்படி வந்தவன் பிரம்மாவின் மகன் மரீசி முனிவன், சில காலம்

சென்றபிறகு தர்ம விரதையின் பணிவிலும் உபசாரத்திலும் குறை கண்ட முனிவன் கல்லாகும்படிச் சாபம் கொடுத்துவிட்டான். தவம் செய்து பெற்ற கணவனும் இப்படிச் செய்தது கண்டு தன்னையே நொந்து கொண்டாள் தர்ம விரதை. மேலும் நன்மையே செய்ய விரும்பி, தன்மீது யார் பிண்டம் போடுகிறார்களோ அவர்களுடைய முன்னோர் மோட்சம் பெற வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். அவள் நல்ல மனத்திற்கு இரங்கிக் 'கவலையுறாதே உன் எண்ணமும் நிறை வேறும். உன்மீது நாங்கள் ஏறி நிற்கும் காலம் வரும்போது உன் கல்லுருவம் கரைந்து விமோசனம் அடைவாய் என்று தெய்வங்கள் வரமளித்தன. இதற்கான சந்தர்ப்பமே கயாவுக்கு இப்பெயர் வரக் காரணமும் ஆயிற்று.

பிரம்மாவிற்கு மானஸீகமாகப் பிறந்தவன் கயாசுரன் 125 யோஜனை உயரமும் 60 யோஜனை அகலமும் உடையவனாயிருந்தான் அசுரனாயிருந்தும் நற்குணம் உடையவனாகவே அவனும் இருந்தான்.

அவனுக்குப் புகழ்பெறவேண்டுமென்ற ஆசைவு. அதனால் தவத்தின்மூலம் ஓர் அரியவரம் பெற்றான். அதாவது அவனைப் பார்ப்பவர்களும், தொடுபவர்களும் என்ன பாவம் செய்திருந்தாலும் உடனே மோட்சம் பெற வேண்டும் என்பதே அவன் பெற்ற வரமாகும். இந்தியாவில் பிறந்தவர் யாவரும் பிரதம மந்திரியாகி விடுவார்கள் என்று ஒரு வரம் கொடுத்தால் என்ன ஆகும்? வண்டிகள் ஓடுமா? அலுவலகங்கள் நடைபெறுமா? கழிவிடங்கள் தூய்மையாகுமா? உணவுதான் கிடைக்குமா? அது போலவே ஒரு விபரீதம் வந்தது.

மூன்று உலகுகளிலும் மனிதர் யாருமில்லை. பிற உயிர்களும் இல்லை—இதன் விளைவால் யமனும் இந்திரனும் பிரம்மாவும் திருமாலிடம் முறையிட்டார்கள். நல்ல காரியமாகவே இடையூறு செய்கிறவனை என்ன

செய்வது? தீமைசெய்து பிறரை அழிக்க முடியாத அசுரர்கள் நல்ல வழியிலேயே உலகு இயங்கத் தடையாகி விட்டார்கள். மேலும் கயாசுரன் பெரிய பக்தனுமாயிருக்கிறான். ஆகவே திருமால் ஒரு வழி சொன்னார்.

அவர் சொன்னபடி கயாசுரனிடம் வந்து உன் உடம்பின்மேல் யாக குண்டம் வைத்து வேள்வி செய்ய உத்தரவு வேண்டுமென்று கேட்டார்கள். சரி என்று கொடுத்து விட்டான்.

அதன்படி வடக்கே அவன் தலையை வைத்து எல்லாருமாகக் கூடி யாகம் செய்தனர். யாக குண்டச் சூட்டில் அவன் தலை அசைந்தது. குண்டம் சரியும் நிலை வந்தது. பிரம்மா முன்பே மரீசி முனிவரால் கல்லாகச் சபிக்கப் பெற்ற தர்ம விரதையின் கல் உடம்பைக் கயாசுரன் தலையில் அசையாதிருக்குமாறு முட்டுக் கொடுக்கச் செய்தார். யமதர்மன் அப்படியே செய்தான். அந்தக் கல்லையும் பெயர்த்த படியே அசைந்தது அசுரனின் தலை. இந்த நிலையில்தான் திருமால் அங்கு வந்தார். கயாசுரனின் தலைமீது கால் வைக்காமல் தர்ம விரதையின் கல்மீது தலைவைத்து அழுத்தினார். அசுரன் பாதாளத்தில் அழுந்தினான். தர்ம விரதையும் விமோசனம் அடைந்தாள்.

இராமாவதாரத்தில் அகலிகையைக் கால் தூசியால் விமோசனம் செய்வதற்கு முன்பே கயாசுரன் கதையில் தர்ம விரதையின் விமோசனத்தை உருவாக்கிவிட்டார் போலும்.

ஒருத்திக்கு வரத்தின்படி விமோசனம் அருளுவதாகிய நன்மையைச் செய்தே அசுரனை அழித்தார். நன்மை செய்தே இடையூறு தந்தவனுக்கு அவன் வழியிலேயே இறுதியை உண்டாக்கினார் திருமால்.

கயாசுரனின் முடிவு முன்பே எடுக்கப்பெற்று மரீசி வாயினால் தர்ம விரதைக்குச் சாபம் வந்து விமோசனம்

கூறப்பெற்றபடியே கயாசுரன் சாகிறான். எதுவும் திட்டமிட்ட ஒன்றின்படியே இந்த உலகம் இயங்குவதையும் அது வரும்வரையில் காரண காரியம் தெரியாது என்பதையும் இக்கதையால் உணரலாம்.

இப்படி வைத்த திருமாலின் பாதம் ஒரு சிறு பாறையில் பதிவாகி அதற்கு அட்டகோணத்தில் அடைப்பும் கட்டியிருக்கிறார்கள். நாம் கோயில்களில் பார்க்கும் அளவிலான ஸ்ரீபாதமாகவே இருக்கிறது. இப்பாதம் கோயிலுக்குள் இருக்கிறது. இதிலும் பிண்டதானம் செய்வது பழக்கத்திலிருக்கிறது.

கயை என்பது கயாசூரன் நினைவாக உள்ளது. அவ்வூர் அவன் உடலாகவே இன்றும் கருதப்படுகிறது. இங்கு ஒரு பெரிய குளம் உள்ளது. சூரியகுண்டம் என்று பெயர் பெறும். இதன் பக்கச் சுவர்கள் பலமாக உள்ளன.

கயாவில் 48 இடத்தில் பிண்டதானம் செய்ய வேண்டுவது மரபு. முடியாதவர்கள் பல்குனி நதி விஷ்ணு பாதம், அட்சயவடம் ஆகிய இடங்களில் போட்டாலே போதும்.

திருக்கோயில் வரிசை நூல்கள்

காசி விசாலாட்சி
காஞ்சி காமாட்சி
மதுரை மீனாட்சி
தில்லைத் திருக்கோயில்
திருச்சிக் கோயில்கள்
திருச்செந்தூர் முருகன்
திருப்பரங்குன்றம்
திருத்தணி
திருவண்ணாமலை
திருவாரூர்
திருப்பதி வெங்கடாசலபதி
பழநி
குடந்தைக் கோயில்கள்
சீர்காழிக் கோயில்கள்
சென்னைக் கோயில்கள்
இராமேஸ்வரம்
வெற்றி தரும் விநாயகர்
அருள்மிகு திருமகள்
பெருமைமிகு முருகன்
தமிழகத் திருக்கோயில்களில் முப்பது நாட்கள்

பரிசு பெற்ற நூல்கள்

கம்பர்—டாக்டர் வ. சுப. மாணிக்கம்

வீரர் உலகம்—கி. வா. ஜகந்நாதன்

மணிக்கொடி காலம் - பி. எஸ். ராமையா

உரையாசிரியர்கள்—மு. வை. அரவிந்தன்

பரிபாடல் திறன் - டாக்டர் இரா. சாரங்கபாணி

ஊருக்குள் ஒரு புரட்சி—சு. சமுத்திரம்

திருக்குறள் கூறும் உறுதிப்பொருள்—
டாக்டர் சோ. ந. கந்தசாமி

தாகூர்—ச. மெய்யப்பன்

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி சிதம்பரம்-608 001
14, சுங்குராம் தெரு, பாரிமுனை, சென்னை-600 001
55, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600 001
28-A, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை-625 001
அசோகா பிளாசா, நஞ்சப்பா சாலை, கோவை-641 012

சென்னை போன் : 512996 சிதம்பரம் போன் : 799

Wrapper Printed at Eskay Art Printers, Madras-5. Phone: 841478
Designed by Maniam Selvam